FIU இடமிருந்து பெறப்பட்ட STRகளின் எண்ணிக்கை	3
FIU இற்கு வினியோகிக்கப்பட்ட STRகளின் எண்ணிக்கை	3
பிற சட்ட அமுலாக்கல் முகவர்களிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரைகளின் எண்ணிக்கை	-
பிற சட்ட அமுலாக்கல் முகவர்களுக்கு வழங்கப்பட்ட பரிந்துரைகளின் எண்ணிக்கை	2

மூலம் : மத்திய புலனாய்வுப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.1.3 மத்திய விசாரணைப் பணிப்பகம்

8.1.3.1 பிரதான குறிக்கோள்கள்

இப்பணிப்பகத்தின் முதன்மை நோக்கங்களில் சட்டவிரோத வர்த்தகத்தைத் தடுக்கும் வகையிலான செயலாக்கத்தினை வலுப்படுத்துதல், நழுவவிடப்பட்ட வரிகளை சேகரித்தல் மற்றும் அபராதங்கள் மற்றும் பறிமுதல்களை அரசிறையாகச் சேகரித்தல் ஆகியவை அடங்கும். இதற்குமேலாக, தடுத்து வைக்கப்பட்டுள்ள பொருட்களை காத்திரம் மிக்க முறையில் நிர்வகிப்பதன் மூலம் களஞ்சியசாலைகளை மேம்படுத்துதல், அதிகாரிகளின் திறனை மேம்படுத்துதல் மற்றும் கருவிக் கிடங்கு, பெட்டகம், பதிவேட்டறைகள் மற்றும் இப்பணிப்பகத்தின் சிறைக்கூடம் போன்ற முக்கியமான வசதிகளை அவற்றின் நியமிக்கப்பட்ட நோக்கங்களுக்காகப் பராமரித்தல் ஆகியவற்றில் இப்பணிப்பகம் கவனம் செலுத்துகிறது.

8.1.3.2 நடைமுறைப்படுத்தப்பட்ட மூலோபாயங்கள்

இப் பணிப்பகமானது இயக்கப்பாடு சார்ந்த விளைவுத்திறனை மேம்படுத்துவதற்கு பல்வேறு மூலோபாயங்களைக் கையாண்டுள்ளது, அவற்றுள்:

- எதிர்காலத்தில் வரி செலுத்தாது நழுவுகின்ற நிலைமையினை குறைக்கும் வகையில் வரி செலுத்தாது நழுவுகின்றவர்களை கண்டறிந்து கட்டுப்படுத்துதல்.
- தவறான பயன்பாட்டிற்கும் மற்றும் மோசடிக்கும் உட்படக்கூடிய சுங்க நடைமுறைகளை சரிசெய்து அவற்றை வலுப்படுத்துதல்.
- இழந்த அரசிறையினை விசாரணைகள் மற்றும் அபராதங்கள் ஊடாக அறவிடல்.
- பொருள் வெளியாக்கல் மற்றும் வருவாய் உருவாக்கத்தை விரைவுபடுத்தும் வகையில் களஞ்சியசாலை இடவசதி முகாமைத்தவத்தினை நெறிப்படுத்துதல்.
- தொழில் வளர்ச்சிக்கான பயிற்சித் திட்டங்களை முன்னெடுத்தல் மற்றும் கற்றல் கலாச்சாரத்தை முன்னெடுத்தல்.
- பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களுக்கு பாதுகாப்பான களஞ்சியப்படுத்தல் சூழலை உறுதி செய்தல்.
- திறமையான கோவை பேணுகை மற்றும் முகாமைத்துவத்திற்கான பதிவு அறைகளை ஏற்பாடு செய்தல்.

8.1.3.3 முக்கிய செயல்பாடுகள்

இப்பணிப்பகம் விசாரணைகள், நிர்வாகம், அறிக்கையிடல், CCR அமைப்பு முகாமைத்துவம், வங்கி உத்தரவாத முகாமை மற்றும் துணை வகிபாகங்கள் என வகைப்படுத்தப்பட்ட பல்வேறு செயல்பாடுகளைச் செய்கிறது.
மத்திய விசாரணைகள் பணிப்பகமானது சுங்க விதிமுறைகளை அமுல்படுத்துவதை உறுதி செய்வதற்கும், அரசிறை சேகரிப்பினை அதிகரிப்பதற்கும், அதன் அனைத்து செயல்பாடுகளிலும் உயர் தர செயல்திறன் மற்றும் பொறுப்புணர்வைப் பேணுவதற்கும் உறுதிபூண்டுள்ளது.

8.1.3.4 அரசிறை சேகரிப்பு குறித்த செயலாற்றுகை

2025 ஆம் ஆண்டில் இப்பணிப்பகத்தினால் அறவிடப்பட்ட வருவாய் ரூபா. 936,744,713.76 ஆகும். இதில் புதிதாகத் தொடங்கப்பட்ட 107 சுங்க விசாரணைகள் உள்ளடங்குகிறது.

இலக்கு : வருவாயை அதிகப்படுத்துதல்
குறிக்கோள் : வருவாய் கசிவுகளைத் தடுத்தல்

மூலோபாயம்
- சுங்கக் கட்டுப்பாட்டு வழிமுறைகளை வலுப்படுத்துதல்
- பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு கட்டுப்பாடுகளை வலுப்படுத்துதல்
- ஆய்வு மற்றும் சோதனை நடைமுறைகளை மேம்படுத்துதல்
- சாத்தியமான ஊழல் நடைமுறைகளைத் தடுத்தல்
- நிறுவனங்களுக்கு இடையேயான கூட்டிணைப்பினை வலுப்படுத்துதல்

அட்டவணை 8.1.3.1 : அரசிறை சேகரிப்பு குறித்த செயலாற்றுகை - 2025

	2025 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட வழக்குகளிலிருந்து பெறப்பட்ட அறவீடுகள் (ரூபா)	2025 ஆம் ஆண்டிற்கு முன்னர் தொடங்கப்பட்ட வழக்குகளிலிருந்து பெறப்பட்ட அறவீடுகள் (ரூபா)
அபராதம்	47,537,500.00	4,100,000.00
பறிமுதல்	344,157,600.00	498,975,000.00
விற்பனை மூலமான வருவாய்	7,991,915.52	41,182,698.24
மொத்தம்	**392,487,015.52**	**544,257,698.24**

மூலம் : மத்திய விசாரணைப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

கொள்கலன்கள்/ வாகனங்கள்

2025 ஆம் ஆண்டில் சுங்க நடைமுறைகள் நிறைவடைந்த பிறகு விடுவிக்கப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை	- 90
2025 ஆம் ஆண்டில் சுங்க நடைமுறைகள் நிறைவடைந்த பிறகு விடுவிக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை	-35

கண்டுபிடிப்புகள்

இந்த ஆண்டில் தொடங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	- 107
இந்த ஆண்டில் முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	- 27
நடைபெற்று வரும் வழக்குகளின் எண்ணிக்கை	- 80

8.1.3.5 சிறந்த அடைவுகளை பெறும் வகையில் நிறுவனத்தின் நிலைமாற்றம்

குறிக்கோள்கள்: மனித மூலதன அபிவிருத்தி
மூலோபாயம்: பயிற்சி மற்றும் வழிகாட்டுதலுக்கான நிறுவன கட்டமைப்பை உருவாக்குதல்.

2025 ஆம் ஆண்டில், இப்பணிப்பகமானது கண்டறிதல்கள், விசாரணைகள், வழக்குத் தொடர்தல் போன்றன குறித்தான நுட்பங்கள் மீதான பயிற்சிகளையும் மற்றும் சுங்க விசாரணைகளின் அடிப்படையில் சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு விசாரணைகள் மீதான பயிற்சிகளையும் வழங்கியது.

சில பயிற்சிகள் மத்திய விசாரணை பணிப்பகத்தில் பணியாற்றும் சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்டு நடத்தப்பட்டன.

அதேவேளை, மனிதவள அபிவிருத்திப் பணிப்பகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஏனைய பயிற்சிகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புக்களும் மத்திய விசாரணைப் பணிப்பகத்தின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டன.

குறிக்கோள்கள் : இயங்காற்றல்மிக்க நிறுவன அபிவிருத்தி மற்றும் உகந்த வளப் பயன்பாடு ஆகியவற்றை உறுதி செய்தல்
மூலோபாயம் : ஒரு விஞ்ஞான ரீதியிலான வள முகாமை மூலோபாயத்தினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் வள ஒதுக்கீட்டை உகந்ததாக மேற்கொள்ளல்.

இந்த இலக்கிற்கு ஏற்ற வகையில் பல செயல்பாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்தவகையில் ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் பெறுமதிமிக்க தங்கம், வெள்ளி, நாணயம் போன்ற பொருட்களைப் பாதுகாப்பாகச் சேமித்து மற்றும் அவற்றைப் பாதுகாப்பாக விடுவிப்பதன் மூலம் ஆயுத களஞ்சியசாலையினையும் மற்றும் மத்திய விசாரணை பணிப்பகத்தினையும் பராமரிப்பது ஒரு பாரிய துணைப் பணியாகும் இப்பணி ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகிறது.

இவை தவிர, முன்னைய விசாரணைப் பணிப்பகத்தின் வழக்கு ஆவணங்களுக்கான அணுகலை உறுதி செய்வதன் மூலமும், எளிதாக மீட்டெடுக்கும் வகையில் முடிவுறுத்தப்பட்ட சுங்க விசாரணைக் கோப்புகளை ஆவணப்படுத்துவதன் மூலமும் பதிவறை மற்றும் ஆவணங்களைப் பராமரிப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

மத்திய விசாரணப் பணிப்பகமானது, சுங்க வழக்குகளை பதிவுசெய்வதற்கானதொரு வலுவான முறைமையினை நிறுவுவதையும் மற்றும் அரசிறையினை மீட்டெடுத்தல் உள்ளிட்ட விசாரணைகள் பற்றியதொரு அறிவுத் தளத்தை உருவாக்குவதையும் இலக்காகக் கொண்டு, குறித்த பிரயோகத்தினை மீளாய்வு செய்யும் நோக்கில் ஒரு குழுவை நியமிப்பதன் மூலம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பணிப்பகத்தின் ஊடாக e-CCR மாற்றங்களைச் செய்யும் பணியிலும் ஈடுபட்டுள்ளது. இந்தத் திட்டம் இன்னும் முழுமையாக நிறைவடையவில்லை என்றாலும், மத்திய விசாரணைப் பணிப்பகத்தினதும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பணிப்பகத்தினதும் ஒருங்கிணைந்த அர்ப்பணிப்பால், 2025 ஆம் ஆண்டில் இது ஒரு வளர்ச்சியைக் காட்டியுள்ளது.

8.1.4 மத்திய பொருள் தீர்த்தல் பணிப்பகம்

8.1.4.1 அறிமுகம்

மத்திய பொருள் தீர்த்தல் பணிப்பகமானது, பறிமுதல் செய்யப்பட்ட / கைவிடப்பட்ட பொருட்களை அகற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும், சம்பந்தப்பட்ட உள்ளக மற்றும் வெளியக அதிகார சபைகளுடனான ஒத்துழைப்புடன் ஒருமுகப்படுத்தும் நோக்கில் அமுல்படுத்தல் கொத்தணியின் கீழ் புதியதொரு பணிப்பகமாக 2019 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது.

8.1.4.2 பிரதான தொழிற்பாடுகள்

- கேள்வு விற்பனவுகளை முன்னெடுத்தல்.
- விற்பனை செய்ய முடியாத பொருட்களை அழித்தல்
- இலங்கைத் துறைமுக அதிகார சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைத் துறைமுக அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் கேள்வு விற்பனைகள்/ஏலங்கள் விடுதல் தொடர்பில் குறித்த வாகனங்களை மோட்டார் வாகன போக்குவரத்து இலத்திரனியல் வசதியளித்தலில் பதிவு செய்வதற்காக அவற்றை இணைத்தல்.

8.1.4.3 சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள்

1. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு - இறக்குமதி மற்றும் ஏற்றுமதியின் கால வரையறை
2. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 109ஆம் பிரிவு – முப்பது நாட்களினுள் வெளியாக்கப்படாத பொருட்களை விற்பனை செய்வதற்கான அதிகாரம்.
3. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 154ஆம் பிரிவு – பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள், ஒரு மாதத்திற்குள் உரிமை கோரப்படாவிட்டால், அவை உபயோகமற்றவையென அகற்றப்படுதல் வேண்டும் அல்லது உரியவாறு கையாளப்படல் வேண்டும்.
4. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 162 ஆம் பிரிவு – பறிமுதல் செய்யப்படுகின்ற அல்லது உபயோகமற்றதென அகற்றப்படுகின்ற கப்பல்கள் மற்றும் சரக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் பணிப்புரைக்கு இணங்க அகற்றப்படுதல்.
5. 06/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை
6. 2003ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க புலமைச் சொத்துரிமைச் சட்டம்.
7. 1969ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டம்.
8. 1979ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபைச் சட்டம் (பிரிவு. 39/39 6/84/(84 (2)/84 (3)).
9. 1979ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டம்.
10. 1984ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க இலங்கை கட்டளைகள் நிறுவனச் சட்டம்.
11. 1980ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க உணவு சட்டம்.
12. 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம்.
13. 2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க துறைமுகம் மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்.
14. 1999ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க தாவர பாதுகாப்புச் சட்டம்.
15. 1942ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க தாவர மற்றும் விலங்கின கட்டளைச்சட்டம்.
16. 1947ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க வன கட்டளைச்சட்டம்.
17. 1996ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்.
18. 2015ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க இலங்கை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்.

8.1.4.4 செயலாற்றுகை

அட்டவணை 8.1.4.1 : மேற்கொள்ளப்பட்ட கேள்வு விற்பனைகளது எண்ணிக்கை

கேள்வு வகை	மேற்கொள்ளப்பட்ட கேள்வு விற்பனைகளின் எண்ணிக்கை		
	2023	2024	2025
பொதுவானவை	11	12	13
வாகனம்	11	12	13
விசேடமானவை	06	5	6
மொத்தம்	**28**	**29**	**32**

மூலம் : மத்திய பொருள் தீர்த்தல் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

2025 ஆம் ஆண்டில், 13 கேள்வு விற்பனைகள், 13 வாகன கேள்வு விற்பனைகள் மற்றும் 6 விசேட கேள்வு விற்பனைகள் என மொத்தமாக 32 கேள்வு விற்பனைகளை இப்பணிப்பகம் மேற்கொண்டுள்ளது. வருடாந்த மொத்த கேள்வு விற்பனைகளை ஆய்வு செய்யும் போது, 2023ஆம் ஆண்டில் 28 கேள்வுகளும் அதைத்தொடர்ந்து 2024ஆம் ஆண்டில் 29 கேள்வுகளும் இப்பணிப்பகத்தில் பதிவு செய்யப்பட்டன. மேலும், 2025 இல், இப்பணிப்பகமானது சராசரி வருட கேள்வு விற்பனையாகிய 24 இற்கும் கூடுதலாக, 32 என்ற எண்ணிக்கையைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

உரு 8.1.4.1 : கேள்வு விற்பனைகளது எண்ணிக்கை



மூலம் : மத்திய பொருள் தீர்த்தல் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.1.4.2 : 2025 இல் மத்திய விற்பனை பணிப்பகத்தினாலான கேள்வு விற்பனைகள் மூலம் பெறப்பட்ட அறவீடுகள்

வகை	பெறப்பட்ட அறவீடுகள் (ரூபா)	விகிதம்
பொதுவானவை	2,106,195,851	87.49%
வாகனம்	297,414,619	12.35%
விசேடமானவை	3,825,232	0.16%
மொத்தம்	**2,407,435,702**	**100%**

மூலம் : மத்திய பொருள் தீர்த்தல் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

உரு 8.1.4.2 : கேள்வு விற்பனையிலிருந்தான அறவீடுகள் - 2025



மூலம் : மத்திய பொருள் தீர்த்தல் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

2025 ஆம் ஆண்டுக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கேள்வு விற்பனைகள் மூலம் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 2,407,435,702 ஆகும். அதேவேளை, பொதுவான கேள்வு விற்பனைகள் மூலமாக சேகரிக்கப்பட்ட மொத்தம் ரூபா 2,106,195,851 என்பதோடு, இது 2025 இல் பெறப்பட்ட மொத்த அறவீடுகளில் 87.49% சதவீதமாகும். விசேட கேள்வு விற்பனைகள் மற்றும் வாகன கேள்வு விற்பனைகள் மூலமான அறவீடுகள் முறையே 0.16% மற்றும் 12.35% ஆகும்.

உரு 8.1.4.3 : விற்பனை வருமானம் குறித்தான பகிர்வு



மூலம் : மத்திய பொருள் தீர்த்தல் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

பொதுவான பொருட்களானது விசேட மற்றும் பொது ஆகிய இரு கேள்வு விற்பனையிலும் கேள்வு ஒப்பந்தத்திற்கு விடப்படுகின்றன. பொதுவான பொருள் பங்கீடு பற்றிய விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.
பொது கேள்வு விற்பனையில் முக்கிய பொருட்களான தங்கம் மற்றும் மதிப்புமிக்க பொருட்கள், நிகர அறவீடுகளில் 82% சதவீதம் பங்களிப்புச் செய்கின்ற அதேவேளை, ஏனைய பொதுவான பொருட்களும் மீதமுள்ள 18% சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன.

உரு 8.1.4.4 : கேள்வு விற்பனைகளில் இருந்தான அறவீடுகள் (ரூபா மில்)



மூலம் : மத்திய பொருள் தீர்த்தல் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

2024 முதல் 2025 ஆண்டு வரையான காலத்தில் வாகன கேள்வு விற்பனை மூலமான அறவீடுகள் அதிகரித்த போதிலும், பொதுவான கேள்வு விற்பனை மூலமான அறவீடுகள் தொடர்பில் ஒரு எல்லையோரமான வருடம் மீதான வருட வீழ்ச்சியினைக் காட்டியது.

8.1.4.5 மீளளிக்க முடியாத வைப்புக்களிலான அறவீடு

விலைமனுதாரரினால் விலைமனு கோர எதிர்பார்க்கப்படுகின்ற ஒவ்வொரு பொருட்களுக்குமாக அக்குறித்த விலைமனுதாரருக்கு விநியோகிக்கப்படுகின்ற விலைமனுக் கோரல் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பில் ஒரு மீளளிக்க முடியாத வைப்புத் தொகை அறவிடப்படுகிறது. மத்திய விற்பனை பணிப்பகத்தினால் முன்னெடுக்கப்படும் கேள்வு விற்பனை தொடர்பிலான மீளளிக்க முடியாத வைப்புத் தொகை பற்றிய கொள்கையானது, அரச சுற்றுநிருபம் 06/2016 இற்கு இணங்க, மத்திய விற்பனை பணிப்பகத்தின் 1450 ஆம் இலக்க திணைக்களக் கட்டளையின் பேரில் 2020.05.26 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் திருத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 8.1.4.3 மீளளிக்க முடியாத வைப்புகளிலிருந்தான அறவீடுகள்

வருடம்	அறவீடுகள் (ரூபா)	விலைமனுக் கோரல் படிவங்களின் எண்ணிக்கை
2023	4,720,900	3,012
2024	3,291,700	2,161
2025	3,667,300	2,073

மூலம் : மத்திய பொருள் தீர்த்தல் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.1.4.6 பொருட்களை அழித்தல்

காலாவதியான பொருட்கள் அல்லது குறித்த ஒழுங்குறுத்துகைத் தரநியமங்களுக்கு உடன்படாத பொருட்கள் அழிக்கப்படுகின்றன. மத்திய விற்பனை பணிப்பகமானது சம்பந்தப்பட்ட பணிப்பகம் அல்லது அதிகாரசபையின் வேண்டுகோளின் பேரில் அத்தகைய பொருட்களை அழிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்கிறது.

அட்டவணை 8.1.4.4 : பொருட்களை அகற்றல் குறித்த கோரிக்கைகள்

அழிப்பதற்கான கோரிக்கைகள்	பெறப்பட்டவை	முன்னெடுக்கப்பட்டவை	நிலுவையிலுள்ளவை
இதர கோரிக்கைகள்	343	58	285
இலங்கைத் துறைமுக அதிகார சபையின் கோரிக்கைகள்	85	29	56
மொத்தம்	**428**	**87**	**341**

மூலம் : மத்திய பொருள் தீர்த்தல் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

உரு 8.1.4.5 : நிறைவடைந்த பொருள் அழிப்புகள் - 2024 மற்றும் 2025



மூலம் : மத்திய பொருள் தீர்த்தல் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

இப்பணிப்பகமானது, 2025ஆம் ஆண்டில் 87 தடவை பொருள் அழிப்புகளை வெற்றிகரமாக நிறைவுசெய்து ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளது. இது முந்தைய ஆண்டை விட 164% குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகும். இந்த குறிப்பிடத்தக்க சாதனை, 2025ஆம் ஆண்டு முழுவதும் திணைக்களத்தின் மேம்பட்ட செயல்திறனை எடுத்துக்காட்டுகிறது.

இலங்கை துறைமுக அதிகாரசபையால் கோரப்பட்ட பொருள் அகற்றல் பணிகளில் 34% இனை இப்பணிப்பகம் நிறைவு செய்தது, அதேவேளை இதர கோரிக்கைகளில் 16.90% நிறைவேற்றப்பட்டன. நிலுவையில் உள்ள அகற்றல் பணிகளுக்கான பிரதான தடையாக விளங்குவது, பொருத்தமான தரப்பினரை நியமிப்பதில் ஏற்படும் தாமதமும், அதைத் தொடர்ந்து அவர்களின் ஒத்துழைப்பின்மையுமே ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனையாளர்கள் பெரும்பாலும் நியாயமான காலக்கெடுவிற்குள் தேவையான ஒழுங்குமுறை ஒப்புதல்களைப் பெறத் தவறுவதால், திட்டம் கைவிடப்படுகிறது. இந்தச் சிக்கல்களைத் தவிர்க்கும் வகையில், இப்பணிப்பகமானது, குறிப்பிட்ட வகைப் பொருட்களுக்காக, முன்-அங்கீகரிக்கப்பட்ட பொருள் அகற்றல் தரப்பினருடன் நீண்ட கால சேவை ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

8.1.4.7 வாகன இணைப்பு முறைமை

2025.03.18 அன்று சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட விசேட அனுமதிக்கிணங்க, இப்பணிப்பகமானது 2024.11.12 ஆம் திகதிக்கு முன்னர் வினியோகிக்கப்பட்ட வாகனங்கள் பற்றிய தரவுகளை உள்ளீடு செய்து அவற்றை பிற தரவுத்தளத்துடன் இணைத்துள்ளது.

- மோட்டார் வாகனம் + தரவு உள்ளீடு செய்யப்பட்டு இணைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் = 25

1669ஆம் இலக்க திணைக்களக் கட்டளைக்கிணங்க, 2024.11.12 ஆந் திகதிக்குப் பிறகு வெளியாக்கப்பட்ட வாகனங்கள் தொடர்பில், ASYCUDA அமைப்பில் "விடுவிப்புக் கட்டளை" மற்றும் "அங்கீகரிக்கப்பட்ட அனுமதி" ஆகிய பணிகளை மாத்திரமே இப்பணிப்பகம் மேற்கொள்கிறது.

- மோட்டார் வாகனம் + வழங்கப்பட்ட விடுவிப்புக் கட்டளை செய்யப்பட்ட மோட்டார் வாகனம் = 71

8.1.4.8 SLPA கேள்வு விற்பனை

கேள்வு விற்பனைகளை SLPA நிர்வகிக்கும் அதே வேளையில், ஏற்புடைய அனைத்து வரிகளையும் இப்பணிப்பகம் வசூலிக்கிறது.

பங்கேற்றவை

- கேள்வு விற்பனை - 5
- ஏல விற்பனை - 7

வழங்கப்பட்ட பெறுமதி மதிப்பீடுகள் / பொருள் வகைப்படுத்தல்களின் எண்ணிக்கை - 268
சேகரிக்கப்பட்ட தீர்வைகள் மற்றும் அறவீடுகள் - ரூபா 48,447,515.00

8.1.5 சமூக பாதுகாப்புப் பணிப்பகம்

8.1.5.1 போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு

8.1.5.1.1 நிர்வாகச் சுருக்கம்

இந்த அறிக்கையானது, 2025 ஆம் ஆண்டிற்காக இலங்கை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவால் பதிவுசெய்யப்பட்ட போதைப்பொருள் கண்டறிதல் பற்றிய தரவுகளின் ஒரு விரிவான பகுப்பாய்வினை வழங்குகிறது. சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தகத்தை எதிர்த்துப் போராடுவதில் இப்பிரிவின் குறிப்பிடத்தக்க முயற்சிகளை இந்தத் தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன. கைப்பற்றப்பட்ட மொத்தமாக 435,215 கிராம் போதைப்பொருட்கள் குறித்தான 147 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேற்படி போதைப்பொருட்களின் மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமதி ரூபா. 5,886,838,700.00 ஆகும். கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் வகைகள், அவை கண்டறியப்பட்ட முதன்மை இடங்கள் மற்றும் அவை கொண்டுவரப்பட்ட பிரதான நாடுகள் ஆகியவற்றில் உள்ள முக்கியப் போக்குகளை இந்தப் பகுப்பாய்வு அடையாளம் காட்டுகிறது. இவை இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் மூலோபாய கையாளுகைக்கான தகவல்களை வழங்குவதற்கு இன்றியமையாதவையாகும்.

8.1.5.1.2 ஒட்டுமொத்த கண்டறிதல் குறித்த சுருக்கம்

2025ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த கண்டறிதல் முயற்சிகளின் விளைவாக, பல்வேறு வகையான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்டவற்றில் கஞ்சா மிகப் பெரிய அளவிலும், கோகைன் மற்றும் MDMA ஆகியவை பெறுமதியின் அடிப்படையிலும் குறிப்பிடத்தக்க அளவில் கைப்பற்றப்பட்டன.

அட்டவணை 8.1.5.1 : போதைப்பொருள் கண்டுபிடிப்புகள் - 2025

போதைப் பொருள் வகை	வழக்குகளின் எண்ணிக்கை	அளவு (கிராம்)	பெறுமதி (ரூபா)	மொத்த அளவில் சதவீதம்
கஞ்சா	101	376,360	3,902,575,700.00	86.5%
கோகைன்	15	31,993	1,457,870,000.00	7.4%
MDMA	12	14,660	278,195,000.00	3.4%
மெத்தம்பெட்டமைன்	14	8,521	129,875,000.00	2.0%
ஹெரோயின்	3	3,678	114,573,000.00	0.8%
ஏனையவை	2	2	3,750,000.00	<0.1%
மொத்தம்	**147**	**435,215**	**5,886,838,700.00**	**100%**

மூலம் : சமூக பாதுகாப்புப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

உரு 8.1.5.1 : கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்கள் பற்றிய பகிர்மான விபரங்கள்



மூலம் : சமூக பாதுகாப்புப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

தரவுகளுக்கிணங்க, கைப்பற்றப்பட்டவற்றில் கஞ்சாவே அளவில் ஆதிக்கம் செலுத்துகிறது. இது மொத்த எடையில் ஏறத்தாழ 87% ஆகும். இருப்பினும், பெறுமதியின் அடிப்படையில், கோகைன் ஒரு கணிசமான பங்கைக் கொண்டுள்ளது, இது அதன் கடத்தலின் உயர் மதிப்புத் தன்மையை சுட்டிக்காட்டுகிறது.

8.1.5.1.3 போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்ட இடம் சார் பகுப்பாய்வு

கண்டறியப்பட்ட இடங்களின் பகுப்பாய்வின்படி, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையமே இடைமறிப்புகளின் மிக முக்கியமான இடமாகத் திகழ்கிறது. இது, கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்த அளவு மற்றும் பெறுமதியில் மிகப்பெரிய பங்கைக் கொண்டுள்ளது. தபால் மூலமான அனுப்புகையிலும் அதிக எண்ணிக்கை பதிவாகியுள்ளன. இப்போக்கானது, தபால் மூலம் சிறிய அளவிலான கடத்தல் முயற்சிகள் அதிகளவில் நடைபெறுவதை சுட்டிக்காட்டுகின்றன.

அட்டவணை 8.1.5.2 : இடவாரியான போதைப்பொருள் கண்டுபிடிப்புகள் குறித்த விபரம்

அமைவிடம்	வழக்குகளின் எண்ணிக்கை	அளவு (கிராம்)	பெறுமதி (ரூபா)	வழக்குகளின் சதவீதம்	அளவின் சதவீதம்
ப.ச.வி	38	282,951	3,948,193,700.00	25.9%	65.0%
தபால்	81	97,410	1,078,725,000.00	55.1%	22.4%
ம.ச.ப	11	14,462	406,720,000.00	7.5%	3.3%
யூ.பீ.எஸ்	11	21,046	249,535,000.00	7.5%	4.8%
ப.உ.வராத பொதி	6	19,346	203,665,000.00	4.1%	4.4%
மொத்தம்	**147**	**435,215**	**5,886,838,700.00**	**100%**	**100%**

மூலம் : சமூக பாதுகாப்புப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

உரு 8.1.5.2 : இடம் அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி



மூலம் : சமூக பாதுகாப்புப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

தபால் மூலம் கண்டறியப்பட்ட வழக்குகளின் அதிக சதவீதமானது, சிறு பொதி அனுப்புதல்களை மையப்படுத்திய மேம்பட்ட பரிசோதனை மற்றும் புலனாய்வுத் தகவல்களைப் பகிர்ந்துகொள்ளல் ஆகியவற்றின் அவசியத்தை உணர்த்துகிறது. எண்ணிக்கை மற்றும் பெறுமதியில் பெரிய அளவிலான கடத்தலுக்கான முதன்மை நுழைவாயிலாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையமே மேலோங்கிக் காணப்படுகிறது.

8.1.5.1.4 போதைப்பொருட்களின் புவியியல் தோற்றம்

கண்டறியப்பட்ட போதைப்பொருட்கள் வந்தடையும் நாட்டைப் பற்றியதொரு பகுப்பாய்வானது, சர்வதேச கடத்தல் பாதைகள் குறித்த முக்கியமான புலனாய்வுத் தகவல்களை வழங்குகிறது. இந்தத் தரவு, கண்டறியப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டதாகும்.

உரு 8.1.5.3 : போதைப்பொருள் வந்தடையும் முதல் 10 நாடுகள்



மூலம் : சமூக பாதுகாப்புப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

மொத்தமாகக் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களில் கணிசமான எண்ணிக்கையினைக் கொண்டுள்ள போதைப்பொருள் வந்தடையும் முதல் இரண்டு நாடுகளாக ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஆகியன அடையாளம் காணப்பட்டுள்ளன. இது, இந்த நாடுகளுடனுமான இருதரப்பு புலனாய்வுத் தகவல்களைப் பகிர்ந்துகொள்ளல் மற்றும் செயல்பாட்டு ஒத்துழைப்பினைப் பேணுதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

8.1.5.1.5 மாதாந்த கண்டறிதல் பற்றிய போக்குகள்

மாதாந்த கண்டறிதல் தரவுகள் ஆண்டு முழுவதும் ஏற்படக்கூடிய ஏற்ற இறக்கங்களைக் காட்டுகின்றன. இவை பருவகாலப் போக்குகள், கடத்தல் முறைகளில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது குறிப்பிட்ட அமுலாக்க நடவடிக்கைகளின் விளைவுத்திறன் ஆகியவற்றைக் குறிப்பதாக அமையலாம்.

உரு 8.1.5.4 : மாதாந்த கண்டறிதல் போக்குகள் (அளவு கிராம்களில்)



மூலம் : சமூக பாதுகாப்புப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.1.5.1.6 முக்கிய அவதானிப்புகள் :

- உச்சபட்சக் கண்டறிதல் : உச்சபட்ச மொத்தப் பறிமுதல்களைப் பதிவுசெய்த மாதமாக மே மாதம் விளங்குவதோடு, இதற்கான பிரதான காரணமாக பெருமளவிலான கஞ்சா மற்றும் கணிசமான அளவு கோகைன் பறிமுதல் செய்யப்பட்டமையாகும்.
- செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட போதைப்பொருட்களிலான திடீர் அதிகரிப்பு : செப்டம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் மாத்திரமே MDMA மற்றும் ஹெரோயின் பறிமுதல் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இது, இந்தக் காலகட்டத்தில் இலக்கு வைக்கப்பட்ட கடத்தல் முயற்சிகள் அல்லது வெற்றிகரமான புலனாய்வு சார்ந்த நடவடிக்கைகள் நடந்திருக்கலாம் என்பதைக் குறிக்கிறது.

அட்டவணை 8.1.5.1.3 : மாதாந்தம் வாரியாக போதைப்பொருள் கண்டுபிடிப்பு விடங்கள் - 2025

மாதம்	கஞ்சா (கி)	கோகைன் (கி)	மெத்தம் பெட்டமைன் (கி)	MDMA (கி)	ஹெரோயின் (கி)	மொத்தம் (கி)
ஜனவரி	2,837	3,953	~1,000	0	0	~7,790
பெப்ரவரி	49,470	0	0	0	0	49,470
மார்ச்	31,901	0	0	0	0	31,901
ஏப்ரல்	52,224	4,855	0	0	0	57,079
மே	68,823	10,491	0	0	0	79,314
ஜூன்	6,467	1,081	0	0	0	7,548
ஜூலை	46,725	5,298	0	0	0	52,023
ஓகஸ்ட்	5,500	0	0	0	0	5,500
செப்டம்பர்	36,118	1,445	0	14,000	~1,000	~52,563
ஒக்டோபர்	21,214	0	~6,000	0	~4,000	~31,214
நொவம்பர்	49,060	4,870	0	0	0	53,930
டிசம்பர்	6,021	0	0	0	0	6,021

மூலம் : சமூக பாதுகாப்பு பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.1.5.1.7 குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகள் மற்றும் சான்றுப் புகைப்படங்கள்

2025 மே 30 அன்று பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தில் பிடிபட்ட தாய்லாந்து நாட்டவர் கொண்டுவந்த 10,232 கிராம் கோகைன்

2025 நவம்பர் 23 அன்று பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து மலேசிய நாட்டவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட 4,870 கிராம் கொக்கைன்.

கனடா நாட்டவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டவை :

- 2025 பெப்ரவரி 15 அன்று 36,152 கிராம் கஞ்சா
- 2025 மார்ச் 09 அன்று 17,573 கிராம் கஞ்சா
- 2025 ஜூலை 22 அன்று 18,123 கிராம் கஞ்சா
- 2025 ஜூலை 25 அன்று 12,196 கிராம் கஞ்சா மற்றும் 5,298 கிராம் கோகைன்

பிரபலமான வழக்கு

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பிடிபட்ட பிரித்தானிய பெண்ணிடமிருந்து கைப்பற்றப்பட்ட ரூபா 460 மில்லியன் பெறுமதியுடைய குஷ் கஞ்சா

8.1.5.1.8 சாராம்சம்

இலங்கை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவானது, 2025ஆம் ஆண்டில் 147 வழக்குகளைப் பதிவுசெய்திருந்ததோடு, 5.8 பில்லியன் ரூபாவிற்கும் கூடுதலானதொரு பெறுமதியுடைய 435,000 கிராமுக்கும் அதிகமான போதைப்பொருட்களையும் பறிமுதல் செய்து, அதன் கணிசமான விளைவுத்திறனை நிரூபித்துள்ளது. பறிமுதல் செய்யப்பட்டவற்றில் கஞ்சா அதிக அளவில் இருந்த அதேவேளை கொக்கைன் மொத்த பெறுமதியில் கணிசமான பங்கைக் கொண்டிருந்ததோடு, இது பல்வேறுபட்ட கடத்தல் முன்னுரிமைகளையே சுட்டிக்காட்டுகிறது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் பாரிய அளவிலான கடத்தலுக்கான முதன்மை இடைமறிப்பு மையமாகத் தொடர்ந்தும் காணப்பட்ட அதேசமயம், தபால் மூலமாக போதைப்பொருளை அனுப்பக் கூடிய அதிக எண்ணிக்கையிலான சந்தர்ப்பங்களும் காணப்பட்டன, இது அடிக்கடி நிகழும் சிறிய அளவிலான முயற்சிகளைக் குறிக்கிறது. போதைப்பொருள் வர்த்தகத்தின் சர்வதேசத் தன்மையையும் உலகளாவிய ஒத்துழைப்பின் அவசியத்தையும், குறிப்பாக இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா போன்ற முக்கிய மூல நாடுகள் சுட்டிக் காட்டுகின்றன. மாதாந்த போக்குகளை கவனிக்கும் போது, மே மாதத்தில் அதிகபட்ச கண்டறிதல்களையும், செப்டம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் செயற்கையாகத் தயாரிக்கப்படுகின்ற போதைப்பொருட்களில் குறிப்பிட்ட அதிகரிப்புகளையும் வெளிப்படுத்தின, இது மாறும் கடத்தல் முறைகளையும் வெற்றிகரமான புலனாய்வு-மைய வழிகாட்டலுடன் கூடிய நடவடிக்கைகளையும் சுட்டிக்காட்டுகிறது.

8.1.5.1.9 பரிந்துரைகள்

2025 ஆம் ஆண்டிற்கான போதைப்பொருள் கண்டறிதல் தரவுகளின் பகுப்பாய்வின் அடிப்படையில், இலங்கை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் செயல்திறனை மேலும் மேம்படுத்துவதற்காக பின்வரும் பரிந்துரைகள் முன்மொழியப்படுகின்றன:

- **பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சோதனைத் தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல் :** அதிக மதிப்புள்ள பறிமுதல்களுக்கான முதன்மை நுழைவாயிலாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் விளங்குவதால், பெரிய அளவிலான கடத்தலைத் தடுக்கும் வகையில், மேம்பட்ட கண்டறிதல் தொழில்நுட்பங்களில் முதலீடு செய்தல், மற்றும் அங்குள்ள பணியாளர்களுக்கு அதிக பயிற்சிகளை வழங்குதல்.
- **தபால் வழிமூல கண்காணிப்பை வலுப்படுத்துதல்:** தபால் வழியாக நடைபெறும் அதிக எண்ணிக்கையிலான சிறிய அளவிலான கடத்தல் முயற்சிகளைக் கையாளுவதற்காக, தபால் வழியில் மேலும் கடுமையான பரிசோதனை நெறிமுறைகளையும், புலனாய்வுத் தகவல் பகிர்வு வழிமுறைகளையும் நடைமுறைப்படுத்தல்.
- **சர்வதேச ஒத்துழைப்பை வளர்த்தல் :** விநியோகச் சங்கிலிகளை அவற்றின் மூல நாட்டில் வைத்தே சீர்குலைப்பதற்காக, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா போன்ற, அடையாளம் காணப்பட்ட முக்கிய மூல

நாடுகளுடன் இருதரப்பு புலனாய்வுத் தகவல் பகிர்வு மற்றும் செயல்பாட்டு ஒத்துழைப்பைத் தீவிரப்படுத்துதல்.

- **இலக்குப்படுத்தப்பட்ட அமுலாக்க உபாயங்களை உருவாக்குதல்:** முனைப்பான மற்றும் இலக்குப்படுத்தப்பட்ட அமுலாக்க மூலோபாயங்களை விருத்திசெய்யும் வகையில் மாதாந்த கண்டறிதல் போக்குகளை உபயோகித்தல். குறிப்பாக, செப்டம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட போதைப்பொருட்கள் போன்ற, பறிமுதல்கள் திடீரென அதிகரிக்கும் காலகட்டங்கள் மற்றும் போதைப்பொருள் வகைகளில் கவனம் செலுத்தல்.
- **தொடர் பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு:** வளர்ந்து வரும் கடத்தல் முறைகள், புதிய போதைப்பொருட்கள் மற்றும் மேம்பட்ட புலனாய்வு நுட்பங்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் NCU அதிகாரிகளுக்குத் தொடர் பயிற்சி அளித்தல்.

8.1.5.1.10 முடிவுரை

இலங்கை சுங்கத்தின் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையானது, சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தகத்தை எதிர்த்துப் போராடுவதில் ஓராண்டு கால அர்ப்பணிப்பு முயற்சியையும் குறிப்பிடத்தக்க சாதனைகளையும் பிரதிபலிக்கிறது. கண்டறியும் விதங்கள், புவியியல் சார் மூல நாடுகள் மற்றும் கடத்தல் முறைகள் குறித்தான தரவு சார்ந்த நுண்ணறிவுகள், மூலோபாயம் சார்ந்த திட்டமிடலுக்கும் இயக்கப்பாடு சார்ந்த மேம்பாடுகளுக்கும் ஒரு உறுதியான அடித்தளத்தை வழங்குகின்றன. போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவானது, மேற்படி கண்டறிதல்களை உபயோகத்திற் கொண்டும், மற்றும் முன்மொழியப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமும், போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான தனது பாதுகாப்புகளை மேலும் வலுப்படுத்தி, போதைப்பொருளிலிருந்து மிகவும் பாதுகாக்கப்பட்டதொரு நாடாக இலங்கையை முன்னிறுத்த முடியும் என்பதில் சந்தேகமில்லை.

8.1.5.2 பாவனையாளர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவு

8.1.5.2.1 அறிமுகம்

பாவனையாளர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவானது, நாட்டின் நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் நியமங்களுக்கு எதிராக இறக்குமதி செய்யப்படுகின்ற சரக்குகளின் தரம் மற்றும் தரநியமங்களைக் கட்டுப்படுத்தி அவற்றை கண்காணிக்கும் நோக்கில் 2011 இல் தாபிக்கப்பட்டதாகும். இப் பிரிவானது இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பிலான புலமைச் சொத்துரிமைகள் பற்றிய பிரச்சினைகளைப் பேணுவதற்கான இலங்கைச் சுங்கத்தின் முக்கிய பிரிவாகும். மேலும், இப்பிரிவானது ஏனைய சம்பந்தப்பட்ட முகவரகங்களுடன் ஒருங்கிணைந்து செயற்பட்டு சர்வதேச சமவாயங்களின் கடப்பாடுகளை அமுல்படுத்துவதன் மூலம் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கும் பங்களிப்புச் செய்கின்றது.

8.1.5.2.2 பிரதான தொழிற்பாடுகள்

- ஏதேனும் மீறல்கள் மற்றும் மோசடிகளை எதிர்க்கும் நோக்கில், சுங்கச் சட்டங்கள் தொடர்பில் எடுத்துக்கூறப்படுகின்ற புலமைச் சொத்துரிமைச் சட்டம், இலங்கை கட்டளைகள் நிறுவகச் சட்டம், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டம், நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, சுகாதாரத் திணைக்களம் மற்றும் பாதுகாப்பு அமைச்சு போன்றவற்றின் தேவைப்பாடுகள் குறித்தான கட்டுப்பாட்டினை அமுல்படுத்தல். மேலே கூறப்பட்டுள்ள அதிகாரசபைகளால் மேற்கொள்ளப்படும் அனைத்து இறக்குமதிகளும், அவை சுங்க வளாகங்களில் இருந்து வெளியாக்கப்படும் முன்னர் பாவனையாளர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்.
- இந்த நோக்கத்திற்காக, இப்பிரிவானது மேலே கூறப்பட்ட அதிகாரசபைகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்படுகின்ற ஒப்புதல் பதிவுகளை பேணுதல்.
- சம்பந்தப்பட்ட அதிகார சபைகளுடன் தொடர்பான மேற்படி வியடம் பற்றிய சுங்க நடைமுறைகளை இற்றைப்படுத்தல்.
- அவசியமானவிடத்து இப்பிரிவிலிருந்தான பணியாளரை பரிசோதனை மேற்கொள்ளும் இடங்களில் அமர்த்துதல்.
- அடையாளங்காணப்பட்டுள்ள சுங்க கட்டளைச்சட்டங்கள் மற்றும் பிற தொடர்புடைய சட்டங்கள் ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளப்படும் ஒழுங்குவிதிகளை மீளாய்வு செய்தல்.
- மேற்படி செயற்பாடுகள் தொடர்பான கட்டளைச் சட்டங்கள் மற்றும் சட்டங்களோடு சேர்த்து வாசிக்கப்படுகின்ற சுங்கக் கட்டளைச் சட்டத்திற்கேற்ப சட்டங்களை பிரயோகித்தல்.
- நிராகரிக்கப்பட்ட பொருட்களின் மீள் ஏற்றுமதி மற்றும் பிற அபாயகரமான பொருட்களின் இறக்குமதிகளைக் கண்காணித்தல்
- மேற்படி விடயம் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச பேரவைகளில் இலங்கைச் சுங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தல்.
- புலமைச் சொத்துரிமைச் சட்டம் மற்றும் சுற்றாடல் பற்றிய விடயங்களுக்காக தேசிய தொடர்புகொள்ளல் மையமாகத் தொழிற்படல்.
- குறித்த விடயம் தொடர்பில் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல்.
- தேசிய மற்றும் சர்வதேச செயற்பாடுகளில் உலக சுங்க அமைப்பு, இன்டபோல், EUROPOL மற்றும் சுற்றாடல் அதிகார சபை என்பவற்றுடன் கூட்டிணைந்து செயற்படல்.

8.1.5.2.3 பிரதான செயற்பாடுகள்

பிரதான செயற்பாடு - 01 : **புலமைச் சொத்துரிமையின் கீழான பொருட்கள் தொடர்பிலான ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதில் ஆற்றல்மிக்க செயற்பாட்டினை அதிகரித்தல்**		
பிரதான படிமுறைகள்	**இலக்கு**	**உண்மை**
(1) உரிமையாளர்கள் பற்றிய உத்தியோகபூர்வ பட்டியலைப் பெறுதல் :- • பதிவு செய்யப்பட்ட வியாபாரக் குறியீடுகளை பெறல்; (இலங்கைக்குள் இறக்குமதி செய்ய தடைசெய்யப்பட்டவை;) மற்றும் புலமைச் சொத்துரிமையின் கீழான பொருட்கள் தொடர்பிலான ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதில் ஆற்றல்மிக்க செயற்பாட்டினை அதிகரிக்கும் வகையில் சுங்கப்பிரகடனம் செய்முறைப்படுத்தும் சகல அலுவலகங்கள் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்கள் என்பவற்றிற்கு தரவினை பரப்புதல் ;	100%	100%
(2) புலமைச் சொத்துரிமையுடன் தொடர்புபட்ட பொருட்களை இறக்குமதி செய்தலுடன் தொடர்பான ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் சுங்கப்பிரகடனம் செய்முறைப்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்களில் கடமைபுரியும் அலுவலர்களுக்கு விழிப்புணர்வுத் திட்டங்களை மேற்கொள்ளல்	100%	100%
(3) சிறந்த தன்னார்வ இணக்கப்பாட்டிற்காக மேலே குறிப்பிட்ட தேவைப்பாடுகளை உட்படுத்தி சரக்கு வெளியாக்கல் முகவர்களின் பயிற்சி திட்டத்தினை விருத்தி செய்தல்.	100%	100%
(4) குறித்த உரிமப்பத்திரம் உடையோர்களுக்கு சுங்க நடைமுறைகள் தொடர்பிலான அறிவினை விருத்தி செய்தல்.	100%	100%

பிரதான செயற்பாடு - 02 : **இலங்கை தரநிர்ணயங்களின் கீழான பொருட்களுடன் தொடர்பான ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதில் ஆற்றல்மிக்க செயற்பாட்டினை அதிகரித்தல்**		
பிரதான படிமுறைகள்	**இலக்கு**	**உண்மை**
(1) பொருட்களது உத்தியோகபூர்வ பட்டியலைப் பெறுதல் :- இலங்கை தரநிர்ணய நிறுவகத்திடமிருந்தானவை. இறக்குமதிக்காக இலங்கைத் தரநிர்ணய சான்றிதழ் அவசியப்படுபவை; மற்றும் சகல சுங்கப்பிரகடன செய்முறைப்படுத்தல் அலுவலகங்களுக்கும் அமுல்படுத்தல் அலுவலகங்களுக்கும் உரிய தரவினை பரப்புதல்.	100%	100%
(2) இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் நிராகரிப்பு பட்டியலில் உள்ள பொருட்களின் இறக்குமதியுடன் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்பாடுகள் பற்றி சுங்கப்பிரகடனம் செயன்முறைப்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்களில் கடமைபுரியும் அலுவலர்களுக்கு விழிப்புணர்வுத்திட்டங்களை மேற்கொள்ளல்	100%	100%
(3) சிறந்த தன்னார்வ இணக்கப்பாட்டு கட்டுப்பாட்டிற்காக மேலே(2)இல் தேவைப்பாடுகளை உட்படுத்தி சரக்கு வெளியாக்கல் முகவர்களின் பயிற்சி திட்டத்தினை விருத்தி செய்தல்.	100%	100%
(4) நுகர்வோர்களை பாதுகாப்பதற்காக புதிய ஒழுங்குவிகளை வடிவமைத்தல் மற்றும் வர்த்தக நடவடிக்கைக்கு வசதியளித்தல்	100%	100%

பிரதான செயற்பாடு - 03 : **புலமைச் சொத்துரிமை சட்டத்தினை அமுல்படுத்தல்**		
பிரதான படிமுறைகள்	**இலக்கு**	**உண்மை**
(1) புலமைச் சொத்துரிமை சட்டத்தினை அமுல்படுத்தல் தொடர்பில் சுங்க அலுவலர்களுக்கான விழிப்புணர்வுத் திட்டம்	100%	100%
(2) புலமைச் சொத்துரிமை மீறப்பட்ட பொருட்கள் பற்றிய சந்தேகத்திற்கிடமான இறக்குமதி பொருட்களை இடைமறித்தல்.	100%	100%
(4) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 125(அ) மற்றும் 125 (ஆ) ஆகியவற்றுக்கு இணங்க ‘‘செயற்பாட்டுக்கான பிரயோகம்’’ தொடர்பில் செயற்படல்	100%	100%
(4) புலமைச் சொத்துரிமை மீறப்பட்ட பொருட்களின் பறிமுதல் தொடர்பில் அறிக்கையிடல்.	100%	100%
(5) குறித்த பெறுபேறுகளை உலக சுங்க அமைப்பு மற்றும் RILO என்பவற்றிற்கு அவ்வப்பொழுது அறிக்கையிடல்.	100%	100%

பிரதான செயற்பாடு 04 : **மொன்றீல் நெறிமுறையினால் ஆதரவளிக்கப்பட்ட ஓசோன் படையின் ஆற்றலை குறைக்கின்ற மூலப்பொருட்களை இறக்குமதி செய்தல் தொடர்பிலான ஒழுங்கு விதிகளை அமுல்படுத்தவதில் ஆற்றல் மிக்க தன்மையினை அதிகரித்தல்**		
பிரதான படிமுறைகள்	**இலக்கு**	**உண்மை**
(1) சுற்றாடல் அமைச்சின் தேசிய ஓசோன் பிரிவில் பதிவு செய்வதற்கு முன்பதாக தேவையான அலுவலக பொருட்களது பட்டியலொன்றினை பெறல் மற்றும் இறக்குமதி செய்வதற்கு முன்பதாக இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரத்தினை பெறல் அத்தோடு, சகல சுங்கப்பிரகடனச் செயலாக்க அலுவலகங்கள் மற்றும் அமுல்படுத்தல்	100%	100%

அலுவலகங்கள் என்பவற்றிற்கு குறித்த அத்தரவுகளை விநியோகித்தல்.		
(2) சிறந்த இணக்கப்பாடு/அமுல்படுத்துகைக்காக ஓசோன் படையைப் பாதிக்கும் பொருட்கள் தொடர்பிலும் மற்றும் மேலே(2)இல் குறிப்பிடப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திர தேவைப்பாடுகள் தொடர்பிலும் சுங்கப்பிரகடண செயலாக்க மற்றும் அமுல்படுத்தல் அலுவலர்களுக்கு விழிப்புணர்வூட்டல் திட்டங்களை ஆரம்பித்தல்.	100%	100%
(3) சிறந்த தன்னார்வ இணக்கப்பாடு தொடர்பில் மேலே(2)இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளையும் உள்ளீடு செய்து, சரக்கு வெளியாக்கல் முகவர்களுக்கான பயிற்சி திட்டத்தினை விருத்தி செய்தல்.	100% 100%	100% 100%
(4) மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக, ஓசோன் படையைப் பாதிக்கும் பொருட்கள் பற்றி பெறப்படுகின்ற தரவுகளை தேசிய ஓசோன் பிரிவுக்கு வழங்குதல்.	100%	100%
(5) ஏதேனும் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் பற்றிய சுயவிபரம் மற்றும் இலக்கு		

பிரதான செயற்பாடு 05 :
பாசல் பேரவையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆபத்தினை விளைவிக்கத்தக்க கழிவுகள், எல்லைக்கு அப்பால் இடம்பெறும் அசைவுகள் தொடர்பான ஒழுங்கு விதிகளை அமுல்படுத்துவதில் ஆற்றல்மிக்க தன்மையினை அதிகரித்தல்

பிரதான படிமுறைகள்	இலக்கு	உண்மை
(1) பொருட்கள் தொடர்பிலான அலுவலக பட்டியல்களை பெறல் • பாசல் பேரவையிலான இணைப்பு I மற்றும் IIIஇல் உள்ளடக்கப்பட்டுள்ளவை; • இலங்கைக்குள் இறக்குமதி செய்ய தடைசெய்யப்பட்டவை; • இறக்குமதி செய்வதற்கு முன்பதாக இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரத்தனை வேண்டுதல் மற்றும் சகல சுங்கப்பிரகடன செயலாக்க அலுவலர்களுக்கும் அமுல்படுத்தல் அலுவலர்களுக்கும் தரவுகளை விநியோகம் செய்தல்.	100%	100%
(2) பிற அரச முகவரகங்களிடமிருந்தான தொழில்நுட்ப உதவியுடன் சிறந்த இணக்கப்பாடு / அமுல்படுத்தல் என்பவற்றிற்காக, சுங்கப்பிரகடனச் செயலாக்க மற்றும் சட்ட அமுலாக்க அலுவலகங்களுக்கு பின்வரும் விடயங்கள் தொடர்பில் அறிவூட்டும் வகையிலான விழிப்புணர்வூட்டல் திட்டங்களை முன்னெடுத்தல், • பாசல் சமவாயத்தின் கீழ் வருகின்ற ஆபத்து விளைவிக்கத்தக்க கழிவுகள்; • இலங்கைக்குள் இறக்குமதி செய்யத்தடைசெய்யப்பட்ட ஆபத்தினை விளைவிக்கத்தக்க ஏனைய பொருட்கள்; • இறக்குமதி செய்வதற்கு முன்பதாக இறக்குமதிக் கட்டப்பாட்டு அனுமதிப்பத்திரம் அவசியப்படுகின்ற, சுற்றாடல் கூருணர்வுமிக்க ஏனைய பொருள்கள்; • ஆபத்தினை விளைவிக்கத்தக்க அனுப்புபொருட்களை கண்டுபிடிக்கின்ற சந்தர்ப்பத்தில், எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகள்	100%	100%
(3) சிறந்த இணக்கப்பாட்டு கட்டுப்பாடு தொடர்பில் மேலே(2)இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளை உட்படுத்தி சரக்கு வெளியாக்கல் முகவர்களுக்கான பயிற்சித் திட்டத்தினை விருத்தி செய்தல்.	100%	100%

பிரதான செயற்பாடு 06 :
Stockholm பேரவையில் உள்ளடக்கப்பட்டுள்ள மோசமான முறையில் உடல் அங்கங்களை அசுத்தமடையச் செய்கின்றவற்றின் இறக்குமதி தொடர்பிலான ஒழுங்கு விதிகளை அமுல்படுத்தவதில் ஆற்றல் மிக்க செயற்பாட்டினை அதிகரித்தல்

பிரதான படிமுறைகள்	இலக்கு	உண்மை
(1) தொடர் சோதன மாசுறுகை பற்றிய உத்தியோகபூர்வப் பட்டியலினை பெறல் :- • Stockholm பேரவையிலான அ, ஆ மற்றும் இ ஆகிய இணைப்புகளில் பட்டியல்படுத்தப்பட்டவை; • இலங்கைக்குள் இறக்குமதி செய்ய தடைசெய்யப்பட்டவை; • இறக்குமதி செய்வதற்கு முன்பதாக இறக்குமதிக் கட்டப்பாட்டு அனுமதிப்பத்திரம் அவசியப்படுபவை (இணைப்பு ஆ: மட்டுப்படுத்தப்பட்ட பாவனை) ; மற்றும் சகல சுங்கப்பிரகடணம் செயலாக்க மற்றும் அமுல்படுத்தல் அலுவலர்களுக்கு உரிய தரவுகளைப் பரப்புதல் ;	100%	100%
(2) சேதனப் பொருளின் தொடர் மாசுறுகை பற்றி அறிவூட்டும் நோக்கில் சுங்கப்பிரகடன செயன்முறைப்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்களில் கடமைபுரியும் அலுவலர்களுக்கு விழிப்புணர்வுத்திட்டங்களை மேற்கொள்ளல்	100%	100%
(3) சிறந்த தன்னார்வ இணக்கப்பாட்டினை ஏற்படுத்தும் வகையில் மேலே(2)இல் குறிப்பிட்ட தேவைப்பாடுகளை வழங்குவதன் மூலம் சரக்கு வெளியாக்கல் முகவர்களின் பயிற்சி திட்டத்தினை விருத்தி செய்தல்.	100%	100%

பிரதான செயற்பாடு 07 : Rotterdam பேரவையில் உள்ளடக்கப்பட்டுள்ள முன்-தகவலளிக்கப்பட்ட இணக்கப்பாட்டினை அமுல்படுத்துவதிலான வினைத்திறனை அதிகரித்தல்		
பிரதான படிமுறைகள்	**இலக்கு**	**உண்மை**
(1) ஆபத்தினை விளைவிக்கத்தக்க இரசாயனங்கள் மற்றும் பூச்சி கொல்லிகள் தொடர்பில் அலுவலக பட்டியல்களை பெறல் :- • Rotterdam சமவாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவை ; • இலங்கைக்குள் இறக்குமதி செய்ய தடைசெய்யப்பட்டவை; • பூச்சிகொலிகள் பற்றிய பதிவாளரின் முன்கூட்டிய பதிவுகள் அவசியமானவைகள்; • இறக்குமதி செய்வதற்கு முன்பதாக பூச்சிகொல்லிகள் பற்றிய பதிவாளரின் சிபாரிசின் பேரில் வினியோகிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம் அவசியமானவைகள்; மற்றும் சகல சுங்கப்பிரகடணம் செய்முறைப்படுத்தல் அலுவலகங்கள் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்கள் என்பவற்றிற்கு உரிய தரவினை பரப்புதல் ;	100%	100%
(2) பூச்சிகொல்லிகளின் இறக்குமதி செய்தலுடன் தொடர்புபட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் சுங்கப்பிரகடணச் செயலாக்க மற்றும் சட்ட அமுலாக்க அலுவலர்களுக்கு அறிவூட்டும் வகையிலான விழிப்புணர்வுத்திட்டங்களை மேற்கொள்ளல்.	100%	100%
(3) சிறந்த தன்னார்வ இணக்கப்பாட்டினை ஏற்படுத்தும் வகையில் மேலே(2)இல் குறிப்பிட்ட தேவைப்பாடுகளை வழங்குவதன் மூலம் சரக்கு வெளியாக்கல் முகவர்களின் பயிற்சி திட்டத்தினை விருத்தி செய்தல்.	100%	100%

பிரதான செயற்பாடு 08 : இரசாயன ஆயுதங்கள் சமவாயத்தின் கீழ் வருகின்ற பொருட்களுடன் தொடர்புபட்ட ஒழுங்குவிதிகளின் அமுல்படுத்துகையில் பயனுறுதித்தன்மையினை அதிகரித்தல் (இரசாயன ஆயுதங்களை விருத்தி செய்தல், தயாரித்தல், கிடங்கில் களஞ்சியப்படுத்தல் மற்றும் அவற்றை உபயோகித்தல் என்பவற்றினை தடைசெய்தல் மற்றும் அவற்றினை அழித்தல் தொடர்பிலான சமவாயம்)		
பிரதான படிமுறைகள்	**இலக்கு**	**உண்மை**
(1) இரசாயனங்கள் பற்றிய உத்தியோகபூர்வ பட்டியல்களை பெறல் :- • இரசாயன ஆயுதங்கள் சமவாயம்; • இலங்கைக்குள் இறக்குமதி செய்ய தடைசெய்யப்பட்டவை; • இறக்குமதி செய்வதற்கு முன்பதாக இறக்குமதிக் கட்டப்பாட்டு அனுமதிப்பத்திரம் அவசியப்படுபவை; மற்றும் சகல சுங்கப்பிரகடணம் செய்முறைப்படுத்தல் அலுவலகங்கள் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்கள் என்பவற்றிற்கு உரிய தரவினை பரப்புதல் ;	100%	100%
(2) அபாயகரமிக்க இரசாயனங்களை இறக்குமதி செய்தலுடன் தொடர்புபட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் சுங்கப்பிரகடணம் செய்முறைப்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்களில் கடமைபுரியும் அலுவலர்களை விழிப்புணர்வூட்டல்	100%	100%
(3) சிறந்த தன்னார்வ இணக்கப்பாட்டிற்காக மேலே(2)இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளை உள்ளடக்கி சரக்கு வெளியாக்கல் முகவர்கள் பயிற்சி திட்டத்தினை விருத்தி செய்தல்.	100%	100%

பிரதான செயற்பாடு 09 : திணைக்களத்துடன் தொடர்புபட்ட ஏனைய ஈடுபாட்டாளர்கள் மற்றும் அரச முகவர்களுடனான கூட்டிணைப்பினை அதிகரித்தல்		
பிரதான படிமுறைகள்	**இலக்கு**	**உண்மை**
(1) இலங்கை தர நிர்ணயம், NIPO, சுகாதார அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, விவசாயத் திணைக்களம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை என்பவற்றுடனான சந்திப்புக்களை ஏற்பாடு செய்தல்	100%	100%
(2) சம்பந்தப்பட்ட ஈடுபாட்டாளர்களுக்கு விழிப்புணர்வுத் திட்டங்களை ஒழுங்கு செய்தல்	100%	100%
(3) நுகர்வோர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஏனைய முகவர்களுடன் கூட்டான செயற்பாடுகளை ஏற்பாடு செய்தல்	100%	100%
(4) வெகுசன ஊடகம் மூலம் நுகர்வோர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் பொதுமக்கள் விழிப்புணர்வு திட்டங்கள்	100%	100%
(5) உலக சுங்க அமைப்பு, WIPO, INTERPOL, EUROPOL, USPTO, UNODC மற்றும் UNEP போன்ற சர்வதேச அமைப்புகளுடன் ஒத்துழைத்துச் செயற்படல்	100%	100%

பிரதான செயற்பாடு 10 : திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்		
பிரதான படிமுறைகள்	**இலக்கு**	**உண்மை**
(1) செயலமர்வு, பயிற்சித்திட்டம் மற்றும் மாநாடுகள் (உள்ளூர்/சர்வதேசம்) என்பவற்றிற்கு அலுவலர்களை நியமித்தல்	100%	100%
(2) சுங்க அலுவலர்களுக்கான பயிற்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.	100%	100%
(3) நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு செயற்பாடுகள் தொடர்பில் வெளிக்கள ஆராய்ச்சிக்காக அலுவலர்களை ஊக்கப்படுத்தல்.	100%	100%
(4) சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிற தொடர்புபட்ட முகவரகங்களுக்கு பகுப்பாய்வு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.	100%	100%

அட்டவணை 8.1.5.4 : செயலாற்றுகை - 2025

அறவீடுகள்	தொகை (ரூபா)
குறைக்கப்பட்ட பறிமுதல்	44,968,354.59
அபராதம்	300,000.00
நுகர்வோர் பாதுகாப்பு பிரிவின் மொத்த அறவீடுகள்	45,268,354.59

இலங்கை தர நிர்ணய நிறுவனம் தொடர்பிலான விடயங்கள்

பதிவு செய்யப்பட்ட இலங்கை தர நிர்ணய நிறுவனம் தொடர்பிலான விடயங்களின் மொத்த எண்ணிக்கை	368
இலங்கை தர நிர்ணய நிறுவனம் தொடர்பிலான விடயங்களுக்காக விதிக்கப்பட்ட மொத்தம் (அபராதம் + தணிக்கப்பட்ட பறிமுதல்கள்) (ரூபா)	14,711,854.00
இலங்கை தர நிர்ணய நிறுவனத்தினால் நிராகரிக்கப்பட்டவைகளின் மொத்த அளவு	தயவுசெய்து அட்டவணை 8.1.5.5 இனை பார்க்கவும்

புலமைச் சொத்துரிமை குறித்தான விடயங்கள்

பதிவு செய்யப்பட்ட புலமைச் சொத்துரிமை குறித்தான விடயங்களின் மொத்த எண்ணிக்கை	12
புலமைச் சொத்துரிமை மீறல் குறித்து பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் மொத்த பெறுமதி (ரூபா)	16,525,141.18

சுற்றாடல் பாதுகாப்பு தொடர்புபட்ட விடயங்கள்

பதிவு செய்யப்பட்ட விடயங்களின் மொத்த எண்ணிக்கை	4
விடயங்கள் தொடர்பில் விதிக்கப்பட்ட மொத்த அபராதம் (ரூபா)	-
மீள் ஏற்றுமதி செய்யப்பட்டவைகளது மொத்த அளவு	-

மூலம் : சமூக பாதுகாப்புப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

உரு 8.1.5.5 : செஸ் வரி குறித்தான ஒப்பீட்டாய்வு - 2025



மூலம் : சமூக பாதுகாப்புப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.1.5.5 : 2025 ஆம் ஆண்டில் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தினால் நிராகரிக்கப்பட்ட பொருட்கள்

தொ. இல	விவரம்	அளவு	
1	13 அம்பியர் மீள் உபயோகிக்க முடியாத மின்செருகி	30,000	துண்டுகள்
2	13 அம்பியர் ஆளி கொண்ட மின்செருகி நிலை	20,000	துண்டுகள்
3	பப்ள்கம் (Bubblegum)	3,000	அட்டைப் பெட்டிகள்
4	மிட்டாய்	2,500.33	கி.கி
5	அடைக்கப்பட்ட மீன்	5,700	அட்டைப் பெட்டிகள்
6	கூரை விசிறிகள்	1,897	துண்டுகள்
7	பீங்கான் குவளைகள்	300	அட்டைப் பெட்டிகள்
8	பீங்கான் தட்டுகள்	900	அட்டைப் பெட்டிகள்
9	பீங்கான் பாத்திரங்கள்	6,008	அட்டைப் பெட்டிகள்
10	மிளகாய்த்தூள்	4,290	கி.கி
11	மிளகாய் சாஸ்	65	கி.கி
12	மின்சுற்று முறிப்பான்கள் (MCB/RCCB)	400	துண்டுகள்
13	கிளிப் விசிறிகள்	1,000	துண்டுகள்
14	மின்சார கேபிள்கள்	1,500	துண்டுகள்
15	மின் இஸ்திரிப்பெட்டிகள்	25,000	துண்டுகள்
16	மின்சார கெற்றில்கள்	30,672	துண்டுகள்
17	மின்சார அரிசி சமைப்பான்	3,000	துண்டுகள்
18	வால்வு இல்லாத வெற்று சிலிண்டர்கள்	3,586	துண்டுகள்
19	வேற்று LPG சிலிண்டர்கள்	9,478	துண்டுகள்
20	வெளியேற்றும் விசிறிகள்	345	துண்டுகள்
21	விரிவாக்க வடம்	92	துண்டுகள்
22	வாயுக்கலவை சேமிப்புத் தொட்டி	1,820	மெ.டன்
23	சில நிமிடங்களில் சமைக்கக்கூடிய நூடுல்ஸ்	4,700	கி.கி
24	அயடின் கலந்த கல் உப்பு	5987.25	மெ.டன்
25	அயடின் கலந்த, கட்டியாகாத சுத்திகரிக்கப்பட்ட உப்பு	2135	மெ.டன்
26	கல்லுப்பு	618.96	மெ.டன்
27	திண்கூழ் (ஜெலி)	500	அட்டைப் பெட்டிகள்
28	ஈய-அமில இருசக்கர வாகன மின்கலன்	1,500	துண்டுகள்
29	ஏல்.ஈ.டீ பல்புகள்	40,000	துண்டுகள்
30	தாழ் அழுத்த சீராக்கிகள்	640	அட்டைப் பெட்டிகள்
31	திரவப் பெற்றோலிய வாயு	13,371	மெ.டன்
32	சுமையல் எரிவாயு அடுப்பு (ஒற்றை/இரட்டை இடுப்பு)	30,000	துண்டுகள்
33	மைசூர் பருப்பு	1,600	பொதிகள்
34	சுவரில் பொருத்தத்தகு விசிறிகள்	400	துண்டுகள்
35	பிளாஸ்ரிக் தண்ணீர் போத்தல்கள்	10,000	துண்டுகள்
36	பீங்கான் கோப்பைகள் மற்றும் தட்டுகள்	1,500	அட்டைப் பெட்டிகள்
37	பீங்கான் பொருட்கள் (பல்வேறு)	1,000	அட்டைப் பெட்டிகள்
38	மின்சாரக் கம்பிகள்	300	அலகுகள்
39	ராணி பழச்சாறு / பானங்கள்	150	பெட்டிகள்
40	காய்ந்த மிளகாய் (காம்புடன்/காம்பு இல்லாமல்)	186.78	மெ.டன்
41	மறுபயன்பாட்டுத் தண்ணீர் போத்தல்கள்	156,232	துண்டுகள்
42	சோயா சாஸ்	150	கி.கி
43	நிலை மின்விசிறிகள்	10,000	துண்டுகள்
44	குளியல் பொருட்கள் (சோப்பு, டால்க், கிரீம்கள்)	5,000	அட்டைப் பெட்டிகள்
45	தக்காளி சுவைச்சாறு	10,029	கி.கி
46	பொம்மை ஒப்பனை /விளையாட்டுத் தொகுப்புகள்	500	துண்டுகள்
47	குடைகள்	4,000	துண்டுகள்
48	சுவர் மின்விசிறிகள	4,216	துண்டுகள்
49	வெள்ளைக் கரும்புச் சர்க்கரை	945	மெ.டன்
50	கொத்தமல்லி விதை	22,000	கி.கி

மூலம் : சமூக பாதுகாப்புப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.1.5.3. உயிர்ப்பல்வகைமை, கலாச்சார மற்றும் தேசிய மரபுரிமை பாதுகாப்புப் பிரிவு

8.1.5.3.1 பின்னணி

சுற்றாடல் சார்ந்த குற்றச் செயல்கள் தீவிரமானதொரு உலகளாவிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளன. இது இயற்கை உலகில் மட்டுமல்லாமல், தேசிய மற்றும் சர்வதேச பாதுகாப்பு, சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சி, மற்றும் உலகளாவிய சுகாதாரம் ஆகியவற்றிலும் பல பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. பூமியானது தற்போது ஆறாவது பேரழிவைச் சந்தித்து வருவதாகவும், இது ஒரே ஒரு இனத்தின், அதாவது மனிதர்களின், செயல்பாடுகளின் விளைவாக நிகழும் ஒரே பேரழிவு என்றும் விஞ்ஞானிகள் நம்புகின்றனர். தற்போது, IUCN சிவப்புப் பட்டியலில் 150,300 க்கும் மேற்பட்ட இனங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றில் 42,100 க்கும் மேற்பட்ட இனங்கள் அழிவின் விளிம்பில் உள்ளதாகவும் இதில் 41% ஈரூடகவாழ் உயிரினம், 37% சுறாக்கள் மற்றும் திருக்கை மீன்கள், 36% பவளப்பாறைகள், 34% ஊசியிலை மரங்கள், 27% பாலூட்டிகள் மற்றும் 13% பறவைகள் அடங்கும். ஏனைய விடயங்களுக்கு மத்தியில், சட்டவிரோத வனவிலங்கு வர்த்தகம் இந்த பல்லுயிர் அழிவுக்கு ஒரு முக்கிய பங்களிப்பைச் செய்து வருகிறது. போதைப்பொருள், போலி நாணயம் மற்றும் மனிதக் கடத்தலுக்குப் பிறகு, சட்டவிரோத வனவிலங்கு வர்த்தகம் வருடத்திற்கு 23 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியிலான உலகின் நான்காவது பாரிய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வெப்பமண்டலப் பகுதியில் அமைந்துள்ளதால், அது பூமியில் மிகவும் பல்லுயிர் வளம் மிக்க இடங்களில் ஒன்றாக விளங்குகிறது. மனித நடவடிக்கைகளின் விளைவாக, நமது பூர்வீக விலங்கு மற்றும் தாவர இனங்கள் பல அழிவின் விளிம்பில் உள்ளன. மேலும், இலங்கை பல்வேறு கனிம வளங்கள் நிறைந்த ஒரு நாடாகும். அவற்றில் சில தனித்துவமானவை மற்றும் உலகின் மிக உயர்ந்த தரத்தைக் கொண்டவை. இதன் விளைவாக, கடந்த காலங்களில் பல கடத்தல் முயற்சிச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

மறுபுறம், கலாச்சாரச் சொத்துக்களைக் கொள்ளையடிப்பதானது ஒழுங்கமைக்கப்பட்ட எல்லை தாண்டிய குற்றத்தின் மிகப் பழமையான வடிவங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு, இது ஒரு உலகளாவிய நிகழ்வாகவும் மாறியுள்ளது. இது இலங்கைச் சுங்கத்தின் முன்னுரிமைப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. கலாச்சாரப் பாரம்பரியக் கடத்தல் தேசிய மரபுச் செல்வத்தைக் குறைப்பதோடு, சமூகத்தின் மிக முக்கியமான மற்றும் விலைமதிப்பற்ற சில கலாச்சாரப் பொக்கிசங்களை அனுபவிக்கும் வாய்ப்பையும் படிப்படியாக இழக்கச் செய்கிறது. ஒவ்வொரு ஆண்டும், அரும்பொருட் காட்சியகங்கள், தேவாலயங்கள், தனியார் சேகரிப்புகள் அல்லது பொது நிறுவனங்களிலிருந்து ஆயிரக்கணக்கான கலைப்பொருட்கள் காணாமல் போகின்றன. பழங்கால ஆயுதங்கள் முதல் ஓவியங்கள் வரை, நாணயங்கள் முதல் கைக்கடிகாரங்கள் வரை, மதப் பொருட்கள் முதல் தொல்பொருள் கண்டுபிடிப்புகள் வரை, உலகின் தொல்பொருள் மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக விளங்கும் பல்லாயிரக்கணக்கான மாதிரிகள் திருடப்படுகின்றன.

வனவிலங்குகள், இயற்கை வளங்கள் மற்றும் பண்பாட்டுச் சொத்துக்கள் ஆகியவற்றின் எல்லை தாண்டிய சட்டவிரோத வர்த்தகத்தால் அதிகரித்து வரும் அச்சுறுத்தலை உணர்ந்து, இலங்கை சுங்கத்திற்குள் 1993 ஆம் ஆண்டில் உயிர்பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமைப் பாதுகாப்பு பிரிவு நிறுவப்பட்டது. தொடக்கத்தில், இது உயிர்பல்வகைமை பிரிவு என்று அறியப்பட்டது. மேலும், உலகளவில் ஒரு சுங்க நிர்வாகத்திற்குள் நிறுவப்பட்ட இவ்வகையான முதல் சிறப்புப் பிரிவு இது என்று நம்பப்படுகிறது.

காலப்போக்கில், இந்தப் பிரிவு தற்போதைய உயிர்பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமைப் பாதுகாப்பு பிரிவாக உருவெடுத்து, உயிர்பல்வகைமை பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் கலாச்சார பாரம்பரியப் பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாக தனது அதிகார வரம்பை விரிவுபடுத்தியுள்ளது. சுங்கச் சட்டம் மற்றும் பிற தொடர்புடைய தேசிய சட்டங்கள், அத்துடன் CITES போன்ற சர்வதேசக் கடமைகளின் கீழ் செயல்பட்டு, அழிந்துவரும் விலங்குகள் மற்றும் தாவரங்கள், வன மற்றும் கடல் வளங்கள், கனிமங்கள் மற்றும் தொல்பொருட்கள் ஆகியவற்றினை சட்டவிரோதமாக இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல் மற்றும் போக்குவரத்துச் செய்வதைத் தடுப்பதற்கு இந்தப் பிரிவு பொறுப்பாகும்.

புலனாய்வு அடிப்படையிலான அமுலாக்கம், இடர் மதிப்பீடு, முகவர்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பு, புலனாய்வுகள் மற்றும் வழக்குத் தொடர்வுகள் ஆகியவற்றின் மூலம், இலங்கையின் விலைமதிப்பற்ற இயற்கை மற்றும் பண்பாட்டுச் சொத்துக்களைப் பாதுகாப்பதில் BCNP கிளை ஒரு முக்கிய வகிபாகத்தினை தொடர்ந்தும் ஆற்றி வருகிறது. விமான நிலையங்கள், துறைமுகங்கள் மற்றும் சரக்கு முனையங்களில் அதன் செயல்பாடுகள், இலங்கைச் சுங்கத்தின் சமூக மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு மூலோபாய நோக்கங்களை கணிசமாக வலுப்படுத்துவதோடு, தேசியப் பாதுகாப்பு, சூழலியல் நிலைத்தன்மை மற்றும் சர்வதேச இணக்கத்திற்கும் பங்களிக்கின்றன.

8.1.5.3.2 உயிர்ப்பல்வகைமை மற்றும் தேசிய மரபுரிமைகள் பாதுகாப்புப் பிரிவினால் நிறைவேற்றப்படும் முக்கிய தொழிற்பாடுகள்

- தாவர மற்றும் விலங்கினங்கள் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட பொருட்களின் கடத்தலுடன் சம்பந்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களை அமுல்படுத்தல்.
- கனிமங்கள் போன்ற ஏனைய இயற்கை வளங்களைக் கடத்துதலுடன் சம்பந்தப்பட்ட தேசிய சட்டங்களை அமுல்படுத்தல்.
- கலாசாரச் சொத்துக்கள் மற்றும் பாரம்பரியப் பொருட்களைக் கடத்துவதுடன் சம்பந்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களை அமுல்படுத்தல்.
- உரிமப்பத்திரம் மற்றும் அனுமதிப்பத்திரங்களில் கூறப்பட்ட நிபந்தனைகளுடன் இணக்கமுறுவதை உறுதிப்படுத்தல்.
- உயிரியல், இயற்கை மற்றும் கலாசார ரீதியில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களை எல்லை தாண்டிக் கடத்திச் செல்வதை கண்காணிப்பதற்கும் அவற்றை ஒழுங்குபடுத்துவதற்குமான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பல்வேறு நிரல் நிறுவனங்களுக்கான கொள்கை வழிகாட்டல்களை வழங்குதல்.

8.1.5.3.3 இயக்கப்பாடு சார்ந்த கட்டமைப்பு



8.1.5.3.4 2025ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை

- இவ்வாண்டுக்காலப்பகுதியில் கடத்தல் செயற்பாடுகள் மற்றும் சட்ட இசைவுறாமை போன்றன உள்ளிட்ட 53 சம்பவங்களை இப்பிரிவு இடைமறித்து நிறுத்தியுள்ளது.

உரு 8.1.5.6 : பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள்



மூலம் : சமூக பாதுகாப்புப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.1.5.6 : மொத்த விடய புள்ளிவிபரவியல் குறித்த ஒப்பீட்டாய்வு

விபரம்	2023	2024	2025
தொடங்கப்பட்ட விடயங்களின் எண்ணிக்கை	45	50	19
முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை	60	7	7
அறவிடப்பட்ட பறிமுதல்கள் மற்றும் அபராதங்களின் மொத்தத் தொகை (ரூபா)	4,460,000	23,469,036	18,008,571
அறவிடப்பட்ட மேலதிக பதிவுகளது மொத்த தொகை (ரூபா)	-	-	-
மொத்த விற்பனை நடவடிக்கைகள் (ரூபா)	-	-	5,990,000
2025ஆம் ஆண்டுக்கான மொத்த அறவீடுகள் (ரூபா)	4,460,000	23,469,036	23,998,571

மூலம் : சமூக பாதுகாப்புப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.1.5.7 : இப்பிரிவினாலான பிரதான பறிமுதல்கள் - 2025

பொருள் வகை	பறிமுதல் செய்யப்பட்டவைகளின் மொத்த அளவு
உலர்ந்த கடல் வெள்ளரி	22.5 கி.கி
கடல் பாசிகள்	6.5 கி.கி
உயிருள்ள தாவரங்கள்	1480 எண்ணிக்கைகள்
உயிருள்ள மீன்கள்	1653 எண்ணிக்கைகள்
உயிருள்ள ஆமை.்.செங்காது பாம்பு	2141 எண்ணிக்கைகள்
உயிருள்ள பாம்புகள்	6 எண்ணிக்கைகள்
உலர்ந்த சுறா துடுப்புகள்	139.9 கி.கி
கொத்தலஹிம்புட்டு குவளைகள்	70 எண்ணிக்கைகள்
கொத்தலஹிம்புட்டு சிப்ஸ்	596.8 கி.கி
கம்மலு குவளைகள்	12 எண்ணிக்கைகள்
மரக்கட்டைகள்	61 எண்ணிக்கைகள்
விலங்கு எலும்பு	1 எண்ணிக்கை
வல்லப்பட்டை சீவல்கள்	2 கி.கி
பழம்பொருட்கள்	5 எண்ணிக்கைகள்
கடல் சிப்பிகள்/ சங்கு சிப்பிகள்/ பவளங்கள்	159 எண்ணிக்கைகள்
மீன் குடல	29.15 கி.கி
மயில் இறகுகள்	373 எண்ணிக்கைகள்
கனிமங்கள்	61.8 கி.கி

மூலம் : சமூக பாதுகாப்புப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.1.5.8 : கலந்துரையாடல்கள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள், விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய ஒத்துழைப்புடன் கூடிய பணிகள்

மாதம்	செயல்பாடு
ஜனவரி	• இலங்கை கடல் சார் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் வலையமைப்பு வரைபடத் திட்டம் குறித்த செயலமர்வு 2025.01.08 இல் இடம்பெற்றது • இலங்கை பிராந்திய கடல்சார் ஆய்வுகள் மையத்தின் பயிற்சித் தேவைகள் மதிப்பீட்டுக் கூட்டம் 2025.01.24 இல் இடம்பெற்றது. • விவசாயம், கால்நடை வளர்ப்பு, நிலங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சிலான கூட்டம் 2025.01.28 இல் இடம்பெற்றது.
பெப்ரவரி	• CITES சுறா மற்றும் இனங்கள் அடையாள செயலமர்வு 2025.02.19 மற்றும் 2025.02.20 ஆகிய தினங்களில் இடம்பெற்றது. • நீர்வாழ் வளங்கள் மீதான ஏற்றுமதி குறித்த கூட்டம் 2025.02.19 இல் இடம்பெற்றது
மார்ச்	• இயைபுமுறைப்படுத்தப்பட்ட குழுவின் 75வது அமர்வு 2025.02.08 முதல் 2025.03.23 வரை இடம்பெற்றது.
ஏப்ரல்	• SITA புலனாய்வு மற்றும் இலக்கு நிர்ணயித்தல் 2025.04.03 இல் இடம்பெற்றது • இலங்கை வனவிலங்கு அமுலாக்க வலையமைப்பின் புலனாய்வுப் பணிக் குழுவின் நான்காவது கூட்டம் • அந்தூரியம் பயிரிடுவோர் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கத்துடனான சந்திப்பு 2025.04.22 இல் இடம்பெற்றது
மே	• சட்டவிரோத வனவிலங்கு வர்த்தகம் குறித்த முகவர்களுக்கிடையேயான ஒத்துழைப்பு செயலமர்வு (WCO INAMA இந்தியா மற்றும் தெற்காசியத் திட்டம்), 2025.0519 முதல் 2025.05.23 வரை இடம்பெற்றது.
ஜூன்	• சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கான வனவிலங்கு தடுப்புப் பயிற்சி, 2025.06.04 முதல் 2025.06.06 வரை இடம்பெற்றது • எக்ஸ்-கதிர் படப் பகுப்பாய்வுப் பயிற்சி செயலமர்வு, 2025.06.16 முதல் 2025.06.19 வரை • சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட / கடத்தப்பட்ட உயிருள்ள விலங்குப் பொருட்களைக் கையாளுவதற்கான ஒரு தரப்படுத்தப்பட்ட நடைமுறையை உருவாக்குவது குறித்த கூட்டம் 2025.06.25 இல் இடம்பெற்றது.
ஜூலை	• சி.சு.பி.ப மற்றும் சு.பி.ப களுக்கான மேம்பட்ட சுங்கச் சட்டம் 2025.07.08, 2025.07.15 மற்றும் 2025.07.21 ஆகிய தினங்களில் இடம்பெற்றது. • UNODC ஆல் வனவிலங்கு குற்ற நிகழ்விட முகாமை மற்றும் இன அடையாளம் காணுதல், 2025.07.21 முதல் 2025.07.26 வரை • ஆபரேசன் தண்டர் (Operation Thunder) – 2025.07.20 முதல் 2025.07.25 வரை • துறைமுகப் படகுத் தேடல் நுட்பப் பயிற்சி, 2025.07.21 முதல் 2025.07.25 வரை • "பாதரசம் கொண்ட தோல் நிறத்தை வெளுக்கும் பொருட்களை ஒழித்தல்" குறித்த பயிற்சி, 2025.07.29 இல் இடம்பெற்றது. • 2025.07.31 ஆந்திகதி தெற்காசிய வனவிலங்கு அமுலாக்க வலையமைப்பு மற்றும்

மாதம்	செயல்பாடு
	இலங்கை வனவிலங்கு அமுலாக்க வலையமைப்பு ஆகியவற்றின் கூட்டு அமர்வு – 12வது SAWEN செயற்குழு கூட்டம், கொழும்பு
ஒகஸ்ட்	• "உயர் இடர்கொண்ட பயணிகளைக் குறிவைத்தல்" குறித்த பயிற்சி, 2025.08.25 முதல் 2025.08.29 வரை • அவசரநிலை முகாமைத்துவக் குழு கூட்டம், 2025.08.29 இல் இடம்பெற்றது.
செப்டம்பர்	• இலங்கையில் வனவிலங்குகளைக் கையாளுதல், மீட்பு மற்றும் அமுல்படுத்துதல் குறித்த CARE பயிற்சி, 2025.09.11 மற்றும் 2025.09.12 தினங்களில் இடம்பெற்றது. • உயிரிப் பாதுகாப்பில் கார்த்தஜெனா நெறிமுறையைச் செயல்படுத்துவதில் சுங்க அதிகாரிகளின் பங்கு மற்றும் உயிருள்ள மரபணு மாற்றப்பட்ட உயிரினங்களைக் கண்டறிதல் மற்றும் அடையாளம் காணுதல் குறித்த செயலமர்வு, 2025.09.22 முதல் 2025.09.26 வரை இடம்பெற்றது • சி.சு.பி.ப மற்றும் சு.பி.ப களுக்கான ASYCUDA WORLD குறித்த பயிற்சி, 2025.09.22 இல் இடம்பெற்றது. • இயைபுமுறை வகைப்பாடு உயர் பாடநெறி, 2025.09.29 மற்றும் 2025.09.30 திகதிகளில் இடம்பெற்றது. • விவசாயம், கால்நடை வளர்ப்பு, நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சிலான கூட்டம், 2025.09.13 தொடக்கம் 2025.09.25 வரை
ஒக்டோபர்	• இலங்கையில் கப்பல் துறைமுகத்தில் கப்பல்களைத் தேடும் நுட்பங்கள் குறித்த பயிற்சி வகுப்பு 2025.10.13 முதல் 2025.10.17 வரை. • பணமோசடி தடுப்பு மற்றும் பயங்கரவாதம் மற்றும் அணு ஆயுதப் பரவலுக்கு நிதியளிப்பதை எதிர்த்தல் 2025.10.23 இல் இடம்பெற்றது. • பங்கீடுபாட்டாளர் ஆலோசனை செயலமர்வு – NBSAP, BFP மற்றும் 7வது NR, 2025.10.14 மற்றும் 2025.10.15 தினங்களில் இடம்பெற்றது. • பங்கீடுபாட்டாளர் தொடக்க செயலமர்வு – NBSAP, BFP மற்றும் 7வது NR, 2025.10.02 இல் இடம்பெற்றது. • "இலங்கையில் அயல்நாட்டு காட்டு விலங்கு இனங்களின் உள்நாட்டு வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துதல்" குறித்த வரைவுப் பரிந்துரை மீதான கூட்டம், 2025.10.27 இல் இடம்பெற்றது. • SLaWENஐ முறைப்படுத்துதல் மற்றும் நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை உருவாக்குதல் குறித்த இணைந்த கூட்டம், 2025.10.24 இல் இடம்பெற்றது. • திகதி கடல் வெள்ளரி குறித்தான CITES பின் இணைப்பு II பட்டியலைச் செயல்படுத்துதல் தொடர்பாக PHD மாணவர்களுடனான கூட்டம் 2025.10.28 இல் இடம்பெற்றது.
நொவம்பர்	• இலங்கையின் விலங்கினங்கள் மற்றும் தாவரங்களின் ஆக்கிரமிப்பு அயல் இனங்களின் முன்னுரிமைப் பட்டியலைப் புதுப்பித்தல் குறித்த செயலமர்வு, 2025.11.06 மற்றும் 2025.11.07 ஆகிய திகதிகளில். • புலமைச் சொத்துரிமைச் சட்டங்கள் மற்றும் பொருள் அடையாளம் காணுதல் குறித்த செயலமர்வு 2025.11.12 திகதி இடம்பெற்றது. • பயணிகள் மற்றும் சரக்குக் கட்டுப்பாட்டுத் திட்டம்: உயர் இடர் முகாமைத்துவப் பயிற்சி, 2025.11.17 முதல் 2025.11.21 வரை • உயிரியல் பன்முகத்தன்மைக்கான பேரவைக்கான 7வது தேசிய அறிக்கையை உருவாக்குவது குறித்த பங்கீடுபாட்டாளர் ஆலோசனை செயலமர்வு 2025.11.20 திகதி இடம்பெற்றது.
டிசம்பர்	• ஊடுருவும் நீர் வர்த்தகத்தை வழக்குத் தொடர அதிகாரம் பெற்ற சட்ட அமுலாக்க முகவர்களுக்கான வழக்குத் தொடர் பயிற்சியின் மூன்றாம் கட்டம், 2025.12.16 முதல் 2025.12.19 வரை • கடல் விவகாரங்கள், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றப் பிரிவு மற்றும் பங்கீடுபாட்டாளர்கள் தொடர்பான நிலுவையில் உள்ள விடயங்கள் குறித்து விவாதிப்பதற்கான முகவர்களுக்கு இடையேயான கூட்டம் 2025.12.24 இல் இடம்பெற்றது.

மூலம் : சமூக பாதுகாப்புப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.1.5.4 துறைமுகக் கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் விமானச் சரக்கு கட்டுப்பாட்டுப் பிரிவு

8.1.5.4.1 அறிமுகம்

இலங்கைச் சுங்கத்தின் விமானச் சரக்குக் கட்டுப்பாட்டுப் பிரிவும் மற்றும் துறைமுகக் கட்டுப்பாட்டுப் பிரிவும் எல்லை தாண்டிய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கில், போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்களுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் கொள்கலன் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்/ உலக சுங்க அமைப்பு என முன்னர் அறியப்பட்ட பயணி மற்றும் சரக்கு எல்லைப் படையணி அல்லது கொள்கலன் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல் மீதான ஐக்கிய நாடுகள் அலுவலகத்துடன் 2015.01.30 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் 2014 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டன. இந்தப் பிரிவுகள் அமுலாக்கல் கொத்தணியின் சமூகப் பாதுகாப்புப் பணிப்பகத்தின் நோக்கெல்லையின் கீழ் வருகின்றன. துறைமுகக் கட்டுப்பாட்டுப் பிரிவும் விமானச் சரக்குகள் கட்டுப்பாட்டுப் பிரிவும் இலங்கைச் சுங்கத்தின் பொதுவான நடவடிக்கைகளுக்கு மேலாக ஒரு மேலதிக பாதுகாப்பு வழங்கியாகச் செயற்பட்டு வருகின்றன.

8.1.5.4.2 துறைமுகக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணியெல்லை

- போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் அலுவலகம் (UNODC) மற்றும் உலக சுங்க அமைப்பு ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து பணியாற்றுதல்.
- UNODC இன் ஒரு மைய நிலையமாகச் செயற்படுதல்.
- UNODC மற்றும் WCO PCBT ஆகியவற்றிலிருந்தான தகவல்கள் மூலம் தொடக்கி வைக்கப்படும் வழக்குகளை விசாரித்தல்.
- உயர் இடர் மிக்க சரக்குகளை எல்லை தாண்டிக் கொண்டு செல்வதை முன்கூட்டியே இலக்கு வைக்கும் நோக்கில் உலக சுங்க அமைப்பின் சரக்கு இலக்குப்படுத்தல் முறைமையினை நிர்வகித்து அதனை உபயோகித்தல்.
- Hazmat மற்றும் TruNarc ஆகிய சாதனங்களையும் மற்றும் UNODC இனால் தேவைப்படும் பொழுது ஏனைய பிரிவுகளுக்கு உதவும் நோக்கில் வழங்கப்படுகின்ற ஏதேனும் ஏனைய சாதனங்களை இயக்குதல்.
- கட்டணம் செலுத்துவதற்காக கப்பல் முகவர்களால் கணக்கிடப்பட்டும் கப்பல் மேலதிகநேர தொகைகளை சரிபார்த்தல்.
- இறக்குமதி, ஏற்றுமதி, இடைத்தங்கல் மற்றும் இறக்கியேற்றல் கொள்கலன்களைக் கண்காணித்தல்.
- உலகளாவிய கொள்கலன்களின் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்தி அவற்றைக் கண்காணிப்பதில் ஈடுபடுகின்ற சம்பந்தப்படுகின்ற தேசிய மற்றும் சர்வதேச முகவர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றுதல்.
- சட்டவிரோதப் பொருட்கள், கடத்தல் பொருட்கள், போதைப் பொருட்கள் மற்றும் பன்னாட்டுக் குற்றங்களுடன் சம்பந்தப்பட்ட ஏனைய மோசடிச் செயல்களை கண்டறிந்து, அவற்றைத் தடுத்தல் மற்றும் பறிமுதல் செய்தல், அத்துடன் மீள் கண்காணிப்பு விசாரணைகளை முன்னெடுத்தல்.
- UNODC இனால் அன்பளிப்புப் செய்யப்பட்ட Hazmat மற்றும் TruNarc போன்ற தொழில்நுட்பக் கருவிகளின் உதவியோடு இரசாயனப் பொருட்களை இனங்காண்பதற்கு இலங்கைச் சுங்கத்தின் ஏனைய பணிப்பகங்கள் மற்றும் பிரிவுகளுடன் தொடர்பினைப் பேணல்.
- சட்டவிரோதப் பொருட்கள், கடத்தல் பொருட்கள், போதைப்பொருட்கள், சுங்கத்தின் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற நாடுகடந்த குற்றச் செயல்கள் ஆகியவற்றைக் கண்டறிதல், தடுத்தல் மற்றும் தடைசெய்தல், அத்துடன் சுங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட சட்டங்களுக்கு அமைய இறக்குமதிப் பொருட்கள், ஏற்றுமதிப் பொருட்கள், பயணிகள் பொருட்கள், பொதிகள் அல்லது இறக்கியேற்றும் சரக்குகள் போன்றவற்றை நிறுத்துதல், தடுத்துவைத்தல், புலனாய்வு செய்தல் மற்றும் விசாரித்தல் போன்ற நோக்கங்களுக்காக போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு, நுகர்வோர் பாதுகாப்புப் பிரிவு, இடர் முகாமைத்துவப் பணிப்பகம் மற்றும் தடுத்தல் பணிப்பகம் ஆகியவற்றுடனான விசாரணை மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடல்.
- துறைமுக முனையங்களில் மேலதிக காலங்களுக்குத் தங்கியுள்ள கொள்கலன்களைக் கண்காணித்தல்.

8.1.5.4.3 இலங்கைச் சுங்கத்தில் உபயோகிக்கப்படும் கருவிகள் (துறைமுகக் கட்டுப்பாட்டுப் பிரிவு)

1. உலக சுங்க அமைப்பின் சுங்க அமுலாக்க வலைப்பின்னல் (CEN)
   - அ. கொள்கலன்COMM
   - ஆ. விமான சரக்கு இல்லCOMM
2. உலக சுங்க அமைப்பின் தேசிய சுங்க அமுலாக்க வலைப்பின்னல் (nCEN)
3. உலக சுங்க அமைப்பின் சரக்கு இலக்குப்படுத்தல் முறைமை
4. AsyCuDa World
5. AsyHub

துறைமுகக் கட்டுப்பாட்டுப் பிரிவில் உள்ள விசேட சாதனங்கள்

1. HAZMAT
   (அ) HazMatID எனும் இரசாயன் பொருளை இனங்காணும் முறைமையானது அறியப்படாத திண்மப் பொருள், ஜெல், மற்றும் திரவப்பொருட்கள் பற்றிய துரித மற்றும் விரிவான களப் பகுப்பாய்வினை வழங்குகின்றது.

2. TRUNARC
   (அ) The Thermo Scientific™ TruNarc™ என்பது போதைப் பொருட்கள் பற்றிய பகுப்பாய்வினை வழங்குவதோடு, இது தனியான மற்றும் உறுதியான பரிசோதனைகளில் 530 இற்கும் மேற்பட்ட சந்தேகத்திற்கிடமான கட்டுப்படுடைய பொருட்களை ஸ்கேன் பரிசோதனை செய்வதில் அதிகாரிகளுக்கு உதவுகிறது.

8.1.5.4.4 துறைமுகக் கட்டுப்பாட்டுப் பிரிவின் ஏனைய தொழிற்பாடுகள்

1. இலங்கை சுங்கத்தின் துறைமுகக் கட்டுப்பாட்டுப் பிரிவானது, முனைய இயக்குநர்களால் வழங்கப்படும் கொள்கலன் பட்டியலைப் பயன்படுத்தி, கொழும்புத் துறைமுகத்தில் நீண்ட காலமாக தேங்கிக் கிடக்கும் கொள்கலன்களைக் கண்காணித்தல்.

2. இலங்கைக்கு உள்ளே வருகின்ற மற்றும் இலங்கையிலிருந்து வெளிச் செல்லுகின்ற கப்பல் சரக்குகள் மற்றும் விமானச் சரக்குகளை கண்காணித்தல், புலனாய்வு செய்தல், தடுத்தல் மற்றும் விசாரணை செய்தல் அத்துடன் அவை தொடர்பில் UNODC மற்றும் WCO ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து செயற்படல் போன்ற நோக்குடன், போதைப் பொருள் மற்றும் குற்றச் செயல் பற்றிய ஐக்கிய நாடுகள் அலுவலகத்தினாலும் (UNODC) உலக சுங்க அமைப்பினாலும் (WCO) தொடக்கி வைக்கப்பட்ட கொள்கலன் கட்டுப்பாட்டுத் திட்டத்தினை உபயோகித்தல்.

3. துறைமுகக் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் UNODC இனால் அன்பளிப்புச் செய்யப்பட்ட HazMat மற்றும் TruNarc போன்ற விசேட கருவிகளை உபயோகித்து இரசாயனப் பொருட்கள் மீதான எழுமாறான சோதனைகளை மேற்கொள்ளல்.

8.1.5.4.5 செயலாற்றுகை பற்றிய சாராம்சம்

அட்டவணை 8.1.5.9 : 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுக்காலப்பகுதியல் அறவிடப்பட்ட அரசிறை

தொடர் இல	விபரம்	அறவிடப்பட்ட தொகை (ரூபா) 2025	அறவிடப்பட்ட தொகை (ரூபா) 2024
1	மொத்த பறிமுதல் / தணிக்கப்பட்ட பறிமுதல்கள் / விற்பனை வரும்படிகள்	487,823,770	315,830,288.69
2	கப்பல் தொடர்பிலான மேலதிக நேர அறவீடுகள்	92,599,270	107,549,219.50
மொத்தம்		**580,423,040**	**423,379,507**

மூலம் : சமூக பாதுகாப்புப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டில் அரசிறை வளர்ச்சி - 55%

அட்டவணை 8.1.5.10 : குறித்த விடயங்களின் நிலைமைகள் மற்றும் அறவீடுகள் - 2025

மாதம்	பதிவு செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை	முழுவதுத்தப்பட்ட /மேற்கொண்டு ஏந்த நடவடிக்கையும் இல்லை எனும் விடயங் களின் எண்ணிக்கை	சேகரிக்கப்பட்ட அபராதங் களின் தொகை (ரூபா)	தணிக்கப்பட்டு சேகரிக்கப்பட்ட பறிமுதல் (ரூபா)	விற்பனை வரும்படிகள்	மொத்தம் (பறிமுதல்/ தணிக்கப்பட்ட பறிமுதல்/ விற்பனை வரும்படிகள்) (ரூபா)	அறவிடப்பட்ட மேலதிக பதிவுகளது மொத்தம் (ஒழுமதி மதிப்பிடல்/ நீள அறை) (ரூபா)
ஜனவரி	5	18	0.00	3,800,000	18,502,590	22,302,590	0.00
பெப்ரவரி	8	11	200,000	9,245,000	0.00	9,445,000	244,545
மார்ச்	6	7	0.00	4,545,000	764,350	5,309,350	571,301
ஏப்ரல்	6	3	200,000	11,810,000	0.00	12,010,000	0.00
மே	6	4	100,000	34,239,080	4,800,000	39,139,080	0.00
ஜூன்	3	1	500,000	39,900,000	15,826,500	56,226,500	0.00
ஜூலை	5	-	200,000	8,400,000	0.00	8,600,000	0.00
ஓகஸ்ட்	10	-	0.00	13,695,000	0.00	13,695,000	2,636,313
செப்டம்பர்	5	1	400,000	29,000,000	0.00	29,400,000	2,636,313
ஒக்டோபர்	36	2	200,000	101,810,00	7,356,250	109,366,250	1,138,361
நவம்பர்	8		200,000	49,350,000	0.00	49,550,000	89,607
டிசம்பர்	9		1,000,000	131,780,00	0.00	132,780,000	129,455
மொத்தம்	**107**	**47**	**3,000,000**	**437,574,000**	**47,249,690**	**487,823,770**	**7,445,895**

மூலம் : சமூக பாதுகாப்புப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

உரு 8.1.5.7 : மொத்த பறிமுதல்கள்/ தணிக்கப்பட்ட பறிமுதல்கள்/ விற்பனை மூலமான வருமானங்கள் (ரூபா மில்.)



மூலம் : சமூக பாதுகாப்புப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

இரசாயன சோதனை

- HazMat ஐப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் எண்ணிக்கை
  - துறைமுகக் கட்டுப்பாட்டு அலகுக்கு - 27
  - பிற கிளைகளுக்கு - 13

- TruNarc ஐப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் எண்ணிக்கை
  - துறைமுகக் கட்டுப்பாட்டு அலகுக்கு - 15
  - பிற கிளைகளுக்கு - 05

அட்டவணை 8.1.5.11 : கப்பல் தொடர்பிலான மேலதிக நேர கண்காணிப்பு - 2025

மாதம்	அறவிடப்பட்ட தொகை (ரூபா)	கப்பல் பயணங்களின் எண்ணிக்கை
ஜனவரி	921,498	340
பெப்ரவரி	5,375,691	301
மார்ச்	5,571,025	333
ஏப்ரல்	6,281,081	313
மே	9,965,254	320
ஜூன்	13,481,576	326
ஜூலை	10,553,925	316
ஓகஸ்ட்	4,794,915	317
செப்டம்பர்	9,928,890	316
ஒக்டோபர்	12,186,525	327
நவம்பர்	8,249,220	284
டிசம்பர்	5,287,100	312
மொத்தம்	**92,599,270**	**3,806**

மூலம் : சமூக பாதுகாப்புப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

உரு 8.1.5.8 : கப்பல் தொடர்பிலான மேலதிக நேர கண்காணிப்பு



மூலம் : சமூக பாதுகாப்புப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.1.5.4.6 2025 ஆம் வருட செயல் திட்டத்தின் சாதனைகள்

அரசிறைக் குறிக்கோள்

கடத்தல் முயற்சிகளை எதிர்கொள்ளும் நோக்கிலான சுங்கச் சட்டத்தை அமுல்படுத்துவதன் குறிக்கோளானது, சரக்குகளை பின்தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் இலக்குப்படுத்தல் போன்ற மூலோபாயங்கள், கூட்டான சோதனையிடல்கள் மற்றும் விசாரணைகளை நடத்துதல் போன்ற பரிந்துரைக்கப்பட்ட உபாயங்கள் மூலம் அடையப்பட்டது. இதன் விளைவாக மொத்த அபராத அறவீடு ரூபா. 3,000,000 வும், தணிக்கப்பட்ட பறிமுதல் அறவீடு ரூபா. 437,574,000 வும், விற்பனை மூலமான வருமானம் ரூபா. 47,249,690 வும் மற்றும் மேலதிக பதிவு தொடர்பில் ரூபா. 7,445,895 வும் அறவிடப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டில் துறைமுகக் கட்டுப்பாட்டுப் பிரிவால், கப்பல் மேலதிக நேரக் கட்டணங்களாக ரூபா. 92,599,270 ஆன தொகையும் விளங்கியது.

வர்த்தக வசதியளித்தல் குறிக்கோள்கள்

உலக சுங்க அமைப்பின் சரக்கு கண்காணிப்பு முறையைப் பயன்படுத்தி இடர் சுயவிவரங்களை உருவாக்குதல் மற்றும் வணிக சரக்குகளை மதிப்பிடுவதன் மூலம் வர்த்தக வசதி வசதியளித்தல் குறிக்கோளினை அடைய முடிந்தது.

பிற குறிக்கோள்கள்

திறன் மேம்பாடு

இலங்கை சுங்கத்தின் துறைமுகக் கட்டுப்பாட்டுப் பிரிவில் இணைக்கப்பட்ட அதிகாரிகளுக்கு திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் நடத்தப்பட்டன.

- பயணிகள் மற்றும் எல்லைப்புற சரக்கு கையாளுமைக் குழு என முன்னர் அழைக்கப்பட்ட பயணிகள் மற்றும் சரக்கு கட்டுப்பாட்டுத் திட்டம் மற்றும் போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல் என்பவற்றிற்றுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் கொள்கலன் கட்டுப்பாட்டுத் திட்டம்.

1. எக்ஸ்-ரே பட (X ray) பகுப்பாய்வு பயிற்சி

2. சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் அதன் முன்னோடிப் பொருட்கள் கடத்தல் தொடர்பான கடத்தல் தடுப்புப் பயிற்சி

3. அதிக இடர்மிக்க பயணிகளைக் கண்டறிவதற்கான பயிற்சி

4. மேம்பட்ட இடர் முகாமைத்துவ பயிற்சி

5. துறைமுகக் கட்டுப்பாட்டுப் பிரிவு UNODC நிகழ்ச்சிகளை நடத்தியது

போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் (UNODC) பயணிகள் மற்றும் சரக்குக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் (PCCP) உறுப்பினர்களிடையே அறிவையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்வதற்கும் மற்றும் பரிமாறிக்கொள்வதற்குமான நோக்குடன், நேபாள சுங்க அதிகாரிகளுக்காக இலங்கை சுங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட UNODC ஆய்வுப் பயணத்தை துறைமுகக் கட்டுப்பாட்டுப் பிரிவு 2025.12.01 முதல் 2025.12.03 வரை நடத்தியது.

8.1.5.4.7 குறிப்பிடத்தக்க சாதனைகள் - 2025

விமானச் சரக்குக் கட்டுப்பாட்டுப் பிரிவின் (ACCU) சாதனைகள்

கட்டுநாயக்க விமான சரக்கு முனையத்தில், அதிக மதிப்புள்ள மற்றும் தடைசெய்யப்பட்ட பல சரக்குகளை ACCU வெற்றிகரமாக இடைமறித்தது.

இரசாயன மற்றும் மருந்துப் பொருட்கள் பறிமுதல்

என், என் - இருமீதைலசிடமைட் (N, N-Dimethylacetamide) : இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திர தேவைகளைத் தவிர்ப்பதற்காக, என்.என் - இருமீதைலமினோ (N, N-Dimethylamino) என தவறாக விவரிக்கப்பட்டதால், இந்தியாவிலிருந்து வந்த ஒரு லீற்றர் கொள்ளவினைக் கொண்ட 18 போத்தல்கள் தடுத்து வைக்கப்பட்டன.



- நீராற்பகுக்கப்பட்ட கொலாஜன்: NMRA அனுமதிப்பத்திரம் இல்லாததாலும் மற்றும் "உணவு நிறமூட்டி" என வகைப்படுத்தப்பட்டதாலும், ஐக்கிய அரபு நாடுகளிலிருந்தான ரூபா. 2,381,455 பெறுமதிகொண்ட 20,000 துண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்படவுள்ளன.



- அழகுசாதனப் பொருட்கள்: குறித்த ஒழுங்குபடுத்தல் நிறுவனத்தின் ஒப்புதலைத் தவிர்ப்பதற்காகத் தவறாக வகைப்படுத்தப்பட்டதன் காரணமாக, ரூபா. 12,174,465 பெறுமதிகொண்ட 14 வகையான பொருட்கள் (CeraVe, Vaseline, மற்றும் The Ordinary உள்ளிட்ட வியாபாரக் குறி) தடுத்து வைக்கப்பட்டன.

- இறைச்சி மற்றும் காய்கறிகள் : 68 கி.கி வாத்து இறைச்சி மற்றும் 113 கி.கி காய்கறிகள்/பழங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இவை தாவர மற்றும் வலங்கின தனிமைப்படுத்தல் அனுமதிகள் இல்லாமல் இறக்குமதி செய்யப்பட்டு, ஏனைய உணவுப் பொருட்களுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக, 9.5 மில்லியன் இலங்கை ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

- மின்சார மோட்டார் மிதிவண்டிகள்: இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம் இல்லாத காரணத்தால், சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 125 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 330 பெட்டரிகள் (ரூபா 30,435,754 பெறுமதி கொண்டவை) பறிமுதல் செய்யப்பட்டன.

- சீன வடிகட்டப்பட்ட மதுபானங்கள்: மது வரி திணைக்களத்திடமிருந்தான அனுமதியைப் பெறாததால், 50% மதுசாரத்தினைக் கொண்ட 8,832 போத்தல்களும், 17,664 சிறிய மது அருந்தும் கண்ணாடி கோப்பைகளும் (ரூபா 74,140,662 பெறுமதி கொண்டவை) பறிமுதல் செய்யப்பட்டன.

- அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட, பயன்படுத்தப்பட்ட மூன்று செஸ்னா விமானங்கள் (Cessna aircraft) 172RG, R172K மற்றும் A152 மாதிரிகள்) பறிமுதல் செய்யப்பட்டன. இவற்றின் மொத்த பெறுமதி 128 மில்லியன் இலங்கை ரூபாய்க்கும் அதிகமாக இருந்ததுடன், இவை செல்லுபடியானதொரு இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம் இல்லாமல் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன.

- பழுப்புநிறச் சீனி : வெள்ளைச் சீனி என பிரகடனப்படுத்தப்பட்ட 805,550 கி.கி (30 முழுக் கொள்கலன்கள்) சீனி இடைமறிக்கப்பட்டது. இதன் விளைவாக, குறைக்கப்பட்ட பறிமுதல் 50 மில்லியன் இலங்கை ரூபாய் ஆகும்.

- மஞ்சள் மக்காச்சோளம் : அனுமதிப்பத்திரம் மீறல் காரணமாக, கால்நடைத் தீவனத்திற்கான 659,625 கிலோ மஞ்சள் மக்காச்சோளம் (மதிப்பு: LKR 172,423,020) ரூபா 40 மில்லியன் பறிமுதல் அறவீடு செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டது.

- சிகரெட்டுகள்: இரும்பு ஆக்சைடு நிரப்பப்பட்ட ஒரு பொதிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 360,000 வெளிநாட்டு சிகரெட்டுகள் கண்டெடுக்கப்பட்டன.

- யூரியா உரம்: அனுமதிப்பத்திரம் இல்லாமல் இறக்குமதி செய்யப்பட்ட 55 மெட்ரிக் தொண் யூரியா உரம் பறிமுதல் செய்யப்பட்டு, ஏலத்தில் 8 மில்லியன் இலங்கை ரூபாய்க்கு விற்கப்பட்டது.

8.2 அரசிறை மற்றும் சேவைகள் கொத்தணி

8.2.1 மத்திய சரக்குப் பரிசோதனைகள் பணிப்பகம்

8.2.2 பிரகடனப் பணிப்பகம்

8.2.3 மத்திய பெறுமதி மதிப்பீட்டுப் பணிப்பகம்

8.2.4 அரசிறை மற்றும் சேவைகள் (கட்டுநாயக்க) பணிப்பகம்

8.2.5 தொழிற்துறை மற்றும் சேவைகள் பணிப்பகம்

8.2.6 முதலீட்டுச் சபை ஒருங்கிணைப்புப் பணிப்பகம்

8.2.1 மத்திய சரக்குப் பரிசோதனை பணிப்பகம்

8.2.1.1 அறிமுகம்

சுங்க வெளியாக்கல் நடைமுறையின் பிரதான கடமை யாதெனில், இறக்குமதி செய்யப்படும் கடல்வழிச் சரக்குகளை அதிகாரமளிக்கப்பட்ட சுங்க அதிகாரிகளால் பரிசோதிப்பதாகும். இந்த நோக்கத்திற்காக மத்திய சரக்குப் பரிசோதனை பணிப்பகம் 2000.08.23 அன்று நிறுவப்பட்டதுடன் இப்பணிப்பகமானது, இடர் மதிப்பீட்டு முறையை அடிப்படையாகக் கொண்டு சரக்குத் தேர்வு செய்து பரிசோதனை செய்யும் பணியை மேற்கொள்கிறது.

ஒரு சரக்கைப் பரிசோதித்து விடுவிக்க எடுத்துக்கொள்ளப்படும் சராசரி நேரம், சேகரிக்கப்பட்ட மேலதிக வருவாயின் அளவு, மற்றும் சரக்குப் பரிசோதனைச் செயல்முறையின் விளைவாகக் கண்டறியப்பட்ட சுங்க மற்றும் அது தொடர்பான சட்ட மீறல்களின் எண்ணிக்கை ஆகியவை அதன் உற்பத்தித்திறனை சுட்டிக்காட்டுகிறது. இந்தப் பணிப்பகத்தின் பிரதான அலுவலகம், சுங்கப் பணிப்பாளரின் (மத்திய சரக்குப் பரிசோதனைப் பணிப்பகம்) தலைமையில் நேன்க் கொள்கலன் சாலையில் நிறுவப்பட்டுள்ளதோடு, கொழும்பு கப்பல் துறைமுகம், CSL(CVT), 02 கிறே லைன் வளாகங்கள் மற்றும் RCT கொள்கலன் முனையம் ஆகியவற்றில் கிளைகளுடன் நிறுவப்பட்டுள்ளது. இலங்கைச் சுங்கமானது சரக்குப் பரிசோனை நடைமுறையில் நியமதரத்தை மேம்படுத்தும் நோக்கில் உலக சுங்க அமைப்பு, உலக வர்த்தக அமைப்பு மற்றும் பிற சர்வதேச அமைப்புகளால் பரிந்துரைக்கப்பட்ட பல்வேறு கருவிகள் மற்றும் நுட்பங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. இறக்குமதியாளர்களுக்கு அதிகபட்ச வசதிகளை வழங்குகின்ற அதேவேளை, சரக்கு தேர்வுச் செயல்பாட்டின் போது தொடர்புடைய ஒழுங்குமுறை கட்டுப்பாடுகளைப் பிரயோகிப்பதும் இப்பணிப்பகத்தின் குறிக்கோளாகும்.

8.2.1.2 பணிப்பகத்தின் கட்டமைப்பு

சுங்கப் பணிப்பாளரின் (ம.ச.ப.ப) தலைமையில் செயல்படும் மத்திய சரக்குப் பரிசோதனை பணிப்பகம், வருவாய் மற்றும் சேவைகள் கொத்தணியின் கீழ் இயங்குகிறது.



8.2.1.3 பரிசோதனை நடைமுறை

பரிசோதனைக்குட்படும் பொருட்களது வகைகள்

- வீட்டுப் பாவனைக்கான இறக்குமதிகள்
- முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்தைக் கொண்ட தொழில் முயற்சியாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற இறக்குமதிகள்.

தெரிவுமுறை

பரிசோதனையின் அளவு (சிவப்பு, ஆம்பர், ஸ்கேன் செய்து விடுவித்தல், விலக்களிப்பு) மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்டால், பரிசோதனை நடைபெறும் இடம் ஆகியவை இடர் முகாமைத்துவ அளவுகோல்களின் அடிப்படையில் AsyCuda அமைப்பு மூலம் தானாகவே தேர்ந்தெடுக்கப்படும்.

இடர் மைய அடிப்படையிலான சரக்குப் பரிசோதனை

- முழுக் கொள்கலன் சரக்கு

  சிவப்பு வழிமுறையூடான சரக்குப் பரிசோதனையானது கிறேலைன் I மற்றும் கிறேலைன் II ஆகிய வளாகங்களில் மேற்கொள்ளப்படுவதோடு, அவ்வப்போது RCT வளாகத்திலும் மேற்கொள்ளப்படும்.
  ஆம்பர் வழிமுறைச் சரக்குப் பரிசோதனையானது RCT வளாகத்திலும் மேற்கொள்ளப்படும்.
  தேவைப்பாட்டின் பேரில், பரிசோதனை வளாகத்திலுள்ள சிரேஷ்ட சுங்க பிரதிப் பணிப்பாளர், சிவப்பு முதல் ஆம்பர் வரையான பரிசோதனை வழிமுறையினை மேலும் அதிகரிக்கலாம். இணக்கப்பாட்டின் அளவு, சரக்கின் தன்மை, பரிசோதனை வளாகங்களில் நிலவும் பரிசோதனை வசதிகள் போன்றவற்றின் அடிப்படையில் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில், வர்த்தகத்தை எளிதாக்கும் ஒரு வழிமுறையாக, சில சட்டவாக்க இடர்மிக்க சரக்குதாரரின் இடத்தில் பரிசோதிக்க அனுமதிக்கப்படலாம்.

- சில்லறை கொள்கலன்களில் அடங்கிய பொருட்கள்

  சில்லறை சரக்குக் கொள்கலனானது, துறைமுகத்திற்குள்ளேயுள்ள களஞ்சியசாலையில் அல்லது புதிய நுகே வீதி களஞ்சியசாலையில் பிரிக்கப்பட்ட பின்னர், JCT, BQ மற்றும் புதிய நுகே வீதி களஞ்சியசாலையில் பணிபுரியும் சரக்குப் பரிசோதனை பணிப்பக அதிகாரிகளால் பரிசோதனை செய்யப்படும்.

முதலீட்டுச் சபைக்கு அனுப்பப்படுகின்ற பொருட்களது பரிசோதனை

சுதந்திர வர்த்தக வலயத்திற்கு வெளியே நிறுவப்பட்டுள்ள முதலீட்டுச் சபைக்குரிய தொழில் முயற்சியாளர்களுக்கு அனுப்பப்படுகின்ற பொருட்கள் CVT (BOI) இல் வைத்துப் பரிசோதனை செய்யப்படும்.

8.2.14 செயலாற்றுகை

அட்டவணை 8.2.1.1 : செயலாற்றுகை 2025

சுங்கப் பிரகடனங்களது எண்ணிக்கை		220,783
பரிசோதனைகளது வகை	ஆம்பர்	68,450
	விரிவான	-
	உயர் இடர் சரக்கு	-
	ரெட்	73,962
	ஏனையவை (ஏ.நோ.த.இறக்குமதி போன்ற)	18,476
	முதலீட்டுச் சபை	59,895
சில்லறை கொள்கலன்களது எண்ணிக்கை		118,066
பரிசோதனைகளது வகை	ஆம்பர்	28,222
	விரிவான	-
	உயர் இடர் சரக்கு	-
	ரெட்	28,058
	ஏனையவை (ஏ.நோ.த.இறக்குமதி போன்ற)	15,126
	முதலீட்டுச் சபை	46,660

முழுக் கொள்கலன்களது எண்ணிக்கை		140,582
பரிசோதனைகளது வகை	ஆம்பர்	62,038
	விரிவான	-
	உயர் இடர் சரக்கு	-
	ரெட்	58,993
	ஏனையவை (ஏ.நோ.த.இறக்குமதி போன்ற)	6,033
	முதலீட்டுச் சபை	13,518
கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களது எண்ணிக்கை		1,123
மேலதிக பதிவுகளாக அறவிடப்பட்ட சுங்கப் பிரகடனங்களது எண்ணிக்கை		2,389
மேலதிக பதிவுகள் தவிர்ந்த பிற அறவீடுகள் (ரூபா)		873,154,960
கண்டுபிடிப்புகள் (ரூபா)	அபராதமும் மேலதிக பறிமுதல்களும்	747,530,971
	விற்றுத்தீர்த்தவை	95,693,983
மேலதிக நேரம் (ரூபா)	பொதுவானவை	4,509,250
	முதலீட்டுச் சபை	11,805,099
ஏனைய கட்டணங்கள் (ரூபா)	அறவிடப்பட்ட காப்பறைக் கட்டணம்	1,444,900
	முத்திரையிடல் (சீல்) கட்டணங்கள்	3,950
	வெளிநிலை பரிசோதனைக் கட்டணங்கள் (ரூபா)	12,166,807
மேலதிக பதிவுகள் தொடர்பிலான அறவீடுகள் (பெறுமதி மதிப்பிடல் நீங்கலாக) (ரூபா)		916,333,867
இறக்குமதி சுங்கத் தீர்வை		307,474,388
EIC		281,932,715
து.வி.அ.அறவீடு		116,395,960
பெ.சே.வரி		157,559,154
வி.ப.அறவீடு		2,661,226
ச.பா.அறவீடு		36,711,834
மேலதிகக் கட்டணம்		-
உற்பத்தி வரி		2,248,536
ஏனையவை		11,350,054
மொத்த அறவீடுகள்		**1,789,488,827**
உத்தரவாதம் குறித்த விபரங்கள்		
பதிவு செய்யப்பட்ட வங்கி உத்தரவாதங்களது எண்ணிக்கை		3,712
விடுவிக்கப்பட்ட வங்கி உத்தரவாதங்களது எண்ணிக்கை		2,813
பதிவு செய்யப்பட்ட தனிப்பட்ட உத்தரவாதங்களது எண்ணிக்கை		1,578
விடுவிக்கப்பட்ட தனிப்பட்ட உத்தரவாதங்களது எண்ணிக்கை		355

மூலம் : மத்திய சரக்குப் பரிசோதனை பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.2.2 பிரகடனப் பணிப்பகம்

8.2.2.1 அறிமுகம்

சகல கப்பல் சரக்குகள் தொடர்பில் அந்தந்த இறக்குமதியாளர்களால் சுங்கப் பிரகடனம் சமர்ப்பிக்கப்பட்டவுடன் சுங்கப் பிரகடனங்கள் (CusDec என அழைக்கப்படுகின்றன) செயலாக்கப்படும் இடமாக பிரகடனப் பணிப்பகம் விளங்குகின்றது.

இப் பிரகடனப்படுத்தல் பணிப்பகமானது பின்வரும் பிரிவுகளை கொண்டுள்ளது.

.

1. நீள அறை
2. மோட்டார் வாகன பிரிவு
3. 'டீ' பிரிவு

8.2.2.2 இப்பணிப்பகத்தின் நோக்கம்

இப்பணிப்பகத்தின் பிரதான நோக்கமானது இறக்குமதி செய்கின்ற பொருட்கள் தொடர்பில் பிரகடனங்களைச் செய்முறைப்படுத்தல் வசதிகளை வழங்குதலாகும். இக்குறிக்கோளினை நிறைவேற்றும் வகையில் பின்வருவனவற்றுக்கான ஏற்பாடுகளை இப்பணிப்பகம் விசேடமாக மேற்கொண்டுள்ளது,

- சரக்குப்பட்டியல் விபரங்களை இலத்திரனியல் முறையில் பெறுதல்.
- சுங்கப் பிரகடனங்களை DTI ஊடாகப் பெறுதல்.
- சுங்கப் பிரகடனங்கள் தொடர்பிலான தீர்வைகள் மற்றும் பிற வரிகளை ஒன்லைன் ஊடாகவும் வங்கிகள் மூலமாகவும் மேற்கொள்ளல்.
- தெரிவு செய்யப்பட்ட இறக்குமதியாளர்களுக்கு துரித வழிமுறையுடன் கூடிய செயன்முறை வசதிகளை வழங்குதல்.
- அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய அலுவலர்களைக் கொண்டு சுங்கப் பிரகடனங்களை செய்முறைப்படுத்தல்.
- இலங்கைத் துறைமுக அதிகார சபை, SAGT மற்றும் CICT சாலைகளில் இருந்து முழுக் கொள்கலன் சுமை கொண்டவற்றினை அகற்றுவதற்கான வாயில் அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல்.

தன்னியக்க செயலாக்கம் தற்போது பின்வருவனவற்றின் ஊடாக முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளது :

"ASYCUDA World" இறக்குமதியாளர்களுக்கு சுங்கப் பிரகடனங்களை எவ்வித தாமதமின்றி செய்முறைப்படுத்த உதவுகிறது. சுங்கப் பிரகடனத்தின் அனைத்து விபரங்களும் இப்போது நீள அறையில் (2ஆம் மாடி) "ASYCUDA **முறைமையில்"** பதிவு செய்யப்படுகின்றன. இது DTI வசதிகளைப் பயன்படுத்தி பயனர்கள் அவர்களது அலுவலகங்களில் இருந்து நேரடியாக அவர்களது சுங்கப்பிரகடனங்களை சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக அமைகின்றது.

8.2.2.3 இப் பணிப்பகத்தின் குறிக்கோள்கள்

- இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளின் வெளியாக்குதலுக்கு வசதியளித்தல்.
- பொருட்களை உரியவாறு வகைப்படுத்துவதனூடாக அரசிறை ஒழுக்குகளை/ வெளிநாட்டு நாணய மாற்று இழப்புக்களைக் குறைத்தல்.
- சுங்கக் கட்டளைச்சட்டம் மற்றும் தொடர்புபட்ட பிற சட்டங்களுக்கிணங்க அமுல்படுத்தல் செயற்பாடுகளை "டீ" கிளையூடாக மேற்கொள்ளல்.
- இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் உரிய அரசிறையை மதிப்பிட்டு அவற்றைச் சேகரித்தல்.
- நிதி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்வைத் தள்ளுபடி தொடர்பிலான கருத்திட்டப் பொருள் வெளியாக்கலுக்கு வசதியளித்தல்.
- சலுகை அனுமதிப்பத்திரங்களை கொண்டவர்களது வாகனங்கள்/ சரக்குகளை விரைவாக வெளியாக்ககுவதற்கு வசதியளித்தல்.
- தற்காலிக சுங்கப் பிரகடனங்களுக்கு எதிரான பொருட்களை வெளியாக்கல் தொடர்பில் பல்வேறு அரச திணைக்களங்கள்/ பிற அமைப்புகள்/ பொதுமக்கள் ஆகியோருக்கு வசதியளித்தல்.
- அரச கொள்கைக்கிணங்க, தீர்வைத் தள்ளுபடி/விலக்களிப்பு மற்றும் தீர்வை மற்றும் பிற வரிகளுக்கான தற்காலிகத் தடை என்பவற்றினை மேற்கொள்ளல்.
- மட்டுப்படுத்தப்பட்டவை மற்றும் தடைசெய்யப்பட்டவைகளை திறம்பட செயல்படுத்துவதை நிர்வாகித்தல்

8.2.2.4 இப்பணிப்பகத்தின் பணியாளர்களது பொறுப்புகள்

நீள அறை அலுவலர்கள், அரசுக்கான உரிய அரசிறையினைச் சேகரிக்கும் அதேவேளை, தாமதமின்றி விரைவாக சுங்கப் பிரகடனங்களைச் செயன்முறைப்படுத்தவும் மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் வெளியாக்கத்தையும் உறுதிப்படுத்துகின்றனர். இந்த அலுவலர்கள், பொருட்களை வெளியாக்குவதற்குத் தேவையான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர், சுகாதார அமைச்சின் உணவு மற்றும் ஒளடதங்கள் பரிசோதனைப் பிரிவு, தேசிய மருத்துகள் ஒருங்குபடுத்தல் அதிகாரசபை, இலங்கை தரநிர்ணயங்கள் நிறுவனம், அணுசக்தி அதிகாரசபை, தொலைத்தொடர்பாடல்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை போன்ற பிற ஒழுங்குபடுத்தல் அதிகார சபைகளிடமிருந்தான உரிமங்கள் மற்றும்/ அல்லது விசேட அங்கீகாரங்கள் அத்துடன் ஏற்றுமதி செய்யப்படுகின்ற நாட்டினால் வினியோகிக்கப்படும் தாரவச்சுகாதாரச் சான்றிதழ், பூச்சிகொல்லிகள் சான்றிதழ், நறுமணச் சபை சான்றிதழ் மற்றும் கப்பலேற்றும் துறைமுகத்தின் ஆய்வறிக்கை போன்ற சான்றிதழ்கள் தேவைப்படுகின்ற பண்டங்கள் தொடர்பில் கண்காணித்து வருகின்றனர்.

சுங்கப் பிரகடனம் பற்றிய துரித செயலாக்கதிற்காக, இறக்குமதியாளர்கள் பின்வரும் விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர்:

- அனுப்பப்பட்ட பொருட்களின் வெளியாக்கல் கோரிக்கைக்கான அதனைக் கொண்டுவரும் கப்பலில் இருந்தான அங்கீகாரம் ;
- சரக்கு பற்றிய முழு விபரம் ;
- இயைபு முறைப் பெயரேட்டின் அடிப்படையில் அமையப்பெற்ற சுங்க இறக்குமதிகள் இறுப்புப் பட்டியலில் உள்ளவாறு சரியாக பொருட்களை வகைப்படுத்தல் ;
- பொருத்தமான நாணய வகையினைப் பயன்படுத்தி, செல்லுபடியாகும் நாணயமாற்று விகித்தில் பெறுமதியை பிரகடனப்படுத்தல் ;
- சரக்குக்கான கொடுப்பனவு தொடர்பிலான (வெளிநாட்டு சொவணி) பரிமாற்றம் ஏற்றுக்கொள்ளப்பட்ட/ அனுமதிக்கப்பட்ட வங்கியூடாக மேற்கொள்ளல் ;
- ஏற்புடையவாறான, தேவையான அதிகாரமளிக்கப்பட்ட ஆவணங்கள், அனுமதிப் பத்திரங்கள், உத்தரவாதப்பத்திரங்கள்,மற்றும் சான்றிதழ்கள் போன்றவற்றினை இணைத்தல் ;
- மேற்படி அனைத்து விடயங்களும் ஒழுங்குமுறையில் இருப்பின், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த பொருளின் வெளியாக்கத்திற்கான சுங்கப் பிரகடனத்தினை செயலாக்கம் செய்யலாம்.

8.2.2.5 மேற்கூறப்பட்டவாறாக இப்பணிப்பகமானது அதன் தொழிற்பாடுகளுக்கிணங்க 03 பிரதான பிரிவுகளை கொண்டுள்ளன.

8.2.2.5.1 நீள அறை

வரலாற்று ரீதியில், உண்மையாகவே சுங்க நிருவாகத்தின் ஒரு நீள அறையாக இது காணப்பட்டதோடு, இந்நவீன காலத்திலும் கூட இது ஒரு நீள அறையாகவே காணப்படுகிறது. இது ஆசியாவிலுள்ள அனேக பிரித்தானிய காலணித்துவ நாடுகளிலும் மற்றும் டென்மார்க், நெதர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள மிகவும் பழைமை வாய்ந்த சுங்க அமைப்புகளிலும் இது பொதுவான சிறப்பம்சமொன்றாகவுள்ளது. சுங்கமானது பிரதானமாக அரசிறை தொடர்பிலான அரச நிறுவனமாகவிருப்பதனால் நீள அறையின் முக்கித்துவம் பிரதானமானதாகும். இதன் ஒட்டுமொத்த இலக்குகள் சமூகப் பாதுகாப்புக் கடப்பாடுகளைப் பேணுவதற்காக இருந்த போதிலும், உரிய அரசிறையினைச் சேகரிப்பதற்கான முன்னுரிமையானது குறைவடைந்ததில்லை.

சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 10 ஆம் பிரிவானது சுங்கத் தீர்வையினை விதிப்பதற்கு சுங்கம் அதிகாரம் கொண்டுள்ளது எனவும் 47 ஆம் பிரிவானது பெறப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட பொருட்களது உண்மையானது சரியானதுமானதொரு பிரகடனம் செய்வதற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களது உரிமையாளர்கள் வேண்டப்படுகின்றனர். மற்றும் அத்தகைய பொருட்கள் தொடர்பில் செலுத்தத்தகு (தீர்வைகள் போன்றன) சகல தீர்வைகளும் செலுத்தவும் வேண்டப்படுகிறது.

சுங்கமானது சுங்கத் தீர்வைகளை மட்டுமல்லாது இதர பல்வேறு வரிகளையும் அறவீடுகளையும் சேகரிப்பதற்கான வசதியினை செய்துள்ளது. அதாவது ;

பெறுமதி சேர் வரி	(VAT)
துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு	(PAL)
விசேட பண்ட அறவீடு	(SCL)
உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரி	(XID)
பிற அரச நிறுவனங்கள் சார்பிலான செஸ் வரி	(CESS)
சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு	(SSCL)
சொகுசு வரி	(LXT)
வாகன உரிமை வழங்கல் அறவீடு	(VEL)

சுங்கப் பிரகடன செய்முறை அதிகாரிகள் இயைபு முறைக்குறியீடு தொடர்பில் இலகுவான கண்காணிப்பு மற்றும் கையாளுகை தொர்பில் சுங்கப் பிரகடன செய்முறைக்காக 05 பிரிவுகளாக வகுத்துள்ளனர். (ஒரு பிரிவில் இரண்டு பிரதி பணிப்பாளர்களும் நான்கு அத்தியட்சகர்(பெறுமதி மதிப்பீட்டாளர்கள்))களும் உள்ளனர்). இலகுவான கண்காணிப்பு மற்றும் கையாளுகை போன்ற நோக்கங்களுக்காக, சுங்கப்பிரகடனமானது அதன் செயன்முறைக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு பிரிவுக்கும் ஒதுக்கப்படுகிறது.

.

- ஏ பிரிவு - சுங்கப்பிரகடன இலக்கத்தின் இறுதி இல. 0 - 9
- பீ பிரிவு - சுங்கப்பிரகடன இலக்கத்தின் இறுதி இல. 1 - 8
- சீ பிரிவு - சுங்கப்பிரகடன இலக்கத்தின் இறுதி இல. 2 - 7
- டீ பிரிவு - சுங்கப்பிரகடன இலக்கத்தின் இறுதி இல. 3 - 6
- ஈ பிரிவு - சுங்கப்பிரகடன இலக்கத்தின் இறுதி இல. 4 - 5

சுங்கப் பிரகடனங்களைச் சமர்ப்பித்தல்

கஸ்டெக் (CusDec) என்பது சுங்கப் பிரகடனத்தின் சுருக்க வடிவமாகும். இறக்குமதியாளர்கள் சுங்கப் பிரகடனத்தினை இலத்திரனியல் மூலமாக சமர்ப்பித்தல் வேண்டும். பின்வரும் ஆதார ஆவணங்கள் சுங்கப்பிரகடனத்துடன் PDF வடிவில் அல்லது ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணங்களாக பதிவேற்றப்படல் வேண்டும்.

- ஏற்றுமதி ஒப்பந்தச் சீட்டு
- விநியோகக் கட்டளை
- பொருள் விலைப்பட்டியல் (NFE அடிப்படையில் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர்த்து வங்கி மூலம் கையெழுத்திட்டு முத்திரிரை குறிக்கப்பட்டிருத்தல்)
- பொதியிடப்பட்ட பட்டியல்
- இயைபு முறைக் குறியீட்டு வகைப்படுத்தலுக்குத் தேவைப்படும் ஏதேனும் தொழில்நுட்பத் தகவல்
- பொருளுக்கான உற்பத்தி செய்யப்பட்ட நாட்டை நிரூபிப்பதற்கான ஆவணங்கள்
- மட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள் இறக்குமதி செய்யப்படவிருப்பின், இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரம், இலங்கை கட்டளைகள் நிறுவனம் மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு போன்ற நிறுவனங்களிடமிருந்தான அனுமதிப் பத்திரம்/ உத்தரவுப் பத்திரம்.
- வரவுக் கடிதம், தந்தி மூலமான பரிமாற்றம் போன்ற கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது நிரூபனம்
- ஏதேனும் விசேட சான்றிதல் (வெளிநாட்டு ராஜதந்திரிகள், தீர்வைத் தள்ளுபடி, சுகாதார சான்றிதழ், பூச்சிகொல்லிகள் சான்றிதழ், நறுமண சபை சான்றிதழ் மற்றும் துறைமுக கப்பலேற்ற அவதானிப்பு அறிக்கை போன்றவை)

சுங்கக்கட்டளைச் சட்டத்தின் பிரிவு 12, 43 மற்றும் அட்டவணை "ஆ" ஆகியன, பொருட்களை இறக்குமதி செய்யும் வேளையில் ஏதேனும் பிற சட்டத்தின் கீழ் அமுலில் உள்ள சகல மட்டுப்படுத்தப்பட்டவைகள் மற்றும் தடைசெய்யப்பட்டவைகளை நடைமுறைக்குக் கொண்டுவருமாறு சுங்கத்தை வேண்டுகின்றன. இவ்விசாலமான ஏற்பாடுகள் காரணமாக, தற்போது அமுலிலுள்ள அனேக சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் கட்டளைச்சட்டங்களை சுங்கம் அமுல்படுத்த வேண்டியுள்ளது. இவற்றில், முதன்மையும் பிரதானமுமாகவிருப்பது 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டமாகும்.

8.2.2.5.2 மோட்டார் வாகனப் பிரிவு

"ASYCUDA World" எனும் மென்பொருளானது தற்போது ACCESS வலையமைப்பில் தொழிற்படுவதோடு, இதனைத் தனியார் வங்கிகளுடன் இணைத்து, பொருட்கள் இறக்குமதி செய்தல் தொடர்பில் அனுப்பப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியை சுங்கத்தினால் பரீட்சிக்க முடிவதோடு, இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்கள் பற்றிய விபரங்கள் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு இணையவழி ஊடாக அனுப்பப்படுகின்றன. இதன் மூலம் சுங்கத் திணைக்களத்தினால் சேகரிக்கப்படும் தீர்வைகள் மற்றும் பிற வரிகளை செலுத்தாத வாகனங்களைப் பதிவு செய்தல் தடுக்கப்படுகிறது. சுங்கப் பிரகடனங்கள் செயன்முறைப்படுத்தப்படும் போது அதிகாரிகள் பின்வரும் விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துகின்றனர் :

- அன்பளிப்பு வாகனங்கள் மற்றும் அதிகூடிய காலத்தைக் கொண்ட வாகனங்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம்.
- அரச அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முதலீட்டுச்சபை அதிகாரிகள் ஆகியோருக்கான இறக்குமதி உத்தரவுப் பத்திர சலுகைகளும் நிபந்தனைகளும்.
- வெளிநாட்டு ராஜதந்திரிகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்பு ஆகியவற்றுக்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் விநியோகிக்கப்படும் தீர்வை இலவசச் சான்றிதழ்கள்.
- கருத்திட்டங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் தொடர்பிலான தற்காலிக சுங்கப்பிரகடனம்

வாகனங்களுக்கான சுங்கப்பிரகடனங்களை செய்முறைப்படுத்தும் போது இப்பிரிவிலுள்ள அலுவலர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள விடயங்களின் உண்மைத்தன்மையினை உறுதிப்படுத்தல் வேண்டும்.

- பதிவுச் சான்றிதழ்
- பரிசோதனைச் சான்றிதழ்
- விலைப்பட்டியல்
- வாகன சாலைகளில் அவற்றைப் பரிசோதனை மேற்கொள்கின்ற மதிப்பீட்டாளரின் பரிசோதனை அறிக்கை
- விலைப்பட்டியலுக்கேற்ப வாகனத்தின் வயது சரியாக பதியப்பட்டுள்ளமை
- உற்பத்தி செய்த நாடு சரியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை.
- கப்பல் கட்டணங்கள் சரியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை,

- பிரகடனப்படுத்தப்பட்ட மேலதிக விடயங்களுடன் பரிசோதனைச் சான்றிதழ் இணங்குதல்.
- சலுகை இறக்குமதிகளுக்கு உரிய அனுமதி வழங்கப்பட்டுள்ளதா
- பல்வேறு வர்த்தமான அறிவித்தல் மூலம் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டாளரால் பிரகடனப்படுத்தப்பட்ட தற்காலிக இடைநிறுத்தல் வகைகளுக்கு கீழான பொருட்களாக வருகின்றனவா

  ஆகிய விடயங்களுக்கிணங்க பொருட்கள் சரியாக விபரிக்கப்பட்டுள்ளனவா இல்லை என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

  வாகன வெளியாக்கலுக்கான அனுமதி சிரேஷ்ட சுங்க பிரதிப் பணிப்பாளரால் (மோட்டார் வாகனம்) வழங்கப்படல் வேண்டும்.

8.2.2.5.3 "டீ" பிரிவு

"டீ" பிரிவானது இப்பணிப்பகத்தின் செயலகமாகக் கருதப்பட முடியும். ஆரம்பத்தில் சுங்க கட்டுப்பாட்டாளர் நாயகம் 200 ஆண்டுகளுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட வேளையில் இவரின் கீழ் விடயம் ஏ, விடயம் பீ, விடயம் சீ, மற்றும் விடயம் டீ ஆகிய விடயங்களைக் கையாளுவதற்காக நான்கு இலிகிதர்கள் பணியாற்றியிருந்தனர். காலப்போக்கில் விடயம் ஏ பிரிவானது இலிகிதர் "துறைமுக அறவீடுகளைக்" கையாண்டு வந்ததோடு, இதுவே பின்னர் இலங்கைத் துறைமுக அதிகாரசபையாக மாறியது. பழைய டீ கிளையானது திறைசேரிக்கும் சுங்கத்திற்கும் வரலாற்று ரீதியான ஒருங்கிணைப்பினைப் பேணியிருந்ததோடு, தீர்வைத் தள்ளுபடி மற்றும் விலக்களிப்புகளை வழங்குதல், பொருள் பட்டியல்களைப் பெறுதல் போன்ற அத்தகைய செயற்பாடுகளை இன்னும் அதன் அசல் நாமத்தில் மேற்கொண்டு வருகிறது.

"டீ" பிரிவானது இறக்குமதியாளர்களுக்கு/பொதுமக்களுக்கு வசதிகளை வழங்கும் வகையில் பல்வேறு கூறுகளாக்கப்பட்டுள்ளன. அவை :

- டீ.ஆர்.ஏ பிரிவு
- வங்கி உத்தரவாதக் பிரிவு
- தீர்வை விலக்களிப்புப் பிரிவு
- தொகையான சரக்கினை கண்காணிக்கும் பிரிவு
- Carnet பிரிவு
- கப்பற் சரக்குப்பட்டியல் பிரிவு
- விசாரணைப் பிரிவு
- சிரேஷ்ட சுங்க பிரதிப் பணிப்பாளரின்(டீ) தலைமையிலான மோட்டார் வாகன சலுகை அனுமதியை ஆய்வு செய்து நீக்கம் செய்யும் பிரிவு

8.2.2.6 "டீ" பிரிவினால் கையாளப்படுகின்ற ஒரு சில முக்கியமானதும் பிரசித்தி பெற்றதுமான தொழிற்பாடுகள்

- நிதி அமைச்சினால் வழங்கப்படும் தீர்வை விலக்களிப்புகள் தொடர்பான விடயங்களை பதிவு செய்தலும் தீர்வையற்றவை எனும் அடிப்படையில் அத்தகைய பொருட்களை வெளியாக்க வசதியளித்தலும்.
- பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அரசிறைக் காப்புக் கட்டளைக்கிணங்க தீர்வை விலக்களிப்புகளையும் சலுகைகளையும் வழங்குதல்.
- வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சினால் வினியோகிக்கப்படும் வெளியாக்கல் சான்றிதழின் அடிப்படையில் ராஜதந்திரி உத்தியோகத்தர்களது தனிப்பட்ட பொதி மற்றும் அலவலக பொருட்கள் என்பவற்றினை வெளியாக்க அனுமதித்தல்.
- பல்வேறு வர்தத்க உடன்படிக்கையின் கீழ் இறக்கமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் தீர்வை இலவசம் அல்லது முன்னுரிமை விகிதங்கள் எனும் அடிப்படையில் வழங்குதல்.
- நிதி, திட்டமிடல் அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கிணங்க தாமதக் கொடுப்பனவின் கீழ் அரச நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பொருட்களை வெளியாக்க வசதியளித்தல்.
- பல்வேறு காரணங்களின் விளைவாக உடனடியாக பூர்த்தி செய்ய முடியாதிருக்கும் சுங்கப் பிரகடனங்களை தற்காலிக அடிப்படையில் அல்லது நிகழ்வொன்றுக்காக இறக்குமதி செய்யப்பட்டு அந்த நிகழ்வு முடிவுற்றதும் அத்தகைய பொருட்களை மீள ஏற்றுமதி செய்ய வசதியளித்தல்.
- நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் தீர்மானிக்கப்பட்டவாறாக தேவைப்படுகின்ற கருத்திட்ட பொருட்களை மீள் ஏற்றுமதி தொடர்பில் பதிவினை மேற்கொள்ளுதலும் கண்காணித்தலும்.
- கப்பற் சரக்குப் பட்டியல்களை பெறுதல் மற்றும் கப்பல் முகவர்களால் சமர்ப்பிக்கப்பட்டவாறாக அவை தொடர்பில் திருத்தங்களை மேற்கொள்ளுதல்.
- தற்காலிக சுங்கப்பிரகடனங்கள் விடயத்தில் வங்கி உத்தரவாதங்கள்/கூட்டுறவு உத்தரவாதங்களை பாதுகாத்தலும் சுங்கப்பணிப்பாளரினால் (பிரகடனங்கள்) தீர்மானிக்கப்பட்டவாறான பிற விடயங்களை பாதுகாத்தலும்.
- கண்காணிப்பு நோக்கங்களுக்காக CPD carnet அல்லது ATA carnet திட்டத்தின் கீழ் தற்காலிகமாக இறக்கமதி செய்யப்படும் வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை பதிவு செய்தல்.
- குவியலாக கொண்டுவரப்படும் பொருட்களை கண்காணித்தல் மற்றும் மேலதிக அறவீடுகளை அறவிடவேண்டின் அதனை அறவிடல்.

- நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் விநியோகிக்க்கப்பட்ட தீர்வை விலக்களிப்புக்கு இணங்க வழங்கப்பட்ட தீர்வை விலக்களிப்பு தொடர்பாக அறிக்கைகள் தயாரித்தல்.
- இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் /சுங்க ஒழுங்கு விதிகள் தொடர்பிலான மீறுகைகளை கண்டுபிடித்தல் மற்றும் எதனோல் மற்றும் மோட்டார் வாகனத்தினது வெட்டப்பட்ட பாகங்களது கண்டுபிடிப்பு போன்றவற்றிற்கு சுங்கக் கட்டளைச்சட்டத்தின் எற்பாட்டிற்கு அமைய நடவடிக்கை எடுத்தல்.
- பிற அரச சார்பான மற்றும் அரச சார்பற்ற முகவர்களுடன் கூட்டிணைப்பினை ஏற்படுத்தல்.

8.2.2.7 செயலாற்றுகை

அட்டவணை 8.2.2.1 : செயலாற்றுகை - 2025

	விபரம்	CPC குறியீடு	
	DRAஇன் கீழ் பதிவு செய்யப்பட்ட தற்காலிக சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை (தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்)	4200 OP1	08
	DRAஇன் கீழ் பூர்த்திசெய்யப்பட்ட தற்காலிக சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை (தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்)	4300 000	-
	DRAஇன் கீழ் பதிவு செய்யப்பட்ட தற்காலிக சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை (*CPC/*IOC)	4200 151	119
DRA	DRAஇன் கீழ் பூர்த்திசெய்யப்பட்ட தற்காலிக சுங்கப் பிரகடனங்கள் (*CPC/*IOC)	4300 151	77
1	DRAஇன் கீழ் பதிவு செய்யப்பட்ட தற்காலிக சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை (ஏனையவை)	4200 OPI	1882
2	DRAஇன் கீழ் பூர்த்திசெய்யப்பட்ட தற்காலிக சுங்கப் பிரகடனங்கள் (ஏனையவை)	4300 000	122
3	பதிவு செய்யப்பட்ட டீ.சீ.பீ கானே இனது எண்ணிக்கை		26
4	பதிவு செய்யப்பட்ட ஏ.ரீ.ஏ கானே இனது எண்ணிக்கை	4200 205	28
5	AD பதிவுகளது எண்ணிக்கை	4000 799	02
6	பதிவு செய்யப்பட்ட களஞ்சியப்படுத்தல் உரிமங்களின் எண்ணிக்கை	4000 799	97
8	பதிவு செய்யப்பட்ட பூரண விபரமற்ற பட்டியல்களின் எண்ணிக்கை	4000 799	-
9	பதிவு செய்யப்பட்ட தொகைச் சரக்குப் பதிவுகளது எண்ணிக்கை	4200 000	691
10	பூர்த்திசெய்யப்பட்ட தொகைச் சரக்குப் பதிவுகளது எண்ணிக்கை	4300 000	199
11	மொத்தத் தொகைச் சரக்கு பற்றிய கண்காணிப்பு கட்டணங்கள் (ரூபா)		6,910,000.00
12	பதிவு செய்யப்பட்ட FRIC களின் எண்ணிக்கை	4200 060	93
1	ISFTAஇன் கீழ் பதிவு செய்யப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை	4000 000	14887
2	PSFTAஇன் கீழ் பதிவு செய்யப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை	4000 000	778
3	SAFTAஇன் கீழ் பதிவு செய்யப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை	4000 000	629
4	APTAஇன் கீழ் பதிவு செய்யப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை	4000 000	672
5	SAARCஇன் கீழ் பதிவு செய்யப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை	4000 000	-
6	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (புகையிரதத் திணைக்களம்)	4000 223	08
7	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (நகர அபிவிருத்தி அதிகாரசபை)	4000 223	53
8	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி)	4000 223	-
9	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (போக்குவரத்து மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு)	4000 223	-
10	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள்)	4000 223	40
11	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (பாதுகாப்பு அமைச்சு)	4000 223	-
12	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (புகையிரத திறன் மேம்பாட்டுத் திட்டம்)	4000 223	-
13	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (வீதி அபிவிருத்தி அதிகார சபை)	4000 223	02

14	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (இலங்கை கடற்படை)	4000 223	05
15	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (உமா ஓயா திட்டம்)	4000 223	-
16	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (இராஜதந்திரச் சேவை)	4000 223	-
17	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சு)	4000 223	-
18	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (தேசிய மரபுரிமைகள் அமைச்சு	4000 223	-
19	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு)	4000 223	-
20	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (விமான மற்றும் விமான சேவைகள் அமைச்சு)	4000 223	-
21	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (தொழில்நுட்ப அமைச்சு)	4000 223	-
22	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை)	4000 223	92
23	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (இலங்கை மின்சார சபை)	4000 223	26
24	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (ஏனைய அமைச்சு)	4000 223	749
25	சுகாதார பணிப்பாளர் நாயகம்	4000 223	-
26	ஒத்திவைக்கப்பட்ட பெ.சே.வரி	4000 571	-
27	ஏனையவை (தே.க.வரி/உற்பத்தி வரி/செஸ் வரி/ து.வி.அ.அறவீடு)	4000 735	
28	விலக்களிப்புப் பட்டியலின் கீழான தீர்வைத் தள்ளுபடிகள்	4000MLB	
	19அ தள்ளுபடிகள்		
1	பால்மா	4000 151	-
2	மூங்கில் கம்புகள்	4000 151	12
3	கோதுமை மாவு	4000 151	134
4	வாயு எண்ணெய்	4000 151	181
5	பொதுவானவை	4000 151	-
	வாகனச்சலுகை அனுமதிகள்		
1	பொதுவானவை	4000MLB	8,439
2	பொ.நி சுற்றறிக்கை	4000MLB	
3	பாராளுமன்ற உறுப்பினர்கள்	4000MLB	
4	வெளிநாட்டு அமைச்சின் சுற்று நிரூபத்தின் கீழானவை	4000MLB	
5	மாகாண சபை	4000MLB	
	வங்கி உத்தரவாதம் 4200 OPI & 4200 100F		
1	இவ்வாண்டுக் காலப்பகுதியில் பேணப்பட்ட உத்தரவாகங்களின் எண்ணிக்கை		512
2	பேணப்பட்ட உத்தரவாதங்களின் மொத்தப் பெறுமதி (ரூபா)		3,185,867,635.31
3	விடுவிக்கப்பட்ட வங்கி உத்தரவாதங்களது எண்ணிக்கை		300
4	விடுவிக்கப்பட்ட உத்தரவாதங்களது மொத்தப் பெறுமதி(ரூபா)		4,712,229,455.90
5	பெறப்பட்ட செலுத்துகை காசோலைகளினதும் வங்கியில் வைப்புசெய்யப்பட்ட காசோலைகளினதும் எண்ணிக்கை		2
6	வைப்பிலிடப்பட்ட காசோலைகளின் மொத்தப் பெறுமதி (ரூபா)		10,076,466.00
	சரக்குப் பட்டியல்		
1	கப்பல் சரக்குப்பட்டியல் திருத்தங்களின் எண்ணிக்கை		3,242
2	அறவிடப்பட்ட அபராதங்களின் மொத்தத் தொகை (ரூபா)		268,567,633.60
	நீள அறை / மோட்டார் வாகனப் பிரிவு குறித்தான அபராதங்கள்		
1	அபராதங்களுடன் பதிவு செய்யப்பட்ட சுங்கப்பிரகடனங்களின் எண்ணிக்கை		1,852
2	அறவிடப்பட்ட அபராதங்களின் மொத்தத் தொகை (ரூபா)		145,887,893.19

*CPC - இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சிலோன் *IOC - இந்திய எண்ணெய் நிறுவனம்

மூலம் : பிரகடனப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.2.2.2 : அரசிறை சேகரிப்பு - 2025

பிரிவு	அரசிறை சேகரிப்பு (ரூபா)
நீள அறை	
CBHQ1	855,653,403,783
CCCO	0
CBPP1	31,253,198
CBPS1	1,795,150
CBCDU	936,550
CEMPC	114,715,157
CBLR	0
CBPC1	37,738,024
மொத்தம் - நீள அறை	**855,839,841,862**
மோட்டார் வாகனம்	
CBMV1	237,705,397,685
HBIM1	645,009,636,339
மொத்தம் - மோட்டார் வாகனம்	**882,715,034,024**
டீ பிரிவு	
DBRA1	482,762,283,334
DBRA2	29,155,884
மொத்தம் - டீ பிரிவு	**482,791,439,218**
முழு மொத்தம்	**2,221,346,315,104**

மூலம் : பிரகடனப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

உரு 8.2.2.1 : அரசிறை சேகரிப்பு குறித்த ஒப்பீட்டாய்வு (ரூபா மில்)



மூலம் : பிரகடனப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.2.2.3 : செய்முறைப்படுத்தப்பட்ட சுங்கப் பிரகடனம் - 2025

பிரிவு	சுங்கப் பிரகடனங்களின் மொத்த எண்ணிக்கை
நீள அறை	
CBHQ1	210,427
CCCO1	38
CBPP1	148
CBPS1	5,280
CBCDU	110
CEMPC	103
CBLR	0
CBPC1	59
மொத்தம் - நீள அறை	**216,165**
மோட்டார் வாகனம்	
CBMV1	13,300
HBIM1	57,295
மொத்தம் - மோட்டார் வாகனம்	**70,595**
டீ பிரிவு	
DBRA1	1,913
DBRA2	18
மொத்தம் - டீ பிரிவு	**1,931**
முழு மொத்தம்	**288,691**

மூலம் : பிரகடனப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

உரு 8.2.2.2 : செய்முறைப்படுத்தப்பட்ட சுங்கப் பிரகடனங்களது எண்ணிக்கை குறித்த ஒப்பீட்டாய்வு



மூலம் : பிரகடனப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.2.3 மத்திய பெறுமதி மதிப்பீட்டுப் பணிப்பகம்

8.2.3.1 அறிமுகம்

பெறுமதி மதிப்பீட்டின் படி தீர்வைகளை விதிப்பதற்கு ஏற்புடையவிடத்து, அத்தகைய இறக்குமதிப் பொருட்களின் பெறுமதிகளை மதிப்பீடு செய்வதற்கான பொறுப்பினை (மோட்டார் வாகனங்கள் குறித்த பெறுமதி மதிப்பைத் தவிர) மத்திய பெறுமதி மதிப்பீட்டுப் பணிப்பகம் கொண்டுள்ளது. கேள்வு விற்பனைகளுக்காக ஒதுக்கப்படுகின்ற கைவிடப்பட்ட மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி மதிப்பிடலும் இப்பணிப்பகத்தின் கீழ் வருகின்றது. இப்பணிப்பகமானது, சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 51, 52 மற்றும் அட்டவணை-உ உடன் கூட்டிணைக்கப்பட்டுள்ள உலக வர்த்தக அமைப்பின் சுங்க பெறுமதியிடல் உடன்படிக்கையிலுள்ள மதிப்பீட்டுக் கொள்கைகளை நிர்வகித்து வருகிறது. மேலும், இப்பணிப்பகமானது அரச-தனியார் பங்காண்மையினருக்கு வசதியளித்து அதன் விருத்திக்கு ஆதரவளித்துவருகின்ற அதேவேளை தொழிற்பாட்டுப் பிரிவுகளுக்கிடையிலான பகிர்வுக்கான பெறுமதித் தரவினைத் திரட்டி அவற்றைத் தொகுத்துக்கொள்வதற்கான நவீன கருவிகள் மற்றும் ஆராய்ச்சி வசதிகள் போன்றவற்றை உபயோகித்தும் வருகிறது.

இப் பணிப்பகமானது பெறுமதி மதிப்பிடல் தொடர்பிலான தொழிற்பாடுகளை நிறைவேற்றும் வகையில் பின்வரும் மூன்று அலுவலகங்களைக் கொண்டுள்ளது :

i. RCT கொள்கலன் முனையத்திலுள்ள மத்திய பெறுமதி மதிப்பிடல் பணிப்பகம்

ii. நீள அறையிலுள்ள துரித நகர்வப் பெறுமதி மதிப்பிடல் அலுவலகம்

iii. கட்டுநாயக்க விமான சரக்கு இல்லத்திலுள்ள பிராந்திய பெறுமதி மதிப்பிடல் அலுவலகம்

மத்திய பெறுமதி மதிப்பிடல் பணிப்பகத்தின் தலைமைக் காரியாலயமானது, ஒறுகொடவத்தையிலுள்ள RCT கொள்கலன் சாலையில் அமையப்பெற்றுள்ளது. இப்பணிப்பகமானது சுங்க மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (கூட்டுறவு) அவர்களின் கீழ் வருவதோடு, அதன் தொழிற்பாட்டு தலைவர்களாக இரண்டு சுங்க சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்கள் காணப்படுகின்ற அதேவேளை இப்பணிப்பகத்தின் பணிப்பாளர் ஒட்டுமொத்த மேற்பார்வைக்குப் பொறுப்பாகவுள்ளார்.

7 பெறுமதி மதிப்பீட்டாளர்களின் (பிரதிச் சுங்க அத்தியட்சகர்கள்) ஆதரவினைக் கொண்ட 8 சுங்க அத்தியட்சகர்கள் மற்றும் 10 சுங்க உதவி அத்தியட்சகர்கள் ஆகியோரின் கீழ் வருகின்ற இயக்கப்பாட்டு மேற்பார்வையானது, புலன்விசாரணைகள், ஆராய்ச்சி, பதிவுகள், பிந்திய நுழைவு மாற்றும், கட்டண சரிபார்ப்பு மற்றும் உத்தரவாத முகாமைத் தொழிற்பாடுகள் போன்ற செயற்பாடுகளை நிறைவேற்றுகிறது.

8.2.3.2 இப்பணிப்பகத்தின் பிரதான தொழிற்பாடுகள்

- சுங்க பெறுமதி மதிப்பீடு தொடர்பான கொள்கை விடயங்களில் பெறுமதி மதிப்பீட்டுக் குழுவுக்கு உதவுதல்.
- பெறுமதி மதிப்பீட்டுச் சட்டத்தை திறம்படவும் சீராகவும் செயல்படுத்தும் வகையில் பெறுமதி மதிப்பீட்டுக் கருவிகளையும் (தரவுத்தளங்கள் மற்றும் அவ்வப்போதைய எச்சரிக்கைகள் அடங்கலாக) சிறந்த நடைமுறைகளையும் விருத்தி செய்தல்.
- பொருட்களது பெறுமதி சரிபார்ப்பு
- மதிப்பீட்டுச் சிக்கல்களைத் தீர்ப்பதில் பொது-தனியார் கூட்டாண்மையை ஊக்குவிப்பதும், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி குறித்த ஆராய்ச்சியில் பொதுமக்களின் பங்கேற்பை வரவேற்றல்.
- அடிக்கடி விலை மாறும் பொருட்களின் பெறுமதியிடல் போக்கினைக் கண்காணித்தல் மற்றும் சரியான நடவடிக்கையினை மேற்கொள்ளல்
- பெறுமதி மதிப்பீட்டு வழிகாட்டல்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நடைமுறைகள் ஆகியன காத்திரமான முறையில் பிரயோகிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான பெறுமதி மதிப்பீட்டு மேற்பார்வைகள்/விசாரணைகளை முன்னெடுத்தல்.
- சுங்க பெறுமதி மதிபீட்டு விடயங்களை சம்பந்தப்பட்ட சர்வதேச அமைப்புகள் மற்றும் பிற வெளிநாட்டு மூலங்களுடன் ஒருங்கிணைத்தல்.
- ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதோடு, பரிமாற்றவிலை நிர்ணயத்துடன் தொடர்பான சிக்கல்களுக்குத் தேவையான உள்ளீடுகளை வழங்குதல்.

8.2.3.3 செயலாற்றுகை

அட்டவணை 8.2.3.1 : செய்முறைப்படுத்தப்பட்ட சுங்கப் பிரகடனங்களது எண்ணிக்கை 2025

மாதம்	பெறுமதி மதிப்பிடலுக்காக ஆற்றுப்படுத்தப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை	மேலதிக பதிவுகளுக்குட்டபட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை	மேம்பாடு %
ஜனவரி	3,603	1,977	54%
பெப்ரவரி	3,481	2,043	58%
மார்ச்	3,272	1,555	47%
ஏப்ரல்	3,150	1,507	47%
மே	5076	1,771	34%
ஜூன்	4,739	1,712	36%
ஜூலை	5,090	1,918	37%
ஆகஸ்ட்	4,894	2,003	40%
செப்டம்பர்	5,103	2,242	43%
ஒக்டோபர்	5,610	2,228	39%
நவம்பர்	5,110	1,893	37%
டிசம்பர்	6,125	2,183	35%
மொத்தம்	**55,253**	**23,032**	**41%**

மூலம் : பெறுமதி மதிப்பீட்டுப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.2.3.2 : அரசிறை சேகரிப்பு குறித்த ஒப்பீட்டாய்வு (ரூபா)

மாதம்	2017	2018	2019	2020	2021	2022	2023	2024	2025
ஜனவரி	96,976,771	162,436,213	137,861,340	144,183,848	122,928,057	161,908,100	236,485,869	1,117,635,145	934,052,323
பெப்ரவரி	92,588,732	197,606,168	199,983,030	105,983,866	164,236,827	140,321,155	362,317,541	1,137,865,495	938,184,531
மார்ச்	124,223,659	139,270,365	120,416,213	24,305,563	186,305,872	109,684,573	445,182,526	853,275,156	694,147,198
ஏப்ரல்	115,021,168	172,654,159	132,439,443	63,162,192	158,725,332	122,498,186	583,851,468	627,449,467	713,766,217
மே	133,249,396	145,106,782	193,606,520	39,312,834	156,899,840	85,905,778	449,202,751	735,205,779	771,481,018
ஜூன்	137,691,728	174,176,732	139,689,506	55,953,600	177,211,201	93,209,007	371,445,383	392,277,134	711,508,716
ஜூலை	124,688,097	118,414,464	169,113,512	98,974,903	84,991,835	68,459,191	685,811,153	892,380,007	801,723,731
ஆகஸ்ட்	156,586,926	156,252,561	180,739,571	120,472,762	119,628,995	126,660,162	707,436,899	897,857,056	958,738,266
செப்டம்பர்	144,727,507	138,100,571	152,906,330	136,495,645	116,716,100	178,854,932	724,154,104	835,064,061	1,082,838,653
ஒக்டோபர்	156,768,427	176,677,684	149,523,186	144,617,361	98,523,887	251,229,133	765,088,807	926,479,158	1,000,689,839
நவம்பர்	169,522,592	146,612,176	191,526,236	125,879,311	114,112,419	191,754,301	776,136,812	875,150,133	856,515,098
டிசம்பர்	181,737,644	155,126,605	145,948,818	124,631,998	190,164,310	177,259,607	784,885,259	943,521,859	983,580,219
	1,633,782,647	**1,882,434,480**	**1,913,753,705**	**1,183,973,883**	**1,690,444,675**	**1,707,744,125**	**6,891,998,572**	**10,234,160,450**	**10,447,225,809**

மூலம் : பெறுமதி மதிப்பீட்டுப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

உரு 8.2.3.3 : அரசிறை சேகரிப்பு குறித்த ஒப்பீட்டாய்வு



மூலம் : பெறுமதி மதிப்பீட்டுப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.2.3.3 பெறுமதி மதிப்பிடல் (விமானச் சரக்கு இல்லம்) செயலாற்றுகை - 2025

மாதம்	மேலதிக பதிவு தொடர்பிலான சேகரிப்பு (ரூபா)
ஜனவரி	5,876,328.00
பெப்ரவரி	5,317,283.00
மார்ச்	9,611,015.00
ஏப்ரல்	6,094,956.00
மே	4,626,369.00
ஜூன்	7,502,645.00
ஜூலை	7,151,327.00
ஆகஸ்ட்	7,090,546.00
செப்டம்பர்	10,214,239.00
ஒக்டோபர்	19,753,358.00
நவம்பர்	10,542,808.00
டிசம்பர்	12,742,992.00
மொத்தம்	**106,523,866.00**

மூலம் : பெறுமதி மதிப்பீட்டுப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

உரு 8.2.3.4 பெறுமதி மதிப்பிடல் (விமானச் சரக்கு இல்லம்) – மேலதிக பதிவு சேகரிப்பு (ரூபா மில்.)



மூலம் : பெறுமதி மதிப்பீட்டுப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.2.3.4 : பெறுமதி மதிப்பீடு, ஆராய்ச்சி மற்றும் புலன்விசாரணை பிரிவு

அட்டவணை 8.2.3.4 : செயலாற்றுகை

வருடம்	விடயங்களது எண்ணிக்கை	விதிக்கப்பட்ட அபராதம்/பறிமுதல்கள் (ரூபா)
2022	49	128,426,044
2023	53	231,196,843
2024	41	192,788,267
2025	85	516,092,734

மூலம் : பெறுமதி மதிப்பீட்டுப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.2.3.5 2025 ஆம் ஆண்டிலான புதிய முன்னேற்றங்கள்

- **‘அடிப்படை அலகீட்டு மதிப்பீட்டினை கண்டறியும் பயன்பாட்டை’ அறிமுகம் செய்தல்**

  இந்த பயன்பாட்டைச் செயல்படுத்துவதன் மூலம், இப்பணிப்பக அதிகாரிகள் தங்களின் அன்றாடப் பணிகளுக்காகப் பலதரப்பட்ட பொருட்களின் அடிப்படை அலகீட்டு பெறுமதி மதிப்பீடுகளை எளிதாகக் கண்டறிய முடியும்.

  தற்போது, இச் செயலியின் உருவாக்கப் பணிகள் நடைபெற்று வருகிறது.

.

- **சோதனை மதிப்புகளுக்கான ஒருமித்த தளத்தை உருவாக்குவதற்காக, இறக்குமதியாளர்களுடன் பங்கீடுபாட்டாளர் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

  - முச்சக்கர / இருசக்கர வாகன உதிரிபாக இறக்குமதியாளர்கள் – ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது
  - கட்டுமானப் பொருட்கள் சங்கம் – ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது
  - டைல் இறக்குமதியாளர்கள் – ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது
  - கண்ணாடி இறக்குமதியாளர்கள் – ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

- ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன் பெறுமதி மதிப்பீட்டிற்கான முன்கூட்டிய தீர்ப்புகளைச் செயல்படுத்துவதற்கான ஆயத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

8.2.4 அரசிறை மற்றும் சேவைகள் (கட்டுநாயக) பணிப்பகம்

8.2.4.1 அறிமுகம்

சுங்க இல்ல முகவர்கள் தொடர்பிலான புதுப்பித்தல்கள்	476	367	484	294	387	526	422	355	399	388	331	579	5008
சுங்க இல்ல முகவரகங்கள் தொடர்பிலான நீக்கங்கள்	1	4	…	2	3	0	5	0	4	0	2	0	21

சுங்க இல்ல முகவர்கள் தொடர்பிலான நீக்கங்கள்	8	38	19	19	15	18	61	38	56	34	49	66	421
சரக்கு மேடை உதவியாளர் அனுமதிப்பத்திரம் தொடர்பிலான வினியோகம்/ புதுப்பித்தல்	50	58	69	86	77	91	93	54	83	82	81	72	896
சுங்க இல்ல முகவர் சான்றிதழ்களை வழங்குதல்	0	0	0	0	0	0	0	11	31	15	15	2	74
அறவிடப்பட்ட கட்டணங்கள் (ரூபா)	1,527,960.00	1,375,250.00	1,548,900.00	1,157,320.00	1,299,240.00	1,678,200.00	1,542,300.00	1,287,380.00	1,515,630.00	1,433,050.00	1,304,870.00	1,774,220.00	17,444,320.00

மூலம் : விசேட சேவைகள் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.3.3 இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகம்

8.3.3.1 அறிமுகம்

பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுகளை மேற்கொள்வதே இலங்கை சுங்கத்தின் இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகத்தின் பிராதன பொறுப்பாக விளங்குகின்றது. பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுகள் பற்றிய தொழிற்பாடானது முதன்முதலில் 2000 ஆம் ஆண்டில் பெறுமதி மதிப்பிடல் பணிப்பகத்தின் கீழ் வெளியாக்கலுக்கு பின்னரான கணக்காய்வு கிளையாக நிறுவப்பட்டது. இந்தக் கிளை அலுவலகமானது, பிந்திய கணக்காய்வு மற்றும் பொருள் பட்டியல் அலகினையும் (PAMU) கணக்கய்வு மற்றும் பரிசோதனைக் கிளையினையும் (A&ID) ஒன்றிணைத்து தாபிக்கப்பட்டதாகும்.

பொருளாதார வளர்ச்சியில் வர்த்தகம் ஒரு இயங்கு சக்தியாக விளங்குவதோடு, எப்போதும் விரிவாக்கம் பெறக்கூடிய சர்வதேச வர்த்தகத்தின் அளவுகள் மற்றும் பொருள் வெளியாக்கத்தினைத் துரிதப்படுத்த வேண்டியதன் தேவை போன்றவற்றுக்கு மத்தியில், எல்லைப் புறத்தில் காணப்படக் கூடிய குறுகிய காலத்தினுள் அனைத்துச் சரக்குகளுக்கும் அறவிடப்பட வேண்டிய தீர்வை பற்றிய உறுதியான தீர்மானத்தினை மேற்கொள்வது சுங்கத்தினால் சாத்தியமற்றதாக உருவெடுக்கிறது. மோசடிமிக்க சந்தேகத்திற்கிடமான சம்பவங்கள் இல்லாதவிடத்து எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு வழங்குகின்ற அதேவேளை, சரக்கு வெளியாக்கத்தினைத் தாமதப்படுத்துவது எந்தவகையிலும் பொருத்தமானதல்ல. இதனால், அனேக நிர்வாக அமைப்புகள் இடர் முகாமைத்துவத் தொழில்நுட்பங்களை உபயோகித்து தெரிவுசெய்யப்படுகின்ற மற்றும் இலக்குப்படுத்தப்படுகின்ற பரிசோதனைகளை மேற்கொள்கின்ற அதேவேளை, வெளியாக்கலுக்குப் பின்னரான நிலைமை மீது தமது கட்டுப்பாடுகள் தொடர்பில் தற்போது அக்கறை செலுத்துகின்றனர். தமது வளங்களை வினைத்திறன் மிக்கதாக உபயோகிக்கும் நோக்கில், சரக்கு வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்விற்கு இயங்காற்றல் மிக்கதொரு இடர் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் இன்றியமையாததாக விளங்குகின்றது.

சர்வதேச வர்த்தகத்தின் அபிவிருத்தி மற்றும் உலக வர்த்தக அமைப்பின் சுங்க பெறுமதி மதிப்பிடல் உடன்படிக்கையினை வெற்றிகரமாக அமுல்படுத்தல் போன்றவற்றுக்கு மத்தியில், அர்ப்பணிப்பு மிக்கதொரு பணிப்பகமானது சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுப் பணிப்பகம் எனும் பெயரில் 2010 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. 883ஆம் இலக்க திணைக்களக் கட்டளையின் பிரகாரம், இணக்கப்பாடு மிக்க வர்த்தகர்களுக்கு வசதியளிப்பதற்கான தேவைப்பாடு, மற்றும் சுங்க வெளியாக்கல் செயன்முறையிலுள்ள குறைபாடுகள் மற்றும் மோசடிகளை இனங்காணல் போன்றவற்றைக் கருத்திற் கொண்டு இடர் முகாமைத்துவ அலகானது தாபிக்கப்பட்டது. இதனால், இது கூட்டுறவுக் கொத்தணியினுள் ஒரு பணிப்பகமாக கொண்டுவரப்பட்டு 2013 செப்டம்பர் 26 ஆம் திகதி முதற்கொண்டு செயல்வலுப் பெறும் வகையில் ‘‘இணக்கப்பாடு மற்றும் வசதியளிப்புப் பணிப்பகம்’’ என பெயரிடப்பட்டது

இருப்பினும், பின்னர் இடர் முகாமைத்துவ அலகானது இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகத்திலிருந்து பிரிக்கப்பட்டு, அதன் செயல்பாடுகள் விரிவாக்கப்பட்டதன் காரணமாக மத்திய புலனாய்வு பணிப்பகத்தின் கீழ் செயல்பட்டது. மேலும் ஏற்பட்ட மேம்பாடுகளின் விளைவாக, இடர் முகாமைத்துவ அலகானது சிரேஷ்ட சுங்க பணிப்பாளர் ஒருவரின் கீழ் செயல்படும் ஒரு தனி பணிப்பகமாக உயர்த்தப்பட்டது. இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகம்’’ தற்போது பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு பிரிவு மற்றும் மீளளிப்புக் கிளை ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகத்தின் பிரதான குறிக்கோள்களில் ஒன்று, வர்த்தக இலகுவாக்கத்திற்கும் சுங்கக் கட்டுப்பாட்டிற்கும் இடையிலான சமநிலையினை உறுதிப்படுத்துவதாகும். சரக்கு வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்வும் அத்தகையதொரு சுங்கக் கட்டுப்பாடாகவே விளங்குகின்றது. சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுச் செயன்முறை என்பது, சுங்கமானது குறித்த சரக்குகளை வெளியாக்கிய பின்னர் இடம்பெறுகின்ற ஒரு கட்டமைக்கப்பட்ட பரிசோதனையாகும். இந்தப் பரிசோதனை சம்பந்தப்பட்ட வர்த்தகத் தரவுகள், விற்பனைத் தொடர்புகள், நிதி சார்ந்த மற்றும் நிதி சாராத பதிவுகள், பௌதீக இருப்புகள் மற்றும் வர்த்தகர்களின் ஆதனங்கள் போன்ற தொடர்பில் இடம்பெறக்கூடும். வர்த்தகர்களின் இணக்கப்பாடுகளை அளவீடு செய்தல் மற்றும் அதனை மேம்படுத்தல் போன்றனவே இதன் நோக்கமாகும். சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வானது, உலக வர்த்தக அமைப்பின் சுங்கப் பெறுமதி மதிப்பிடல் உடன்படிக்கையுடனான இணக்கப்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் சுங்கத்தின் கட்டுப்பாடுகள் வினைத்திறன் மிக்கதாகத் திகழ்வதை உறுதிப்படுத்துகின்ற அத்தியவசியமிக்கதொரு கருவியாகும் என நிரூபித்துள்ளது. மேலும் இது வினைத்திறன் மிக்கதொரு சுங்க இடர் முகாமைத்துவ மூலோபாயத்தினை அமுல்படுத்துவதில் ஒரு வகிபாகத்தினை வழங்கி வருவதோடு, இது இணக்கப்பாடுகளை அளவிடுவதன் மூலம் ஒவ்வொரு வர்த்தகருக்குமான இடர் மட்டத்தினைக் கணிப்பிடுவதற்கும் மற்றும் பெறுபேற்றின் அடிப்படையில் எதிர்காலக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பதற்கும் சுங்கத்தினை இலகுவாக்குகின்றது.

சுங்கப் பிரகடனங்களின் துல்லியத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையைச் சரி பார்த்தல் மற்றும் சர்வதேச வர்த்தகத்திற்கு வசதியளிக்கின்ற அதேவேளை, சுங்கத் தேவைப்பாடுகளுடன் இணக்கமுறுவதை உறுதிப்படுத்தல் போன்றனவே சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வின் பிரதான குறிக்கோள்களாகும். சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வானது, சர்வதேச வர்த்தகத்திற்கு இலகுவளிக்கின்றதோடு, வணிகச் சமூகத்திற்கான சுங்க நடைமுறைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் சிறந்த புரிதலை வழங்கின்ற அதேவேளை, சுங்கத்துடனான தமது இணக்கப்பாட்டினை மேம்படுத்துவதற்கு வர்த்தகர்களை ஊக்குவிக்கின்றது.

சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுகளில் இரண்டு பிரதான வகைகள் காணப்படுகின்றன. அவையாவன, பரிமாற்ற-மையக் கணக்காய்வு (TBA) மற்றும் முறைமை-மையக் கணக்காய்வு (SBA) என்பனவாகும். பரிமாற்ற-மைய கணக்காய்வு என்பது, இறக்குமதி அல்லது ஏற்றுமதிப் பிரகடனம் ஒன்றின் குறிப்பான விபரங்களைப் பரிசோதிப்பதாகும். இங்கு ஏதேனும் ஒரு கேள்வி எழும்பட்சத்தில், சுங்கக்

கணக்காய்வாளர் இறக்குமதியாளரை/சரக்குதாரரை அல்லது அவரது முகவரை தொலைபேசி ஊடாக அல்லது மின்னஞ்சல் ஊடாக மேலதிக விபரங்களை வேண்டித் தொடர்புகொள்வர். வேண்டப்பட்ட சான்றுகள் சுங்க அலுவலகத்திலுள்ள சுங்க கணக்காய்வாளருக்கு அனுப்பி வைக்கப்படும். முறைமை-மையக் கணக்காய்வு என்பது, இறக்குமதியாளர் அல்லது ஏற்றுமதியாளரின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை பற்றியதொரு முறைமை சார்ந்த மதிப்பீடாகும். இது உணரப்பட்ட பலங்கள் மற்றும் பலவீனங்கள் தொடர்பில் ஆராய்ந்து பரிசோதனை செய்யும் வகையில் விளங்குகிறது. இந்தக் கணக்காய்வானது, சமர்ப்பிக்கப்படுகின்ற சுங்கப் பிரகடனங்களின் துல்லியத் தன்மையினைச் பரிசோதித்தல் மற்றும் வணிக நடவடிக்கை தொடர்பில் சம்பந்தப்பட்ட சட்ட இணக்கப்பாட்டு மட்டம் குறித்தானதொரு கருத்தினை வகுப்பத்தல் மற்றும் உறுதிசெய்யப்பட்ட பலவீனங்களை சரிசெய்வதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல் போன்ற நோக்கங்களைக் கொண்டுள்ளது.

மேற்படி இரண்டு பிரதான கணக்காய்வு வகைகளுக்கும் மேலதிகமாக, சரக்கு வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்வானது மேலும் இரண்டு கணக்காய்வு வகைகளைக் கொண்டுள்ளது. அதாவது, கருப்பொருள்-மைய கணக்காய்வுகள் மற்றும் விசாரணை வகைக் கணக்காய்வு போன்றனவே அவையாகும். இலங்கை போன்ற நாட்டினைப் பொறுத்தவரை, சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுகின்ற பெரும்பாலான வர்த்தகர்கள் முறைசாரா வர்த்தகர்களாவர். இத்தகைய வர்த்தகர்கள் தொடர்பிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே கருப்பொருள்-மைய கணக்காய்வுகளும் விசாரணை வகைக் கணக்காய்வுகளும் எமக்கு அவசியமாகின்றன.

கடந்த காலப்பகுதியில் ஆசிய அபிவிருத்தி வங்கி நிபுணர் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் இலங்கைச் சுங்கத்தில் பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு முறைகளை நடைமுறைப்படுத்துவதில் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியுள்ளது. முறைமை மைய கணக்காய்வுகள் உள்ளிட்ட கணக்காய்வின் புதிய பகுதிகளை உள்ளடக்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி சுங்க அதிகாரிகளுக்கு பயிற்சிகளை வழங்கியுள்ளது. முறைமை மைய கணக்காய்வுகளின் நோக்கம் இறக்குமதியாளர்களின் இடர் மட்டத்தினை கண்டறிவதாகும். இணக்கப்பாட்டுப் பொருளாதார இயக்குனர் /அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் பற்றிய நிலைப்பாட்டினை வழங்குவதன் மூலம் இடர் முகாமைத்துவச் செயன்முறைக்கானதொரு உள்ளீடாக இணக்கப்பாடு மிக்க வர்த்தகர்களுக்கு விரிவான வசதிகளை வழங்கும் நோக்கில் அதற்கானதொரு அளவுகோலாக முறைமை-மையக் கணக்காய்வுகளின் பெறுபேறுகளை பயன்படுத்த முடியும்.

இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகத்தின் பிரிவுகளும் தொழிற்பாடுகளும்



8.3.3.2 சரக்கு வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்வு

சுரக்கு வெளியாக்கலுக்கு பின்னரான கணக்காய்வு அல்லது கணக்காய்வை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பாடுகள் என்பது மீளாய்வு செய்யப்பட்ட கியோடோ சமவாயத்தினால் (Revised Kyoto Convention) குறித்த நடவடிக்கைகளாக வரையறுக்கப்படுகிறது. இந்த நடவடிக்கைகள் சுங்கமானது குறித்த நபரின் பிரகடனங்களின் உண்மைத்தன்மை மற்றும் அதிகாரத்தன்மைகளை அந்நபரின் தொடர்புபட்ட புத்தகங்கள், பதிவேடுகள், வர்த்தக முறைமைகள் மற்றும் வணிகத் தரவுகள் ஆகியவற்றைப் பரிசோதனை செய்வதன் ஊடாக உறுதி செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படக்கூடியனவாகும். சரக்கு வெளியாக்கலுக்கு பின்னரான கணக்காய்வானது சுங்கத்திற்கும் ஏனைய எல்லைப்புற அதிகார அமைப்புகளுக்கும் கடினமானதொரு கட்டுப்பாட்டு முறையியலாகும். ஏனெனில், இது கண்டிப்பான பரிமாற்ற மைய கட்டுப்பாட்டுச் சூழலிலிருந்து ஒரு வலிமையான கணக்காய்வு மைய நிருவாகத்திற்கு மாறுவதன் ஊடாக அவர்கள் பல்-அடுக்கு இடர் மைய கட்டுப்பாட்டு அணுகல் முறையினை பிரயோகிப்பதற்கு வழியமைப்பதாகவுள்ளது. பரிமாற்ற மையக் கட்டுப்பாடுகள் என்பது பொருட்களின் பௌதீகப் பரிசோதனை, பெறுமதி சரிபார்ப்பு, அவற்றின் உற்பத்தியிடம் மற்றும் வகைப்பாடு, மாதிரிப்பொருள், சான்றிதழ்,

உரிமம் மற்றும் அனுமதிப் பத்திரங்கள் ஆகியவற்றின் சரிபார்ப்பு போன்ற செயற்பாடுகளின் போதான ஒவ்வொரு பிரத்தியேக கப்பலேற்றுகைக்கும் பிரயோகிக்கப்படுகின்ற கட்டுப்பாட்டு முறைகளாகும்.
(மூலம்: உலக சுங்க அமைப்பு)

சரக்கு வெளியாக்கத்திற்குப் பின்னரான கணக்காய்வுகள் ஒவ்வொரு விடயமாகத் தனித்தனியாகக் கொண்டு, இலக்குப்படுத்தப்பட்ட செயற்பாட்டாளர் மீது அவதானம் செலுத்துவதன் அடிப்படையில், சமுதாயம் மற்றும் வர்த்தகர் தொடர்பான இடர் பகுப்பாய்வு குறித்து தெரிவுசெய்வதன் அடிப்படையில், அல்லது வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறு திட்டமிடப்பட்ட ஒழுங்குமுறையான வழிமுறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட முடியும். மேலும், இக் கணக்காய்வானது குறித்த சில பொருளாதார நடவடிக்கையாளர்களை விசேடமாக கையாளும் வகையிலும் பயன்படுத்தப்பட முடியும்.

8.3.3.2.1 சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுப் பிரிவின் பிரதான குறிக்கோள்கள்

சுங்கச் சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்க சுங்கப் பிரகடனங்கள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதே சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வின் ஒட்டுமொத்தக் குறிக்கோளாகும். பின்வருவன குறிப்பான குறிக்கோள்களாக விளங்குகின்றன :

- சட்டபூர்வமாகச் செலுத்த வேண்டிய அரசிறை கணிப்பிடப்பட்டு அத்தொகை செலுத்தப்படுவதை உறுதிப்படுத்தல்.
- இலங்கையிலுள்ள உள்வருகை மற்றும் வெளியேறுகை வாயில்களில் குறைந்தபட்ச தலையீடுகளுடன் சர்வதேச வர்த்தகத்திற்கு வசதியளித்தல்.
- சம்பந்தப்பட்ட அனைத்து ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாட்டினை அதிகரித்தல்.
- சுங்கப் பிரகடனங்களிலான முரண்பாடுகளைச் சரிசெய்தல்.
- நபர் ஒருவர் பொருத்தமான கணக்கீட்டுப் பதிவுகளைப் பேணுவதை உறுதிப்படுத்தல் மற்றும் சுங்கப் பிரகடனங்கள் யாவும் சரியானதும் துல்லியமானதுமாகும் என்பதை அவர்களது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் உறுதி செய்வதை உறுதிப்படுத்தல்.
- சுங்கக் கட்டுப்பாட்டிலான விளைவுத்திறனை உறுதிப்படுத்தல்.

8.3.3.2.2 வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வின் பிரதான தொழிற்பாடுகள்

- கணக்காய்வுத் திட்டங்களை விருத்தி செய்தல்
- AsyCuDa அமைப்பிலுள்ள வர்த்தகர்களின் கடந்த காலப் பதிவுகளை உபயோகித்து கணக்காய்வு செய்யப்படுவதற்கான நபர் ஒருவரைத் தெரிவு செய்தல்.
- கருமபீடக் கணக்காய்வு மற்றும் ஏனைய அவசியமான கணக்காய்வு முறைகளை மேற்கொண்டு கணக்காய்வுகளுக்கான ஆயத்தங்களை மேற்கொள்ளல்.
- கருமபீடக் கணக்காய்வானது ஏதேனும் முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டுமாயின், களவிஜய கணக்காய்வுகளை முன்னெடுத்தல்.
- கணக்காய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்படுகின்ற மோசடிகளை புலன்விசாரணை செய்தல்.
- புலன்விசாரணைகள் மற்றும் அறிக்கைகளை நிறைவுசெய்தல்.
- ஏதேனும் மோசடி மிக்க நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதா என்பதைச் சோதனை செய்வதற்கான விசாரணைகளை முன்னெடுத்தல்.
- குறித்த குற்றச் செயலானது சுங்க மீறுதலை உறுதிப்படுத்தும் வகையில் போதுமான சான்றினைக் கொண்டிருப்பின், அபராதங்களை விதித்தல் மற்றும் ஏனைய சீராக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.
- கணக்காய்வுக்கு உட்படுபவருக்கு பின்னூட்டல்களை வழங்குதல்.
- இறுதியாக இடர் முகாமைத்துவச் செயன்முறைக்கானதொரு உள்ளீடாக உபயோகிக்கும் நோக்கில் குறித்த தகவல்களைக் கொண்டு மத்திய புலன்விசாரணை அலகின் தரவுத்தளத்தினை இற்றைப்படுத்தல்.
- அவசியமான நவீன மாற்றங்களை மேற்கொள்ளும் நோக்கில் ஒட்டுமொத்த கணக்காய்வுச் செயன்முறையினையும் மதிப்பாய்வு செய்தல்.

8.3.3.2.3 சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வில் சரிபார்க்க வேண்டிய விடயங்கள்

சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வானது, கீழே வழங்கப்பட்டுள்ள அட்டவணைக்கு ஏற்ப ஒரு முக்கிய சுங்கப் பிரகடனத்திற்கும் தேவையான ஒவ்வொரு விடயங்கள் மீதும் கவனம் செலுத்துவதோடு, அதற்கிணங்க குறித்த கம்பனிகளின் இணக்கப்பாட்டு மட்டத்தினையும் கணிப்பிடுகின்றது. அதன் பின்னர், சம்பந்தப்பட்ட கம்பனிகள் தொடர்பில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது மோசடியான செயற்பாடுகள் உள்ளனவா என்பது பற்றி தீர்மானிக்கின்றது. அவ்வாறு இருப்பின், மேலதிக பதிவுகள் மூலம் குறித்த அரசிறை மீட்டெடுக்கப்படுகிறது அல்லது சுங்கக் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 235) பிரகாரம் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு அது சரி செய்யப்படுகிறது.

தொடர்புபட்ட பொருட்கள் அடிப்படையிலான தீர்வை	தீர்வை விகிதம் தொடர்புபட்ட பொருட்கள்	தீர்வைத் தொகை தொடர்புபட்ட பொருட்கள்	ஏனையவை
- பெறுமதி - அளவு - நாணயம் - நாணயமாற்று விகிதம்	- வகைப்படுத்தல் - பொது விகிதங்களது விண்ணப்பங்கள் - முன்னுரிமை விகிதங்கள்	- விலக்களிப்புகள் - நியாயமானமுறையில் தீர்மானிக்கப்பட்ட தொகை - சரியான தீர்வைக்கணிப்பீடு	- மட்டுப்படுத்தப்பட்டவைகள் - தடைசெய்யப்பட்டவைகள் - இறக்குமதி அனுமதிப்பத்திரம் - புலமைச் சொத்துரிமை - CITES - உரிமத் தொகை - நாணயமாற்றுக் கட்டுப்பாடு

சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு (PCA) மேற்கொள்ளப்பட முன்னர் சுங்க வெளியாக்கலில்/ அல்லது வெளியாக்கலுக்கு முன்னரான சரிபார்ககையின் பொழுது மேற்படி பொருட்கள் பரிசோதிக்கப்பட முடியும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அவற்றுக்கிடையிலான தேவையற்ற இரட்டிப்பினைத் தவிர்க்கும் வகையிலும் மற்றும் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வின் சிறப்புத் தகுதியினை அதிகரித்து அதன் குறைபாட்டினைக் குறைக்கும் வகையிலும் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்விலான அணுகுமுறையானது சுங்க வெளியாக்கலில் (வெளியாக்கலுக்கு முன்னரான சரிபார்க்கை) ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட முடியும். சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வானது (PCA) அதன் அதிகாரிகள் சுங்கப் பிரகடனத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை மாத்திரம் அல்லாது கணக்காய்வுக்குரியவரின் வளாகத்தில் கடந்த சில காலமாக பேணப்பட்டு வந்த கணக்கீட்டுப் பதிவேடுகள் போன்ற சம்பந்தப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவுகளையும் பரிசோதனை செய்வதற்கும் அவர்களை இயலச் செய்தமையினை ஒரு சிறப்பம்சமாகக் குறிப்பிட முடியும். சரக்கு வெளியாக்கத்திலிருந்தான 3 மாதங்களினுள் மாதிரிகள் அழைப்பிக்கப்படுகின்றன. குறுங்கால அறவீடுகள் இரண்டு வருடங்களினுள் மீட்கப்படுவதோடு, ஏதேனுமொரு மோசடி கண்டறியப்படின், கருத்திற்கொள்ளத்தக்க காலப் பகுதி எவ்வாறிருப்பினும் பறிமுதல் செய்யும் வகையில் அபராதம் விதிக்கப்படும்.

8.3.3.2.4 நியமதர இயக்கப்பாட்டு நடைமுறை (SOP)

இலங்கை உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதியாக்க உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. மேற்படி உடன்படிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்வானது "C" வகை குறித்தான அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது. இதனால் "C" வகைக்குரிய அர்ப்பணிப்புக்களை அமுல்படுத்துவதற்கு ஒரு நன்கொடையாளர் நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும். இதற்கிணங்க, உலக சுங்க அமைப்பு மற்றும் உலக வர்த்தக அமைப்பு ஆகியவற்றின் நியமதரங்களுக்கு அமைய பொருத்தமான வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு முறைமையினைத் தாபித்து அதனை அமுல்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியானது வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு பணிப்பகத்தின் பணியாட்டொகுதியினருக்கு பயிற்சியளித்தலுக்கான தொழில்நுட்ப உதவியை ஏற்கனவே வழங்கியுள்ளதோடு, வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வின் கையேடு ஒன்றாக உபயோகிக்கப்படவுள்ள நியமதர இயக்கப்பாட்டு நடைமுறை (SOP) ஒன்றை வரைவு செய்வதற்கான தொழில்நுட்ப உதவியையும் வழங்கியுள்ளது. வரைவு SOP ஆனது ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு, அது அண்மிய எதிர்காலத்தில் பிரசுரிக்கப்படும். SOP ஆனது நிறைவு செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டது.

8.3.3.2.5 சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு தொடர்பிலான பயிற்சித் திட்டங்கள்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப உதவியின் ஒரு பகுதியாக, சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு பிரிவிலுள்ள அலுவலர்களுக்கான பயிற்சி ஒரு தொடர்ச்சியான திட்டமாக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் மேற்கொள்ளப்படுகிறது. முதலாவது பயிற்சி அமர்வானது 2019ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டதுடன் அதைத் தொடர்ந்து பயிற்சித்திட்டங்கள் 2021 மற்றும் 2022 இல் நடாத்தப்பட்டன. மற்றுமொரு விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது உலக சுங்க அமைப்பின் வளவாளர்கள் மூலம் PCA இலுள்ள அலுவலர்களுக்கு 2023இல் நடாத்தப்பட்டது.

8.3.3.2.6 இடர் முகாமைத்துவ பணிப்பகத்தினால் நடத்தப்பட்ட CEO/AEO நிகழ்ச்சித்திட்டம் பற்றிய வசதியளிப்பு

இடர் முகாமைத்துவ பணிப்பகமானது, எல்லைப்-புற பரிமாற்றங்களுடன் சம்பந்தப்படுகின்ற நேரம் மற்றும் செலவு என்பவற்றினை குறைப்பதன் மூலம் சரக்குகளின் நகர்வு, விடுவிப்பு மற்றும் வெளியாக்கலை துரிதமாக்குவதன் மூலம் உலகளாவிய வர்த்தகத்தை பாதுகாத்து அவற்றுக்கு வசதியளிப்பதனை நோக்காகக் கொண்டு, உலக சுங்க அமைப்பின் SAFE தரநியம வேலைச்சட்டகம் மற்றும் உலக வர்த்தக அமைப்பின் வியாபார வசதியளித்தல் உடன்படிக்கை என்பவற்றுக்கு இணங்க குறித்த CEO/AEO திட்டத்தினை ஆரம்பித்துள்ளது.

இந்த AEO திட்டமானது இரண்டு மட்டங்களில் சான்றிதழ்களை வழங்குகிறது. அதாவது, சட்டபூர்வ மற்றும் இயக்கப்பாடு சார்ந்த உயர் இணக்கப்பாட்டினைக் கொண்ட இயக்குநர்களுக்கான இணக்கமான பொருளாதார இயக்குநர் (CEO) மற்றும் CEO தேவைப்பாட்டிற்கு மேலாக, விநியோகத் தொடர் பாதுகாப்புத் தரநியமங்களைப் உயர்வாகப் பேணுகின்ற இயக்குனர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் (AEO) என்பனவாகும்.

அட்டவணை 8.3.3.1 : வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுப் பிரிவிலான செயலாற்றுகை - 2025

விபரம்	2025
இவ்வாண்டுக் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட கணக்காய்வு விடயங்களது எண்ணிக்கை	92
முடிவுறுத்தப்பட்ட கணக்காய்வுக்குப்பின்னரான விடயங்களது எண்ணிக்கை (முன்னமே பதிவு செய்யப்பட்டவை அடங்கலாக)	60
மேற்கொள்ளப்பட்ட முறைமை மையக் கணக்காய்வுகளின் எண்ணிக்கை	06
கணக்காய்வின் பின்னர் நிரூபிக்கப்பட்ட குற்றங்களதும் மற்றும் விதிக்கப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது எண்ணிக்கை	47
விதிக்கப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது மொத்தத் தொகை (ரூபா)	1,988,260,470
சேகரிக்கப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது மொத்தத் தொகை (ரூபா)	2,335,191,537
சேகரிக்கப்பட்ட விற்பனை வரும்படிகளது மொத்தத் தொகை(ரூபா)	1,422,596
மேலதிக பதிவுகளாக சேகரிக்கப்பட்ட மொத்தத் தொகை (ரூபா)	135,691,752
வட்டியாக சேகரிக்கப்பட்ட மொத்தத் தொகை(ரூபா)	11,640,802
அறவிடப்பட்ட மொத்தத் தொகை (ரூபா)	**2,483,946,687**

மூலம் : இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.3.3.2 செயலாற்றுகை ஒப்பீட்டாய்வு

	2021	2022	2023	2024	2025
இவ்வாண்டுக் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட கணக்காய்வு விடயங்களது எண்ணிக்கை	119	87	130	185	92
முடிவுறுத்தப்பட்ட கணக்காய்வுக்குப்பின்னரான விடயங்களது எண்ணிக்கை (முன்னமே பதிவு செய்யப்பட்டவை அடங்கலாக)	35	61	117	154	60
நிரூபிக்கப்பட்ட குற்றங்களதும் மற்றும் விதிக்கப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது எண்ணிக்கை	27	53	80	167	47
அறவிடப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது மொத்தத் தொகை (ரூபா)	811,681,719	1 ,146,354,720	2,587,765,702	4,285,393,606	2,335,191,537
சேகரிக்கப்பட்ட விற்பனை வரும்படிகளது மொத்தத் தொகை	-	-	இல்லை	47,499,403	1,422,596
மேலதிக பதிவுகளாக சேகரிக்கப்பட்ட மொத்தத் தொகை (ரூபா)	16,304,877	10,107,147	32,632,397	41,979,247	106,251,340
அறவிடப்பட்ட மொத்தத் தொகை (ரூபா)	**853,483,565**	**1 ,156,461,867**	**2,980,308,099**	**4,608,117,163**	**2,483,946,687**

மூலம் : இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.3.3.3 : பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு குறித்த ஒப்பீட்டாய்வு

வருடம்	இவ்வாண்டுக் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு விடயங்களது எண்ணிக்கை	முடிவுறுத்தப்பட்ட வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு விடயங்களது எண்ணிக்கை (முன்னமே பதிவு செய்யப்பட்டவை அடங்கலாக)	கணக்காய்வு மூலம் நிரூபிக்கப்பட்ட குற்றங்களும் மற்றும் விதிக்கப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது எண்ணிக்கை
2021	119	35	27
2022	87	61	53
2023	130	117	80
2024	185	197	167
2025	92	60	47

மூலம் : இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.3.3.4 : அரசிறை சேகரிப்பு குறித்த ஒப்பீட்டாய்வு

வருடம்	சேகரிக்கப்பட்ட அரசிறை (ரூபா)
2021	853,483,565
2022	1,156,461,867
2023	2,980,308,099
2024	4,608,117,163
2025	2,483,946,687

மூலம் : இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

உரு 8.3.3.1 : அரசிறை சேகரிப்பு குறித்த ஒப்பீட்டாய்வு



மூலம் : இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.3.3.5 : பதிவு செய்யப்பட்ட மற்றும் முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை

வருடம்	பதிவு செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை	முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை
2021	119	35
2022	87	53
2023	130	117
2024	185	197
2025	92	60

மூலம் : இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

உரு 8.3.3.2 : பதிவு செய்யப்பட்ட மற்றும் முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை குறித்த ஒப்பீட்டாய்வு



மூலம் : இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.3.3.3 மீளளிப்புக் கிளை

மீளளிப்புக் கிளையானது கூட்டுறவுக் கொத்தணியின் கீழான இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகத்தின் ஒரு பகுதியாகும். இப்பிரிவானது, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் மீதான தீர்வைகள் மற்றும் கட்டணங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக செலுத்துகைகளை மீளளித்தல் மற்றும் சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235) பிரிவு 18 மற்றும் 22 என்பவற்றின் கீழ் எந்தவொரு துறைமுகத்திலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் எந்தவொரு வெளிநாட்டுத் துறைமுகத்திற்கும் மீள் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பிலான மீளளித்தலை பிரதானமாகக் கையாளுகின்றது.

சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ், ஒரு இறக்குமதியாளர் தன்னால் இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பில் மிகையாகச் செலுத்திய தீர்வைகள் மற்றும் கட்டணங்களை, அவை செலுத்தப்பட்ட நாளில் இருந்து இருபத்தி நான்கு மாதங்களுக்குள் அதற்கான கோரிக்கையினை மேற்கொள்ளுமிடத்து, குறித்த இறக்குமதியாளர் அதனை மீளப் பெறுவதற்கு தகுதியுடையவராவர். சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ், இறக்குமதியாளர் எந்தவொரு வெளிநாட்டு துறைமுகத்திலிருந்தும் இறக்குமதி செய்யப்படும் மற்றும் எந்தவொரு வெளிநாட்டுத் துறைமுகத்திற்கும் மீள் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு பத்தில் ஒன்பது பங்கிற்கும் மேற்படாத தீர்வைக் கழிப்பிற்கும் தகுதியுடையவராவர்.

அட்டவணை 8.3.3.6 : மீளளிப்புக் கோரிக்கைகளது நிலைமை

வருடம்	2021	2022	2023	2024	2025
புதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள்/ கோரிக்கைகளின் எண்ணிக்கை	75	93	77	116	88
நிறைவடைந்த நிதி மீளளிப்புகளின் (முன்பு பதிவு செய்யப்பட்டவை உள்ளடங்கலாக) எண்ணிக்கை	96	79	98	37	88
நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள்/ கோரிக்கைகளின் எண்ணிக்கை	32	15	6	13	13

மூலம் : இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

உரு 8.3.3.3 : மீளளிப்புக் கோரிக்கைகள் குறித்த ஒப்பீட்டாய்வு



மூலம் : இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.3.3.4 முடிவுரை

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளைப் பாதிக்கும் அரச நிர்வாக மற்றும் கொள்கை நடவடிக்கைகளைப் பொறுத்தவரை, 2025 ஆம் ஆண்டு ஒப்பீட்டளவில் நிலையானதொரு ஆண்டாக விளங்கியது. முன்னைய ஆண்டுகளைப் போன்றல்லாது, பெரும்பாலான ஒழுங்குமுறைக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் காரணமாக, வர்த்தக நடவடிக்கைகள் குறைந்த கட்டுப்பாடுகளுடன் செயல்பட முடிந்தது. இருப்பினும், இந்த ஒப்பீட்டளவில் சாதகமான செயல்பாட்டுச் சூழல் இருந்தபோதிலும், இலங்கைச் சுங்கத்திற்கு நிதி அமைச்சினால் ஒரு மேலதிக அரசிறை இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை அடைவது ஒரு குறிப்பிடத்தக்க சவாலாக இருந்தது, இதற்குத் தொடர்ச்சியான முயற்சியும் மேம்படுத்தப்பட்ட இயக்கப்பாடு சார்ந்த வினைத்திறனும் அவசியமாக விளங்கின. எனவே, 2025 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் செயலாற்றுகையானது, குறித்த காலப்பகுதியில் நிலவிய பொருளாதார நிலைமைகள் மட்டுமல்லாது, இப்பிரிவின் அதிகாரிகளின் கூட்டு அர்ப்பணிப்பையும் கடின உழைப்பையும் பிரதிபலிக்கிறது.

இந்தச் சூழலில், இணக்கபாடு மற்றும் வசதயளித்தல் பணிப்பகமானது, தனக்கு ஒதுக்கப்பட்ட இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதில் கவனம் செலுத்தி, தனது அன்றாட செயல்பாடுகளை மேற்கொண்டது. இப் பணிப்பகம் தனது பொறுப்புகளை வெற்றிகரமாக நிறைவேற்றி, நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைந்துள்ளமையானது உயர் மட்ட இயக்கப்பாடு சார் வினைத்திறனையும் செயலாற்றுகையினையும் பிரதிபலிக்கிறது.

2025 ஆம் ஆண்டில், இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகத்தின் அதிகாரிகள் கணக்காய்வின் பின்னரான 92 விசாரணைகளைப் பதிவு செய்துள்ளனர், மேலும் முன்னைய ஆண்டுகளின் விசாரணைகள் உள்ளிட்ட 60 விசாரணைகளை அவர்களால் நிறைவு செய்ய முடிந்தது. சுங்கக் குற்றங்கள் நிரூபிக்கப்பட்ட கணக்காய்வுக்குப் பின்னரான விடயங்களின் எண்ணிக்கை 47 ஆகும். இந்த ஆண்டில் இப்பணிப்பகத்தினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த அறவீட்டுத் தொகை ரூபா. 2,483,946,687/- ஆகும் என்பதுடன் அபராதம்/பறிமுதல்களாக ரூபா. 2,335,191,537/- வும் அறவிடப்பட்டுள்ளன. பொருள் விற்பனை தொடர்பில் ரூபா. 1,422,596/- வும் மேலதிக பதிவுகள் குறித்து ரூபா. 106,251,340/- ஆகவும் இருக்கின்ற அதேவேளை, தாமதமாகச் செலுத்தியதற்கான வட்டியாக ரூபா.11,640,802/- வும் அறவிடப்பட்டது.

செயலாற்றுகை தொடர்பான தரவுகளைப் பகுப்பாய்வு செய்யும்போது, 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அறவீடுகள் ஏனைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது சமமாக இருந்துள்ளன, அதேசமயம் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அறவீடுகள் ஒரு விதிவிலக்காக இருந்துள்ளது என்பதைக் காண முடிகிறது. இருப்பினும், 2025 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட விடயங்களுடன் ஒப்பிடும்போது, திருப்திகரமான எண்ணிக்கையிலான விடயங்களை நிறைவு செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்பதையும் கவனிக்க வேண்டியது அவசியமாகும். நிலுவையில் உள்ள விசாரணைகளை நிறைவு செய்வதற்கும் தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதும் தெளிவாகிறது. மேலும், தொடங்கப்பட்ட வழக்குகளில் 80% க்கும் அதிகமானவற்றை, குற்றங்களை நிறுவி, அபராதங்கள் மற்றும் பறிமுதல்களை விதிப்பதன் மூலம் முடிவுக்குக் கொண்டுவர இயலுமாகவிருப்பதானது, கணக்காய்வுக்குப் பின்னரான விடயங்களை நடத்துவதில் உள்ள வினைத்திறனையே எடுத்துக்காட்டுகிறது. இருப்பினும், இறுதியாக, வர்த்தகர்களின் இணக்கப்பாட்டு நிலை இன்னும் திருப்திகரமான அளவில் இல்லை என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது.

இந்த பணிப்பகத்துடன் இணைக்கப்பட்டுள்ள மீளளிப்புக் கிளை, பணத் திருப்பிச் செலுத்துதலுக்காக 88 விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது, மேலும் அக் கிளையினால் 101 பணத் திருப்பிச் செலுத்தும் கோரிக்கைகளை நிறைவு செய்ய முடிந்துள்ளது.

இறுதியாக, தேவையான வளங்களை ஒதுக்கவும், அவ்வப்போது பயிற்சிகளை வழங்கவும் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டால், இப்பணிப்பகத்தின் செயல்திறனை மேலும் விளைவுத்திறன் மிக்க முறையில் மேம்படுத்த முடியும் என்பதைக் குறிப்பிடுவது இங்கு அவசியமாகும்.

8.3.4 பயணிகள் சேவை (கொழும்பு) பணிப்பகம்

8.3.4.1 அறிமுகம்

இந்த அறிக்கையானது, பயணிகள் சேவைகள் பணிப்பகத்தின் 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகையினை முன்வைக்கிறது. இந்தச் செயலாற்றுகை பகுப்பாய்வானது, சம்பந்தப்பட்ட உப பிரிவுகளால் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த அறவீட்டு விவரங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

8.3.4.2 பிரதான தொழிற்பாடுகள்

- வருகை தருகின்ற மற்றும் வெளிச் செல்லுகின்ற பயணிகள் செயன்முறை மற்றும் பொதிகளின் வெளியாக்கத்திற்கு வசதியளித்தல்.
- மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியைத் தடுத்தல் மற்றும் அரசிறையினை பாதுகாத்தல்,
- சமூக-பொருளாதார, கலாசார மற்றும் மக்களின் சுற்றுச் சூழல் சார்ந்த நலன்களைப் பாதுகாத்தல்.
- பயணிகள் உடன் வராத (UPB) பொதிகளடங்கிய களஞ்சியசாலைகளை கட்டுப்பாட்டின் கீழ் வைத்தலும் கண்காணித்தலும்.

8.3.4.3 பயணிகள் உடன்வராத பொதி களஞ்சியசாலைகள் குறித்த பட்டியல்

- பொதி அலுவலகம் - (பொ.அ – விற்பனைகள்)
- பொதி அலுவலகம் - RCT கொள்கலன் சாலை
- பொதி அலுவலகம் - புதிய நுகே வீதி
- லக்சிறிசேவா - கொழும்பு/ நிந்தவூர்
- ட்றான்ஸ்கோ - வத்தளை
- மிட்கோ
- ட்றைகோ - கொழும்பு
- சிலோன் சிப்பிங் லைன்ஸ் - கொழும்பு/அட்டாளைச்சேனை
- செரன்டீப்
- ட்றிகோ - (ஜா எல)

8.3.4.4 செயலாற்றுகை

அட்டவணை 8.3.4.1 : செயலாற்றுகை - UPB களஞ்சியசாலை

பொதி அலுவலகம் (விற்பனை)	
பிரகடனங்களது எண்ணிக்கை	-
பொதிகளது எண்ணிக்கை	-
	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	15,178,509.00
பெ.சே.வரி	19,991,544.00
EIC	283,248.00
து.வி.அ. அறவீடு	6,467,735.15
செஸ் வரி	-
உற்பத்தி வரி	-
மேலதிக கட்டணம்	-
ச.பா.அ	492,848.00
வி.ப.அறவீடு	-
VAL	-
காப்பறைக் கட்டணம்	12,271,846.00
சீல் கட்டணங்கள்	154,450.00
மேலதிக நேரம்	16,679,777.62
அபராதம்	1,900,745.00
ஏனைய கட்டணங்கள்	276,079,926.13
TW கட்டணங்கள்	19,296,291.00
மொத்த தொகை	**368,796,920.35**

பொதி அலுவலகம் (RCT)	
பிரகடனங்களது எண்ணிக்கை	4,403
பொதிகளது எண்ணிக்கை	224,191
	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	15,958,382.00
EIC	39,859,352.00
பெ.சே.வரி	48,658,182.00
து.வி.அ. அறவீடு	20,764,609.00
செஸ் வரி	-
உற்பத்தி வரி	2,728,790.00
மேலதிக கட்டணம்	-
ச.பா.அ	8,280,237.00
வி.ப.அறவீடு	-
VAL	-
காப்பறைக் கட்டணம்	-
சீல் கட்டணங்கள்	-
மேலதிக நேரம்	5,000.00
அபராதம்	43,467,488.00
ஏனைய கட்டணங்கள்	2,302,800.00
TW கட்டணங்கள்	-
மொத்த தொகை	**182,024,840.00**

பொதி அலுவலகம் (புதிய நுகே வீதி)	
பிரகடனங்களது எண்ணிக்கை	12,839
பொதிகளது எண்ணிக்கை	68,377
	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	20,211,451.00
EIC	23,312,662.00
பெ.சே.வரி	37,246,820.00
து.வி.அ. அறவீடு	14,163,822.00
செஸ் வரி	-
உற்பத்தி வரி	2,943,440.00
மேலதிக கட்டணம்	-
ச.பா.அ	3,985,555.00
வி.ப.அறவீடு	8,000.00
VAL	-
காப்பறைக் கட்டணம்	547,470.00
சீல் கட்டணங்கள்	2,439,652.00
மேலதிக நேரம்	-
அபராதம்	14,184,612.00
ஏனைய கட்டணங்கள்	130,818.00
TW கட்டணங்கள்	-
மொத்த தொகை	**119,174,302.00**

லக்சிறிசேவா	
பிரகடனங்களது எண்ணிக்கை	26,322
பொதிகளது எண்ணிக்கை	60,311
	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	19,573,931.00
EIC	33,185,967.00
பெ.சே.வரி	37,034,813.00
து.வி.அ. அறவீடு	16,283,368.00
செஸ் வரி	.00
உற்பத்தி வரி	2,502,976.00
மேலதிக கட்டணம்	.00
ச.பா.அ	7,497,078.00
வி.ப.அறவீடு	961,184.00
VAL	-
காப்பறைக் கட்டணம்	555,700 .00
சீல் கட்டணங்கள்	175,000.00
மேலதிக நேரம்	7,839,636.00
அபராதம்	19,689,582.18
ஏனைய கட்டணங்கள்	1,477,664.00
TW கட்டணங்கள்	-
மொத்த தொகை	**146,776,899.18**

ட்றான்ஸ்கோ (வத்தளை)	
பிரகடனங்களது எண்ணிக்கை	39,949
பொதிகளது எண்ணிக்கை	140,528
	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	20,276,529.00
EIC	65,896,302.00
பெ.சே.வரி	53,339,109.00
து.வி.அ. அறவீடு	24,524,091.00
செஸ் வரி	-
உற்பத்தி வரி	2,208,496.00
மேலதிக கட்டணம்	53,179.00
ச.பா.அ	12,658,842.00
வி.ப.அறவீடு	25,348.00
VAL	-
காப்பறைக் கட்டணம்	520,553.00
சீல் கட்டணங்கள்	180,000.00
மேலதிக நேரம்	5,601,685
அபராதம்	16,124,876.00
ஏனைய கட்டணங்கள்	-
TW கட்டணங்கள்	-
மொத்த தொகை	**201,409,010.00**

மிட்கோ	
பிரகடனங்களது எண்ணிக்கை	23,563
பொதிகளது எண்ணிக்கை	109,725
	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	14,419,517.00
EIC	43,199,580.00
பெ.சே.வரி	36,363,247.00
து.வி.அ. அறவீடு	16,836,976.00
செஸ் வரி	-
உற்பத்தி வரி	1,588,826.00
மேலதிக கட்டணம்	-
ச.பா.அ	7,762,249.00
வி.ப.அறவீடு	352,699.00
VAL	-
காப்பறைக் கட்டணம்	166,450.00
சீல் கட்டணங்கள்	-
மேலதிக நேரம்	5,822,620.00
அபராதம்	10,750,001.00
ஏனைய கட்டணங்கள்	1,000.00
TW கட்டணங்கள்	-
மொத்த தொகை	**137,263,165.00**

ட்ரைகோ - கொழும்பு	
பிரகடனங்களது எண்ணிக்கை	28,072
பொதிகளது எண்ணிக்கை	80,196
	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	25,656,608.00
EIC	36,827,304.00
பெ.சே.வரி	46,351,387.00
து.வி.அ. அறவீடு	21,832,158.00
செஸ் வரி	-
உற்பத்தி வரி	3,456,349.00
மேலதிக கட்டணம்	-
ச.பா.அ	9,071,894.00
வி.ப.அறவீடு	37,230.00
VAL	-
காப்பறைக் கட்டணம்	420,850.00
சீல் கட்டணங்கள்	462,500.00
மேலதிக நேரம்	2,752,166.00
அபராதம்	5,412,734.00
ஏனைய கட்டணங்கள்	12,348,857.00
TW கட்டணங்கள்	-
மொத்த தொகை	**164,630,037.00**

சிலோன் சிப்பிங் லைன்ஸ் - கொழும்பு	
பிரகடனங்களது எண்ணிக்கை	325,642
பொதிகளது எண்ணிக்கை	126,279
	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	32,009,154.00
EIC	58,838,565.00
பெ.சே.வரி	64,380,318.00
து.வி.அ. அறவீடு	26,819,590.00
செஸ் வரி	-
உற்பத்தி வரி	1,546,119.00
மேலதிக கட்டணம்	11,880.00
ச.பா.அ	12,055,945.00
வி.ப.அறவீடு	12,696.00
VAL	-
காப்பறைக் கட்டணம்	729,207.00
சீல் கட்டணங்கள்	195,000.00
மேலதிக நேரம்	7,173,075.00
அபராதம்	44,000,041.00
ஏனைய கட்டணங்கள்	15,252,731.00
TW கட்டணங்கள்	60,750.00
மொத்த தொகை	**263,085,071.00**

செரன்டிப்	
பிரகடனங்களது எண்ணிக்கை	9,664
பொதிகளது எண்ணிக்கை	66,954
	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	20,801,081.00
EIC	19,613,742.00
பெ.சே.வரி	19,532,094.00
து.வி.அ. அறவீடு	8,453,776.00
செஸ் வரி	-
உற்பத்தி வரி	592,007.00
மேலதிக கட்டணம்	8,375.00
ச.பா.அ	4,001,279.00
வி.ப.அறவீடு	-
VAL	-
காப்பறைக் கட்டணம்	418,850.00
சீல் கட்டணங்கள்	592,007.00
மேலதிக நேரம்	3,904,689.50
அபராதம்	3,670,713.00
ஏனைய கட்டணங்கள்	9,789.00
TW கட்டணங்கள்	-
மொத்த தொகை	**81,588,613.50**

ட்ரிகோ	
பிரகடனங்களது எண்ணிக்கை	9,262
பொதிகளது எண்ணிக்கை	26,353
	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	3,855,390.00
EIC	5,407,469.00
பெ.சே.வரி	9,609,719.00
து.வி.அ. அறவீடு	3,823,994.00
செஸ் வரி	3,587,082.00
உற்பத்தி வரி	474,665.00
மேலதிக கட்டணம்	-
ச.பா.அ	921,935.00
வி.ப.அறவீடு	-
VAL	-
காப்பறைக் கட்டணம்	67,300.00
சீல் கட்டணங்கள்	951,425.00
மேலதிக நேரம்	-
அபராதம்	1,807,430.00
ஏனைய கட்டணங்கள்	2,533,176.00
TW கட்டணங்கள்	-
மொத்த தொகை	**33,039,585.00**

மூலம் : பயணிகள் சேவை (கொழும்பு) பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.3.4.2 : அரசிறை சேகரிப்பு குறித்தான சராராம்சம்

உப பிரிவு	வருடாந்த அறவீடு (ரூபா)
லக்சிறி சேவா (கொழும்பு) - ப.உ.வராத பொதி	146,776,899.18
லக்சிறி சேவா (நிற்தவூர்) - ப.உ.வராத பொதி	8,072,756.00
ட்றான்ஸ்கோ (வத்தளை) - ப.உ.வராத பொதி	201,409,010.00
மிட்கோ - ப.உ.வராத பொதி	137,263,165.00
ட்றைகோ (கொழும்பு) - ப.உ.வராத பொதி	164,630,037.00
சிலோன் சிப்பிங் லைன்ஸ் (கொழும்பு) - ப.உ.வராத பொதி	263,085,071.00
சிலோன் சிப்பிங் லைன்ஸ் (அட்டாளைச்சேனை) - ப.உ.வராத பொதி	2,965,161.00
செரன்டிப் - ப.உ.வராத பொதி	81,588,613.50
பொதி அலுவலகம் (விற்பனை) - ப.உ.வராத பொதி	368,796,920.35
பொதி அலுவலகம் (நேன்க் கொள்கலன் சாலை) - ப.உ.வராத பொதி	182,024,590.00
புதிய நுகே வீதி - ப.உ.வராத பொதி	119,174,302.00
ட்றிகோ (ஜா எல) - ப.உ.வராத பொதி	33,039,585.00
சுங்கப் பணிப்பாளர் - பயணிகள் சேவை (நிருவாகம்)	4,177,050.00
மொத்தம்	**1,713,003,160.03**

மூலம் : பயணிகள் சேவை (கொழும்பு) பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

- 2024ஆம் ஆண்டில் பயணிகள் சேவை (கொழும்பு) பணிப்பகத்திலான மொத்த அறவீடுகள் ரூபா. 1,348,102,681.55
- 2025ஆம் ஆண்டில் பயணிகள் சேவை (கொழும்பு) பணிப்பகத்திலான மொத்த அறவீடுகள் ரூபா. 1,713,003,160.03
- சதவீத வேறுபாடு = + 27.07%

உரு 8.3.4.1 : மொத்த அறவீடுகள் குறித்த ஒப்பீட்டாய்வு (ரூபா மில்)



மூலம் : பயணிகள் சேவை (கொழும்பு) பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.3.4.4 வர்த்தக (சேவை) வசதியளித்தல் குறிக்கோள்களின் கீழ் திட்டமிடப்பட்ட பிரதான செயற்பாடுகள்

பயணிகள் சேவை பணிப்பகத்தின் பிரதான நோக்கம், பயணிகளின் உடன் வராத தனிப்பட்ட பொருட்களை விரியாக்குவதாகும். இந்த பயணிகளில் பெரும்பாலோர் வெளிநாடுகளில் பணிபுரிந்த இலங்கை ஊழியர்களாவார்கள் என்பதோடு, இவர்கள் இலங்கைக்கு வெளிநாட்டு நாணயத்தை அனுப்பியுள்ளவர்களாவர். அதிகரித்து வரும் வர்த்தக பற்றாக்குறைக்கு எதிராக கணிசமான அனுகூலத்தை வழங்கும் இலங்கையின் வெளிநாட்டு நாணய வருவாயின் முக்கிய தூணாக தொழிலாளர்களின் பணம் அனுப்புதல் இருந்து வருகிறது. UPB கொடுப்பனவு திட்டத்தின் கீழ் அவர்களின் உடன் வராத தனிப்பட்ட பொருட்களை விடுவிப்பதன் மூலம் இலங்கை தொழிலாளர்களின் நலனை மேம்படுத்துவதில் பயணிகள் சேவை பணிப்பகம் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த செயல்முறையை வினைத்திறன் மிக்கதாகவும் பயனுறுதி கொண்டதாகவும் முன்னெடுப்பதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதைத் தவிர, அவர்களால் அன்பளிப்பாக அனுப்பப்படும் பொருட்கள்

தீர்வை மற்றும் பிற வரிகள் விதிக்கக்கூடிய வகையில் பெறுநர்களுக்கு விடுவிக்கப்படுகின்றன. அத்தகைய விடுவிப்புகளின் விவரங்கள் பின்வருமாறு :

அட்டவணை 8.3.4.3 : வியாபார வசதியளித்தலின் கீழான செயலாற்றுகை

நடவடிக்கை	பிரதான பணிகள்	பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள்										
களஞ்சிய சாலை செயற்பாடுகளை நெறிப்படுத்துதல்	2025			ட்றிகோ	ட்றைகோ	லக்சிறிசேவா	சீ.எஸ்.எல்	மிட்கோ	செரன்டீப்	ட்றான்ஸ்மேகா	என்.என்.ஆர்	றே.கொ.சாலை
	பயணிகளுக்கு வசதியாக தொந்தரவு இல்லாத இலகுவான வெளியாக்கல் முறையை உறுதி செய்தல்	வெளியாக்கப்பட்ட பொதிகளது எண்ணிக்கை	பயணிகள உடன் வராதவை	9,029	36,858	29,194	62,660	28,367	12,214	53,946	47,259	116,564
			அன்பளிப்பு	17,324	43,338	31,117	63,619	81,358	54,740	86,582	21,118	107,627
		வெளியாக்கப்பட்ட கொள்கலன்களது எண்ணிக்கை		137	899	469	1,252	368	187	650	360	1,002

மூலம் : பயணிகள் சேவை (கொழும்பு) பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

- ✓ வெளியாக்கப்பட்ட பயணிகள் உடன் வராத பொதிகளது மொத்த எண்ணிக்கை - 406,496
- ✓ வெளியாக்கப்பட்ட அன்பளிப்பு பொதிகளது மொத்த எண்ணிக்கை - 499,296

8.3.4.6 பொருட்களை அகற்றுதல்

பயணிகள் உடன் வராத பொதி களஞ்சியசாலைகளில், கைவிடப்பட்ட மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட சரக்குகள் படிப்படியாகக் குவிந்து வருவதனால், இது சேமிப்புப் பகுதியின் இடவசதியில் பற்றாக்குறைக்கு வழிவகுக்கிறது. எனவே, களஞ்சிய இடத்தை அதிகரிப்பதற்காக, அவற்றை அகற்றும் செயல்முறை தொடரப்பட வேண்டும். இதை வலுப்படுத்தும் வகையில், களஞ்சியசாலைகளில் குவிந்து கிடக்கும் கைவிடப்பட்ட சரக்குகளை அகற்றும் நோக்கில், ஜூன் 2025 முதல் அனைத்து பயணிகள் உடன் வராத பொதி களஞ்சியசாலைகளிலும் "பொருள் தீர்க்கப்படும் வார இறுதி நாட்கள்" என்ற பெயரில் ஒரு வினைத்திறன் மிக்க அப்புறப்படுத்தும் திட்டம் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டம் மாதந்தோறும் தொடரப்பட்டு, களஞ்சியசாலைகளுக்கு 100 கன மீட்டருக்கும்(CBM) அதிகமான சேமிப்பு இடத்தை வழங்கியுள்ளது.

மேலும், இந்தக் கருத்திட்டத்துடன் சேர்த்து, பறிமுதல் செய்யப்பட்ட 306 மரம் வெட்டும் இயந்திரங்கள் (chainsaws) 2025 நவம்பரில் அனர்த்த முகாமைத்துவ மையத்திடம் ஒப்படைக்கப்பட்டன. சமீபத்தில் தித்வா புயலால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளின் போது நடைபெற்ற மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் இவை மிகவும் பயனுள்ளதாக விளங்கின.

8.3.5 பயணிகள் சேவை (கட்டுநாயக்க) பணிப்பகம்

8.3.5.1 அறிமுகம்

பயணிகள் சேவை (கட்டுநாயக) பணிப்பகமானது இலங்கைச் சுங்கத்தின் கூட்டுறவுக் கொத்தணியின் கீழ் செயல்படுகிறது. பயணிகளினதும் பயணிகள் பொதிகளினதும் இயக்கத்தினை எளிதாக்குகின்ற அதேவேளை, அரசின் அரசிறையினையினையும், நாட்டின் சமூக பொருளாதார, கலாச்சார மற்றும் சுற்றுசூழல் நலன்களை பாதுகாக்கும் நோக்கில், நாட்டின் எல்லையில் சுங்கச் சட்டம் மற்றம் ஏனைய தொடர்புபட்ட சட்டங்களை திறம்பட அமுல்படுத்தல் போன்றன இப்பணிப்பகத்தின் பிரதான இலக்காகும்.

8.3.5.2 பிரதான குறிக்கோள்கள்

- நியாயமான நோக்கத்தின் அடிப்படையில் பயணிகள் மற்றும் பொதி வெளியாக்கலினை எளிதாக்குதல்.
- தடைசெய்யப்பட்ட மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களை நாட்டின் எல்லை வழியாக நகர்த்துவதைக் கட்டுப்படுத்தலும் தடைசெய்தலும்.
- நாட்டின் சமூக பொருளாதார, கலாச்சார மற்றும் சுற்றுச்சூழல் நலன்களைப் பாதுகாத்தல்.
- அரச வருவாயினை பாதுகாத்தல்.

8.3.5.3 தொழிற்பாடுகள்

- உள்வருகின்ற மற்றும் வெளிச்செல்லுகின்ற நேர்மையான பயணிகளினதும் மற்றும் அவர்களின் பொதிகளினதும் போக்குவரத்து தொடர்பில் வசதியளித்தல்.
- இடைத்தங்கல் பயணிகளினதும் அவர்களது பொதிகளினதும் நகர்வு தொடர்பில் வசதியளித்தல்.
- அதிமிக முக்கியமான நபர்கள், முக்கியமான நபர்கள், பட்டுப்பாதை மற்றும் வணிக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பயணிகள் ஆகியோர்களது நகர்வுகள் மற்றும் அவர்களது பொதிகள் தொடர்பில் வசதியளித்தல்.
- இலங்கைக்குள் வந்திறங்குகின்ற மற்றும் இலங்கையிலிருந்து புறப்படுகின்ற விமானங்கள் மற்றும் விமான பணியாட்கள் குறித்தான செயன்முறை.
- வெளிச் செல்லும் விமானங்களுக்கு அனுமதியினை வழங்குதல்.
- பயணிகள் பொதி தொடர்பில் தீர்வையற்ற பொதி கொடுப்பனவுகளை வழங்குதல்.
- வியாபாரத் தன்மையுடைய மற்றும் வியாபார அளவுகளுடைய பொருட்களைக் கொண்ட பொதிகளுக்கான தீர்வைகளையும் மற்றும் பிற அறவீடுகளையும் சேகரித்தல்.
- ATA Carnet, உத்தரவாதங்கள் மற்றும் விசேட வைப்புகள் போன்றவை தொடர்பிலான பொருட்களை விடுவித்தல் மற்றும் தேவையான பின்தொடரல் நடவடிக்கைகளை எடுத்தல்.
- உள்வரும் மற்றும் வெளிச் செல்லும் இரத்தினக்கல் பொதிகளை செய்முறைப்படுத்தல்.
- உள்வருகின்ற மற்றும் வெளிச்செல்லுகின்ற பயணிகளால் மேற்கொள்ளப்படும் அந்நியச் செலலவணி பற்றிய பிரகடணங்கள் பற்றிய ஒன்லைன் மூலமான சமர்ப்பணம்மற்றும் அவை தொடர்பில் உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டினை வழங்குதல்.
- பயணி வெளிச்சென்றதன் பின்னர் குறித்த பயணியுடன் வராத பொதிகளை வெளியாக்குவதற்கு குறித்த அதிகாரமளிக்கப்பட்ட நபர்களை இயலச்செய்கின்ற அற்றோணித் தத்துவத்தின் பேரில் மீதமான பொதி கொடுப்பனவுகளுக்கு ஒப்புதல் வழங்குதல்.
- தவறாக கையாளப்பட்ட பொதிகளை வெளியாக்குதல்.
- இராஜதந்திர பொதியினை வெளியாக்குதல்.
- தேவைப்படின் நபர்களை பரிசோதனை செய்தல்.
- மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்களை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்வதை முறியடித்தல்.
- சுங்க குற்றங்களைக் கண்டறிகின்ற விடத்து அது குறித்தான விசாரணைகளையும் புலன் விசாரணைகளையும் முன்னெடுத்தல்.
- சந்தேக நபர்களை நீதிமன்றங்களுக்கு ஆஜர்படுத்தல், மற்றும் தேவைப்பட்டால் நீதிமன்ற செய்முறை ஊடாக அபராதங்களை அறவீடு செய்வதற்கும் மற்றும் மேலதிக பறிமுதல்களை மேற்கொள்வதற்குமான தகுந்த நடவடிக்கைகளை எடுத்தல்.
- சுங்க கண்காணிப்பின் கீழ் கோரப்படாத பொருட்களை அகற்றுவதற்கான வசதியினை வழங்குதல்.
- பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்கத்தின் மேற்பார்வையின் கீழ் விவசாயத் திணைக்களத்தினால்தடுத்து வைக்கப்பட்டுள்ள பொருட்களை அழித்தல் குறித்தான மேற்பார்வையினை வழங்கல்.
- பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் தடுத்து வைக்கப்பட்ட பொருட்களை பாதுகாத்தலும் விற்றுத் தீர்த்தலும்.
- பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை விற்றுத் தீர்த்தல், அபராதங்களைக் கணக்கிட்டுச் சேகரித்தல் மற்றும் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235ஆம் அத்தியாயம்) ஏற்பாடுகளுக்கிணங்க மேலதிக பறிமுதல்களை மேற்கொள்ளல்.
- விமான நிலையத்தில் செயற்படுகின்ற ஏனைய நிறுவனங்களுடன் சிறந்த ஒருங்கிணைப்பினைப் பேணுதல்.

அட்டவணை 8.3.5.1 : அரசிறை சேகரிப்பு - 2025

தீர்வைகள்	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	177,536,291
பெ.சே.வரி	473,248,215
து.வி.அ	62,867,041
இறக்குமதி செஸ் வரி	326,367,647
மேலதிக கட்டணம்	0
உற்பத்தி வரி	64,150
சமூக பாதுகாப்பு அறவீடு	74,534,660
அபராதம்	355,522,321
விடயங்கள் தொடர்பிலான அபராதம்	126,739,617
வி.ப.அறவீடு	70,000
ஏனையவை	393,630
மொத்தம்	**1,597,343,572.00**

பிற கட்டணங்கள்	தொகை (ரூபா)
காப்பறைக் கட்டணம்	1,967,102.00
மேலதிக நேர கட்டணம்	9,609,650.00
DFS சுங்க கட்டணங்கள்	745,235.00
கணனி கட்டணம்	5,903,500.00
போட்டோ பிரதி	71,880.00
மொத்தம்	**18,297,367.00**
முழு மொத்த அரசிறை சேகரிப்பு	**1,615,640,939.00**

மூலம் : பயணிகள் சேவை (கட்டுநாயக்க) பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.3.5.2 : 2025ஆம் ஆண்டிலான கண்டுபிடிப்புகள்

கண்டுபிடிக்கள்		
கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களின் எண்ணிக்கை	:	133
பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது பெறுமதி (ரூபா)	:	6,163,506,713
பறிமுதல் செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயங்களது பெறுமதி	:	65,742,582.97
பறிமுதல் செய்யப்பட்ட இரத்தினக்கற்களது பெறுமதி (ரூபா)	:	132,990,648
பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தினது பெறுமதி (ரூபா)	:	1,822,395,121
பறிமுதல் செய்யப்பட்ட ஏனைய பொருட்களது பெறுமதி(ரூபா)	:	4,143,592,180
கண்டுபிடிக்கப்பட்ட போதைப்பொருட்களது அளவு	:	272.1 கி.கி

கண்டுபிடிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட/ தடைசெய்யப்பட்ட பொருட்களது அளவு

வகை	தங்கம் (தங்கம்/ தங்க ஆபரணம்)	தங்கக் களிமம்/ கூழ்	ஏலக்காய்	அழகுசாதனப் பொருட்கள்	பூச்சிகொல்லிகள்/ கிருமிநாசினிகள்	மருந்து
நிறை (கி.கி)	36.32	-	3,515.5	4,169.45	114.40	083 தயாரிப்புகள்

வகை	கையடக்க தொலைபேசிகள்	₣- சிகரெட்டுகள்	சிகரெட் குச்சிகள்
அலகுகளின் எண்ணிக்கை	6,392	3,635	7,637,478

*** தங்க ஜெல்/பேஸ்ட் கண்டறிதல்களின் பெறுமதி உள்ளடக்கப்படவில்லை. அத்தகைய பொருட்களில் எத்தனை சதவீத தங்கம் உள்ளது மற்றும் இப் பொருள் எத்தகைய இயைபு முறை வகைப்பாட்டுக்குள் வரும் என்பவை குறித்து இடம்பெறும் செயல்முறைக்குப் பின்னரே அது மதிப்பிடப்படும்.*
மூலம் : பயணிகள் சேவை (கட்டுநாயக்க) பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.3.5.3 : 2025ஆம் ஆண்டில் பயணிகளுக்கு வழங்கப்பட்ட சேவைகள்

வந்திறங்கிய விமனங்களது எண்ணிக்கை	33,430
வந்திறங்கிய பயணிகளது எண்ணிக்கை	4,986,795
வெளிச்சென்ற விமனங்களது எண்ணிக்கை	33,445
வெளிச்சென்ற பயணிகளது எண்ணிக்கை	5,028,438
தீர்வை மற்றும் ஏனைய அறவீடுகளை செலுத்தியதன் பின்னர் சிவப்பு வாயில் ஊடாக வெளியாக்கப்பட்ட பயணிகளது எண்ணிக்கை	23,392
தீர்வையற்ற கொடுப்பனவினை பெற்ற பயணிகளது எண்ணிக்கை	49,030
தவறாக கையாளப்பட்ட பொதிகள் தொடர்பில் வெளியாக்கப்பட்டவைகளது எண்ணிக்கை	25,904
வருகை கருமபீடத்தில் VIP களின் நகர்வுகளது எண்ணிக்கை	1,196
வெளிச்செல்லுகை கருமபீடத்தில் VIP களின் நகர்வுகளது எண்ணிக்கை	1,186

மூலம் : பயணிகள் சேவை (கட்டுநாயக்க) பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.3.5.4 : அரசிறை சேகரிப்பு குறித்த ஒப்பீட்டாய்வு

வருடம்	மொத்த தொகை	முந்தய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருவாய் அதிகரிப்பு %
2018	404,875,536.00	-
2019	452,738,967.00	12
2020	139,679,711.00	-69
2021	124,119,902.00	-11
2022	637,675,154.00	414
2023	1,313,385,295.00	106
2024	1,492,753,967.00	12
2025	1,615,640,939.00	8

மூலம் : பயணிகள் சேவை (கட்டுநாயக்க) பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

உரு 8.3.5.1 : அரசிறை சேகரிப்பு குறித்த ஒப்பீட்டாய்வு (ரூபா மில்)



மூலம் : பயணிகள் சேவை (கட்டுநாயக்க) பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.4 டிஜிட்டல் மாற்றல் கொத்தணி

8.4.1 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பணிப்பகம்

8.4.2 இடர் முகாமைத்துவ பணிப்பகம்

8.4.3 சட்ட விவகாரங்கள் பணிப்பகம்

8.4.4 ஏற்றுமதி பணிப்பகம்

8.4.5 அரசிறை மற்றும் சேவைகள் (மாகாணம்) பணிப்பகம்

8.4.1 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பணிப்பகம்

8.4.1.1 அறிமுகம்

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) பணிப்பகமானது நம்பகரமான, பாதுகாப்பான மற்றும் தடையற்ற தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதன் மூலம் இலங்கைச் சுங்கத்தின் ஒரு முக்கிய இயக்கு சக்தியாகத் திகழ்கின்றது. இப் பணிப்பகம், சுங்க பிரகடனங்களை இருபத்தி நான்கு மணி நேரமும் தொடர்ச்சியாகச் செயலாக்குவதற்கும், இணையம் அடிப்படையிலான சேவைகளை வழங்குவதற்கும் வழிவகுப்பதோடு, இதன் மூலம், சுங்க நடவடிக்கைகள் சீராக நடைபெறுவதையும் உறுதி செய்கிறது.
சுங்கப் பிரகடனங்கள் பற்றிய செயலாக்கத்தின் முழுமையான தானியக்கமயமாக்கல் மூலம், வேகமான, துல்லியமான மற்றும் நம்பகமான தகவல் முறைமை உருவாக்கப்பட்டுள்ளதோடு, இது சுங்க நிர்வாகத்தில் வினைத்திறனையும், வெளிப்படைத்தன்மையினையும் மற்றும் காத்திரமான தீர்மானமெடுத்தலையும் மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றது. சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு இணங்க, சுங்க பிரகடனங்கள் மற்றும் துணை ஆவணங்களை இலத்திரனியல் முறையில் சமர்ப்பிப்பதற்கும் செயலாக்குவதற்கும் உதவும் வகையில், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பணிப்பகம் வலுவான, திறமையான மற்றும் செயலிழப்பிலிருந்து பாதுகாப்பான கணினி-மைய முறைமைகளையும் செயலாக்க முறைகளையும் தொடர்ந்து அறிமுகப்படுத்தி வருகிறது.

8.4.1.2 பிரதான தொழிற்பாடுகள்

- சுங்க செயலாக்கங்களை தானியக்கமயமாக்குவதன் மூலம் திணைக்களத்தின் நோக்கங்களை அடைவதற்கு உதவியாக இருத்தல்.
- தடையற்ற சேவை வழங்கலை உறுதி செய்யும் வகையில், கணினி முறைமைகள், வலையமைப்புகள், வன்பொருட்கள் மற்றும் தரவுத்தளங்கள் உள்ளிட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை செயல்படுத்தல், பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல்.
- சுங்க முகாமைத்துவம், இலங்கை சுங்கத்தின் பிரிவுகள், பிற அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பங்கீடுபாட்டாளர்கள் ஆகியோருக்கு உரிய நேரத்தில், துல்லியமான மற்றும் நம்பகமான தகவல் அமைப்புகள் மற்றும் முகாமைத்துவ அறிக்கைகளை வழங்குதல்.
- ASYCUDA World, ASYHUB, eCCR, இலத்திரனியல் பதிவு (eRegistration) , nCEN மற்றும் THINETH அமைப்பு உள்ளிட்ட முக்கிய சுங்க அமைப்புகளை சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு இணங்க, தொடர்ச்சியாக மதிப்பீடு செய்தல், மேம்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல்.
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பணிப்பகத்துடன் இணைக்கப்பட்டுள்ள அதிகாரிகளின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன்களைத் தொடர்ச்சியாக மேம்படுத்துவதன் மூலம் அவர்களது திறனை வளர்த்தல்.
- இலங்கைச் சுங்கம் முழுவதும் தகவல் மற்றும் தொடர்படல் தொழில்நுட்பக் கல்வியறிவை விரிவுபடுத்துதல் மற்றும் தகவல் மற்றம் தொடர்பாடல் தொழில்நுட்ப முறைமைகள் மற்றும் தொகுதிகள் குறித்தான பயிற்சித் திட்டங்களை வழங்குதல்.
- பிற அரச நிறுவனங்கள் மற்றும் முனைய இயக்குநர்களுடன் தரவுகளை ஒருங்கிணைத்தல் /பகிர்தல்
- இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் என்பவற்றுடன் API ஒருங்கிணைப்பினை பேணுதல்.
- இந்த முன்னெடுப்பின் முன்னணி நிறுவனமாக, தேசிய ஒற்றைச் சாளரத் திட்டத்திற்கு (National Single Window Project) தொழில்நுட்ப ரீதியான உதவிகளை வழங்குதல்.
- அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார இயக்குநர் (AEO) நிறுவனங்களுடன் இணைந்து, ஒரு முன்னோடித் திட்டமாக காகிதமற்ற ஆவணச் செயலாக்கத்தை அறிமுகப்படுத்துதல்.

8.4.1.3 2025 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பிரதான நடவடிக்கைகள்

1. ASYHUB முதற்கட்டம் நிறைவு செய்யப்பட்டதன் மூலம், கப்பல் நிறுவனங்கள் மற்றும் சரக்கு அனுப்புநர்கள் தங்களது சரக்கு விவரப் பட்டியல் மற்றும் சரக்கு ஏற்றுமதி ஆவணங்களை ASYHUB முறைமையில் சமர்ப்பிக்க இயலுமாகியுள்ளமை.
2. சிறப்புரிமை பெற்ற அணுகல் முகாமைத்துவ முறைமையினை அறிமுகப்படுத்தப்பட்டது.
3. பங்கீடுபாட்டாளர்களின் கோரிக்கைகள் அடிப்படையில் விழிப்புணர்/பயிற்சி அமர்வுகள் (சுமார் 25 அமர்வுகளில் 2,500 பங்கேற்பாளர்கள் கநலந்து கொண்டனர்) நடத்தப்பட்டன.
4. கப்பல் கட்டணங்கள் மற்றும் பிற அறவீடுகள் தொடர்பான முறைமைகளில் மேம்பாடுகள் செயல்படுத்தப்பட்டன.

5. அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார இயக்குநர்களுக்கான காகிதமற்ற ஆவண அனுமதி வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டது.
6. வாகன சரிபார்ப்பு இணையதளம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.
7. SVA திட்டம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து ஏற்றுமதியாளர்களுக்கு வசதியளிக்கும் வகையில் கணினி முறைமையில் மாற்றங்கள் செய்யப்பட்டன.
8. வாகனப் பக்கத்தில் மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, மோட்டார் வாகனப் பதிவாளர் திணைக்களத்தின் முறைமையுடன் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டது.
9. சரக்குந்து ஓட்டுநர்களுக்கு குறுஞ்செய்தி மூலமான அறிவிப்பு சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.
10. வர்த்தக வங்கிகளையும் இலங்கை மத்திய வங்கியையும் இணைக்கும் வகையில் இலத்திரனியல் பணப் பரிமாற்ற முறைமையிலான மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
11. வங்கி உத்தரவாத இலத்திரனியல் ஆவண செயல்முறைகளில் மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
12. பொதி அலுவலகத்தின் வேண்டுகோளின் அடிப்படையில் புதிய வருமான அறிக்கை வசதி உருவாக்கப்பட்டது.
13. சிறிலங்கன் எயார்லைன்ஸ் சேவையின் வலைத்தள தொழில்நுட்ப மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
14. விசாரணை மற்றும் கண்காணிப்புப் பிரிவின் கோரிக்கைக்கிணங்க பிணையிடல்-THINETH செயல்முறையில் மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
15. இடர் முகாமைத்துவ பணிப்பகத்தின் கோரிக்கைக்கிணங்க தேர்ந்தெடுப்புத் தொகுதியிலான மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
16. பங்கீடுபாட்டாளர்களுக்கான விழிப்புணர்வு மற்றும் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. (சுமார் 25 அமர்வுகள் 2,500க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர்).
17. தேசிய ஒற்றைச் சாளர திட்டத்தைச் செயல்படுத்துவதிலான பங்களிப்பு.
18. முதலீட்டுச் சபையின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் கணிணி முறைமை மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
19. அனர்த்த முகாமைத்துவ நிலையம் தொடர்பான நிவாரணப் பொருட்களின் அனுமதியை எளிதாக்கும் வகையிலான கணினி முறைமையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அட்டவணை 8.4.1.1 : செயலாற்றுகை குறித்த தரவு - 2025

8.4.1.4 கணினி முறைமை மேம்பாடுகள்	
பணி	**நிலைமை**
தற்போதைய கேள்வுவிற்பனை நடைமுறைக்கு மாற்றாக இலத்திரனியல் ஏல விற்பனை முறை அறிமுகப்படுத்தல்.	இடம்பெற்றுக்கொண் டிருக்கிறது
வர்த்தக இலகுவாக்கத்துடன் தொடர்புடைய உலக சுங்க அமைப்பின் கருவிகளை நடைமுறைப்படுத்தல் - ASYHUB வருகைக்கு முந்தைய சுங்கப்பிரகடன செயலாக்கத்தைச் செயல்படுத்துதல்	இடம்பெற்றுக்கொண் டிருக்கிறது
EXADATA வன்பொருளை மேம்படுத்தல்	இடம்பெற்றுக்கொண் டிருக்கிறது
ASYCUDA பயன்பாட்டு சேவையக உட்கட்டமைப்பை தரமுயர்த்தல்	இடம்பெற்றுக்கொண் டிருக்கிறது
DR தளத்தை தரமுயர்த்தி அதனை சீரமைத்தல்	இடம்பெற்றுக்கொண் டிருக்கிறது
சந்தேகத்திற்கிடமான செயற்பாடுகளை கண்டறிந்து தடுத்தல் மற்றும் பதிலளிப்பு முறைமை மற்றும் சிறப்புரிமை அணுகல் முகாமைத்துவ முறைமை ஆகியவற்றைச் செயல்படுத்துதல்	நிறைவடைந்துள்ளது
முக்கிய உட்கட்டமைப்பிற்குள் கிழக்கு-மேற்கு போக்குவரத்தைக் கட்டுப்படுத்த ஒரு பரவலாக்கப்பட்ட இணைய பாதுகாப்பு தொழில்நுட்பத்தினை செயல்படுத்துதல்	இடம்பெற்றுக்கொண் டிருக்கிறது
பாதுகாப்பு நிகழ்வு முகாமைத்துவ முறைமையைஅ முல்படுத்தல்.	இடம்பெற்றுக்கொண் டிருக்கிறது
தரவு மையத்திற்கான சுற்றுச்சூழல் கண்காணிப்பு முறைமை மற்றும் அணுகல் கட்டுப்பாட்டைச் செயல்படுத்துதல்	இடம்பெற்றுக்கொண் டிருக்கிறது
இலங்கை சுங்கக் கிளை அலுவலகங்களில் இயக்கப்பாடு சார்ந்த வினைத்திறனையும் தொடர்பினையும் மேம்படுத்துவதற்காக, கிளை வலையமைப்பு உட்கட்டமைப்பை நவீனமயமாக்குதல் மற்றும் உள்ளக - வெளியக (LAN-WAN) வலைப்பின்னல் கட்டமைப்பு நிர்வாக ஒருங்கிணைப்பைப் பெறுதல்.	இடம்பெற்றுக்கொண் டிருக்கிறது
இலங்கை சுங்கத்திற்கான தகவல் தொழில்நுட்பக் கொள்கை மற்றும் வழிப்படுத்தும் குழுவை உருவாக்குதல்	இடம்பெற்றுக்கொண் டிருக்கிறது
வாகன சரிபார்ப்பு இணையத்தளத்தை மேம்படுத்துதல்	நிறைவடைந்துள்ளது
Active Directory எனும் மென்பொருள் சேவையினை நடைமுறைப்படுத்தி அதற்கான கொள்கைகளை உருவாக்குதல்.	இடம்பெற்றுக்கொண் டிருக்கிறது

8.4.1.5 அமைப்பு பாராமரிப்பு	
பணி	**இற்றைப்படுத்துகைகளது எண்ணிக்கை**
வரிவிதிப்பு விதிமுறை இற்றைப்படுத்தல் மற்றும் இறுப்பு இற்றைப்படுத்தல்கள்	~1321
கணினி முறைமையிலுள்ள தவறுகளை சரிசெய்தல்	~283
தரவுத்தளச் செயலாற்றுகையினை நவீனப்படுத்தல்	~287

8.4.1.6 புள்ளிவிபரவியல்கள் மற்றும் அறிக்கையிடல்				
வகை	**கோரப்பட்டவை**	**நிறைவு செய்யப்பட்டவை**	**முடிவுறாதவை**	**சேகரிக்கப்பட்ட கட்டணம் (ரூபா)**
அறிக்கைகளின் எண்ணிக்கை – சுங்கத்திற்கு வெளியில் இருந்தானவை	552	552	0	448,600/-
அறிக்கைகளின் எண்ணிக்கை – சுங்கத்திலிந்தானவை	1050	1050	0	
				448,600/-

8.4.1.7 கணக்காய்வு			
வகை	**ஆரம்பித்துவைக்கப்பட்டவை**	**நிறைவு செய்யப்பட்டவை**	**முடிவுறாதவை**
விடயங்களின் எண்ணிக்கை	98	43	55
	தடுத்துவைக்கப்பட்டவை	**விடுவிக்கப்பட்டவை**	**முடிவுறாதவை**
கொள்கலன்களின் எண்ணிக்கை	33	29	4
			மொத்த அறவீடுகள்
அறவீட்டுத் தொகை (ரூபா)			376,381,430.50

8.4.1.8 உதவி கருமபீடம்		
அறிக்கையிடப்பட்ட பிரச்சினைக்குரிய விடயங்களின் வகை	**பெறப்பட்டவை மற்றும் நிறைவு செய்யப்பட்டவை**	**முடிவுறாதவை**
WH,CDN, Blend Sheet, பணம் அனுப்புதல் மற்றும் சுங்கப் பிரகடனம் போன்ற சிக்கல்களைக் கையாளுதல்	2,500	இல்லை
இ-செலுத்துகை பற்றிய சிக்கல்கள்	1,005	இல்லை
THINETH முறைமை சிக்கல்களைத் தீர்த்தல்	620	இல்லை
கையடக்கத் தொலைபேசி உடனடிச் சேவை மூலமாக வாடிக்கையாளர் உதவி	நாளாந்தம் 200-250 வரையிலான அழைப்புகள்	இல்லை
சுங்க விண்ணப்பப்பத்திரம் கையாளுகை	250	இல்லை
இ-பொருட்பட்டியல் பதிவு மற்றும் தவறு சரிப்படுத்தல்	1,300	இல்லை

8.4.1.9 இணைய வலைப்பின்னல் நிர்வாகம்		
பணி	**பெறப்பட்டவை மற்றும் நிறைவு செய்யப்பட்டவை**	**முடிவுறாதவை**
Firewalls, WAF, EDR, QMS, NAC, NMS போன்ற பல்வேறு பாதுகாப்பு முறைமையிலிருந்தான பாதுகாப்பு எச்சரிக்கைகள் மற்றும் புகுபதிவுகளை கண்காணித்தல்	~11500	இல்லை
முறைமைகள், வலைப்பின்னல்கள், மற்றும் மென்பொருள் பிரயோகங்கள் மீதான வழக்கமான பாதுகாப்பு சோதனைகள் மற்றும் விசாரணை மேற்கொள்ளல்	~325	இல்லை
பாதுகாப்புச் சார்ந்த விடயங்களை மதிப்பாய்வுசெய்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பதிலளித்தல்	~250	இல்லை
Firewalls, WAF, EDR, QMS, NAC, NMS சார்ந்த நிர்வாகப் பணிகள்	~600	இல்லை
வலைப்பின்னல் மற்றும் இணையப் பாதுகாப்பு தொடர்புபட்ட கூட்டங்கள்/கலந்துரையாடல்கள்/கருத்து மன்றங்களில் பங்கேற்றல்	~50	இல்லை
APN/Router வினியோகம் மற்றும் தொலைதூர இடங்களில் கருவி உள்ளமைவுப் பணிகள்	~100	இல்லை
நிறுவனத்தின் இணைய வலைப்பின்னல் உட்கட்டமைப்பினை வடிவமைத்தல் மற்றும் திட்டமிடுதல்	~75	இல்லை

வலைப்பின்னல் பராமரிப்பு பணிகள்	~900	இல்லை
பிரதான வலைப்பின்னல் சார்ந்த சிக்கல்களை சரிசெய்து அவற்றை நிவர்த்தி செய்தல்	~650	இல்லை
இணைப்பினை நிறுவுவதற்காக/பராமரிப்பதற்காக பிற முகவர்களுடன் ஒருங்கிணைத்தல்	~100	இல்லை

8.4.1.10 முறைமை நிர்வாகம்		
பணி	**பெறப்பட்டவை மற்றும் நிறைவு செய்யப்பட்டவை**	**முடிவுறாதவை**
HCL Domino மின்னஞ்ஞல் சேவையக நிர்வாகம் மற்றும் கண்காணிப்புப் பணிகள்	≈550 (தினசரி கண்காணிப்புடன்)	இல்லை
HCL Domino பயனர் பதிவு மற்றும் அமைப்பாக்கப் பணிகள்	≈175 (வேண்டுகோள் களின் பேரில்)	இல்லை
IBM AIX சேவையகக் கண்காணிப்பு மற்றும் நிர்வாகப் பணிகள்	≈350 (தினசரி கண்காணிப்புடன்)	இல்லை
VMware நிர்வாகப் பணிகள்	≈370 (தினசரி கண்காணிப்புடன்)	இல்லை
முன்னேற்பாட்டுச் சேவையகக் கண்காணிப்பு மற்றும் அமைப்பாக்கம்	≈650 (தினசரி கண்காணிப்புடன்)	இல்லை
அவசியமான மென்பொருட்களை சேவையகங்களில் நிறுவுதல்	~130	இல்லை
ஒழுங்குமுறையான சேவையக நிர்வாகப் பணிகள் (புதுப்பித்தல், சேமிப்பகத்தினை விரிவாக்கல் போன்ற)	~200	இல்லை
முனைப்பான கோப்பக பயனர் பதிவு மற்றும் அமைப்பாக்கம்	~600	இல்லை
Oracle EXAData நிர்வாகப் பணிகள்	~300	இல்லை
EXSI Dell Node VM அமைப்பாக்க மாற்றங்கள்	~80	இல்லை

8.4.1.11 இணையத்தளம்		
பணி	**பெறப்பட்டவை மற்றும் நிறைவு செய்யப்பட்டவை**	**முடிவுறாதவை**
இணையத்தளத்தில் இறுப்பு (சுங்க வரி) மாற்றங்களை இற்றப்படுத்தல்	09	இல்லை
இணையத்தளத்தில் நாணயமாற்று விகிதங்களை வெளியிடுதல்	52	இல்லை
இணையத்தளத்தில் கேள்வு விற்பனையினை வெளியிடுதல்	33	இல்லை
மனிதவள அபிவிருத்தி பணிப்பகத்தின் முகப்புப்பக்கத்தினை இற்றைப்படுத்தல்	0	இல்லை
BCNP வலைப்பக்கத்தினை இற்றைப்படுத்தல்	0	இல்லை
முகப்புப்பக்க பதாகை குறித்த இடர் முகாமைத்துவ பணிப்பகத்தின் அறிவித்தல்களை வெளியிடுதல்	0	இல்லை
முதலீட்டுச் சபை ஒருங்கிணைப்பு முகப்புப்பக்கத்தினை இற்றைப்படுத்தல்	0	இல்லை
தீர்வைத் திருத்த வர்த்தமானப் பத்திரிகைகளை வெளியிடுதல்	0	இல்லை
இறக்குமதியாளர்களுக்கு ஒன்லைன் பதிவு தொடர்பிலான அறிவித்தல்களை வெளியிடுதல்	6	இல்லை
BCNP இணையப்பக்கத்தில் சர்வதேச அமைப்புகளின் பட்டியலை இற்றைப்படுத்தல்	0	இல்லை
முகப்புப் பக்கத்தில் சுங்கத்துடன் தொடர்புடைய உள்ளக திணைக்களங்களின் விபரங்களை இற்றைப்படுத்தல்	2	இல்லை
முகப்புப்பக்கத்தில் பதாகை ஆவணங்களை இற்றைப்படுத்தல்	1	இல்லை
இணையத்தில் Asycuda மாற்று இணைப்பை இற்றைப்படுத்தல்	1	இல்லை

மூலம் : தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.4.2 இடர் முகாமைத்துவ பணிப்பகம்

8.4.2.1 அறிமுகம்

உலக சுங்க அமைப்பால் அறிமுகப்படுத்தப்பட்ட SAFE தரநிலைகள் பற்றிய வேலைச்சட்டகத்திற்கு அமைவாக, சுங்கச் சூழமைவில் காத்திரமான இடர் முகாமைத்துவ நடைமுறைகளைப் பிரயோகிப்பதற்கான திணைக்களத்தின் செயலாற்றல்களை வலுப்படுத்தும் குறிக்கோளுடன் இலங்கைச் சுங்கமானது ஒரு இடர் முகாமைத்துவப் பிரிவை நிறுவியது. இந்த பின்னணியில் கட்டியெழுப்பப்பட்ட மேற்படி பிரிவானது, பின்னர் 2021இல் மறுசீரமைக்கப்பட்டு, ஒரு முழுமையான வசதியுடைய பணிப்பகமாகத் தரம் உயர்த்தப்பட்டதுடன், அதன் பின்னர் இடர் முகாமைத்துவ பணிப்பகம் எனப் பெயரிடப்பட்டது.

ஒழுங்குறுத்துகைக் கட்டுப்பாடு மற்றும் வர்த்தக இலகுவாக்கம் ஆகியவற்றுக்கு இடையே ஒரு பொருத்தமான சமநிலையை உறுதிசெய்யும் வகையில், இலங்கைச் சுங்கம் முழுவதும் இடர் அடிப்படையிலான நடைமுறைகளைச் செயல்படுத்துவதற்கான அதிகாரம் இடர் முகாமைத்துவ பணிப்பகத்திற்கு வழங்கப்படுகிறது. சுங்கச் செயற்பாடுகளுனதொரு நவீன கருவி என்ற வகையில், இடர் முகாமைத்துவத்தின் அனுகூலங்களை முழுமையாக அடைந்துகொள்ளும் நோக்கில், இடர் முகாமைத்துவக் கருத்துக்கள் மற்றும் உலகளாவிய சுங்க நிர்வாகங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சிறந்த நடைமுறைகள் குறித்தான விசேட பயிற்சிகளையும் மற்றும் ஆழ்ந்த அறிவினையும் பெற்றுக்கொண்ட அதிகாரிகள் இந்த பணிப்பகத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தற்போது, இடர் முாமைத்துவ பணிப்பகமானது முறைமைகள், செயல்முறைகள் மற்றும் இயக்கப்பாடு சார் நடைமுறைகளைத் தொடர்ச்சியாக மேம்படுத்துவதன் மூலம் திணைக்களத்தின் மூலோபாயக் குறிக்கோள்களை அடைவதற்குத் துணையாக, இடர்களைக் கையாளுவதிலும் மற்றும் இடர்களைக் குறைப்பதிலும் ஒரு முக்கியப் பங்காற்றுகிறது.

8.4.2.2 இதற்கிணங்க, பணிப்பகத்தால் நிர்வகிக்கப்படும் பிரதான தொழிற்பாடுகள் பின்வருமாறு.

I. இடர் மைய சரக்குத் தேர்வு மற்றும் இடர் முகாமைத்துவம்
II. அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் நிகழ்ச்சித்திட்டம்
III. செயல்முறை மீள்-பொறிமுறையாக்கம் மற்றும் விசாரணைகள்
IV. தேசிய இறக்குமதி பெறுமதி மதிப்பீட்டுத் தரவுத்தளப் பிரிவு

8.4.2.2.1 இடர்-மைய சரக்குத் தேர்வுமுறை

இலங்கைச் சுங்கத்தின் இடர்-மைய சரக்குத் தேர்வுமுறை பொறிமுறையானது, பிரதான ஆளுகை வேலைச்சட்டகமாகச் செயற்படுகின்ற இடர் முகாமைத்துவ நியமதரச் செயற்பாட்டு நடைமுறையில் வகுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களுக்கு இணங்க விருத்திசெய்யப்பட்டு உட்பொதிக்கப்பட்டுள்ள, முன் வரையறையுடைய இடர் அளவுகோல்கள் மற்றும் விவரக்குறிப்புகளைப் பயன்படுத்தி, ASYCUDA முறைமையின் தேர்வுமுறைத் தொகுதி மூலமாக தானியக்க முறையில் நிறைவேற்றப்படுகிறது. தேர்வுமுறைத் தொழிற்பாட்டிற்குள், ஒரு விசேட பகுப்பாய்வாளர் குழுவானது, சாத்தியமான இடர் பகுதிகளைக் கண்டறிவதற்கும் மற்றும் பொருத்தமான இடர் விவரக்குறிப்புகளை உருவாக்குவதற்கும் இறக்குமதித் தரவுகளைத் தொடர்ந்தும் ஆய்வு செய்து வருகின்றது.

தேர்வுமுறைச் செயல்முறையின் தொடர்ச்சியான மேம்படுத்துகை மற்றும் செம்மைப்படுத்தல் குறித்தான நடவடிக்கைகள், சிரேஷ்ட பிரதிச் சுங்க பணிப்பாளர் மற்றும் பணிப்பகத்தின் சுங்கப் பணிப்பாளர் ஆகியோரின் நேரடி மேற்பார்வையின் கீழ் முன்னெடுக்கப்படும் வழக்கமான மற்றும் நிகழ்நேரப் பகுப்பாய்வு மதிப்பீடுகள் ஊடாக இடர் முகாமைத்துவ பணிப்பகத்தின் தேர்வுமுறைக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. இந்தப் பகுப்பாய்வுகள் மூலம் கண்டறியப்படும் குறிப்பிடத்தக்க போக்குகள், உருவாகும் இடர்கள் அல்லது கணிசமான மாறுபாடுகள் ஏதேனும் இருந்தால், அவை மதிப்பாய்வு செய்யப்படுவதற்கும் மற்றும் ஒப்புதலைப் பெறுவதற்குமாக இடர் முகாமைத்துவக் குழுவிற்கு உடனடியாக அனுப்பப்படுகின்றன. அத்தகைய ஒப்புதலைப் பெற்றவுடன், சரிபார்க்கப்பட்ட இடர் விவரங்கள் ASYCUDA அமைப்பின் தேர்வு அளவுகோல்களில் இணைக்கப்படுகின்றன. இதன்மூலம், அதிக இடர் கொண்ட சரக்குகளைத் காத்திரமாக இலக்குப்படுத்த முடிவதோடு, விதிமுறைகளுக்கு இணங்கும் வர்த்தகர்களுக்கு அனுமதி வழங்குவதையும் இது எளிதாக்குகிறது.

8.4.2.2.1.1 2025இல் சரக்குத் தேர்வுத்திறனின் சாதனைகள்

அ. உள்ளூடுருவல் மிக்க பரிசோதனைக்கு அனுப்பப்படும் கொள்கலன்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.

ஆ. இடர்-மைய சரக்குத் தேர்வுத்திறன் செயல்முறையை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள சரக்குத் தேர்வுத்திறன் அளவுகோல்கள் மற்றும் இடர் விவரங்களின் மேலதிக மேம்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன.

இ. ASYCUDA அமைப்பில் கொள்கலன் தேர்வுத்திறனை நிர்வகிப்பதன் மூலம், கொள்கலன் பரிசோதனை சாலையின் உபயோக திறன் மற்றும் எக்ஸ்-ரே ஸ்கேனிங் ஆகியவற்றின் பயனுறுதிமிக்க பயன்பாடு.

ஈ. தேசிய வர்த்தக இலகுவாக்கல் குழுவின் வழிகாட்டுதலின் கீழ், ஒரு ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ தொழில்நுட்பப் பணிக்குழு தொடங்கப்பட்டது. மேலும், ஒருங்கிணைந்த, இடர்-மைய எல்லை முகாமைத்துவத்தினை ஊக்குவிக்கவும், மேம்படுத்தப்பட்ட நிறுவனங்குளுக்கிடையேயான ஒத்துழைப்பின் மூலம் செயல்திறன் மற்றும் வினைத்திறனை அதிகரிக்கவும் முக்கிய எல்லை ஒழுங்குமுறைப் பங்கீடுபாட்டாளர்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

உ. பிற அரச நிறுவன ஒப்புதல்களுக்கான வெளிநிலைக் குழு வசதியானது, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து ஒழுங்குறுத்துகை அனுமதி தேவைப்படும் சரக்குகளுக்கும் வழங்கப்பட்டது. முந்தைய நடைமுறையின் கீழ், அத்தகைய சரக்குகள் பல கொள்கலன்களில் வந்தபோது, குறிப்பிட்டதொரு சதவீதக் கொள்கலன்கள் அந்தந்த ஒழுங்குமுறை அதிகாரியால் பரிசோதனை செய்யப்படுவதற்காக தரவரிசைக் கொள்கலன் சாலைக்கு (RCT) அனுப்பப்பட்டன. பரிந்துரைக்கப்படும் கொள்கலன்களுக்கு அனுமதி வழங்கப்படும் வரை, அதே சரக்கின் மீதமுள்ள கொள்கலன்கள் துறைமுக வளாகத்திற்குள்ளேயே இருக்க வேண்டியிருந்தது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட முன்னெடுப்பின் கீழ், சம்பந்தப்பட்ட பிற அரச நிறுவனத்தின் ஒப்புதலுடன், சரக்கு பெறுநர்கள், RCT இற்குப் பரிந்துரைக்கப்படுகின்ற கொள்கலன்களுக்கான அனுமதி கிடைக்கும் வரை, மீதமுள்ள கொள்கலன்களைத் தங்கள் களஞ்சியசாலைக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். இந்த நடவடிக்கை, தொடர்ச்சியான ஒழுங்குமுறை மேற்பார்வையை உறுதி செய்வதோடு, துறைமுகத்தில் கொள்கலன்கள் தங்கியிருக்கும் நேரத்தைக் குறைப்பதற்கும் பங்களிப்புச் செய்கின்றது.

ஊ. இலங்கைச் சுங்கம் முழுவதும் இடர் கண்டறிதல் மற்றும் அறிக்கையிடுதலுக்கான நிறுவனம்சார் வேலைச்சட்டகத்தினை வலுப்படுத்தும் பொருட்டு, சகல பிரதான பணிப்பகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இடர் அறிக்கையிடல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இந்த முன்னெடுப்பிற்குத் துணையாக, இடர் கண்டறிதல், பகுப்பாய்வு மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவற்றில் அவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக ஒரு இலக்குப்படுத்தப்பட்ட பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம், திணைக்களத்தின் இடர் முகாமைத்துவ செயல்முறைகளின் ஒட்டுமொத்த விளைவுத்திறனும் வலுப்படுத்தப்பட்டது.

எ. ASYCUDA முறைமையூடான தடுத்து நிறுத்துதல்களை மேற்கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட LCL கொள்கலன் சரக்குகளை விசாரணைக்குத் தானாகவே பரிந்துரைப்பதற்கானதொரு முறைமை-மையப் பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முன்னெடுப்பின் கீழ், அடையாளம் காணப்பட்ட LCL கொள்கலன்கள், அரசிறை இலக்கு செயலணி, தடுப்பு மற்றும் இடர் முகாமைத்துவ பணிப்பகம் ஆகியவற்றின் தொடர்புடைய விசாரணைப் பிரிவுகளுக்கு அனுப்பப்படுகின்றன. இதன் மூலம், தானியக்க, இடர் சார்ந்த பரிந்துரைகள் மூலம் அமுலாக்கக் கட்டுப்பாடுகள் வலுப்படுத்தப்படுவதோடு, மனிதத் தலையீடும் குறைக்கப்படுகிறது.

ஏ. பிற அரச நிறுவனங்களின் ஒப்புதல்களுக்கு உட்படாத, தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்யும் குறைந்த இடர் கொண்ட சரக்கு பெறுநர்களுக்காக, **"களஞ்சியசாலை விடுவிப்பு"** என்ற புதிய எளிதாக்கும் வழிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த ஏற்பாட்டின் கீழ், சரக்குகள் பல கொள்கலன்களில் வரும்போது, இடர் மதிப்பீட்டின் அடிப்படையில், முன்னரே தீர்மானிக்கப்பட்ட சதவீத கொள்கலன்கள் உள்ளூடுருவல் மிக்க சுங்கப் பரிசோதனைக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. அதே நேரத்தில், மீதமுள்ள கொள்கலன்கள், முழு சரக்கு மீதான இறுதி சுங்க முடிவு வரும் வரை பாதுகாப்பாக சேமித்து வைப்பதற்காக, சரக்கு பெறுநரின் பிணை வளாகத்திற்கோ அல்லது களஞ்சியசாலைக்கோ விடுவிக்கப்படுகின்றன. இந்த வசதி ஒரு நிறுவன உத்தரவாதத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம், போதுமான அரசிறைப் பாதுகாப்பு உறுதிசெய்யப்படுவதோடு, சுங்கக் கட்டுப்பாடுசார் சமரசம் எதுவுமின்றி, சரக்குகள் தங்குதடையின்றி நகர்வதை எளிதாக்குவதற்கும், துறைமுக நெரிசலைக் குறைப்பதற்கும் மற்றும் கொள்கலன் தங்கும் நேரத்தைக் குறைப்பதற்கும் இது வழியமைக்கின்றது.

ஐ. இடர் பகுப்பாய்வினை வலுப்படுத்தும் நோக்கத்துடன், ASYCUDA தளத்தில் முன்னர் இருந்த மோசடிக் குறியீட்டு முறைமையானது, பின்னூட்டல் குறியீட்டு முறைமையாக மேம்படுத்தப்பட்டு மீள்கட்டமைக்கப்பட்டது. இந்த மேம்படுத்தப்பட்ட அமைப்பானது, செயலாக்கம் மற்றும் பரிசோதனை முடிவுகளிலிருந்து எழும் பின்னூட்டல்களை முறையாகப் பதிவுசெய்து பகுப்பாய்வு செய்ய உதவுகிறது. இதன்மூலம், கண்டறியப்பட்ட முறைகேடுகளை பணிப்பகம் மற்றும் கிளை அலுவகம் வாரியாகத் தனித்தனியாக அடையாளம் கண்டு கண்காணிக்க முடிகிறது. இந்த மேம்பாடு, மேலும் திறம்பட்ட இடர் மதிப்பீட்டிற்கு மேலும் துணை நிற்பதோடு, தரவு சார்ந்த இடர் விவரங்களின் செம்மைப்படுத்தலை எளிதாக்கி, இலங்கைச் சுங்கம் முழுவதும் இடர் அடிப்படையிலான தேர்ந்தெடுப்புச் செயல்முறையின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கும் பங்களிக்கின்றது.

8.4.2.2.2 அங்கீகரிக்கப்பட்ட பொருளாதாரச் இயக்குனர் நிகழ்ச்சித்திட்டம்

2017 பெப்ரவரி 22 அன்று உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக இலக்குவாக்கல் உடன்படிக்கை நடைமுறைக்கு வந்ததைத் தொடர்ந்து, எல்லை தாண்டிய வர்த்தகம் குறித்தான வெளிப்படைத்தன்மை, அதன் வினைத்திறன் மற்றும் முன்கணிப்புத்தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பல்வேறு கடப்பாடுகளை இலங்கை ஏற்றுக்கொண்டது. இந்த உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான முக்கிய நடவடிக்கைகளில், அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் (AEO) நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்துவதும் ஒன்றாகும். இதற்காக ஒரு பிரத்தியேக AEO அமுலாக்கக் குழுவும் நிறுவப்பட்டது.

உயர் மட்ட விநியோகச் சங்கிலிப் பாதுகாப்பு, நிதி நம்பகத்தன்மை மற்றும் சுங்கச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்குத் தொடர்ச்சியாகக் கட்டுப்படுதல் போன்ற விடயங்களை செயலுருவில் நிரூபிக்கின்ற இணக்கமான இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கவும், அவர்களுக்கு வசதியளிக்கவும் AEO திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. தகுதியுள்ள பங்கேற்பாளர்களுக்கு, பௌதீகச் சோதனைகளைக்

குறைத்தல், அவர்களின் சரக்குகளுக்கு முன்னுரிமை வழங்கி செயலாக்கத்திற்குட்படுத்தல் மற்றும் வழக்கமான மதிப்பீட்டுப் பரிந்துரைகளிலிருந்து விலக்களிப்பு வழங்கல் போன்றன உள்ளிட்ட பல அனுகூலங்கள் வழங்கப்படுகின்றன. இது வர்த்தக இலகுவாக்கம் மற்றும் விளைவுத்திறன் மிக்க ஒழுங்குறுத்துகைக் கட்டுப்பாடு ஆகிய இரண்டிற்கும் வழியமைக்கின்றது.

8.4.2.2.2.1 2025 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் நிகழ்ச்சித்திட்டத்தின் அடைவுகள்

அ. நாற்பது (40) தகுதிவாய்ந்த நிறுவனங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட பொருளாதாரச் செயல்பாட்டாளர் (AEO) தகுதி வழங்கப்பட்டு, அதற்கேற்ற சம்பந்தப்பட்ட இலகுவாக்கல் அனுகூலங்களும் அளிக்கப்பட்டன.

ஆ. இம்மீளாய்வு ஆண்டில், தகுதியுள்ள குறுகிய, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (MSMEs) AEO இலகுபடுத்தல் அனுகூலங்களை வழங்குதல் மற்றும் அவற்றின் ஒருமைப்பாட்டினை பாதுகாப்பான, இணக்கமான சர்வதேச விநியோகச் சங்கிலிகளில் வலுப்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆதரவுடன் கூடிய முன்மொழிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் (AEO) குறுகிய, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இ. இம்மீளாய்வுக்காலத்தல், அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் (AEO) பொருள் மற்றும் இயக்குனர் அடுக்குமுறை அறிமுகப்படுத்தப்பட்டது, மேலும் அதன் திறமையான செயலாக்கத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் அதற்கான சரிபார்ப்பு வழிகாட்டுதல்கள் தற்போது உருவாக்கப்பட்டு வருகின்றன.

ஈ. அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் 2வது அடுக்குமுறை திட்டம் தொடங்கப்பட்டது, மேலும் அதன் திறமையான செயலாக்கத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் செயல்பாட்டு வழிகாட்டி மற்றும் சரிபார்ப்பு வழிகாட்டுதல்கள் தற்போது உருவாக்கப்பட்டு வருகின்றன.

உ. மீளாய்வுக் காலத்தில், அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் தொடர்பான பதினைந்து (15) நேரடி கள விஜயங்கள் மற்றும் செல்லுபடியாக்கல் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

8.4.2.2.3 செயலாக்க மீள்-பொறிமுறையாக்கம் மற்றும் விசாரணை

மேற்கொள்ளப்பட்ட இடர் மதிப்பீடுகளின் முடிவுகளின்படி, செயலாக்க மீள்-பொறிமுறையாக்கக் குழுவானது, செயலாக்க முறைகளிலுள்ள தவறுகள் மற்றும் குறைபாடுகளைக் கண்டறியும் நோக்கில், தற்போதுள்ள செயலாக்க பொருந்துகையுடன் ஒரு முழுமையான பகுப்பாய்வை மேற்கொள்கிறது. தற்போதுள்ள முறைமைகளில் கண்டறியப்பட்ட சிக்கல்களும் மற்றும் அத்தகைய சிக்கல்களைத் தீர்ப்பதற்கான பரிந்துரைகளும், சுங்கப் பணிப்பாளர் தலைமையிலான இடர் முகாமைத்துவ பணிப்பகம் மூலம் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன. சிரேஷ்ட முகாமைத்துவத்தின் ஒப்புதல் மற்றும் பரிந்துரைகளின் பேரில், மேலதிக மேம்பாடுகளைக் கொண்டுவருவதற்கு பயனுடையதாகவிருக்கும் வகையில், காணப்படக்கூடிய ஏதேனும் தடைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சிக்கல்களைக் கண்டறியும் நோக்கில் குறித்த அமுல்படுத்துகையானது இடர் முகாமைத்துவ பணிப்பகம் ஊடாக தொடர்ந்தும் நெருக்கமாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

8.4.2.2.3.1 2025 ஆம் ஆண்டில் செயலாக்க மீள்-பொறிமுறையாக்கம் பற்றிய அடைவுகள்

இடர் முகாமைத்துவ பணிப்பகத்தின் செயற்திட்டம்- 2025 இற்கு அமைவாக, பிணையிடல் செயலாக்கத்திற்கானதொரு மிகவும் பாதுகாப்பான செயலாக்கத்தினை விருத்திசெய்து, மீள்-பொறிமுறையாக்கம் செய்ய வேண்டிய முக்கிய தேவைப்பாடு ஏற்பட்டிருப்பது இனங்காணப்பட்டது. இதற்கிணங்க, இடர் முகாமைத்துவ பணிப்பகமானது தொழில்கள் மற்றும் சேவைகள் பணிப்பகத்தின் அதிகாரிகளுடன் இணைந்து, தற்போதுள்ள நடைமுறைகளை மீளாய்வு செய்வதற்காக 2025 ஏப்ரல் 29 அன்று ஒரு கலந்துரையாடலினை நடத்தியது. இக் கலந்துரையாடலின் போது, ஒட்டுமொத்த செயல்முறையுடன் தொடர்புடைய பல இடர்களும் பலவீனங்களும் அடையாளம் காணப்பட்டன. இதன் விளைவாக, கட்டுப்பாடுகளை வலுப்படுத்தவும் நடைமுறை ஒருமைப்பாட்டை உறுதி செய்யவும் இடைநிலை வர்த்தகச் செயல்முறையை முழுமையாக மீள்-பொறிமுறையாக்கம் செய்வது அவசியம் என இடர் முகாமைத்துவ பணிப்பகம் தீர்மானித்தது.

இதனைத் தொடர்ந்து, பிணை பணிப்பகம், விமான சரக்கு இல்லம் மற்றும் துறைமுகத்திற்குள்ளான செயல்பாடுகள் ஆகியவற்றில் தற்போதைய இயக்கப்பாட்டு நடைமுறைகளைக் கண்காணித்து மதிப்பிடுவதற்காக ஒரு அதிகாரிகளின் குழு நியமிக்கப்பட்டது. இந்தக் கள ஆய்வுகள், பல நடைமுறைத் தவறுகளையும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகளையும் கண்டறிய அதிகாரிகளுக்கு உதவியதோடு, அவை ஒரு விரிவான அறிக்கையில் ஆவணப்படுத்தப்பட்டன. இந்த அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள கண்டறிதல்கள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில், இலங்கை சுங்கத்தின் உயர்மட்ட நிர்வாகத்திடமிருந்து மேலதிக வழிகாட்டுதலையும் நெறிமுறைகளையும் கோரும் வகையில், டிசம்பர் மாதத்தில் இடர் முகாமைத்துவ குழுவிடம் ஒரு முறையான சமர்ப்பணம் முன்வைக்கப்பட்டது.

8.4.2.2.3.2 விசாரணைகள்

அனுபவம்வாய்ந்த விசாரணை அதிகாரிகளைக் கொண்ட பிரத்தியேகக் குழுவொன்று, தற்போதைய சுங்க செயலாக்க முறைகளில் உள்ள இடர் பகுதிகள் மற்றும் குறைபாடுகளைக் கண்டறியும் நோக்கத்தில், பல்வேறு மோசடிகளைக் கண்டறிந்து விசாரணை செய்து வருகிறது. இத்தகைய விசாரணைகளின் முக்கிய நோக்கம், பல்வேறு இடர் பகுதிகளைக் கண்டறிந்து, துறைசார் இடர் முகாமைத்துவ நோக்கங்களை அடைவதில் தேர்வு மற்றும் மீள்-பொறிமுறையாக்கச் செயல்முறைகளுக்கு உதவுவதற்காக அவற்றைப் பயன்படுத்துவதாகும். 2025ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் சுருக்கம் கீழேயுள்ள அட்டவணையில் விளக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 8.4.2.1 : விசாரணைகள் குறித்த சாதனை - 2025

1	தொடங்கப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை	71
2	தானியக்க முறையில் தடுத்து வைக்கப்பட்ட விடயங்கள்	28
3	கண்டறிதல் விடயங்கள்	43
4	தானாகத் தடுத்து வைக்கப்பட்டு இறுதி செய்யப்பட்ட விடயங்களின் மொத்த எண்ணிக்கை (e-CCR புதுப்பிக்கப்பட்டது)	26
5	கண்டறிதல் வழக்குகள் இறுதி செய்யப்பட்ட மொத்த எண்ணிக்கை e-CCR இற்றைப்படுத்தப்பட்டது)	16
6	தானியக்க முறையில் தடுத்து வைக்கப்பட்டு வெற்றிகரமாக நிறைவுபெற்ற விடயங்களின் மொத்த எண்ணிக்கை (அறவீடு உள்ளது)	17
7	கண்டறிதல் வழக்குகளில் வெற்றிகரமாக நிறைவுபெற்ற வழக்குகளின் மொத்த எண்ணிக்கை (அறவீடு உள்ளது)	31
8	NFA விடயங்களின் மொத்த எண்ணிக்கை (தானியக்க முறையில் தடுத்து வைக்கப்பட்டவை)	6
9	NFA விடயங்களின் மொத்த எண்ணிக்கை (கண்டறிதல்கள்)	5
10	நிலுவையில் உள்ள விசாரணை விடயங்களின் மொத்த எண்ணிக்கை (தானியக்க முறையில் தடுத்து வைக்கப்பட்டவை)	5
11	நிலுவையில் உள்ள விசாரணை விடயங்களின் (கண்டறிதல்கள்)	7
12	வெற்றிகரமாக முடிவுற்றவை குறித்த சதவீதம் (தானியக்க முறையில் தடுத்து வைக்கப்பட்டவை)	77.27%
13	வெற்றிகரமாக முடிவுற்றவை குறித்த சதவீதம் (கண்டறியப்பட்டவைகள்)	86.11%
14	மொத்த அறவீடு (ரூபா)	272,713,134
15	மொத்த அறவீடு (ரூபா) – தானியக்க முறையில் தடுத்துவைக்கப்பட்ட விடயங்கள்	46,566,044
16	மொத்த அறவீடு (ரூபா) - கண்டறியப்பட்ட விடயங்கள்	226,147,090
17	வெற்றிகரமான ஒரு விடயத்திற்கான சராசரி அறவீடு (ரூபா) – தானியக்க முறையில் தடுத்துவைக்கப்பட்டவை	2,739,179
18	வெற்றிகரமான ஒரு விடயத்திற்கான சராசரி அறவீடு (ரூபா) - கண்டறிதல்கள்	7,295,067
19	இதுவரை செலுத்தப்பட்ட மொத்த அறவீட்டுத் தொகை (ரூ.)	272,713,134

மூலம் : இடர் முகாமைத்துவ பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.4.2.4 தேசிய இறக்குமதி பெறுமதி மதிப்பீட்டுத் தரவுத்தள (NIVDU) பிரிவின் வலைத்தளம் மற்றும் தரவுத்தளத்தின் பராமரிப்பு

இடர் முகாமைத்துவத்திற்காக தரவுத்தளத்தின் மேம்பாடுகளையும் விரிவாக்கங்களையும் விரைவுபடுத்தும் நோக்கத்தில், தேசிய இறக்குமதி மதிப்பீட்டுத் தரவுத்தளப் பிரிவு 2023ஆம் ஆண்டில் இடர் முகாமைத்துவ பணிப்பகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. இறக்குமதிப் பொருட்களின் குறிப்பு மதிப்புகளைத் தவிர, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வசதியாக பல்வேறு செயல்பாட்டுக் கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், பெறுமதி மதிப்பீட்டு பணிப்பகத்தின் அதிகாரிகள் மற்றும் பிற சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மதிப்பீட்டுத் தரவுத்தளத்திற்கான அணுகல் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தரவுத்தளம், ஒரு தானியங்கி இடர் முகாமைத்து அமைப்பை உருவாக்குவதற்கான அடித்தளமாகவும் பயன்படுத்தப்படுகிறது.

பெறுமதி மதிப்பீட்டுத் தரவுத்தளத்தின் சாதனைகள்

அ. 6480 பரிவர்த்தனை மதிப்புகள் புதுப்பிக்கப்பட்டன

ஆ. 1417 பரிவர்த்தனை அல்லாத மதிப்புகள் புதுப்பிக்கப்பட்டன

இ. 80 இயைபு முறை (HS) வழிகாட்டிகள் தரவுத்தளத்தில் சேர்க்கப்பட்டன

ஈ. 39 NIVDU பயனர் கணக்குகள் வழங்கப்பட்டன

8.4.2.3 இலங்கைச் சுங்கத்திற்கான ஒரு தானியங்கி இடர் முகாமைத்துவ அமைப்பை உருவாக்குதல்

இலங்கைச் சுங்கத்தின் இடர் முகாமைத்துவ பணிப்பகம், திணைக்களத்திற்குள் டிஜிடல் மயமாக்கலையும் தானியங்கி மயமாக்கலையும் வலுப்படுத்துவதற்காக தொடர்ச்சியான உத்திசார் முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது. இடர் முகாமைத்துவப் பணிகளை நவீனமயமாக்குதல், வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் ஊழல் நடைமுறைகளைக் குறைத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட ஒரு மாற்றியமைக்கும் திட்டமான, தானியங்கி இடர் முகாமைத்துவ அமைப்பின் (ARMS) தற்போதைய செயலாக்கம் மிக முக்கியமான முன்னேற்றங்களில் ஒன்றாகும்.

இத்திட்டம் 2024 ஆகஸ்ட் மாதத்தில் ARMS கட்டம் 1 மற்றும் ARMS கட்டம் 2 என இரண்டு தனித்தனி கட்டங்களாகப் பிரிக்கப்பட்டது.

8.4.2.4 தானியங்கி இடர் முகாமைத்துவ அமைப்பு கட்டம் 1

தானியக்க இடர் முகாமைத்துவ முறைமையின் கட்டம் 1, **சுங்க ஆவண அறிவிப்பு அமைப்பு (CDNS)** எனப்படும் தரவுப் பகுப்பாய்வுத் தளம் மற்றும் **தரவுப் பகுப்பாய்வுக் கருவி** எனப்படும் வெப் சேவை ஆகியவற்றை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது. அரசாங்க பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி, ARMS கட்டம் 1 இனை உருவாக்குவதற்காக 2024 செப்டம்பர் மாதத்தில் ஒரு போட்டித் தன்மையுடன்கூடிய பெறுகைச் செயல்முறை தொடங்கப்பட்டது. மேலும், கிரியேட்டிவ் வெப் டெக்னாலஜிஸ் (பிரைவேட்) லிமிடெட் மிகவும் பொருத்தமான வணிகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் 2025 பெப்ரவரி 7 அன்று ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து மேம்பாட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

8.4.2.5 சுங்க ஆவண அறிவிப்பு முறைமை (CDNS)

CDNS என்பது இலங்கை சுங்கத்திற்கும், இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் உரிமம் பெற்ற பிரகடனம் செய்பவர்கள் உள்ளிட்ட அதன் பங்கீடுபாட்டாளர்களுக்கும் இடையே நிகழ்நேரத் தொடர்பை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு வெப் சேவையாகும். **சுங்க ஆவண அறிவிப்பு முறைமையானது 2025 ஆகஸ்ட் மாதத்தில் வெற்றிகரமாகத் தொடங்கப்பட்டது**. இது, தானியக்கமயமாக்கலின் மீதான இலங்கை சுங்கத்தின் அர்ப்பணிப்பையும் உறுதிப்பாட்டையும், மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளை அது வலுவாகப் பின்பற்றுவதையும் எடுத்துக்காட்டுகிறது. தற்போது CDNSஇல் 588 பதிவுசெய்யப்பட்ட மதிப்பீட்டுப் பயனர்கள் உள்ளனர்.

CDNS, பயனர்களிடமிருந்து சந்தாக் கட்டணத்தை சேகரிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட, உள்ளமைக்கப்பட்ட கட்டண நுழைவாயிலைக் கொண்டுள்ளது. இந்த மாதிரியானது, நீடுறுதிமிக்க தன்மைக்கு மட்டுமல்லாது, அரசாங்கத்திற்கு வரியல்லா வருமானத்தை ஈட்டுவதற்கும் பங்களிப்புச் செய்கிறது. சந்தாக் கட்டண அமைப்பு மற்றும் கட்டண நுழைவாயில் வழிமுறையை வர்த்தமானியில் வெளியிடுவதற்கான ஒரு முறையான கோரிக்கை நிதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பாக நிதி அமைச்சிடமிருந்து இலங்கை சுங்கத்திற்கு இன்னும் பதில் வரவில்லை.

மேலும், சுங்க ஆவண அறிவிப்பு முறைமையில் (CDNS) கிடைக்கும் தரவுகள் ஒரு நாள் தாமதத்துடன் கூடிய தகவல்களையே பிரதிபலிக்கின்றன எனவே, நிகழ்நேரத் தரவுகளை தற்போது அணுக இயலாது. தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப பணிப்பகமானது இலங்கை சுங்கத்திற்காக ஒரு புதிய தரவுத்தள அமைப்பைக் கொள்முதல் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது. அதன் செயலாக்கம் நிறைவடைந்தவுடன், இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

8.4.2.6 தரவுப் பகுப்பாய்வுக் கருவி

இலங்கைச் சுங்கத்தினுள் பயன்படுத்தப்படுகின்ற அனைத்து முக்கியத் தரவுத்தளங்களையும் ஓர் ஒருங்கிணைந்த அமைப்பில் ஒன்றிணைப்பதை தரவுப் பகுப்பாய்வுத் தளம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் மூலம், மேம்பட்ட இடர் விவரக்குறிப்பு, இயக்கம் மிக்க கட்டுப்பாட்டகங்கள் ஊடான நிகழ்நேரச் செயலாற்றுகைக் கண்காணிப்பு மற்றும் சுங்கச் செயல்பாடுகள் முழுவதும் தரவு சார்ந்த முடிவெடுக்கும் செயல்முறைகளை இது இயலச்செய்கிறது.

தற்போது, தரவுப் பகுப்பாய்வுக் கருவியின் உருவாக்கப் பணிகள் நடைபெற்று வருவதுடன் அதனை உருவாக்கிய கிரியேட்டிவ் வெப் டெக்னாலஜிஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனம், தரவுப் பகுப்பாய்வுக் கருவியில் 75% நிறைவடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

அட்டவணை 8.4.2.2 : 2025ஆம் வருட செயல்பாட்டு திட்டத்திற்கிணங்க இடர் முகாமைத்துவ பணிப்பகத்தின் செயலாற்றுகை

இலக்கு	குறிக்கோள்	உபாயம்	விளைவு	செயல்பாடு	செயல்பாடு நிறைவு திகதி	நடவடிக்கை	முக்கிய செயல்பாட்டுக் குறியீடு	பொறுப்பு	செயல் முடிவடையும் திகதி	2025.12.31இல் இருந்தவாறான செயலாற்றுகை
1. இலக்கு 1: வருவாயை அதிகப்படுத்துதல்	1.1. இல 1.1 உரிய வருவாயை சேகரித்தல்	மேம்பட்ட இடர் முகாமைத்துவ அமைப்பைச் செயல்படுத்துதல்	மேம்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டு நிலைகள்	1.1.1. RMC உடனான ஒருங்கிணைப்பு	31.12.2025 வரையான தொடர் செயல்முறை	1.1.1.1. RMC இற்கு இடர் பகுப்பாய்வு அறிக்கைகளைத் தயாரித்தல்.	RMC தேர்வுக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை	தேர்வுக்குழு	5 /மாதம் 31.12.2025 5 /மாதம் 31.12.2025	40 அறிக்கைகள் (8 RMC கூட்டங்களில்) (கொள்கலன் சாலை தேர்வு, சரக்கு வாயில் தேர்வு, பரிசோதனை முடிவுச் சுருக்கம், தானியங்கி மூலம் தடுத்துவைக்கப்பட்ட சரக்குகளின் சுருக்கம், பின்னூட்டக் குறியீட்டுப் பகுப்பாய்வு)
						1.1.1.2. வர்த்தகர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் RMCக்கு அறிக்கைகளைத் தயாரித்தல்.	RMCக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை	தேர்வுக்குழு	4 / மாதம் 31.12.2025	41 கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. (சுங்க பணிப்பாளர் - RMDக்குச் சமர்ப்பிக்கப்பட்டது)
						1.1.1.3. RMC கூட்டங்களைக் கூட்டுதல்.	தேர்வுக்குழு கூட்டிய கூட்டங்களின் எண்ணிக்கை	தேர்வுக்குழு	1 / மாதம் 31.12.2025	10 கூட்டங்கள் கூட்டப்பட்டன (2 விசேட கூட்டங்கள் உட்பட)
						1.1.1.4. இடர் பதிவேட்டை மீளாய்வு செய்து இற்றைப்படுத்தல்.	மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகளது எண்ணிக்கை	தேர்வுக்குழு	1 / மாதம் 31.12.2025	13 மீளாய்வுகள்
						1.1.1.5. இடர் முகாமைத்துவத்தின் நிலையான செயல்பாட்டு நடைமுறை (SOP) மற்றும் கட்டமைப்பை மதிப்பாய்வு செய்தல்.	மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகளின் எண்ணிக்கை	தேர்வுக்குழு	31.07.2025	பணியாளர் பற்றாக்குறை மற்றும் அதிகப்படியான பணிச்சுமை காரணமாக மீளாய்வு செயல்முறை நிறைவு செய்ய முடியவில்லை.
				1.1.2. ORA மற்றும் பிற எல்லை நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு	31.12.2025 வரையான தொடர் செயல்முறை	1.1.2.1. ORA மற்றும் பிற எல்லை முகவர்களுடனான கலந்துரையாடல்கள்	நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை	தேர்வுத்திறன் குழு	4 / ஆண்டு 31.12.2025	01 (SLSI) 04 CRMTWG கூட்டங்கள்
						1.1.2.2. தொடர்புடைய புரிந்துணர்வு ஒப்பந்தம்/ ஆவணங்கள்/ அறிவுறுத்தல்களைத் தயாரித்தல்	தயாரிக்கப்பட் ஆவணங்களது எண்ணிக்கை	தேர்வுத்திறன் குழு	4 /year 31.12.2025	04 SLSI, FCA, APH, NPQS HS குறியீடுகளின் பட்டியல் CRMTWG உறுப்பினர்களுக்கு சரிபார்ப்பிற்காக அனுப்பப்பட்டது
						1.1.2.3. தற்போதுள்ள செயல்முறைகளில் உள்ள இடர்கள், சிக்கல்கள் மற்றும் அவற்றிற்கான தீர்வுகளைக் கண்டறிதல்	தீர்க்கப்பட்ட சிக்கல்களின் எண்ணிக்கை	தேர்வுத்திறன் குழு	2025.12.31 வரையான தொடர் செயல்முறை	01 - OGA வெளி நிலைக் குழு ஆரம்பத்தில், அனைத்து OGAகளால் குறிப்பிடப்பட்ட HS குறியீடுகள் ஒரே பட்டியலாக இருந்தன. தற்போது அவை அந்தந்த OGAக்களின்படி

இலக்கு	குறிக்கோள்	உபாயம்	விளைவு	செயல்பாடு	செயல்பாடு நிறைவு திகதி	நடவடிக்கை	முக்கிய செயல்பாட்டுக் குறியீடு	பொறுப்பு	செயல் முடிவடையும் திகதி	2025.12.31இல் இருந்தவாறான செயலாற்றுகை
										வகைப்படுத்தப்பட்டு, தனித்தனி பட்டியல்களாக அமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.
				1.1.3. செயல்திறன்மிக்க சரக்குத் தேர்வுச் செயல்முறையைச் செயல்படுத்துதல்	31.12.2025 வரையான தொடர் செயல்முறை	1.1.3.1. தற்போதைய தேர்வு விதிகள்/பட்டியல்களை மீளாய்வு செய்தல்	நடத்தப்பட்ட மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை	தேர்வுத்திறன் குழு	4 / கிழமை 31.12.2025	சுமார் 100 உள்ளகக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. புதிதாக உருவாக்கப்பட்ட CBHQ1 விதியானது, சரக்குத் தேர்வுத்திறனுக்காக ஒரு கட்டமைக்கப்பட்ட, விவரக்குறிப்பு அடிப்படையிலான அணுகுமுறையுடன் வடிவமைக்கப்பட்டது.
						1.1.3.2. தேர்வு விதி மாற்றங்களின் சாத்தியக்கூற்றை மதிப்பிடுதல்	தேர்வு விதிகள் மீதான மீளாய்வுகளின் எண்ணிக்கை	தேர்வுத்திறன் குழு	2 /கிழமை 31.12.2025	சுமார் 70 மீளாய்வுகள் (இந்த மீளாய்வுகளின் விளைவாக 39 விதித் திருத்தங்கள் வெற்றிகரமாகச் செய்யப்பட்டன)
						1.1.3.3. தேர்வுப் பட்டியல் மாற்றங்களின் சாத்தியக்கூற்றை மதிப்பிடுதல்	தேர்வுப் பட்டியல்கள் மீதான மீளாய்வுகளின் எண்ணிக்கை	தேர்வுத்திறன் குழு	3 / கிழமை 31.12.2025	சுமார் 200 மீளாய்வுகள் (இந்த மீளாய்வுகளின் விளைவாக 153 பட்டியல் திருத்தங்கள் வெற்றிகரமாகச் செய்யப்பட்டன)
						1.1.3.4. தேர்வு விதி மாற்றங்கள் மீது உருவகப்படுத்துதல்களை இயக்குதல்	விதி மாற்றங்கள் மீது இயக்கப்பட்ட உருவகப்படுத்துதல்களின் எண்ணிக்கை	தேர்வுத்திறன் குழு	40 / கிழமை 31.12.2025	சுமார் 600 உருவகப்படுத்துதல்கள்
						1.1.3.5. தேர்வுப் பட்டியல் மாற்றங்கள் மீது உருவகப்படுத்துதல்களை இயக்குதல்	பட்டியல் மாற்றங்கள் மீது இயக்கப்பட்ட உருவகப்படுத்துதல்களின் எண்ணிக்கை	தேர்வுத்திறன் குழு	20 /கிழமை 31.12.2025	சுமார் 800 உருவகப்படுத்துதல்கள்
		தானியக்கத்தை மேம்படுத்துதல்	குறைந்தபட்ச மனிதத் தலையீடு	1.1.4. சரக்குத் தேர்வுத்திறனைத் தானியக்கமாக்குதல்	07.08.2025	1.1.4.1. வருவாய் அறிக்கை கட்டுப்பாட்டகத்தினை (கட்டம் 1) முழுமையாகச் செயல்படுத்துதல்	வருவாய் அறிக்கை கட்டுப்பாட்டகம் (கட்டம் 1) செயல்படுத்தப்பட்டு வருகிறது	தேர்வுத்திறன் குழு	07.08.2025	மேம்பாட்டுப் பணிகளில் 75% நிறைவடைந்துள்ளது
						1.1.4.2. சரக்குகள் நிலைச் செயலியை (கட்டம் 1) முழுமையாகச் செயல்படுத்துதல்	சரக்குகள் நிலைச் செயலி (கட்டம் 1) செயல்படுத்தப்பட்டு வருகிறது	தேர்வுத்திறன் குழு	07.07.2025	மேம்பாட்டுப் பணி நிறைவு செய்யப்பட்டு 2025.08.15 அன்று ஏற்கனவே தொடங்கப்பட்டது. கட்டண நுழைவாயிலுக்கான (payment Gateway) ஒப்புதல் இன்னும் நிலுவையில் உள்ளது. CDNS தரவுகள் ஒரு நாள் தாமதமாகக் காட்டுகிறது. எனவே, நிகழ்நேரத் தரவினை தற்போது பெறமுடியவில்லை.

இலக்கு	குறிக்கோள்	உபாயம்	விளைவு	செயல்பாடு	செயல்பாடு நிறைவு திகதி	நடவடிக்கை	முக்கிய செயல்பாட்டுக் குறியீடு	பொறுப்பு	செயல் முடிவடையும் திகதி	2025.12.31இல் இருந்தவாறான செயலாற்றுகை
				1.1.5. தானியங்கு இடர் முகாமைத்துவ அமைப்பை (ARMS) உருவாக்கி பயன்பாட்டிற்கு கொண்டுவரல்	31.12.2025	1.1.5.1. ARMS கட்டம் 2க்கான தொழில்நுட்பக் குழுவை அமைத்தல்	ARMS கட்டம் 2 தொழில்நுட்பக் குழு அமைக்கப்பட்டு வருகிறது	தேர்வுத்திறன் குழு	31.03.2025	சில உறுப்பினர்கள் ஓய்வு பெற்றுவிட்டதால், TEC க்கு மீள நியமிக்க வேண்டும்.
						1.1.5.2. SRS ஆவணத்தை உருவாக்குவதற்காக ARMS கட்டம் 2 தொழில்நுட்பக் குழுவின் கூட்டங்களை நடத்துதல்	நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை	தேர்வுத்திறன் குழு	31.05.2025	01 கூட்டம்
						1.1.5.3. ARMS கட்டம் 2க்கான SRS ஆவணத்தை இறுதிசெய்து ஒப்புதல் வழங்குதல்	ARMS கட்டம் 2க்கான SRS ஆவணம் இறுதி செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.	தேர்வுத்திறன் குழு	30.06.2025	ASSY 5இனை அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் ARMS இரண்டாம் கட்டத்தின் (Phase 2) திட்டமிடப்பட்ட செயல்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என ICT தெரிவித்துள்ளது.
						1.1.5.4. இறுதி செய்யப்பட்ட ஆவணத்திற்கு இலங்கை சுங்கத்தின் சட்டப்பூர்வ ஒப்புதலைப் பெறுதல்	திட்ட முன்மொழிவுக்கு சட்டப்பூர்வ ஒப்புதல் பெறப்பட்டு வருகிறது	தேர்வுத்திறன் குழு	30.09.2025	
						1.1.5.5. ARMS இரண்டாம் கட்டத்திற்கான மூன்றாம் தரப்பு உருவாக்குநருடன் ஒப்பந்தம் கையொப்பமிடுதல் மற்றும் மேம்பாட்டுப் பணிகளை ஆரம்பித்தல்.	ARMS இரண்டாம் கட்டத்திற்கான மூன்றாம் தரப்பு உருவாக்குநருக்கும் இலங்கைச் சுங்கத்திற்கும் இடையேயான ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டன.	தேர்வுத்திறன் குழு	31.12.2025	
	1.2. இல 1.2. வருவாய் கசிவுகளைத் தடுத்தல்	சாத்தியமான ஊழல் நடைமுறைகளைத் தடுத்தல்	அதிகரித்த ஒருமைப்பாட்டு நிலைகள்	1.2.1. மதிப்பீட்டிற்கான தேர்வுத்திறன்	31.12.2025 வரையான தொடர் செயல்முறை	1.2.1.1. தற்போதைய மதிப்பீட்டு விதிகள் /பட்டியல்கள்/அளவுகோல்களை மீளாய்வு செய்தல்	தேர்வுத்திறன் விதிகள்/பட்டியல்கள்/அளவுகோல்கள் மீதான மீளாய்வுகளின் எண்ணிக்கை	தேர்வுத்திறன் குழு	1 /மாதம் 31.12.2025	06 பெறுமதி மதிப்பீட்டுப் பட்டியல் புதுப்பிப்புகள் (VAL_HS_MID பட்டியல்-1 VAL_HS_RED பட்டியல்- 2 VAL_முறைப்பாட்டுப் பட்டியல்- 2 CBBD1_VAL_MID-1) விமான சரக்கு மதிப்பீட்டு விதிகள் (KTFT2, DHL, கொழும்பு காகோ)
				1.2.2. NIVDBஇனை RMS உடன் மேம்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல்	31.07.2025	1.2.2.1. ARMS கட்டம் 1 உடன் NIVDBஇன் ஒருங்கிணைப்பை நிறைவு செய்தல்	NIVDB ஆனது ARMS கட்டம் 1 உடன் ஒருங்கிணைக்கப்படல்	NIVDB குழு	31.07.2025	ஒருங்கிணைப்பு நிறைவுபெற்றது

இலக்கு	குறிக்கோள்	உபாயம்	விளைவு	செயல்பாடு	செயல்பாடு நிறைவு திகதி	நடவடிக்கை	முக்கிய செயல்பாட்டுக் குறியீடு	பொறுப்பு	செயல் முடிவடையும் திகதி	2025.12.31இல் இருந்தவாறான செயலாற்றுகை
				1.2.3. NIVD வெப் தளம் மற்றும் தரவுத்தளத்தின் பராமரிப்பு	31.12.2025 வரை தொடர் செயல்முறை	1.2.3.1. பெறுமதி மதிப்பீட்டுத் தரவுத்தளத்தில் பரிவர்த்தனை மதிப்புகளைச் சேர்த்தல்	பெறுமதி சேர்க்கப்பட்ட குறிப்பு மதிப்புகளின் எண்ணிக்கை	NIVDB குழு	500 /மாதம் 31.12.2025	6480 பரிவர்த்தனை பெறுமதி மதிப்புகள்
						1.2.3.2. மதிப்பீட்டுத் தரவுத்தளத்தில் பரிவர்த்தனை அல்லாத மதிப்புகளைச் சேர்த்தல்	பெறுமதி சேர்க்கப்பட்ட குறிப்பு மதிப்புகளின் எண்ணிக்கை	NIVDB குழு	150 /மாதம் 31.12.2025	1417 பரிவர்த்தனை அல்லாதவை .
						1.2.3.3. NIVDB க்கான HS வழிகாட்டிகளின் மேலதிக மேம்பாடு	சேர்க்கப்பட்ட HS குறியீடுகளின் எண்ணிக்கை	NIVDB குழு	10 /மாதம் 31.12.2025	80 HS குறியீடுகள்
						1.2.3.4. NIVDB பயன்பாட்டை விரிவுபடுத்துதல்	வழங்கப்பட்ட பயனர் கணக்குகளின் எண்ணிக்கை	NIVDB குழு	300/வருடம் 31.12.2025	39 பயனர் கணக்குகள் வழங்கப்பட்டன
2. இலக்கு 2: சட்டபூர்வமான வர்த்தகத்தை எளிதாக்குதல்	2.1. வர்த்தகத்தை எளிதாக்குவது தொடர்பான சர்வதேச கடப்பாடுகளை செயல்படுத்துதல் மற்றும் இணங்குதல்	AEO தளத்தை விரிவுபடுத்துதல்	சட்டபூர்வமான வர்த்தகர்களை மேம்படுத்துவதற்காக AEO தளத்தை விரிவுபடுத்துதல்	2.1.1. AEO குழுவுடனான ஒருங்கிணைப்பு	31.12.2025 வரை தொடர் செயல்முறை	2.1.1.1. AEO குழு கூட்டங்களைக் கூட்டுதல்	கூட்டப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை	AEO குழு	1 / மாதம் 31.12.2025	05 கூட்டங்கள் 19 அமைப்புகள் 22 அமைப்புகள் 3 ஆவணங்கள் வரைவு செய்யப்பட்டன. இறுதிப்படுத்தலுக்காகக் காத்திருக்கிறது.
				2.1.2. AEO விண்ணப்பங்களைப் பெறுதல் மற்றும் சரிபார்த்தல்	31.12.2025 வரை தொடர் செயல்முறை	2.1.2.1. விண்ணப்பங்களைப் பெறுதல்	விண்ணப்பங்களின் எண்ணிக்கை	AEO குழு	31.12.2025	51 விண்ணப்பங்கள்
						2.1.2.2. விண்ணப்பங்களைச் சரிபார்த்தல்	பெறப்பட்ட சரிபார்க்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	AEO குழு	5 /month 31.12.2025	42 விண்ணப்பங்கள்
				2.1.3. 38 நிறுவனங்களுக்கு AEO Tier - I தகுதியை வழங்குதல்	20.08.2025	2.1.3.1. 18 நிறுவனங்களுக்கு AEO Tier -I தகுதியை வழங்குதல் (சுற்று 02)	தகுதி வழங்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை	AEO குழு	26.01.2025	19 நிறுவனங்கள்
						2.1.3.2. 20 நிறுவனங்களுக்கு AEO Tier -I தகுதியை வழங்குதல் (சுற்று 03)	தகுதி வழங்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை	AEO Team AEO குழு	20.08.2025	22 நிறுவனங்கள்
				2.1.4. AEO சரிபார்ப்பு செயல்முறையை மேம்படுத்துதல்	31.12.2025 வரை தொடர் செயல்முறை	2.1.4.1. சரிபார்ப்பிற்காக நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களைத் தரப்படுத்துதல்	தரப்படுத்தப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை	AEO குழு	31.12.2025 வரை தொடர் செயல்முறை	3 ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இறுதிப்படுத்தல் நிலுவையில் உள்ளது.
						2.1.4.2. சுய மதிப்பீட்டு சரிபார்ப்புப் பட்டியல்களை அறிமுகப்படுத்துதல் (AEO Tier II இன் சாத்தியமான இயக்குநர்களுக்காக)	சுய மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியலைச் செயல்படுத்துதல்	AEO குழு	31.03.2025	தொடங்கப்படவுள்ளது

இலக்கு	குறிக்கோள்	உபாயம்	விளைவு	செயல்பாடு	செயல்பாடு நிறைவு திகதி	நடவடிக்கை	முக்கிய செயல்பாட்டுக் குறியீடு	பொறுப்பு	செயல் முடிவடையும் திகதி	2025.12.31இல் இருந்தவாறான செயலாற்றுகை
						2.1.4.3. தேவைக்கேற்ப AEO Tier II விண்ணப்பத்தை மேம்படுத்துதல்	மேற்கொள்ளப்பட்ட மேம்பாடுகளின் எண்ணிக்கை	AEO குழு	31.12.2025 வரை தொடர் செயல்முறை 31.12.2025	தொடங்கப்படவுள்ளது
				2.1.5. AEOக்களை எளிதாக்குவதற்காக OGAகளுடன் பேச்சுவார்த்தை	01.08.2025	2.1.5.1. அனுமதி வழங்கும் செயல்முறையை விரைவுபடுத்துவதற்காக OGAகளுடன் பேச்சுவார்த்தை நடத்துதல்	OGA இன் வசதிகள் பெறப்பட்ட AEOகளின் எண்ணிக்கை	AEO குழு	01.08.2025	04 (கணனி கேபிள்ஸ், பேயர்ஸ், யூனிலீவர், ஹெய்லிஸ் எக்ரோ) OGA ஒப்புதல்கள் தேவைப்படும் AEOகளின் இறக்குமதிக்கான HS குறியீடுகள், மதிப்பாய்வுக்காக CRMTWG உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன.
				2.1.6. AEOகளின் அங்கீகாரத்திற்குப் பிந்தைய கணக்காய்வு	31.12.2025 வரை தொடர்ச்சியான செயல்முறை	2.1.6.1. AEOகளுக்கான களப் பயணங்கள் மற்றும் சரிபார்ப்பு குறித்த பணிகளை தொடங்குதல்	மேற்கொள்ளப்பட்ட களப் பயணங்கள் மற்றும் சரிபார்ப்புகளின் எண்ணிக்கை	AEO குழு	4 /மாதம் 31.12.2025	15 களப்பயணங்கள்
						2.1.6.2. AEO களப் பயணங்களுக்கான முடிவு அறிக்கைகளைத் தயாரித்தல்	களப்பயணங்களுக்கான முடிவு அறிக்கைகளின் எண்ணிக்கை	AEO குழு	4 / மாதம் 31.12.2025	15 முடிவறிக்கைகள்
				2.1.7. சுங்க இல்ல முகவர்களுக்கான (CHA) AEO திட்டத்தை அறிமுகப்படுத்துதல்	30.06.2025	2.1.7.1. CHAகளுக்கான ஒரு நிலையான படிவமாக உருவாக்க AEO விண்ணப்பத்தைத் திருத்துதல்.	CHAகளுக்கான நிலையான AEO விண்ணப்பப் படிவம் அறிமுகப்படுத்தப் படுகிறது	AEO குழு	30.06.2025	2026 ஜூலைக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது
						2.1.7.2. CHAகான சரிபார்ப்பு அளவுகோல்களைச் செயல்படுத்துவதற்கான AEO சரிபார்ப்பு அளவுகோல்களை மாற்றியமைத்தல்.	CHAகான சரிபார்ப்பு அளவுகோல்களைச் செயல்படுத்துதல்	AEO குழு	30.06.2025	2026 ஜூலைக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது
				2.1.8. சுங்க இல்ல முகவர்களுக்கான (CHA) AEO திட்டத்தை வழங்குதல்	31.12.2025	2.1.8.1. 05 சுங்க இல்ல முகவர்களுக்கு AEO CHA திட்டத்தை வழங்குதல்	தகுதி வழங்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை	AEO குழு	31.12.2025	மேலே உள்ள 2.1.7 நிறைவடையும் வரை எதிர்பார்த்திருக்கிறது
				2.1.9 பச்சை வாயில் வசதியினை நிறுத்துதல்	31.12.2025	2.1.9.1. தற்போதைய பச்சை வாயில் வசதிகொண்ட நிறுவனங்களுக்கு இது குறித்து தெரிவித்தல்	தெரிவிக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை	AEO குழு	31.12.2025 (ஏற்கனவே நிறைவடைந்துள்ளது)	39 நிறுவனங்கள்
				2.1.10 AEO விண்ணப்பச் செயலாக்கத்திற்கான	31.12.2025	2.1.10.1 சரிபார்ப்பு காலக்கெடுவாக 90 நாட்களைச் சேர்த்தல்	இற்றைப்படுத்தப்பட்ட செயல்பாட்டு வழிகாட்டி	AEO குழு	31.12.2025	மேற்கொள்ளப்பட உள்ளது

இலக்கு	குறிக்கோள்	உபாயம்	விளைவு	செயல்பாடு	செயல்பாடு நிறைவு திகதி	நடவடிக்கை	முக்கிய செயல்பாட்டுக் குறியீடு	பொறுப்பு	செயல் முடிவடையும் திகதி	2025.12.31இல் இருந்தவாறான செயலாற்றுகை
				காலக்கெடு வைச் சேர்க்க செயல்பாட்டு வழிகாட்டியைத் திருத்துதல்						
				2.1.11 AEO திட்டத்தில் SME/MSME-I சேர்த்தல்	31.12.2025	2.1.11.1. SME/MSME AEO சரிபார்ப்பு வழிகாட்டியை உருவாக்குதல்	SME/MSME-க்கான சரிபார்ப்பு வழிகாட்டி	AEO குழு	31.12.2025	நடைபெற்று வருகின்றன.
						2.1.11.2. SME/MSME AEO செயல்பாட்டு வழிகாட்டியின் உருவாக்கம்	SME/MSME நிறுவனங்களுக்கான செயல்பாட்டு வழிகாட்டி	AEO குழு	31.12.2025	நிறைவு பெற்றுள்ளது
						2.1.11.3. SME/MSME AEO விண்ணப்பம் மற்றும் விண்ணப்ப வழிகாட்டியின் உருவாக்கம்	SME/MSME நிறுவனங்களுக்கான விண்ணப்பம் மற்றும் விண்ணப்ப வழிகாட்டி	AEO குழு	31.12.2025	நடைபெற்று வருகின்றன.
				2.1.12 AEO புதுப்பித்தல் செயலாக்க காலக்கெடுவிற்கான செயல்பாட்டு வழிகாட்டியைத் திருத்துதல்	31.12.2025	2.1.12.1. புதுப்பித்தல் நேரமாக 90 நாட்களைச் சேர்த்தல்	புதுப்பிக்கப்பட்ட செயல்பாட்டு வழிகாட்டி	AEO குழு	31.12.2025	தயாரிக்கப்பட உள்ளது
				2.1.13 இணையதளத்தில் AEO நிறுவனப் பட்டியல்	04.09.2025	2.1.13.1. இணையதளத்தில் அனைத்து AEO வைத்திருப்பவர்களின் பட்டியலைச் சேர்த்தல்	புதுப்பிக்கப்பட்ட AEO இணையதளம்	AEO குழு	04.09.2025 (ஏற்கனவே நிறைவடைந்துள்ளது)	நிறைவு பெற்றுள்ளது
				2.1.14 அனைத்து வழிகளிலும் AEOநியமிக்கப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் தனி அடையாளம் மற்றும் வகைப்படுத்தலை இணைத்தல்	30.07.2025	2.1.14.1. அனைத்து சுங்கப் பிரகடனங்களிலும் AEO அடையாளத்தினை உள்ளடக்குதல்	சுங்கப் பிரகடனங்களின் 08ஆம் கூட்டிலுள்ள "AEO Tier-I" சேர்க்கப்பட்டது	AEO குழு	30.07.2025 (ஏற்கனவே நிறைவடைந்துள்ளது)	நிறைவு பெற்றுள்ளது

இலக்கு	குறிக்கோள்	உபாயம்	விளைவு	செயல்பாடு	செயல்பாடு நிறைவு திகதி	நடவடிக்கை	முக்கிய செயல்பாட்டுக் குறியீடு	பொறுப்பு	செயல் முடிவடையும் திகதி	2025.12.31இல் இருந்தவாறான செயலாற்றுகை
				2.1.15 சரக்கு பெறுநர் இடர் விவரக்குறிப்பை AEO சரிபார்ப்புச் செயல்பாட்டில் ஒருங்கிணைத்தல்	31.12.2025 வரை தொடர்ச்சியான செயல்முறை	2.1.15.1. சரிபார்ப்பின் போது சரக்கு பெறுநரின் இடர் விவரக்குறிப்பைக் கருத்தில் கொள்ளுதல்	சரிபார்ப்பின் போது உள்ளடக்கப்பட்டுள்ள சரக்கு பெறுநரின் இடர் விவரக்குறிப்புகளைப் குறிப்பிடுதல்	AEO குழு	31.12.2025வரை தொட செயல்முறை	நிறைவு பெற்றுள்ளது
	2.2. இல 2.3. விதிமுறைகளுக்கு உட்படாத வர்த்தகத்தைத் தடுத்தல்	அமுலாக்கம் மற்றும் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துதல்	இணக்கப்பாட்டு நிலைகளை அதிகரித்தல்	2.2.1. இடர் விவரக்குறிப்புகள் மற்றும் செயல்முறைகளின் செயல்திறனை சரிபார்க்க, இடர் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி குறித்து ஆய்வு செய்தல்.	31.12.2025வரை தொட செயல்முறை	2.2.1.1. கொள்கலன்களைத் தடுத்து வைத்தல் மற்றும் விசாரணைகளை நடத்துதல்	பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	விசாரணைக் குழு	31.12.2025	71
						2.2.1.2. தடுத்து வைக்கப்பட்ட கொள்கலன்களின் தேர்வுத்தன்மைக்கான பரிசோதனை முடிவை அறிக்கையிடுதல்	தடுத்து வைக்கப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை மற்றும் அறிக்கையிடப்பட்ட முடிவு	விசாரணைக் குழு	1/கிழமை 31.12.2025	55
						2.2.1.3. விசாரணைகளிலிருந்து செலுத்த வேண்டிய கட்டணங்களை சேகரித்தல்	விசாரணைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட மேலதிக பதிவு, அபராதங்கள் மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட தொகை	விசாரணைக் குழு	31.12.2025	ரூபா. 272,713,134/- (2025) ரூபா. 101,421,600/- (2024 அல்லது அதற்கு முன்)
						2.2.1.4. தொடங்கப்பட்ட வழக்குகளை இறுதி செய்தல்	இறுதி செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	விசாரணைக் குழு	31.12.2025	59 தொடங்கப்பட்ட 2025 விடயங்களில் 12 மட்டுமே நிலுவையில் உள்ளன
				2.2.2. நிலுவையில் உள்ள வழக்குகளை (136 வழக்குகள்) முடிவுறுத்தல்	31.12.2025	2.2.2.1. நிலுவையில் உள்ள 35 வழக்குகளின் விசாரணைகளை நிறைவு செய்தல்	நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை	விசாரணைக் குழு	30.06.2025	35
						2.2.2.2. நிலுவையில் உள்ள 65 வழக்குகளின் விசாரணைகளை நிறைவு செய்தல்	நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை	விசாரணைக் குழு	31.12.2025	65
				2.2.3. தடுத்து வைக்கப்பட்ட கொள்கலன்களை விடுவித்தல்	31.07.2025	2.2.3.1. நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 13 கொள்கலன்களை விடுவித்தல் மற்றும் வழக்குகளை இறுதி செய்தல்	விடுவிக்கப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை	விசாரணைக் குழு	31.07.2025	2 (மொத்தம் 24)
				2.2.4. வெகுமதி விநியோகக்	31.12.2025 வரையான தொடர்	2.2.4.1. வெகுமதி விநியோக கோப்புகளைத் தயாரித்தல்	தயாரிக்கப்பட்ட வெகுமதி விநியோக	விசாரணைக் குழு	31.12.2025 வரை தொடர்ச்சியான	12

இலக்கு	குறிக்கோள்	உபாயம்	விளைவு	செயல்பாடு	செயல்பாடு நிறைவு திகதி	நடவடிக்கை	முக்கிய செயல்பாட்டுக் குறியீடு	பொறுப்பு	செயல் முடிவடையும் திகதி	2025.12.31இல் இருந்தவாறான செயலாற்றுகை
				கோப்புகளைத் தயாரித்தல்	செயல்முறை		கோப்புகளின் எண்ணிக்கை		நடைமுறை	
				2.2.5. தானியங்கித் தேர்வுமுறை மூலம் அமுலாக்கப் பிரிவுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்ட சரக்குகள்	31.12.2025 வரையான தொடர் செயல்முறை	2.2.5.1. முழு கொள்கலன் சரக்குகளைப் பரிந்துரைத்தல்	பரிந்துரைக்கப்பட்ட முழு கொள்கலன் சரக்குகளின் எண்ணிக்கை	தேர்வுத்திறன் குழு	2 /கிழமை 31.12.2025	120 FCL 95% வெற்றிகரமான விகிதம் அடையப்பட்டது
						2.2.5.2. LCL கொள்கலன் சரக்குகளுக்கான பரிந்துரையைத் தொடங்குதல்	பரிந்துரைக்கப்பட்ட LCL கொள்கலன் சரக்குகளின் எண்ணிக்கை	தேர்வுத்திறன் குழு	31.05.2025	26 LCL 95% வெற்றிகரமான விகிதம் அடையப்பட்டது
						2.2.5.3. விமான சரக்குகளுக்கான பரிந்துரையைத் தொடங்குதல்	பரிந்துரைக்கப்பட்ட விமான சரக்குகளின் எண்ணிக்கை	தேர்வுத்திறன் குழு	31.08.2025	செய்யப்படல் வேண்டும்
3. இலக்கு 4: சிறப்பை அடைவதற்கான நிறுவனத்தின் உருமாற்றம்	3.1. இல 4.1. ஆராய்ச்சி மற்றும் புதுமையான நவீனமயமாக்கல் மூலம் அமைப்புகள் மற்றும் நடைமுறைகளைச் சீரமைத்தல்.	சுங்கச் செயல்பாடுகளில் உள்ள செயல்திறன் குறைபாடுகள் மற்றும் தடைகளைக் கண்டறிய, தற்போதுள்ள அமைப்புகள் மற்றும் நடைமுறைகளின் விரிவான ஆய்வுகளை நடத்துதல்.	சரிசெய்யப்பட வேண்டிய செயல்திறன் குறைபாடுகள் மற்றும் தடைகள் கண்டறியப்பட்டன.	3.1.1. ஒவ்வொரு பணிப்பகத்திலிருந்தும் இடர் அறிக்கை அதிகாரிகளுடன் (RROs) ஒருங்கிணைப்பு.	31.12.2025 வரையான தொடர் செயல்முறை.	3.1.1.1. இடர் அறிக்கையிடல் அலுவலர்களைத் தேர்ந்தெடுத்து நியமித்தல்	இடர் அறிக்கையிடல் அலுவலர்களாக நியமிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை	தேர்வுத்திறன் குழு	31.03.2025	31 அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்
						3.1.1.2. இடர் அறிக்கையிடல் அலுவலர்களுக்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அமர்வுகளை நடத்துதல்	நடத்தப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை	தேர்வுத்திறன் குழு	4 / வருடம் 31.12.2025	மனிதவள மேம்பாட்டு பணிப்பகத்தில் 25.08.2025 அன்று 01 அமர்வு இரண்டாவது அமர்வை நடத்தக் கோரி 08.10.2025 திகதியிட்ட கடிதம் மனிதவள மேம்பாட்டு பணிப்பகத்திற்கு அனுப்பப்பட்டது
						3.1.1.3. இடர் அறிக்கையிடல் அலுவலர்களுடனான கலந்துரையாடல்கள்	நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை	தேர்வுத்திறன் குழு	1 / மாதம் 31.12.2025	5 கலந்துரையாடல்கள் (பிணை, பெறுமி மதிப்பீடு, பிரகடனங்கள், விமான சரக்கு, மத்திய சரக்குப் பரிசோதனை)
						3.1.1.4. தற்போதுள்ள செயல்முறைகளில் உள்ள இடர்கள், சிக்கல்கள் மற்றும் அவற்றிற்கான தீர்வுகளைக் கண்டறிதல்	தீர்க்கப்பட்ட சிக்கல்களின் எண்ணிக்கை	தேர்வுத்திறன் குழு	31.12.2025 வரையான தொடர் செயல்முறை.	03 (Warehouse Release, Feedback Code, Courier and E Commerce KTFT2, KTCC2, KTDH2 Selectivity) 03 (களஞ்சியசாலை விடுவிப்பு, பின்னூட்டக் குறியீடு, கூரியர் மற்றும் இ வணிகம் KTFT2, KTCC2, KTDH2 தேர்வுத்திறன்)
				3.1.2. பிணையிடப்பட்ட சரக்குகளு	31.07.2025	3.1.2.1. செயல்பாட்டுப் பிரிவுகளுடன் கலந்துரையாடல்களை நடத்துதல்.	நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் எண்ணிக்கை	மறுசீரமைப்புக் குழு	30.04.2025	04 கலந்துரையாடல்கள் (பிணை)

இலக்கு	குறிக்கோள்	உபாயம்	விளைவு	செயல்பாடு	செயல்பாடு நிறைவு திகதி	நடவடிக்கை	முக்கிய செயல்பாட்டுக் குறியீடு	பொறுப்பு	செயல் முடிவடையும் திகதி	2025.12.31இல் இருந்தவாறான செயலாற்றுகை
				க்கான தற்போதைய செயல்முறைகளை மறுசீரமைத்தல்						
						3.1.2.2. தற்போதைய செயல்முறையை வரைபடமாக்குதல்.	வரைபடமாக்கப்பட்ட செயல்முறைகளின் எண்ணிக்கை	மறுசீரமைப்புக் குழு	31.05.2025	01 (எண்ட்ரெபோட்)
						3.1.2.3. மறுசீரமைக்கப்பட்ட செயல்முறையை இறுதி செய்தல்.	இறுதி செய்யப்பட்ட செயல்முறைகளின் எண்ணிக்கை	மறுசீரமைப்புக் குழு	30.06.2025	01 (எண்ட்ரெபோட்)
						3.1.2.4. மறுசீரமைக்கப்பட்ட செயல்முறையைச் செயல்படுத்துதல்.	செயல்படுத்தப்பட்ட மறுசீரமைக்கப்பட்ட செயல்முறைகளின் எண்ணிக்கை	மறுசீரமைப்புக் குழு	31.07.2025	RMCக்கு சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகள்
				3.1.3. BOI சரக்குகளுக்கான தற்போதைய செயல்முறைகளை மறுசீரமைத்தல்	30.11.2025	3.1.3.1. செயல்பாட்டுப் பிரிவுகளுடன் கலந்துரையாடல்களை நடத்துதல்.	நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் எண்ணிக்கை	மறுசீரமைப்புக் குழு	31.08.2025	01 கலந்துரையாடல்
						3.1.3.2. தற்போதைய செயல்முறையை வரைபடமாக்குதல்.	வரைபடமாக்கப்பட்ட செயல்முறைகளின் எண்ணிக்கை	மறுசீரமைப்புக் குழு	30.09.2025	நடைபெற்று வருகிறது (விடயம் அடையாளம் காணப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது)
						3.1.3.3. மறுசீரமைக்கப்பட்ட செயல்முறையை இறுதி செய்தல்.	இறுதி செய்யப்பட்ட செயல்முறைகளின் எண்ணிக்கை	மறுசீரமைப்புக் குழு	31.10.2025	தொடங்கப்படவுள்ளது
						3.1.3.4. மறுசீரமைக்கப்பட்ட செயல்முறையைச் செயல்படுத்துதல்.	செயல்படுத்தப்பட்ட மறுசீரமைக்கப்பட்ட செயல்முறைகளின் எண்ணிக்கை	மறுசீரமைப்புக் குழு	30.11.2025	தொடங்கப்படவுள்ளது
	3.2. இல 4.3. ஆற்றல்மிக்க நிறுவன மேம்பாடு மற்றும் வளங்களின் உகந்த பயன்பாட்டை உறுதி செய்தல்.	பங்காளிகளுடன் அறிவு, நிபுணத்துவம் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பகிர்தல்.	ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட சுங்க செயல்திறன்.	3.2.1. இடர் முகாமைத்தவம் குறித்த பயிற்சி மற்றும் விழிப்புணர்வு	31.12.2025	3.2.1.1. தேர்வுத்திறன் குறித்த உள்ளகப் பயிற்சிகளை நடத்துதல்.	மேற்கொள்ளப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை	தேர்வுத்திறன் குழு	4/ வருடம் 31.12.2025	04 பயிற்சிகள்
				3.2.2. ARMS குறித்த பயிற்சி மற்றும் விழிப்புணர்வு	31.12.2025	3.2.2.1. RMD பணியாளர்களுக்காக ARMS செயல்பாடுகள் குறித்த பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு அமர்வுகளை நடத்துதல்.	மேற்கொள்ளப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை	தேர்வுத்திறன் குழு	4/ வருடம் 31.12.2025	04 பயிற்சிகள்
						3.2.2.2. பிற செயல்பாட்டுப் பணியாளர்களுக்காக ARMS செயல்பாடுகள் குறித்த பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு அமர்வுகளை நடத்துதல்.	மேற்கொள்ளப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை	தேர்வுத்திறன் குழு	1/ வருடம் 30.11.2025	பிரகடனம், முதலீட்டுச் சபை ஒருங்கிணைப்பு, மத்திய சரக்கு பரிசோதனை பணிப்பம், பெறுமதி மதிப்பீடு ஆகியவற்றுக்கான 04 பயிற்சிகள்
				3.2.3. AEO திட்டம் குறித்த	31.12.2025	3.2.3.1. விண்ணப்பங்களைப் பரிசீலித்தல் மற்றும் சரிபார்த்தல் குறித்து சுங்கப்	விழிப்புணர்வு அமர்வுகளின் எண்ணிக்கை	AEO குழு	4/வருடம் 31.12.2025	4 அமர்வுகள்

இலக்கு	குறிக்கோள்	உபாயம்	விளைவு	செயல்பாடு	செயல்பாடு நிறைவு திகதி	நடவடிக்கை	முக்கிய செயல்பாட்டுக் குறியீடு	பொறுப்பு	செயல் முடிவடையும் திகதி	2025.12.31இல் இருந்தவாறான செயலாற்றுகை
				பயிற்சி மற்றும் விழிப்புணர்வு		பணியாளர்களுக்காக விழிப்புணர்வு அமர்வுகளை நடத்துதல்.				
						3.2.3.2. பொருளாதாரச் செயல்பாட்டாளர்களுக்காக விழிப்புணர்வு அமர்வுகளை நடத்துதல்.	விழிப்புணர்வு அமர்வுகளின் எண்ணிக்கை	AEO குழு	1/வருடம் 30.11.2025	06 அமர்வுகள்
						3.2.3.3. அதிகாரிகளை AEO சரிபார்ப்பாளர்களாக அங்கீகரித்தல்.	அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை	AEO குழு	31.12.2025	அதிகாரிகள் பற்றாக்குறையால் நிறைவு செய்ய முடியவில்லை

மூலம் : இடர் முகாமைத்துவ பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.4.3 சட்ட விவகாரங்கள் பணிப்பகம்

8.4.3.1 அறிமுகம்

சட்ட விவகாரங்கள் பணிப்பகம், திணைக்களத்தின் முதன்மை சட்ட ஆலோசகராக செயல்படுகிறதுடன் இப்பணிப்பகம் அனைத்து சட்ட மற்றும் வழக்கு தொடர்பான விவகாரங்களையும் கையாளுகிறது. இது 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10 ஆம் திகதி வெளியிடப்பட்ட 231 ஆம் இலக்க திணைக்களக் கட்டளையின் கீழ் நிறுவப்பட்டது.

8.4.3.2 குறிக்கோள்

- தேவையான சட்டக் கருத்துரைகளை பிற பிரிவுகள் / பணிப்பகங்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்தல்.
- திணைக்களத்தின் சகல சட்ட மற்றும் வழக்கு தொடர்பான விவகாரங்களும் உரிய முறையில் கவனிக்கப்படுவதை உறுதி செய்தல்.

8.4.3.3 தொழிற்பாடுகள்

- திணைக்கள அதிகாரிகளுக்கு அவர்கள் கையாளக்கூடிய சட்டப் பிரச்சினைகள் குறித்து ஆலோசனை வழங்குதல்.
- பிற பிரச்சினைகள் குறித்து திணைக்களம் சார்பாக சட்ட மா அதிபர் நாயக்கதின் ஆலோசனையைப் பெறுதல்.
- சட்ட திருத்தம் தொடர்பாக சட்ட வரைஞர் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து செயற்படல்.
- சட்டக் கையேட்டைத் தொகுத்து, அதனை அவ்வப்போது புதுப்பித்தல்.
- வழக்குகளின் சுருக்கங்களைச் சேகரிக்கும் நோக்கில், திணைக்களத்தில் உள்ள அனைத்து வழக்குக் கோப்புகளையும் கையாளுதல்.
- விசாரணைகள் மற்றும் ஆய்வுகளை நடத்துவதற்கான நடைமுறைகள் தொடர்பான மேம்பாடுகளைப் பரிந்துரைத்தல்.
- சுங்கச் சட்டத்தை தொடர்ச்சியாக ஆய்வு செய்தல்.
- சர்வதேச சட்டம் தொடர்பான விடயங்களைக் கவனித்தல் - சர்வதேச பேரவைகள், உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்.

அட்டவணை 8.4.3.1 : தற்போதைய பணியாளர்கள்

	தற்போதைய பணியாளர்களின் எண்ணிக்கை
சுங்க பணிப்பாளர்	1
சிரேஷ்ட சுங்க பிரதிப் பணிப்பாளர்	1
சுங்க பிரதிப் பணிப்பாளர்	2
பிரதி சுங்க அத்தியட்சகர்	0
உதவி சுங்க அத்தியட்சகர்	6
சுங்க பரிசோதகர்	2
சுங்க காவலர்	1
முகாமைத்துவ சேவைகள் அலுவலர்	2
வாகன ஓட்டுநர்	2
அலுவலக உதவியாளர்	2
மொத்தம்	**19**

மூலம் : சட்ட விவகாரங்கள் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.4.3.2 : செயலாற்றுகை மீளாய்வு - 2025

2025 ஆண்டில் வழங்கப்பட்ட சட்டக் கருத்துகள் மற்றும் கலந்துகொண்ட கலந்தாய்வுகள்		
1	சட்ட விவகாரங்கள் பணிப்பகத்திடமிருந்து பெறப்பட்ட உள்ளக சட்ட ஆலோசனைகள்	105
2	சட்ட மா அதிபர் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட சட்டக் ஆலோசனைகள எண்ணிக்கை	28
3	சட்ட மா அதிபர் திணைக்களத்துடன் மேற்கொள்ளப்பட்ட கலந்தாய்வுகளின் எண்ணிக்கை	109
பதிவு செய்யப்பட்ட நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கை		
1	உச்ச நீதிமன்ற விண்ணப்பங்கள்	09
2	மேல்முறையீட்டு நீதிமன்ற விண்ணப்பங்கள்	75
3	மாவட்ட நீதிமன்ற விண்ணப்பங்கள்	03
4	உயர் நீதிமன்ற விண்ணப்பங்கள்	02
	மொத்த வழக்குகளின் எண்ணிக்கை	**89**
31.12.2025 இல் இருந்தவாறாக நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகள்		
	மொத்த நிலுவையில் உள்ள வழக்குகள்	317
இறுதி செய்யப்பட்ட உச்ச நீதிமன்ற மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்ற விண்ணப்பங்கள்		
1	உச்ச நீதிமன்ற விண்ணப்பங்கள்	13
2	மேல்முறையீட்டு நீதிமன்ற விண்ணப்பங்கள்	19
	தள்ளுபடி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை	32
பிற சட்ட விடயங்கள்		
1	உதவியளிக்கப்பட்ட உயர் நீதிமன்றம் / மாவட்ட நீதிமன்றம் / மாஜிஸ்திரேட் நீதிமன்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை	100
2	உதவியளிக்கப்பட்ட சர்வதேச ஒப்பந்தங்களின் எண்ணிக்கை	06
3	உதவியளிக்கப்பட்ட உள்நாட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை	05

மூலம் : சட்ட விவகாரங்கள் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.4.4 ஏற்றுமதி பணிப்பகம்

8.4.4.1 அறிமுகம்

ஏற்றுமதிகள் பணிப்பகமானது, மாற்றியேற்றுதல் ஊடாக சர்வதேச சட்டபூர்வமான சரக்குப் போக்குவரத்தினை ஊக்குவிப்பதன் மூலம் குறித்த நடைமுறைகளை எளிமைப்படுத்தல் மற்றும் ஏற்றுமதிச் சுங்கப்பிரகடனங்கள் தொடர்பில் இ-செயலாக்கத்தினை அறிமுகம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் ஊடாக நேரடி ஏற்றுமதிகள் மற்றும் மீள்-ஏற்றுமதிகளுக்கான வெளியாக்கல்களை இலகுபடுத்தும் வசதிகளை வழங்குகிறது. மேலும் இப் பணிப்பகமானது நாட்டின் காலாசார, சுற்றாடல் மற்றும் சமூகம் சார்ந்த நலன்களைப் பாதுகாப்பதற்கான பொறுப்பினையும் இப்பணிப்பகம் கொண்டுள்ளது.

8.4.4.2 பிரதான தொழிற்பாடுகள்

- கடல் மார்க்கமாகவும் ஆகாய மார்கமாகவும் நாட்டிலிருந்து எற்றுமதி செய்வதற்கு தொடர்புபட்ட சகல விடயங்களுக்கும் ஆஜராகுதல்.
- நாட்டிலிருந்தான சகல பொருட்களையும் ஏற்றமதி செய்வதற்கு தொடர்புபடும் சகல விடயங்களுடனும் தொடர்பினை வைத்திருத்தல்
- பாதுகாப்புக் காரணம் கருதியும் மற்றும் சுங்க நோக்கங்களுக்காகவும் ஏற்றுமதிச் சரக்குகளை பரிசோதனை செய்தல்.
- ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் ஏற்றுமதித் தீர்வை மற்றும் செஸ் வரி ஆகியவற்றினை சேகரித்தல்.
- கொழும்பு மற்றும் அதனைச் சுற்றுப்புற பிரதேசங்களில் அமையப்பெற்றள்ள கொள்கலன் கையாளும் நிலையங்களை முகாமை செய்தல்
- MCC களஞ்சியசாலைகளை முகாமை செய்தல்.
- கானே(Carnet) ஊடாக தற்காலிய இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை இலகுபடுத்தல்.
- மீள் கொடுப்பனவு கோரிக்கைகள் தொடர்பில் அங்கீகாரம் வழங்குதல்.
- கப்பல் சான்றிதழ்களை வினியோகித்தல்.
- தீர்வைத் தள்ளுபடி தொடர்பிலான ஆவணங்களை சான்றுபடுத்தல்.
- இலவச மீள் இறக்குமதிச் சான்றிதழினை பதிவு செய்தல்.
- மூலப்பொருட்களது ஒழுங்குவிதிகள் தொடர்பில் வர்த்தகத் திணைக்களத்திற்கு கப்பலேற்றுகையினை சான்றுபடுத்ததுதல்.
- பொருட்களை இறக்கி ஏற்றல் தொடர்பிலான செயற்பாடுகளை இலகுபடுத்தல்.
- தேசிய வியாபார புள்ளி விபரங்களை வழங்குதல்.
- தேசத்தின் நலன் கருதி சமூக பொருளாதார, கலாச்சார மற்றும் சுற்றாடல் ஆகியவற்றினை பாதுகாத்தல்.
- ஏனைய அரச முகவர்கள் மற்றும் தனியார் துறையினர் அடங்கலாக திணைக்களத்துடன் தொடர்புடைய சகலருடனுமான உறவினை விருத்தி செய்தல்.
- வியாபார செய்முறைகளை திறமையாகவும் வினைத்திறனுடனும் தொடர்ந்து விருத்தி செய்வதற்கு தேவையான முறைமைகளையும் நடைமுறைகளையும் அமுல்படுத்தல்.
- ஏற்றுமதி வியாபாரத்தினை இலகுபடுத்துவதற்காக தகவல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பாடல்களை முடியுமனவரை உபயோகித்தல்.

8.4.4.3 செயலாற்றுகை

அட்டவணை 8.4.4.1 : அரசிறை சேகரிப்பு - 2025

	பெறுமதி (ரூபா)
ஏற்றுமதித் தீர்வைகள்	16,692,578
ஏற்றுமதி அபிவிருத்திச் சபை செஸ் வரி	1,346,168,058
செஸ் வரி - இறப்பர்	6,645,437
செஸ் வரி - தேயிலை	563,950,418
தேயிலை மருத்துவ உதவி செஸ் வரி	493,042
செஸ் வரி - தெங்கு	182,927,822
உரிமத் தொகை	31,061
ஏற்றுமதி குழு கட்டணம்	73,238,400
வெளிநிலை பரிசோதனைக் கட்டணம்	
சிறிலங்கள் எயாலைன் கட்டணம்	2,010,601
திருத்தம் தொடர்பிலான கட்டணங்கள், திருத்தம் தொடர்பிலான அபராதங்கள் மற்றும் இரத்துச் செய்தல் தொடர்பிலான கட்டணங்கள்	9,548,310
மேலதிக நேரக் கட்டணம்	42,302,689
கப்பலேற்றல் சான்றிதழ் கட்டணங்கள்	172,500
கணனிக் கட்டணம்	38,147,250

மூலம் : ஏற்றுமதி பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

சமர்ப்பிக்கப்பட்ட மற்றும் முடிவுறுத்தப்பட்ட சுங்கப் பிரகனங்களது எண்ணிக்கை

i. ஏற்றுமதி அலுவகம் - 83,450
ii. விமானச் சரக்கு - 61,059
மொத்தம் - 144,509

குழு தொடர்பிலான மனுக்கள்

பரிசோதனைகளது எண்ணிக்கை - 11,157

நடைமுறைக் கணக்குகள்

i. முற்செலுத்துகைக்கணக்குளை வைத்திருப்பவர்களது எண்ணிக்கை - 149
ii. செயற்படுத்தப்படும் நடைமுறைக்கணக்களது எண்ணிக்கை - 83
iii. இக்காலப்பகுதியிலான சேமிப்பு (ரூபா) - 26,309,241,780
iv. இக்காலப்பகுதியில் பற்றுவைக்கப்பட்ட மொத்தத் தொகை (ரூபா) - 26,380,474,516

வேண்டுகோளுக்கிணங்க வினியோகிக்கப்பட்ட FRIC களது எண்ணிக்கை - 525
களஞ்சிய பற்றுச்சீட்டுக்களின் எண்ணிக்கை - 95
வினியோகிக்கப்பட்ட கப்பல் சான்றிதழ்களது எண்ணிக்கை - 690
சேகரிக்கப்பட்ட கப்பல் சான்றிதழ்கள் கட்டணங்கள் (ரூபா) - 172,500
சுங்க குற்றங்கள் தொடர்பில் அறவிடப்பட்ட அபராதம் (ரூபா) - 1,750,000

8.4.5 அரசிறை மற்றும் சேவைகள் (மாகாணம்) பணிப்பகம்

8.4.5.1 அறிமுகம்

இலங்கைச் சுங்கத்தின் அரசிறை மற்றும் சேவைகள் (மாகாணம்) பணிப்பகமானது, சுங்க சீர்திருத்தங்கள் மற்றும் நவீனமயமாக்கல் திட்டத்தின் ஊடாக 2010 ஆகஸ்ட் மாதத்தில் பிராந்தியக் கொத்தணியின் கீழ் நிறுவப்பட்டது நிறுவப்பட்டது. இப்பணிப்பம் சுங்க தலைமையலுவலக கட்டிடத்தின் 7 வது மாடியில் அமைந்துள்ளது.

8.4.5.2 இப்பணிப்பகத்தின் கட்டமைப்பு

- மாகாண பணிப்பகமானது சுங்க மேலதிக பணிப்பாளர் (டிஜிட்டல் மயமாக்கம்) நாயகத்தினால் நிர்வகிக்கப்படுகிறது
- சுங்க பணிப்பாளர் (மாகாணம்) அனைத்து மாகாண அலுவலகங்களுக்கும் பொறுப்பானவராவார்.

8.4.5.3 நிறுவன கட்டமைப்பு



8.4.5.4 அரசிறை மற்றும் சேவைகள் (மாகாணம்) பணிப்பகத்தினால் நிறைவேற்றப்படும் கடமைகள்

- சுங்க வரி மற்றும் பிற அறவீடுகளை சேகரிக்கும் செயற்பாட்டினை நிர்வகித்தல்
- பிராந்தியக் கொத்தணியில் மேற்கொள்ளப்படும் வர்த்தகம் மற்றும் தொழில்களை எளிதாக்குதல்
- பயணிகளுக்கு விரைவான வெளியாக்கலினை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு வசதி செய்தல்
- சுங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் பிராந்தியத்தில் வருவாய் மற்றும் சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள் தொடர்பான பிற சட்டங்களின் கீழ் செய்யப்படும் குற்றங்களை விசாரித்து வழக்குத் தொடுப்பதன் மூலம் சட்டத்தை அமுல்படுத்துதல்.
- சுங்க நடவடிக்கைகளில் ஈடுபடும்போது இலங்கை சுங்கத்தின் பிற பணிப்பகங்களுடன் ஒருங்கிணைத்து செயற்படல்.

8.4.5.5 செயலாற்றுகை பற்றிய சாராம்சம்

அட்டவணை 8.4.5.1 : 2025ஆம் ஆண்டிலான அரசிறை சேகரிப்பு

விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்கள்

பிரதான செயலாற்றுகை குறிகாட்டி	ம.ரா.ச.விமான நிலையம்	பலாலி	காங்கேசன்துறை	மொத்தம்
சேகரிக்கப்பட்ட சுங்கத் தீர்வை மற்றும் பிற அறவீடுகள் (ரூபா)	154,193.00	2,303,989.00	94,820,496.00	97,278,678.00
அபராதங்கள் (ரூபா)	30,100.00	868,601.00	27,223,500.00	28,122,201.00
சேகரிக்கப்பட்ட மேலதிக நேர மற்றும் ஏனைய கட்டணங்கள் (ரூபா)	1,332,550.00	1,119,000.00	2,322,200.00	4,773,750.00
மொத்தம் (ரூபா)	**1,516,843.00**	**4,291,590.00**	**124,366,196.00**	**130,174,629.00**

உப தடுப்பு அலுவலகங்கள்

பிரதான செயலாற்றகை குறிகாட்டி	ஹம்பாந்தோட்டை	காலி	கொக்கல	திருகோணமலை	காங்கேசன்துறை	மொத்தம்
சேகரிக்கப்பட்ட சுங்கத் தீர்வை மற்றும் பிற அறவீடுகள் (ரூபா)	7,788,213.92	751,922.00	-	325,778.00	-	8,865,913.92
அபராதங்கள் (ரூபா)	555,000.00	230,000.00	-	714,196.00	210,000.00	1,709,196.00
சேகரிக்கப்பட்ட மேலதிக நேர மற்றும் ஏனைய கட்டணங்கள் (ரூபா)	34,720,839.40	10,207,722.00	-	23,814,216.00	1,095,000.00	69,837,777.40
மொத்தம்(ரூபா)	**43,064,053.32**	**11,189,644.00**	**-**	**24,854,190.00**	**1,305,000.00**	**80,412,887.32**

பயணிகள் உடன் வராத பொதி களஞ்சியசாலைகள்

பிரதான செயலாற்றகை குறிகாட்டி	ட்றைகோ - காலி	ட்றைகோ - குருநாகல	சீ.எஸ்.எல் - கண்டி	மொத்தம்
சேகரிக்கப்பட்ட சுங்கத் தீர்வை மற்றும் பிற அறவீடுகள் (ரூபா)	31,993,482.00	45,869,377.00	31,200,111.00	109,062,970.00
அபராதங்கள் (ரூபா)	564,527.00	3,201,610.00	5,819,540.00	9,585,677.00
சேகரிக்கப்பட்ட மேலதிக நேர மற்றும் ஏனைய கட்டணங்கள் (ரூபா)	222,450.00	7,146,900.00	687,353.00	8,056,703.00
மொத்தம் (ரூபா)	**32,780,459.00**	**56,217,887.00**	**37,707,004.00**	**126,705,350.00**

தபால் பொதி பெறுமதி மதிப்பிடல் பிரிவுகள்

பிரதான செயலாற்றகை குறிகாட்டி	காலி	கண்டி	திருகோணமலை	யாழ்ப்பாணம்	மொத்தம்
சேகரிக்கப்பட்ட சுங்கத் தீர்வை மற்றும் பிற அறவீடுகள் (ரூபா)	15,266,408.00	32,418,868.00	1,166,770.00	22,404,406.00	71,256,452.00
அபராதங்கள் (ரூபா)	934,424.00	-	-	724,250.00	1,658,674.00
சேகரிக்கப்பட்ட மேலதிக நேர மற்றும் ஏனைய கட்டணங்கள் (ரூபா)	17,600.00	25,500.00	-	38,350.00	81,450.00
மொத்தம் (ரூபா)	**16,218,432.00**	**32,444,368.00**	**1,166,770.00**	**23,167,006.00**	**72,996,576.00**

மூலம் : அரசிறை மற்றும் சேவைகள் (மாகாணம்) பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.4.5.2 பயணிகளுக்கான வசதி

பயணிகள் உடன் வராத பொதி களஞ்சியசாலைகள்

பிரதான செயலாற்றகை குறிகாட்டி		ட்றைகோ - காலி	சீ.எஸ்.எல் - கண்டி	ட்றைகோ - குருநாகல	மொத்தம்
வெளியாக்கப்பட்ட பொதிகளது எண்ணிக்கை	ப.உ.வ. பொதி	14182	17511	27,487	59,180
	அன்பளிப்பு	5908	7902	9500	23,310
பொதி வெளியாக்கலுக்கு எடுக்கப்பட்ட காலநேரம் (நிமிடம்) *சரக்குகளை பொறுத்தது		45 நிமிடம்	20 நிமிடம்	34 நிமிடம்	பொருந்தாது

விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்கள்

பிரதான செயலாற்றகை குறிகாட்டி	ம.ரா.ச.விமான நிலையம்	பலாலி	காங்கேசன்துறை	மொத்தம்
வழங்கப்பட்ட விமான / கப்பல் வெளியாக்கல் அனுமதிகளின் எண்ணிக்கை	688	561	183	1,432
வெளியாக்கப்பட்ட பயணிகளது எண்ணிக்கை	148,761	29,462	24,578	202,801
பொதிகளை வெளியாக்குவதற்கான நேர காலம்(நிமிடங்கள்)	பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, பொருட்களை அகற்றும் நேரம் விமானத்திற்கு விமானம் வேறுபடும்	பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, பொருட்களை அகற்றும் நேரம் விமானத்திற்கு விமானம் வேறுபடும்	பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து கப்பலுக்குக் கப்பல் மாறுபடும்.	-

உப தடுப்பு அலுவலகங்கள்

பிரதான செயலாற்றகை குறிகாட்டி	ஹம்பாந்தோட்டை	காலி	கொக்கல	திருகோணமலை	காங்கேசன் துறை	மொத்தம்
வழங்கப்பட்ட கப்பல் வெளியாக்கல் அனுமதிகளின் எண்ணிக்கை	926	308	-	153	183	1,566
வெளியாக்கப்பட்ட விமான பணியாளர்களின் எண்ணிக்கை	இல்லை	11468	-	1218	-	12,686
பொதிகளை அகற்றவதற்கான கால நேரம்	ஒருவருக்கு ஒருவர் மாறுபடும் .	பொதிகள் அகற்றுவதற்கான நேரம் விமான பணியாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது	-	-	-	பொருந்தாது

தபால் பொதி பெறுமதி மதிப்பிடல் பிரிவுகள்

பிரதான செயலாற்றகை குறிகாட்டி	காலி	கண்டி	திருகோணமலை	யாழ்ப்பாணம்	மொத்தம்
அகற்றப்பட்ட பொதிகளின் எண்ணிக்கை	7,075	9,198	3,022	7,105	26,400
பொதிகளை அகற்றவதற்காக எடுக்கப்பட்ட நேரம் (நிமிடம்)	9	15	15	15	பொருந்தாது

மூலம் : அரசிறை மற்றும் சேவைகள் (மாகாணம்) பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.4.5.3 சுற்றுச்சூழல்-சமூகப் பாதுகாப்பு

விமான நிலையங்கள் மற்றும் முறைமுகங்கள்

பிரதான செயலாற்றகை குறிகாட்டி	ம.ரா.ச.விமான நிலையம்	பலாலி	காங்கேசன்துறை	மொத்தம்
பரிசோதிக்கப்பட்டு வெளியாக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை	148,761	29,462	24,578	54,040
அபராதங்கள்	30,100.00	868,601.00	27,223,500.00	28,122,201.00
பறிமுதல்களின் எண்ணிக்கை	-	40	42	82
தடுத்துவைக்கப்பட்டுள்ள பொருட்களது எண்ணிக்கை	12	37	109	158

உப தடுப்பு அலுவலகங்கள்

பிரதான செயலாற்றகை குறிகாட்டி	காலி	கொக்கல	திருகோணமலை	ஹம்பாந்தோட்டை	காங்கேசன்துறை	மொத்தம்
பறிமுதல்களின் எண்ணிக்கை	-	-	-	-	3	3
தடுத்துவைக்கப்பட்டுள்ள பொருட்களது எண்ணிக்கை	-	-	-	-	12	12

பயணிகள் உடன் வராத பொதி களஞ்சியசாலைகள்

பிரதான செயலாற்றகை குறிகாட்டி	ட்றைகோ - காலி	ட்றைகோ - குருநாகல	சீ.எஸ்.எல் - கண்டி	மொத்தம்
அபராதங்கள் (ரூபா)	564,527.00	3,201,610.00	5,819,540.00	9,585,677.00
பறிமுதல்களின் எண்ணிக்கை	37	35	56	128
தடுத்துவைக்கப்பட்டுள்ள பொருட்களது எண்ணிக்கை	112	216	240	568

தபால் பொதி பெறுமதி மதிப்பிடல் பிரிவுகள்

பிரதான செயலாற்றகை குறிகாட்டி	காலி	கண்டி	திருகோணமலை	யாழ்ப்பாணம்	மொத்தம்
பரிசோதிக்கப்பட்ட பொருட்களது எண்ணிக்கை	7,075	9,198	3022	7,105	26,400
அபராதங்கள்	-	-	-	719,750	719,750
பறிமுதல்களின் எண்ணிக்கை	12	-	-	25	37
தடுத்துவைக்கப்பட்டுள்ள பொருட்களது எண்ணிக்கை	22	15	19	44	100

மூலம் : அரசிறை மற்றும் சேவைகள் (மாகாணம்) பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

உரு 8.4.5.1 : அரசிறை குறித்த ஒப்பீட்டாய்வு



மூலம் : அரசிறை மற்றும் சேவைகள் (மாகாணம்) பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

- 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது விமான நிலையங்களிலிருந்து 80.52% வருவாய் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது உப தடுப்பு அலுவலகங்களிலிருந்து 4.98% வருவாய் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது ப.உ.வ.பொதி களஞ்சியசாலைகளிலிருந்து 36.91% வருவாய் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது அஞ்சல் மதிப்பீட்டு கிளைகளிலிருந்து 3.84% வருவாய் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

8.4.5.6 2025ஆம் வருட செயல் திட்டம் குறித்த சாதனைகள்

2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒட்டுமொத்தமாக 17.83% வருவாய் அதிகரிப்பு அடையப்பெற்றுள்ளது.

01 வருவாய் குறிக்கோளின் கீழான பிரதான செயற்பாடுகள்	
பிரதான செயல்பாடு	**தற்போதைய முன்னேற்றம்**
1.1 கண்காணிப்பு மற்றும் பயணிகள் உடனான பொருட்கள் பரிசோதனை 1.1.1 தபால் பொருள் பெறுமதி மதிப்பிடல் கிளைகளில் உரிய வருவாய்களை அறவிடல். பொருட்களை சோதனை செய்து சரியான வகைப்பாடு மற்றும் பெறுமதி மதிப்பீட்டை திர்மானித்தல். பொருந்தினால், பரிசோதிக்கப்பட்ட பொருட்களிலிருந்து உரிய வருவாயை சேகரித்தல்.	அமுல்படுத்தப்பட்டது. மத்திய அஞ்சல் பரிவர்த்தனையினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து பொதிகளும் சோதனை செய்யப்பட்டு உரிய வருவாய் சேகரிக்கப்பட்டு வருகின்றன. வணிக அளவுகள் என கண்டறியப்பட்டால், அவை தொடர்பில் அபராதம் விதிக்கப்பட்டன.
1.2. JIA மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்தில் (விமானம் மற்றும் படகு) பயணிகளிடமிருந்து உரிய வருவாயை சேகரித்தல் பொருட்களை சோதனை செய்து சரியான வகைப்பாடு மற்றும் பெறுமதி மதிப்பீட்டை தீர்மானித்தல். பொருந்தினால், பரிசோதிக்கப்பட்ட பொருட்களிலிருந்து உரிய வருவாயை சேகரித்தல். தேவைப்பட்டால் சுங்க கட்டளைச் சட்டத்தினைப் பிரயோகித்தல்	அமுல்படுத்தப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்திலும், காங்கேசன்துறை துறைமுகத்திலும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
1.1.3. உப தடுப்பு அலுவலகங்களிலிருந்து உரிய வருவாய்களை சேகரித்தல்	அமுல்படுத்தப்பட்டது
1.2 மேலதிக நேரக் கட்டணங்களை சேகரித்தல் 1.2.1 மேலதிக நேரக் கட்டணங்களைப் பதிவுசெய்து உரிய கட்டணங்களை சேகரித்தல்.	அமுல்படுத்தப்பட்டது

02. வர்த்தக வசதியளித்தல் குறிக்கோளின் கீழான பிரதான செயற்பாடுகள்	
பிரதான செயல்பாடு	**தற்போதைய முன்னேற்றம்**
2.1. பயணிகளுக்கு வசதியாக தொந்தரவு இல்லாத வெளியாக்கல் செயல்முறையை உறுதி செய்தல்	அமுல்படுத்தப்பட்டது
2.2. பயணிகளுக்கு வசதியாக தொந்தரவு இல்லாத வெளியாக்கல் செயல்முறையை உறுதி செய்தல்	அமுல்படுத்தப்பட்டது
2.3. தம்முடன் கொண்டுவரும் பொருட்களின் தடையற்ற வெளியாக்கல் செயல்முறையை உறுதி செய்தல்	அமுல்படுத்தப்பட்டது
2.4. பயணிகள் தீர்வையற்ற வசதிகளில் கொள்முதல்களை செய்வதற்கு அனுமதித்தல்	அமுல்படுத்தப்பட்டது
2.7. காங்கேசன்துறைத் துறைமுகத்தில் சரக்கு செயல்பாடு/பயணிகள் அனுமதியை எளிதாக்குதல் 1. HRM உடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்வதன் மூலம் பொருள் செயல்பாட்டிற்கு போதுமான பணியாளர்களை ஒதுக்குதல் 2, பொருள் கொள்வனவு பணிப்பகத்தின் ஒருங்கிணைப்புடன் பௌதீக வளங்களை வழங்குதல்	படகு சேவையின் செயல்பாடுகள் சீராக நடைபெற்று வருகின்றன. ABF இடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்ட இரண்டு தாழ்வான படுக்கை முறை எக்ஸ்-ரே ஸ்கேனர் இயந்திரங்கள் நிறுவப்பட்டு தற்போது செயல்பாட்டில் உள்ளன.

03. சுற்றுச் சூழல் - சமூக பாதுகாப்பு	
பிரதான செயல்பாடு	**தற்போதைய முன்னேற்றம்**
3.1. 3.1.1. தடைசெய்யப்பட்ட மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களைத் தடுத்து வைப்பதற்கான சட்டத் தேவைகளுடன் இணங்குதல் (யாழ்ப்பாணம் - தபால் கிளை)	அமுல்படுத்தப்பட்டது.
3.1.2. JIA மற்றும் KKS துறைமுகத்தில் (விமானம் மற்றும் படகு) தடைசெய்யப்பட்ட மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள் நாட்டிற்குள் வருவதனை கட்டுப்படுத்துதல்	அமுல்படுத்தப்பட்டது.

04. நிறுவன மேம்பாட்டின் கீழான பிரதான செயற்பாடுகள்	
பிரதான செயல்பாடு	**தற்போதைய முன்னேற்றம்**
4.1. மாகாண அலுவலகங்களுடன் ஒருங்கிணைத்து தொடர்பாடல்களை மேற்கொள்ளுதல். 4.1.1. பிற பணிப்பகங்கள் மற்றும் பங்கீடுபாட்டாளர்களின் தேவைக்கேற்ப மாகாண அலுவலகங்களுடன் சரியான நேரத்தில் தொடர்பு கொள்ளுதல். 4.2.2. தேவைக்கேற்ப மாகாண அலுவலகங்களில் சுமூகமான செயல்பாட்டை உறுதி செய்ய பிற பணிப்பகம் மற்றும் பங்கீடுபாட்டாளர்களுடன் ஒருங்கிணைத்தல்.	உடனடி செய்தி அனுப்புதல், விரைவான புதுப்பிப்புகள் மற்றும் நிகழ்நேர ஒத்துழைப்புக்கான தொடர்பு கருவியாக WhatsApp ஐப் பயன்படுத்துதல். சரியான நேரத்தில் மற்றும் பயனுள்ள தகவல்தொடர்புகளை வழங்குவதில் 100% வெற்றி விகிதத்தை அடைந்துள்ளது.
4.2. மாகாண அலுவலகங்களில் பணியாளர்களை வலுப்படுத்துதல் 4.2.1. யாழ்ப்பாணப் பகுதியில் முறையான சுங்க நடவடிக்கைகளை உறுதி செய்ய போதுமான பணியாளர்களைக் கோருதல்	திணைக்களத்தின் தற்போதைய பணியாளர் பற்றாக்குறை காரணமாக, அனைத்து மாகாண அலுவலகங்களும் குறைந்தபட்ச ஊழியர்களுடன் செயல்படுகின்றன.
4.3. ஊழியர்களுக்கு போதுமான மற்றும் சரியான தங்குமிட வசதியை உருவாக்குதல் 4.3.1. யாழ்ப்பாணப் பிராந்திய ஊழியர்களுக்கு போதுமான மற்றும் சரியான தங்குமிட வசதிகளை வழங்க சுங்க நிர்வாகத்தின் கவனத்தை ஈர்த்தல் 4.3.2. திட்டத்தை முடிக்க பொருள் கொள்வனவு பணிப்பகத்துடனான ஒருங்கிணைந்து செயற்படல் 4.3.3. பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்தில் ஊழியர்களுக்காகப் போதுமான மற்றும் முறையான தங்குமிட வசதியை நிர்மானிப்பதற்கான நடவடிக்கைகளைத் தொடங்குதல்.	இப்பிராந்தியத்தில் சுங்கத்திற்கு சொந்தமான நிலங்களாக பதின்மூன்று நிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஓய்வறைகளை அமைப்பதற்கான பொருத்தமான நிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாமல், ஹம்பாந்தோட்டை, மத்தளை மற்றும் காங்கேசன்துறை ஆகிய பகுதிகளிலும் அதிகாரிகளுக்கான ஓய்வறை வசதிகளை நிர்மானிப்பது குறித்து தற்போது கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன. எதிர்காலத்தில், தேவையான குறிப்பிட்ட கோரிக்கைகளை சேகரித்தல், கட்டிட வடிவமைப்புகளை இறுதி செய்தல் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் ஒருங்கிணைந்து கட்டுமானப் பணிகளை தொடங்குவதற்கு கவனம் செலுத்தப்படும்.

8.5 மனித வளங்கள் கொத்தணி

8.5.1 மனிதவள முகாமைத்துவப் பணிப்பகம்

8.5.2 மனிதவள அபிவிருத்திப் பணிப்பகம்

8.5.3 பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கல் பணிப்பகம்

8.5.4 பணியாளர் சேவைகள் பணிப்பகம்

8.5.1 மனிதவள முகாமைத்துவ பணிப்பகம்

8.5.1.1 அறிமுகம்

சுங்கத் திணைக்களத்தின் குறிக்கோள்களை அடைந்துகொள்ளும் நோக்கில் திணைக்களத்தின் தொழிற்பாடுகளை பயனுறுதிமிக்க முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கத் தேவையான மனிதவளத்தினை முகாமைத்துவம் செய்வதே இப்பணிப்பகத்தின் பிரதான பொறுப்பாகும்.

இப் பணிப்பகமானது, திணைக்களத்தின் பணிநோக்கினை நிறைவேற்றுவதன் மூலம் அதன் தொலைநோக்கினை அடைந்துகொள்வதற்கான திறமையும் தகைமையும் உடைய நபர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் இந்நோக்கத்திற்குத் தேவையான மூலோபாயத் திட்டத்தினை வகுத்தல் போன்ற விடயங்களில் ஈடுபட்டு வருகிறது. மனித வளங்கள் முகாமைத்துவ பணிப்பகமானது, ஊழியர்களின் முழுமையான பங்களிப்பினை பெற்றுக்கொள்வதற்கான பிரயத்தனங்களை எடுக்கின்ற அதேவேளை, அவர்களை ஊக்குவிப்புச் செய்து, அவர்களின் திறமைகளை இனங்கண்டு, மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வினை உரிய வேளையில் வழங்குவதற்குமான பிரயத்தனங்களை எடுத்து வருகின்றது.

மேலும், இப் பணிப்பகமானது, ஆட்சேர்ப்பு, பதவியுயர்வுகள், இடமாற்றம் மற்றும் ஓய்வுபெறுதல் போன்ற விடயங்களுடன் தொடர்புடைய தொழிற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றதுடன் பொதுச் சேவை ஆணைக்குழு, பொது நிருவாக அமைச்சு போன்ற அரச நிறுவனங்களால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படுகின்ற கட்டளைகள், வழிகாட்டல்கள் மற்றும் விதிகளுக்கு இசைவான செயலாற்றுகையினைப் பேணியும் வருகின்றது.

8.5.1.2 பிரதான தொழிற்பாடுகள்

- ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு இணங்க, பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு செய்தலும் பதவியுயர்வுகளை வழங்குதலும்
- ஊழியர் கோவையினைப் பேணல் மற்றும் இரகசியம் பேணல்
- செயலாற்றுகையினை முகாமைத்துவம் செய்தல்.
- அலுவலர்களின் ஆட்சேர்ப்புடன் தொடர்புபட்ட தொழிற்பாடுகளை மேற்கொள்ளல்
- உள்ளக இடமாற்றம் பற்றிய கொள்கையினை அமுல்படுத்தல்
- நட்டஈட்டினை செலுத்துதல் மற்றும் ஊழியர்களது ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை முகாமைத்துவம் செய்தல்
- நிறுவன ரீதியான திட்டங்களை தயாரித்தல்

8.5.1.3 : 2025 ஆம் வருடத்திற்கான செயல் திட்டத்தின் அடிப்படையிலான செயலாற்றுகை

	பிரதான செயற்பாடுகள்	மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை
1.	மேலதிக சுங்க பணிப்பாளர் நாயகம், சிரேஷ்ட சுங்க பணிப்பாளர், சுங்க பணிப்பாளர், சிரேஷ்ட பிரதி சுங்க பணிப்பாளர், பிரதி சுங்க பணிப்பாளர் பதவிகளுக்கான பதவி உயர்வுகள்.	2025ஆம் ஆண்டில், • மேலதி சுங்க பணிப்பாளர் நாயக பதவிகள் 02 இற்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. • சிரேஷ்ட சுங்க பணிப்பாளர் பதவிகள் 04 இற்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. • 14 சுங்க பணிப்பாளர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், 06 சுங்கப் பணிப்பாளர்களுக்கு பதில் கடமை புரிதல் அடிப்படையிலும் மற்றும் ஒருவருக்கு பதவி பொறுப்பைக் கவனித்தல் அடிப்படையிலும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளன. • 13 சிரேஷ்ட பிரதி சுங்க பணிப்பாளர்களுக்கு முழுநேர பதவி பொறுப்பைக் கவனித்தல் அடிப்படையலும் மேலும் 18 பேருக்கு பதில் கடமை புரிதல் அடிப்படையிலும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. • 34 பிரதி சுங்க பணிப்பாளர்களுக்கு முழுநேர பதவி பொறுப்பைக் கவனித்தல் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.
2.	புதிய ஆட்சேர்ப்பு திட்டத்திற்கமைய உதவி சுங்க அத்தியட்சகர் தரம் II ஆம் பதவிக்கான அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்தல்	திறந்த அடிப்படையில் உதவி சுங்க அத்தியட்சகர் தரம் II ஆட்சேர்ப்புக்காக, 2024.03.23 அன்று நடைபெற்ற தேர்வு மற்றும் 2024.09.27, 28, 29 ஆகிய திகதிகளில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில், அப்பதவியில் உள்ள மற்றய 04 வெற்றிடங்களை நிரப்புவதற்கான

	பிரதான செயற்பாடுகள்	மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை
		நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. உதவி சுங்க அத்தியட்சகர்கள் தரம் II பதவியிலுள்ள 200 வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
3.	சுங்கப் பரிசோதகர் பதவிக்கான அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்தல்	2024.02.17 அன்று நடைபெற்ற பரீட்சை மற்றும் 2024.07.27, 28 ஆம் திகதிகளில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சை என்பவற்றின் பெறுபேறுகள் தொடர்பாக, பரீட்சைகள் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட பெறுபேற்று முடிவுகளுக்கிணங்க, சுங்க பரிசோதகர் பதவியில் உள்ள மேலும் 12 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.
4.	சுங்க காவலர் பதவிக்கான அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்தல்	சுங்க காவலர் பதவியிலுள்ள 51 வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
5.	வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகளை நடத்துதல்	• சுங்க பரிசோதகர் தரம் 11 பதவிக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை 2025.09.13 மற்றும் 14 ஆகிய திகதிகளில் நடத்தப்பட்டது. • சுங்க பரிசோதகர் தரம் 1 பதவிக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை 2024 நவம்பர் இல் நடைபெற திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அது 2025.01.26 ஆம் திகதி நடத்தப்பட்டது. • சுங்க உதவி அத்தியட்சகர் தரம் 11 ஆம் பதவிக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை 2024 நவம்பர் இல் நடைபெற திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அது 2025.02.22 மற்றும் 23 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது. • சுங்க காவலர் தரம் 111 ஆம் பதவிக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை 2024 டிசம்பர் இல் நடைபெற திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அது 2025.02.16 ஆம் திகதி நடத்தப்பட்டது. • சுங்க உதவி அத்தியட்சகர் தரம் 11 ஆம் பதவிக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை 2025 டிசம்பரில் நடைபெற திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அது 2026.01.24 மற்றும் 25 ஆம் திகதிகளில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. • சுங்க காவலர் பதவிக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் வாய்மொழித் தேர்வு 2025.11.25 ஆம் திகதி நடத்தப்பட்டது.
6.	நியமனங்களை உறுதிப்படுத்துதல்	பரிந்துரைக்கப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்த 56 உதவி சுங்க அத்தியட்சகர்கள், 28 சுங்க பரிசோதகர்கள் மற்றும் 05 சுங்கக் காவலர்கள் ஆகியோரின் நியமனங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.
7.	ஓய்வு பெறவுள்ள அதிகாரிகளின் ஓய்வூதிய செயலாக்கங்களைப் பூர்த்தி செய்தல்	2025 ஆம் ஆண்டில் 73 அதிகாரிகளின் ஓய்வூதியம் தயாரிப்பது தொடர்பான கடிதங்கள் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. 2025 ஆம் ஆண்டில் 56 அதிகாரிகளின் திருத்தப்பட்ட ஓய்வூதியத்தைத் தயாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
8.	அதிகாரிகளின் உள்ளக இடமாற்ற நடைமுறையை நிறைவு செய்தல்	2025 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், உள்ளக இடமாற்ற நடைமுறை இரண்டு முறை மேற்கொள்ளப்பட்டது.
9.	செயலாற்றுகை மதிப்பீட்டின் அடிப்படையில் வருடாந்த சம்பள உயர்வுகளை வழங்குவதற்கான செயலாக்கத்தினை நிறைவு செய்தல்	10/2025ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கிணங்க, சுங்கத் திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களுக்குமான சம்பள மாற்றங்களைத் தயாரிக்கும் பணி 2026.01.01 இற்குள் நிறைவடைந்துள்ளது. 2025 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், சுங்கத் திணைக்களத்தின் 1,775 உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டது.
10.	செயலாற்றுகையின் அடிப்படையில் பணியாளர்களுக்கு ஊக்குவிப்புத்தொகைகள் வழங்கும் செயல்முறையை நிறைவு செய்தல்	2025 ஆம் ஆண்டில், தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்த அனைத்து அலுவலர்களுக்கும் ஊக்குவிப்புத்தொகைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய ஊக்குவிப்புத் தொகைகள் இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ளன.

	பிரதான செயற்பாடுகள்	மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை
11.	மனித வளங்கள் முகாமைத்துவ பணிப்பகத்தின் வழக்கமான செயல்பாடுகளை நிறைவு செய்தல்	2025 ஆம் ஆண்டில், தினசரி தபால் மூலம் 21,596 கடிதங்கள் பெறப்பட்டுள்ளதுடன் 23,202 கடிதங்கள் வினியோகிக்கப்பட்டன. • 201 வாகன அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. • 256 அலுவலர்களின் இடர் கடன் விண்ணப்பங்கள் பணம் செலுத்தும் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளன. • 135 அலுவலர்கள் வெளிநாட்டு கடமை விடுமுறை பெற்றுள்ளதுடன் 10 அலுவலர்கள் நீண்ட காலத்திற்கு பிரத்தியேக வெளிநாட்டு விடுமுறை பெற்றுள்ளனர், அதே நேரத்தில் 453 அலுவலர்கள் குறுகிய காலத்திற்கு பிரத்தியேக வெளிநாட்டு விடுமுறை பெற்றுள்ளனர். • 03/2025 மற்றும் 03/2025(1) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கமைய, W&OP திட்டத்தில் திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களின் மீள் பதிவு தொடங்கப்பட்டது. • மேலும், இந்த பணிப்பகம் இக்காலப்பகுதியில் அதன் வழக்கமான நிர்வாகப் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

8.5.2 மனிதவள மேம்பாட்டுப் பணிப்பகம்

8.5.2.1 அறிமுகம்

உலகெங்கிலும் உள்ள சுங்க நிர்வாகங்கள் நவீனமயமாக்கல், பூகோளமயமாக்கல், விரைவான தொழில்நுட்ப முன்னேற்றங்கள், நிறுவன மறுசீரமைப்பு மற்றும் பணியாளர் மேம்படுத்தல் போன்ற உருவெடுத்து வரும் போக்குகளால் ஏற்படும் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டு வருகின்றன. இவ்வாறான முன்னேற்றங்கள் சுங்க நிர்வாகங்களில் தொடர்ச்சியான தொழில்வாண்மை அபிவிருத்திக்கான தேவையுடன் நெருக்கமாக தொடர்புடையவையாக விளங்குவதோடு, இவை மனிதவள மேம்பாட்டிற்கு உயர் முன்னுரிமை வழங்கப்படவேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன.

200 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட இலங்கை சுங்கத் திணைக்களம், இலங்கையின் மிக முக்கியமான அரச நிறுவனங்களில் ஒன்றாகவும் நாட்டின் பிரதான எல்லைக் கட்டுப்பாட்டு முகவர்களில் ஒன்றாகவும் விளங்குகிறது. அரசிறையினைச் சேகரித்தல், சுங்கச் சட்டங்களை அமுல்படுத்துதல், சட்டபூர்வமான வர்த்தகத்தை எளிதாக்குதல் மற்றும் சமூகத்தைப் பாதுகாத்தல் ஆகிய அடிப்படை நோக்கங்களைக்கொண்டு, இலங்கை சுங்கத் திணைக்களம் நாட்டின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தில் முக்கிய பங்காற்றுகிறது.

இந்தப் பொறுப்புகளை வினைத்திறனும் விளைவுத்திறனும் மிக்க வகையில் நிறைவேற்றும் நோக்கில் தொழில்வாண்மை, நேர்மறையான அணுகுமுறைகள் மற்றும் உயர்ந்த சேவை நெறிமுறைகளுடன் தங்கள் கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றக்கூடிய அறிவினைக் கொண்ட, தேர்ச்சியுடைய மற்றும் மிகவும் திறமையான நபர்களை உருவாக்குவது இன்றியமையாததாகும்.

இக்கடப்பாட்டின் மூலமான வழிகாட்டுதலின் கீழ், இலங்கை சுங்கமானது தமது அலுவலர்களுக்கு மட்டுமல்லாது சுங்கம் மற்றும் எல்லைப்புறம் தொடர்பான செயல்முறைகளில் ஈடுபட்டுள்ள வெளித் தரப்பினருக்கும் திறன் மேம்பாட்டிற்கு வலுவான முக்கியத்துவம் அளிக்கிறது.

இதற்கிணங்க, இலங்கை சுங்கத் திணைக்களத்தின் மனித வள மேம்பாட்டுப் பணிப்பகம், தனது திணைக்களத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்களுக்கு ஏற்ப அறிவு, திறன்கள், அணுகுமுறை மற்றும் தொழில்முறை திறன்களை மேம்படுத்தும் நோக்கில், உள்ளூர் நிபுணத்துவம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு ஆகிய இரண்டையும் பயன்படுத்தி, ஊழியர்களுக்கான பல்வேறு பயிற்சித் திட்டங்களையும் செயலமர்வுகளையும் நடாத்திவருகிறது.

8.5.2.2 பிரதான தொழிற்பாடுகள்

8.5.2.2.1 வெளிநாட்டு முகவர்களால் வழங்கப்படும் திட்டங்களின் ஒருங்கிணைப்பு

உலக சுங்க அமைப்பு, உலக வர்த்தக அமைப்பு, ஐக்கிய நாடுகளின் போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான அலுவலகம் என்பன போன்ற சர்வதேச மற்றும் பிராந்திய அமைப்புகளிலும், பிற தொடர்புடைய நிறுவனங்களிலும் இருந்து இலங்கைச் சுங்கத்திற்கு கிடைக்கும் வாய்ப்புகள் மற்றும் உத்தியோகபூர்வ அழைப்புகளின் அடிப்படையில், மனித வள மேம்பாட்டுப் பணிப்பகமானது மனித வளங்கள் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்று இத்தகைய திட்டங்களை ஒருங்கிணைக்கும் பிரதான பொறுப்பைக் கொண்டுள்ளது.

இவ் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புகளில், சர்வதேச சுங்க மற்றும் எல்லைப்புற முகாமைத்துவம் தொடர்பான விடயங்களுடன் ஒத்துப்போகும் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், பயிற்சி வகுப்புகள், கூட்டங்கள், பட்டமேற்படிப்புத் திட்டங்கள் மற்றும் மாநாடுகள் ஆகியவை அடங்கும்.

இத்தகைய திட்டங்கள் பல்வேறு வழிமுறைகளில் நடத்தப்படுகின்றன. சில பயிற்சித் திட்டங்கள் வெளிநாடுகளில் நடத்தப்படுவதால், தேர்ந்தெடுக்கப்பட்ட சுங்க அதிகாரிகள் வெளிநாடுகளுக்கு பயணம் செய்ய வேண்டியுள்ளது. பிற சில திட்டங்கள் வெளிநாட்டு வள நிபுணர்களின் பங்கேற்புடன் இலங்கையிலேயே நடைபெறுகின்றன. மேலும், கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் இணையவழி கருத்தரங்குகள் போன்ற பல திட்டங்கள் மெய்நிகர் தளங்கள் மூலம் நடத்தப்படுகின்றன.

8.5.2.2.2 உள்நாட்டு பயிற்சித் திட்டங்களை நடாத்துதல்

உள்நாட்டு பயிற்சித் திட்டங்கள், தொடர்புடைய செயல்பாட்டுப் பகுதிகளில் அறிவையும் விழிப்புணர்வையும் மேம்படுத்துவதன் மூலம் ஊழியர்களின் திறன் மேம்பாட்டை ஆதரிக்கும் வகையில் வடிவமைக்கப்படுகின்றன. அதேவேளை தனிநபர் திறன்களையும் உள்ளார்ந்த திறமைகளையும் கண்டறிந்து வளர்ப்பதையும் இத்திட்டங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

மனிதவள மேம்பாட்டுப் பணிப்பகம், தகுதியும் அனுபவமும் வாய்ந்த உள்ளக வளவாளர்களைப் பயன்படுத்தி, இலங்கை சுங்கத்தின் அனைத்து நிலைகளிலும் உள்ள அலுவலர்களுக்காக நிறுவனத்தினுள் உள்நாட்டு பயிற்சித் திட்டங்களை நடத்துகிறது. இத்திட்டங்கள், திணைக்களத்தின் மாறிவரும் பயிற்சித் தேவைகளின் மதிப்பீட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பயிற்சி செயல் திட்டத்திற்கு இணங்க செயல்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும், மனித வள மேம்பாட்டுப் பணிப்பகம், திணைக்களத்தின் அனைத்து பணிப்பகங்களிடமிருந்தும் பயிற்சி முன்மொழிவுகளையும் பரிந்துரைகளையும் கோருகிறது. பெறப்பட்ட

பின்னூட்டங்களையும் நிறுவன முன்னுரிமைகளையும் கருத்தில் கொண்டு, அடுத்த ஆண்டுக்கான வருடாந்த பயிற்சிச் செயல் திட்டம் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு, கண்காணிக்கப்படுகிறது.

8.5.2.2.3 கொள்கை, திட்டமிடல் மற்றும் திறன் மேம்பாட்டு பொறுப்புகள்

அதிகாரிகளின் திறன் மேம்பாட்டிற்கான அதன் முதன்மைப் பொறுப்புக்கு மேலாக, மனிதவள மேம்பாட்டுப் பணிப்பகத்தின் பயிற்சி மற்றும் மனிதவள மேம்பாட்டுடன் தொடர்புடைய கொள்கை மட்டத்திலான பணிகளையும் மேற்கொள்ள பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. அவை பின்வருவன :

- பயிற்சிக் கொள்கைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகளை உருவாக்குதல், புதுப்பித்தல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ;
- அனைத்துப் பணியாளர் மட்டங்களிலும் உள்ள திறன் மேம்பாட்டு முயற்சிகளைத் திணைக்களத்தின் மூலோபாய நோக்கங்களுடன் சீரமைத்தல் ;
- புதிய பணியாளர்களுக்கும் அனுபவமுள்ள அலுவலர்களுக்கும், குறிப்பாக அலுவலர்கள் புதிய தொழிற்பாட்டுப் பணிகளில் மாற்றப்படும் போது, பயிற்சி திட்டங்களைத் நியமதரப்படுத்தி அவற்றை புதுப்பித்தல் ;
- தற்போதைய மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சித் திட்டங்களை வழங்குவதற்காக உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் (WCO, WTO, UNODC மற்றும் பிற தொடர்புடைய முகவர்கள் உட்பட) ஒத்துழைத்தல் ;
- திணைக்களத்தின் முன்னுரிமைகள் மற்றும் செயல்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய விசேட பயிற்சித் திட்டங்களை வடிவமைத்து வழங்குதல் ;
- பயிற்சி விளைவுகளை மேம்படுத்த புதுமையான மற்றும் பயனுள்ள கற்றல் சூழல்களை ஊக்குவித்தல் ;
- சுங்க அதிகாரிகளிடையே சேவை நெறிமுறைகள் குறித்த விழிப்புணர்வையும் நடைமுறையையும் வலுப்படுத்துதல் ;
- மனிதவள முகாமையில் சர்வதேச தரநிலைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு இணங்க அனைத்துத் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தல் ;
- முறையான பயிற்சித் தேவை மதிப்பீடுகளை நடத்தி, அதற்கேற்ப பயிற்சித் தலையீடுகளுக்கு முன்னுரிமை அளித்தல் ;
- வருடாந்த பயிற்சித் திட்டங்கள் மற்றும் பாடத்திட்டங்களை உருவாக்குதல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ;
- பயிற்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகளை ஏற்பாடு செய்து நடத்துதல் ;
- பயிற்சித் திட்டங்களின் செயல்திறன் மற்றும் தாக்கத்தைக் கண்காணித்து மதிப்பீடு செய்தல்.
- சுங்க அதிகாரிகளுக்கான மொழித் திறன் பயிற்சி வகுப்புகளை ஏற்பாடு செய்தல்

8.5.2.2.4 பங்கீடுபாட்டாளர் பயிற்சி மற்றும் ஆதரவு சேவைகள்

இதற்கு மேலாக, மனிதவள மேம்பாட்டுப் பணிப்பகம் பின்வரும் ஆதரவு மற்றும் வெளித்தொடர்புப் பணிகளையும் மேற்கொள்கிறது :

- கோரிக்கையின் பேரில், ஆயுதப் படைகள், காவல்துறை, அரச நிறுவனங்கள், தனியார் துறை அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் போன்ற வெளிப்புறப் பங்கீடுபாட்டாளர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில், பயிற்சித் திட்டங்களை வழங்குதல்
- சுங்க இல்ல முகவர்களுக்கான சான்றிதழ் பாடநெறிகளை நடத்துதல்;
- சுங்கம் தொடர்பான விடயங்களில் பங்கீடுபாட்டாளர்களின் பயிற்சித் தேவைகளுக்கு உதவுமுகமாக, தகுதிவாய்ந்த சுங்க அதிகாரிகளை வளவாளர்களாக நியமித்தல்; மற்றும்
- சுங்கப் பணியாளர்களுக்காக நூலகம் மற்றும் கற்றல் வள வசதிகளைப் பராமரித்து, அவற்றுக்கான அணுகலை வழங்குதல்.

8.5.2.3 மனிதவள மேம்பாட்டுப் பணிப்பகத்தின் பணியாளர்

கீழே உள்ள அட்டவணை 8.5.2.1 இல் விவரிக்கப்பட்டுள்ளவாறு, இப்பணிப்பகம் தற்போது குறைந்தபட்ச பணியாளர் எண்ணிக்கையுடன் இயங்கி வருகிறது. இந்த வரையறுக்கப்பட்ட வளங்கள் இருந்தபோதிலும், திணைக்களத்தின் திறன் மேம்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, பணியாளர்களின் அர்ப்பணிப்புமிக்க முயற்சிகள் மூலம், ஒப்படைக்கப்பட்ட அனைத்துப் பணிகளும் உரிய நேரத்திலும் திறமையாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அட்டவணை 8.5.2.1 தற்போதைய பணியாளர்

தரம்	தற்போதுள்ளவை
சு.ப	01
சி.சு.ப	01
பி.சு.ப	01
பி.சு.அ	00
சு.உ.அ	06
சு.பரி	02
மு.சே.அ	03
மொத்தம்	**14**

மூலம் : மனிதவள மேம்பாட்டுப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.5.2.4 2025 ஆம் ஆண்டில் இப்பணிப்பகத்தின் சாதனைகள் :

8.5.2.4.1 சுங்கப் பணியாளர்களுக்கான உள்நாட்டுப் பயிற்சித் திட்டங்கள்

2025 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம் மற்றும், சுங்க பணிப்பாளர் / மனிதவளக் குழுவால் வழிநடத்தப்பட்ட பிற திட்டங்களுக்கு இணங்க, மனிதவள மேம்பாட்டுப் பணிப்பகமானது 2025 ஆம் ஆண்டில் சுங்கப் பணியாளர்களுக்காக மொத்தம் 53 உள்நாட்டு பயிற்சித் திட்டங்களை (திணைக்களத்தினுள்ளும் மற்றும் வெளியிலுமான பயிற்சிகள் இரண்டு உள்ளடங்கலாக) வெற்றிகரமாக நடாத்தியுள்ளது. மேலும், இத்தகைய பயிற்சிகளில் பங்கேற்ற அதிகாரிகளின் எண்ணிக்கை (தரம் வாரியாக) கீழே உள்ள அட்டவணை 8.5.2.2 இல் காட்டப்பட்டுள்ளது. இதில் சுங்கப் பணியாளர்களுக்காக நடத்தப்பட்ட மூன்று தமிழ்மொழி திறன் பாடநெறிகளும் அடங்குகின்றன.

அட்டவணை 8.5.2.2 உள்நாட்டு பயிற்சித் திட்டங்களுக்காக பங்கேற்ற பதவியணியினர்
(திணைக்களத்தினுள்ளும் மற்றும் வெளியிலுமான பயிற்சிகள் இரண்டு உள்ளடங்கலாக)

தரம்	பங்கேற்பு (உள்ளக மற்றும் வெளியக)
மேலதிக சுங்க பணிப்பாளர் நாயகம்	01
சிரேஷ்ட சுங்க பணிப்பாளர்	104
சுங்க அத்தியட்சகர்	48
உதவி சுங்க அத்தியட்சகர்	1335
சுங்க காவலர்	64
முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர்	31
அலுவலக உதவியாளர்	08

தரம்	பங்கேற்பு (உள்ளக மற்றும் வெளியக)
சுங்கப் பணிப்பாளர்	08
பிரதி சுங்க பணிப்பாளர்	189
பிரதி சுங்க அத்தியட்சகர்	54
சுங்க பரிசோதகர்	116
நிருவாக உத்தியோகத்தர்	01
ஏனயவர்கள்	02

மூலம் : மனிதவள மேம்பாட்டுப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.5.2.4.2 வெளிநிலை பங்கீடுபாட்டாளர்ளுக்கான உள்நாட்டு பயிற்சித் திட்டங்கள்

இப்பணிப்பகமானது வெளியக பங்கீடுபாட்டாளர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளுக்கு இணங்கவும், மனிதவளக் குழுவின் ஒப்புதலுடனும், 2025 ஆம் ஆண்டில் பல்வேறு நிறுவனங்களுக்காகப் பல பயிற்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து நடத்தியது. இவற்றில் இலங்கை வர்த்தக சபை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, பாதுகாப்பு அமைச்சு, இலங்கை கடற்படை, இலங்கை இராணுவம், இலங்கை விமானப்படை, தேசிய பொலிஸ் கல்லூரி, ஏற்றுமதி அபிவிருத்தி சபை, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் பல அரசாங்க நிறுவனங்கள், தனியார் துறை அமைப்புகள், பல்கலைக்கழகங்களும் இதில் அடங்குகின்றன.

தொடர்புடைய கோரிக்கைகளின் தன்மை மற்றும் நோக்கத்தைப் பொறுத்து, சில பயிற்சித் திட்டங்கள் இலங்கை சுங்கத் திணைக்களத்திற்குள்ளேயே நடத்தப்பட்டன. மேலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில், திணைக்களத்திற்குள்ளிருந்து தகுதியான வளவாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, கோரிக்கை விடுத்த அமைப்புகளுக்காக பயிற்சித் திட்டங்களை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டனர்.

- **வெளிநிலைப் பங்கீடுபாட்டாளர்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை – 38**

8.5.2.4.3 வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்கள்

மனிதவள மேம்பாட்டுப் பணிப்பகம், 2025 ஆம் ஆண்டில் வெளிநாடுகளிலும், இலங்கையிலும் மற்றும் மெய்நிகர் முறையிலும் நடத்தப்பட்ட மொத்தம் 112 வெளிநாட்டு பயிற்சித் திட்டங்களை வெற்றிகரமாக ஒருங்கிணைத்துள்ளது.

இந்த ஆண்டில் நடத்தப்பட்ட பயிற்சிகளின் வகைகளை அட்டவணை 8.5.2.3 விளக்குகிறது, மேலும் அட்டவணை 8.5.2.4 இல் வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்களில் பங்கேற்ற சுங்க அதிகாரிகளின் (தரம் வாரியாக) விவரங்கள் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 8.5.2.3 ˙ 2025ஆம் ஆண்டில் நடைபெற்ற வெளிநாட்டு பயிற்சித் திட்டங்களின் வகை

வெளிநாட்டு பயிற்சித் திட்டங்கள்		மொத்தம் : 112	
• தொழில் மேம்பாட்டுத் திட்டம்	- 01	• கூட்டம்	- 36
• இணை ஒருங்கிணைப்பாளர்	- 01	• குழு	- 03
• பணிக்குழு	- 05	• வேலைக்களரி	- 19
• மாநாடு	- 03	• குறுகிய பாடநெறி	- 03
• இ -கற்றல் பாடநெறி	- 01	• பயிற்சித் திட்டம்	- 29
• உண்மை கண்டறியும் கட்டம்	- 01	• கருத்தரங்கு	- 05
• நட்பாதரவு	- 01	• வழிநடத்தல் குழு உறுப்பினர்	- 01
• வழிகாட்டி	- 01	• கருத்தரங்கு	- 02

மூலம் : மனிதவள மேம்பாட்டுப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.5.2.4 வெளிநாட்டு கருத்தரங்குகள்/ மாநாடுகள்/ பயிற்சித் திட்டங்களிலான பங்கேற்பு - 2025 (தரம் வாரியாக)

தரம்	பங்கேற்பு	தரம்	பங்கேற்பு
சுங்க பணிப்பாளர் நாயகம்	-	மேலதிக சுங்க பணிப்பாளர் நாயகம்	19
சிரேஷ்ட சுங்க பணிப்பாளர்கள்	02	சுங்க பணிப்பாளர்கள்	17
சிரேஷ்ட சுங்க பிரதிப் பணிப்பாளர்கள்	38	பிரதி சுங்க பணிப்பாளர்கள்	72
சுங்க அத்தியட்சகர்கள்	32	பிரதி சுங்க அத்தியட்சகர்கள்	31
உதவி சுங்க அத்தியட்சகர்கள்	228	ஏனையவர்கள்	04

மூலம் : மனிதவள மேம்பாட்டுப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.5.2.4.4 சுங்க இல்ல முகவர் பயிற்சி மற்றும் தேர்வு

சுங்க இல்ல முகவர்கள் மற்றும் சரக்குமேடை உதவியாளர்களுக்கான சான்றிதழ் பாடநெறியானது, இலங்கை சுங்கத்தின் மனித வள மேம்பாட்டுப் பணிப்பகத்தால் நடத்தப்படும் மிகவும் சிறப்பாகத் தாபிக்கப்பட்ட மற்றும் பெரும் அங்கீகாரம் பெற்றதுமானதொரு பயிற்சித் திட்டமாகும்.

இப் பாடநெறியானது, சுங்க வெளியாக்கல் நடைமுறைகள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செயல்முறைகள், சுங்க கட்டளைச் சட்டம் மற்றும் அது தொடர்பான சட்டங்கள், பொருட்களின் வகைப்படுத்தல், சுங்க பொருள் மதிப்பீட்டு முறைகள், இலங்கை துறைமுக அதிகாரசபை நடைமுறைகள், ASYCUDA அமைப்பு, அத்துடன் தொடர்புடைய சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பாதுகாப்பு மரபுகள் ஆகியவற்றைப் பற்றிய விரிவான அறிவை வழங்குகிறது. இந்தப் பாடநெறி பெரும்பாலும் அனுபவம் வாய்ந்த சுங்க அதிகாரிகளால் கற்பிக்கப்படுகிறது. மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பாடப்பிரிவுகள் தொடர்புடைய வெளிப்புற நிறுவனங்களின் நிபுணர்களால் நடத்தப்படுகின்றன.
இப்பாடநெறியானது, சுங்க இல்ல முகவர் உரிமம் பெறுவதற்கான அடிப்படைத் தேவையாக இருப்பதனால், இதற்கு மிகுந்த தேவை காணப்படுகிறது. சுங்க இல்ல முகவர் உரிமத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி பெறுவதற்கு, பாடநெறியை வெற்றிகரமாக முடிப்பதும், திட்டத்தின் முடிவில் நடத்தப்படும் எழுத்து மூல பரீட்சையில் தேர்ச்சி பெறுவதும் கட்டாயமாகும். உரிமம் பெற்ற சுங்க இல்ல முகவர்கள், நாட்டின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வர்த்தகத்தை எளிதாக்குவதிலும், சுங்க விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதிலும் முக்கிய பங்காற்றுகின்றனர்.

உரிமம் பெற்ற சுங்க இல்ல முகவர் / சரக்கு மேடை உதவியாளர் தகுதியைப் பெற விரும்பும் விண்ணப்பதாரர்களுக்கு அப்பாற்பட்டும், இந்த பாடநெறியில் பலர் சேர்வதற்கான காரணம், வெற்றிகரமாக முடித்தவுடன் வழங்கப்படும் சான்றிதழின் உயர் மதிப்பும் நம்பகத்தன்மையும் ஆகும். மனிதவள மேம்பாட்டுப் பணிப்பகத்தால் வழங்கப்படும் இச் சான்றிதழ், வழங்கப்படும் பயிற்சியின் தரத்தையும் பொருத்தத்தையும் பிரதிபலிப்பதுடன் உள்நாட்டிலும் சர்வதேச அளவில் பரவலாகவும் அங்கீகரிக்கப்பட்டதாகும்.

கீழேயுள்ள அட்டவணை 8.5.2.5 ஆனது 2025 ஆம் ஆண்டில் நடைபெற்ற சுங்க இல்ல முகவர் / சரக்கு மேடை உதவியாளர் பரீட்சை குழு 01 மற்றும் குழு 02 தொடர்பிலான விவரங்களை விளக்குகிறது.

அட்டவணை 8.5.2.5 : சுங்க இல்ல முகவர் / சரக்கு மேடை உதவியாளர் சான்றிதழ் பாடநெறி 2025 குறித்த சாராம்சம் - குழு 01 மற்றும் குழு

பரீட்சை	பங்கேற்றவர்கள்	சித்தியடைந்தவர்கள்	விகிதம்
சுங்க இல்ல முகவர்/சரக்கு மேடை உதவியாளர் சான்றிதழ் பாடநெறி குழு 01	396	262	66.16%
சுங்க இல்ல முகவர்/சரக்கு மேடை உதவியாளர் சான்றிதழ் பாடநெறி குழு 02	260	176	67.69%

மூலம் : மனிதவள மேம்பாட்டுப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

- 2025.12.31இல் இருந்தவாறாக, மனிதவள மேம்பாடடுப் பணிப்பகம் 300 விண்ணப்பதாரர்களுக்காக சுங்க இல்ல முகவர் சான்றிதழ் பாடநெறி 2025 – குழு III இனை நடத்தி வருகிறது.

8.5.2.5 மனிதவள மேம்பாட்டுப் பணிப்பகத்தினால் வழங்கப்படும் ஏனைய சேவைகள்

8.5.2.5.1 முதுமாணிப் பட்டப்படிப்பு பாடநெறி கட்டணங்களை ஈடுசெய்தல்

சுங்க அதிகாரிகளின் எதிர்காலப் பதவி உயர்வுகளுக்கு முதுமாணிப் பட்டப்படிப்பு தகுதி பெறுவது மிகவும் முக்கியமானதாகும் என்பதுடன் சுங்க அதிகாரிகள் தங்களின் முதுமாணிப் பட்டப்படிப்பு பாடநெறிகளுக்காக அவர்கள் செலுத்தும் பாடநெறிக் கட்டணங்களை ஈடுசெய்யும் சேவையையும் இப்பணிப்பகம் வழங்குகிறது.

இந்தச் சேவையானது, சுங்க அதிகாரிகளை முதுமாணிப் பட்டத் தகுதி பெறுவதற்காக உயர் கல்வியில் ஈடுபட ஊக்கமளிப்பதுடன், இது நீண்ட காலத்தில் அரச துறையில் மிக உயர்ந்த கல்வித் தகுதி கொண்ட பணியாளர்கள் நிறைந்த துறையாக சுங்கத் திணைக்களம் உருவாவதற்கு வழவகுக்கும்.

8.5.2.5.2 வருடாந்த பயிற்சித் தேவைகள் பற்றிய கணக்கெடுப்பை நடத்துதல்

இந்த பணிப்பகத்திற்கு தேவையான திறன்கள், அறிவு மற்றும் தகுதிகளைக் கண்டறிய பயிற்சி தேவைகள் பற்றிய ஆய்வு நடத்தப்படுகிறது. அதன் மூலம் கிடைக்கும் பின்னூட்டல்களின் அடிப்படையில், எதிர்கால பயிற்சி திட்ட அட்டவணை திட்டமிடப்படுகிறது

8.5.2.5.3 சுங்க நூலக வசதி

மனிதவள மேம்பாட்டின் முக்கிய கருவியாக விளங்கும் சுங்க நூலகம், 2005.01.26 அன்று நிறுவப்பட்டது. இது மனித வள மேம்பாட்டுப் பணிப்பாளரின் கீழ் ஒரு இணைந்த பிரிவாக செயற்படுகிறது.

இந்த நூலக வசதிகள் திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் கிடைக்கின்றன, மேலும் உறுப்பினர்கள் அல்லாதவர்களும் நூலகத்தைப் பயன்படுத்தலாம். புத்தகங்களுக்கு மேலாக, பல்வேறு இதழ்கள் மற்றும் செய்தித்தாள்களும் கிடைக்கின்றன என்பதுடன், நூலகமானது திணைக்களக்கட்டளைகள் மற்றும் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளை எதிர்காலப் பயன்பாட்டிற்காக சேகரித்து பாதுகாக்கிறது.

நூலகத்தின் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், நூலகத்திற்கு கீழே குறிப்பிடப்பட்டவை உள்ளிட்ட மேலும் பல வசதிகளை வழங்க வேண்டியுள்ளது என்பது கவனத்திற்கு வந்துள்ளது:
(அ) தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட நூலக மென்பொருளை (Barcode முறைமையுடன் கூடியது) அறிமுகப்படுத்துதல்

(ஆ) அதிநவீன கணினிகளுடன் கூடிய இணைய வசதிகளை வழங்குதல்

8.5.2.6 மனிதவள மேம்பாட்டுப் பணிப்பகம் தற்போது எதிர்கொள்ளும் சவால்களும் பரிந்துரைகளும்

தற்போது, மனிதவள மேம்பாட்டுப் பணிப்பகம் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கையை விட மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான பணியாளர்களுடன் இயங்கி வருகிறது. இதன் காரணமாக, தற்போதுள்ள மனிதவள மேம்பாட்டுப் பணிப்பக பணியாளர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்கும், நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் துறைசார் நோக்கங்களை அடைவதற்கும் அதிகமான பணிச்சுமையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் முழு மனிதவள திறன் மேம்பாட்டிற்கான முதன்மைப் பொறுப்பை மனிதவள மேம்பாட்டுப் பணிப்பகம் கொண்டிருப்பதால், தேவையான பொருட்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் கிடைப்பதை உறுதி செய்வது அவசியமாகும். இதில் பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்குப் போதுமான விரிவுரைக் கூடங்கள் அல்லது மேலதிக இடவசதி மற்றும் விரிவுரைகளைத் பயனுறுதிமிக்க வகையில் வழங்குவதற்கான மடிக்கணினிகள் போன்ற உபகரணங்கள் வழங்கப்படுதல் அடங்கும்.

8.5.2.7 அடுத்த கட்டம்

• வர்த்தகர்களுக்கான சுங்க கருத்தரங்குகளை செயற்படுத்துதல்.
• சமீபத்தில் நிறுவப்பட்ட பயிற்சி மேம்பாட்டுக் குழுவின் கீழ், அனைத்து சுங்கப் பணியாளர்களுக்கும் பயிற்சித் தொகுதிகளைத் தயாரித்து மேம்படுத்தல்.
• 2027 ஆம் ஆண்டிற்கான புதிய பயிற்சித் தேவைகளைக் கண்டறியும் பொருட்டு, பயிற்சித் தேவைகள் பற்றிய ஆய்வினை நடத்துதல்.

8.5.2.8 முக்கிய சாதனைகள்

• சுங்க அதிகாரிகளுக்காக 53 உள்நாட்டு பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்ததுடன், அரச மற்றும் பிற நிறுவனங்களின் 38 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வளவாளர்களை வழங்கியுள்ளது

• சுங்க அதிகாரிகளுக்காக 112 வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்துள்ளது. (இதில் வெளிநாட்டு நிதியுதவியுடன் உள்நாட்டில் நடத்தப்பட்ட 17 பயிற்சித்திட்டங்களும் அடங்கும்)..
• 438 விண்ணப்பதாரர்களுக்கு சுங்க இல்ல முகவர் சான்றிதழ் வழங்கும் செயல்முறையை வெற்றிகரமாக நிறைவுசெய்ததுடன், நடைபெற்று வரும் பாடநெறிக்காக மேலும் 300 பேரை பதிவு செய்துள்ளது.
• உ.சு.அ, சு.பரி மற்றும் சு.காவலர் உட்பட 257 சுங்க அலுவலர்களுக்கு மொழித் திறன் பாடநெறிகளை நடத்தியது.
• இலங்கை சுங்கத்தின் பயிற்சி மேம்பாட்டுக் கொள்கையை வெளியிட்டது.

• மனிதவள மேம்பாட்டுப் பணிப்பகத்தின் கீழ் பயிற்சி மேம்பாட்டுக் குழுவை நிறுவியுள்ளது. இந்தக் குழுவுக்கு இலங்கை சுங்கப் பயிற்சி முறையின் மேம்பாட்டை வழிநடத்துவதற்கும் மற்றும் அதனை மேற்பார்வை செய்வதற்குமான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

• இலங்கை சுங்கத்திலுள்ளலுள்ள வளவாளர்களைப் பாராட்டும் நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்ததுடன், சுங்கம் மற்றும் பிற நிறுவனங்களைச் சேர்ந்த 101 அதிகாரிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

.

8.5.2.9 மனித வள மேம்பாடு

2025 ஆம் ஆண்டிற்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்களின் விவரங்கள் இந்த அறிக்கையின் அத்தியாயம் 6.2 இல் தரப்பட்டுள்ளன.

8.5.3 பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கல் பணிப்பகம்

8.5.3.1 அறிமுகம்

பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கல் பணிப்பகமானது, அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட இன்றியமையாத கடமைகளை நிறைவேற்றுவதில் மிக முக்கிய பங்காற்றுகிறது. இப்பணிப்பகத்தின் முக்கிய குறிக்கோள் யாதெனில் திணைக்களத்தின் அனைத்து பணிப்பகங்களுக்கும் தேவையான சேவைகள் மற்றும் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துத் அத்தியவசிய தேவைகளையும் பயனுறுதியுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் வழங்குவதாகும்.

8.5.3.2 பிரதான தொழிற்பாடுகள்

- திணைக்களத்தின் சகல தொழிற்பாடுகளையும் தடையின்றி தொடர்ந்து பேணும் வகையில், உரிய நேரத்தில் தரமான பொருட்களையும் சேவையினையும் வேண்டுகின்ற பிரிவுகளுக்கு வழங்குதல்.
- திறைசேரி சுற்றுநிரூபங்கள் மற்றும் தேசிய பொருள் கொள்வனவு வழிகாட்டிக்கு இணங்க தெளிவான முறையில் பொருள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்தல்.
- உரிய முறையில் களஞ்சியப்படுத்தல் மற்றும் அவற்றினைப் பாதுகாக்கும் வகையில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை பொருள் பதிவேட்டில் பதிதல் மற்றும் உரிய களஞ்சியக் கட்டுப்பாடு, திறமையான களஞ்சிய முகாமைத்துவ முறைகள் என்பவற்றை உறுதிப்படுத்தி அனுகூலமான பலன்களைப் பெறுதல்.
- திணைக்களத்தினது சகல அசையும், அசையாச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல்.
- புதிய சுங்கத் தலைமையகக் கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளைத் திட்டமிட்ட கால வரையறையின் பிரகாரம் திருப்திகரமாக நிறைவுசெய்துடன், முறையான வளாக முகாமைத்துவ முறைமை ஒன்றைச் நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்தல்.
- செயற்பாட்டு நிலையிலுள்ள திணைக்களத்தின் மோட்டார் வாகனத் தொகுதிகளை பராமரிப்பதில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

8.5.3.3 2025 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை

2025 ஆம் ஆண்டுக் காலத்தின் பொழுது, இலங்கை சுங்கத்தின் பௌதீக வளங்களை மேம்படுத்துதல் மீதான கவனம் மிக அதிகமாக இருந்தது. இந்தப் பொறுப்பு முழுமையாக பொருள் விநியோகப் பணிப்பகத்தின் மீது சுமத்தப்பட்டது. எனவே, திணைக்களத்தின் செயல்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான பொருட்கள் மற்றும் சேவைகளை சரியான நேரத்தில் வழங்குவது இப் பணிப்பகத்தின் முக்கிய கடமையாகும். இருப்பினும், எதிர்பார்த்தவாறு, 2025 ஆம் ஆண்டிற்குள் அந்த விநியோக மற்றும் சேவைத் தேவைகளை பணிப்பகத்தினால் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது.

பொருள் விநியோகப் பணிப்பகத்தால் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக, 2025 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டு, திருத்தப்பட்ட மதிப்பீட்டுத் தொகையாகிய ரூபா. 1,542.69 மில்லியன் ஆன தொகையில் ரூபா 1,104.55 மில்லியன் ஆன தொகை உபயோகிக்கப்பட்டுள்ளது. பயன்பாட்டு வீதமானது 72% முன்னேற்றத்தைக் காட்டுகிறது. அதேபோல், மூலதனச் செலவினங்களுக்காக திருத்தப்பட்ட மதிப்பீட்டுத் தொகையாகிய ரூபா. 1,728.40 மில்லியன் தொகையில், ரூபா 258.38 மில்லியன் ஆன தொகை உபயோகிக்கப்பட்டுள்ளது. பயன்பாட்டு வீதமானது 15% முன்னேற்றத்தைக் காட்டுகிறது. மேற்படி முன்னேற்றத்துடன் தொடர்புடைய பல முக்கிய பொருட்கள் மற்றும் சேவைகளின் செயலாற்றுகையானது கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 8.5.3.1 2025ஆம் வருட வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் செயலாற்றுகை

	வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பெயர்	மதிப்பீடு ரூபா மில்லியன்	நிதி முன்னேற்றம்	பௌதீக முன்னேற்றம்
1	கெரவலப்பிட்டிய சுங்க பரிசோதனை சாலையினை அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்துதல் மற்றும் தொடக்க ஆயத்தப் பணிகள்	-	-	நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீடமைப்பு அமைச்சின் ஊடாக, நிலத்தை மீட்டெடுப்பதற்கும் மற்றும் நீர் வடிகால் அமைப்பை நிர்மாணிப்பதற்கும் தேவையான நிதிகளை இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு வழங்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. *காணியினை அளவீடு செய்யும் பணிக்காக 2025.12.30 அன்று நில அளவையாளர் நாயகத்திற்கு ரூபா.

				100,393.53 ஆன தொகை செலுத்தப்பட்டது.
2	இலத்திரனியல் சரக்கு கண்காணிப்பு முறைமை	-	-	தயாரிக்கப்பட்ட விவரக்குறிப்புகள் மதிப்பாய்வுக்காக ADBக்கு அனுப்பப்பட்டுள்ளன, மேலும் இவ்விடயம் தொடர்பாக மேலதிக கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்காக அந்த நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவரை தொடர்பு கொள்ள கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
3	கொழும்பு துறைமுகம் மற்றும் BIA ஆகிய இடங்களில் அதிநவீன ஸ்கேனிங் அமைப்புகளின் தொடக்க அபிவிருத்தி பணிகளும் மற்றும் அதனை நிறுவுதலும்		-	ஏற்கனவே நியமிக்கப்பட்ட குழுவினால் விவரக்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

மூலம் : பொருள் கொள்வனவு பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.5.3.2 : 2025 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி நிறைவேற்றப்பட்ட முக்கியப் பணிகள்

பொருள் குறியீடு	பிரதான தொழிற்பாடு	ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு (ரூபா மில்லியன்)	நிதி முன்னேற்றம்		பணிசார் முன்னேற்றம்
			(ரூபா மில்லியன்)	%	
	பொருட்கள்	**1594.16**	**390.33**		
1201	அலுவலக எழுதுகருவிகள்	88.72	78.79	90	இவ் ஆண்டுக்காலப்பகுயில் மூன்று முறை 85 அலுவலக எழுதுகருவிகள் கொள்முதல் செய்யப்பட்டன.
1203-002	சீருடைகள்	80.00	28.12	35	687 அதிகாரிகளுக்கான அலுவலக சீருடைகளைப் பெறுவதற்கான அனுமதி வழங்கப்பட்டது. இவ்வாண்டுக் காலப்பகுதியில் காலணிகள் 1,426, காலுறைகள் 2,852 மற்றும் 20 பிற சீருடை சார்ந்த பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.
1205	பிற கொள்முதல்கள்	63.24	45.31	72	படுக்கை விரிப்புகள் 3,621, தலையணை உறைகள் 3,625, TSS பைகள் 6,200, பொலிசக் பைகள் 56,000, மேசைப் பயன்பாட்டுப் பொருட்கள் 924 மற்றும் பிற பொருட்கள் (ஒருமுறை பயன்படுத்தும் முகக்கவசங்கள் 5,500, கை சுத்திகரிப்பிகள் 4 லிட்டர் கேன் - 50, 500மி.லீ போத்தல் - 100, கையுறைகள் - 2500 உள்ளிட்டவை) கொள்வனவு.
2102	தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	22.70	18.97	84	கதிரைகள் 210, 14 படுக்கைகள், 28 மேசைகள், 49 இரும்பு அலுமாரிகள், 04 துணிதொங்கும் ரேக்குகள்
2103	இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள்	324.80	86.98	27	90 பிரிண்டர்கள், 14 காற்றுச் சீராக்கி இயந்திரங்கள், 85 UPS கருவிகள் ஆகியவற்றின் கொள்முதல் மேற்கொள்ளப்பட்டதுடன், LAN-WAN ஒருங்கிணைப்பு மற்றும் கிளை வலையமைப்பின் நவீனமயமாக்கல் பணிகளும் முன்னெடுக்கப்பட்டன.

					கணினிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இலத்திரனியல் பொருட்களின் கொள்வனவு செய்யும் நோக்கில் அதனை ஏலதாரருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளில் 90% நிறைவடைந்துள்ளது. கொள்கலன் ஸ்கேனிங் அமைப்புக்கான 4வது சேவை தொடர்பில் செலுத்துவதற்கு நிறுத்தி வைக்கப்பட்ட தொகை US$ 211,473.80 ஆகும்.
2106	மென்பொருள் உருவாக்கம்	342.70	99.59	29	தற்போதுள்ள oracle அமைப்பின் தொடர்ச்சியான மேம்பாட்டுக்கான கொள்முதல் நிறைவுபெற்றுள்ளது. இலத்திரனியல் ஏல முறை கொள்முதலுக்கான ஏல கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும், பரவலாக்கப்பட்ட Firewall மற்றும் பாதுகாப்புத் தகவல் மற்றும் நிகழ்வு முகாமை அமைப்புக்கான கேள்வு ஆவணங்கள் மற்றும் விவரக்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
003-2106	இலங்கை சுங்கத் திணைக்களத்தில் இடர் முகாமைத்துவ மென்பொருளை உருவாக்கிச் செயல்படுத்துதல்	100.00	32.57	33	இத்திட்டம் அதன் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள நிலையில், ஒப்பந்தக்கார நிறுவனம் விடுத்த கோரிக்கையின் பேரில், பணிகளை நிறைவு செய்வதற்கு 2026.02.27 வரை காலம் நீடிக்கப்பட்டு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.
004-2103 004-2106	மேம்படுத்தப்பட்ட Oracle Exudates அமைப்பு	572.00	00.00	-	கொள்முதல் ஒப்பந்தத்தை வழங்குவதற்கான பணிகள் 90% வரை நிறைவு பெற்றுள்ளன. கொள்முதல் தொகையும் அமைச்சரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, தொடர்புடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனத்திற்கு கொள்முதலை வழங்குவதற்கான அமைச்சரவை ஒப்புதலைப் பெறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
	<u>தற்போதைய சேவை ஒப்பந்தம்</u> Rapiscan அமைப்பில் செயற்கை நுண்ணறிவை ஒருங்கிணைத்தல் மற்றும் தற்போதைய சேவை ஒப்பந்தத்தைத் தொடர்தல்				இத்திட்டத்தை அடுத்த ஐந்து ஆண்டுகள் தொடர்வதற்கான பரிந்துரைகளைப் பெறுவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை தற்போது எதிர்பார்க்கப்படுகிறது.
	வேலை	**275.80**	**30.66**		
1303 2001	கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகளின் பராமரிப்பு மற்றும் புனரமைப்பு	26.50 249.30	20.26 10.40	76 0.4	9வது மாடி உணவகத்தில் சேதமடைந்த தரையோடுகளை மாற்றும் பணி, உள் விவகார பிரிவின் சீரமைப்பு (அறைகள் பிரிப்பு பணி), 7வது மாடியிலான அறைகள் பிரிவாக்கம், மோகன் வீதியில் உள்ள சுங்கக் குடியிருப்புகளைப் புதுப்பித்தல், கட்டுநாயக்க BIA சுங்க தங்குமிடத்தினை பழுதுபார்க்கும் பணி, சுங்க காவலர் தங்குமிடத்தில் பழுதுபார்க்கும் பணி (கழிவறை, கதவுகள், நீர் கசிவுகள் திருத்தம்),

					கட்டுநாயக்க ஓய்வு இல்லத்திலான மின்பிறப்பாக்கியினை நிறுவுதல், பாதுகாப்பு நோக்கத்திற்காக பொதிகள் பாதுகாப்பு அறையில் இரும்பு சட்டகம் அமைத்தல், பழைய நீள் அறை கட்டிடத்திற்கு வாகனக் கொட்டகை அமைத்தல், தலைமை அலுவலக உணவகத்தினை புதுப்பித்தல், பேருவளை, திருகோணமலை, காலி உப தடுப்பு அலுவலகங்களைப் புதுப்பித்தல் மற்றும் கொழும்பு துறைமுக இரும்புக் கதவு பழுதுபார்த்தல், discotheque பகுதியிலான பழுதுபார்க்கும் பணி ஆகியவை மேற்கொள்ளப்பட்டன.
	சேவை	**1,401.13**	**941.95**		
1202-009	Pool வாகனங்களுக்கான எரிபொருள்	84.30	77.09	91	131 வாகனங்களுக்கான எரிபொருள் (தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகம்)
1203-001	உணவு கட்டணங்கள்	78.50	77.90	99	சுங்க அதிகாரிகளுக்காக மதிய உணவு, இரவு உணவு மற்றும் சிற்றுண்டி வழங்கப்பட்டது (கொழும்பு துறைமுகம், ஹம்பாந்தோட்டை துறைமுகம்)
1302,2002	இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள்	182.69	26.17	14	குளிர்சாதன இயந்திரங்கள், கணினிகள், அச்சுப்பொறிகள், போட்டோ பிரதிபண்ணும் இயந்திரங்கள், சுத்திகரிப்பு நிலையங்கள், ஸ்கேனர்கள் போன்றவற்றின் பராமரிப்பு
1402	தபால் மற்றும் தொலைத்தொடர்பு	98.50	95.58	97	தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகத்தின் மாதாந்தக் கட்டணம் செலுத்துதல்
1403	மின்சாரம் மற்றும் நீர்	230.00	201.61	88	தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகத்தின் மாதாந்த கட்டணம் செலுத்துதல்
1404	வாடகை மற்றும் உள்நாட்டு வரிகள்	105.00	73.09	70	தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகத்தின் வாடகை மற்றும் உள்ளூராட்சி வரிகள்
1405	சுத்தம் மற்றும் பராமரிப்பு சேவைகள்	96.00	95.49	99	சேவை ஒப்பந்தம் (தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகம்)
1407	பாதுகாப்புச் சேவைகள்	43.04	43.03	100	2024.04.01 முதல் 2025.03.31 வரை கையொப்பமிடப்பட்ட சேவை ஒப்பந்தம் (தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகம்)
1408	இயக்கப்பாடு சார் குத்தகையின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட வாகனங்களுக்கான குத்தகை வாடகை	80.00	67.83	85	இயக்கப்பாடு சார் குத்தகையின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட 17 வாகனங்களுக்கான குத்தகை வாடகைக் கொடுப்பனவு
1409-138	இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்கான சேவை ஒப்பந்தங்கள்	112.40	83.44	74	23 சேவை ஒப்பந்தங்களுக்கான கட்டணங்கள் மற்றும் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படாத மேலதிக பராமரிப்புப் பணிகளுக்கான கட்டணங்கள்
1409-139	வாகன காப்புறுதி	3.00	2.60	87	வாகனக் குழுமத்தின் காப்பீடு (அனைத்து வாகனங்களும் முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டுள்ளன)
1409-140	இதர சேவைகள் குறித்த செலவினம்	33.70	14.55	43	சுங்க நிலங்களில் பெயர் பலகைகள் அமைத்தல், எல்லைக் கோடு அமைத்தல் போன்ற இதர சேவைச் செலவினங்கள்.

001-1304	ASYCUDA தகவல் தொழில்நுட்ப அமைப்பு	150.00	0.00	-	அனுபந்தம்-06 இல் கையொப்பமிடுவதற்கான அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டுள்ளது
003-1403 003-1409-140	புதிய கொள்கலன் ஸ்கேனிங் திட்டம்	40.00	25.12	63	2025 ஆம் ஆண்டில் மின்சாரம் மற்றும் நீர் கட்டணங்கள், தீயணைப்பு குறித்தான ஒப்பந்தத்திற்கான கட்டணங்கள்.
1301 2003	வாகனத்தின் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு	64.00	58.45	93	இவ்வாண்டுக் காலப்பகுதியில் திணைக்களத்திற்குச் சொந்தமான 131 வாகனங்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகள்.
	மொத்த செலவினம்	**3,271.09**	**1,362.93**		

மூலம் : பொருள் கொள்வனவு பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.5.4 பணியாளர் சேவைகள் பணிப்பகம்

8.5.4.1 குறிக்கோள்கள்

அனைத்து நடவடிக்கைகளும் சட்டபூர்வ, உத்தியோகபூர்வ மற்றும் நிறுவன ரீதியான தரநியமங்களுடன் இசைந்து செல்வதை உறுதிப்படுத்தும் வகையில் பொறுப்புணர்வு, ஒழுக்கவுணர்வு, பொறுப்புக்கூறல் மற்றும் நேர்மையுணர்வு ஆகியவை தொடர்ந்து நிலைநிறுத்தப்படக்கூடியதொரு சூழலை வளர்ப்பதில் கவனம் செலுத்தக்கூடிய வலுவான பணி நெறிமுறைக் கலாச்சாரத்தை விருத்தி செய்தல்.

8.5.4.2 பிரதான தொழிற்பாடுகள்

I. **ஒழுக்காற்று முகாமைத்துவம் :**
சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக முதற்கட்ட விசாரணைகள் மற்றும் முறையான ஒழுங்காற்று விசாரணைகளை நடத்தி, தாபன விதிக்கோவையின் தொகுதி 11 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி செயல்படல்.

II. **அரச கணக்காய்வு விசாரணைகளுக்கு பதிலளித்தல் :**
சகல பணிப்பகங்களுடனும் கூட்டிணைப்பினை வைத்திருத்தல் மற்றும் கணக்காய்வு அதிபதியினால் எழுப்பபடும் வினாக்களுக்கு பதிலளித்தல்

III. **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை ஒருங்கிணைத்தல்:**
நிதி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்திட்டத்தினை ஒருங்கிணைத்தல்.

IV. **அரச கணக்குகள் பற்றிய குழுவிற்கு (COPA) சமர்ப்பிப்பதற்கான அறிக்கைகளை தயாரித்தல்**
சகல பணிப்பகங்களுடனும் கூட்டிணைந்து COPA அறிக்கைகளுக்கான பதில்களை தயாரித்து அதனை நிதி அமைச்சுக்குச் சமர்ப்பித்தல்.

V. **பாராளுமன்ற வினாக்களுக்கான பதில்களை வழங்கல்**
அனைத்து பணிப்பகங்களிடமிருந்தும் பாராளுமன்ற கேள்விகளுக்கான அவதானிப்புகள் / பதில்களைப் பெற்று நிதி அமைச்சுக்கு சமர்ப்பித்தல்.

VI. **சட்டவாக்க நிறுவனங்களுடனான (குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, பாராளுமன்ற உப குழு பொன்றவற்றுடன்) ஒருங்கிணைப்பினைப் பேணுதல்**

8.5.4.3 2025 ஆம் ஆண்டில் பணிப்பகத்தின் செயலாற்றுகை

அட்டவணை 8.5.4.1 : ஒழுக்காற்று முகாமைத்துவம்

ஆரம்ப விசாரணைகள்		
2025 இல் இடம்பெற்ற ஆரம்ப விசாரணைகளது எண்ணிக்கை	முடிவுற்ற ஆரம்ப விசாரணைகளது எண்ணிக்கை	முடிவுறாத ஆரம்ப விசாரணைகளது எண்ணிக்கை
08	02	06

முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணைகள்		
இடம்பெற்ற முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணைகளது எண்ணிக்கை	முடிவுற்ற முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணைகளது எண்ணிக்கை	மீதமாகவுள்ள ஒழுக்காற்று விசாரணைகளின் எண்ணிக்கை
17	11	06

மூலம் : பணியாளர் சேவைகள் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.5.4.2 : கணக்காய்வு வினாக்களுக்கு பதிலளித்தல்

கணக்காய்வு வினாக்களுக்கு		
பெறப்பட்ட கணக்காய்வு விசாரணைகளது எண்ணிக்கை	பதிலளிக்கப்பட்ட கணக்காய்வு விசாரணைகளது எண்ணிக்கை	பூர்த்தியாகாத கணக்காய்வு விசாரணைகளது எண்ணிக்கை
21	16	05

மூலம் : பணியாளர் சேவைகள் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.5.4.3 : பாராளுமன்ற வினாக்கள் மற்றும் தொடர் வினாக்களுக்குப் பதில்களை வழங்குதல்

பாராளுமன்ற வினாக்கள் மற்றும் தொடர் வினாக்கள்		
பெறப்பட்ட வினாக்களது எண்ணிக்கை	பதிலளிக்கப்பட்ட வினாக்களது எண்ணிக்கை	நிலுவையிலுள்ள வினாக்களின் எண்ணிக்கை
15	15	இல்லை

மூலம் : பணியாளர் சேவைகள் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

- **ஒழுக்காற்று நடவடிக்கை சார் சான்று**

  கிட்டத்தட்ட 7,244 ஒழுக்காற்று விசாரணை முடிவுகள் தாபனக்கோவைக்கமைய நடவடிக்கை எடுப்பதற்காக மனித வள முகாமைத்துவ பணிப்பகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

- **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்**
  2025 ஆம் ஆண்டில் நிதி அமைச்சினால் நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

- **பணியாளர் சேவை பணிப்பகத்தினை வலுப்படுத்தல்**

  முதற்கட்ட விசாரணையின் செயல்முறையை விரைவுபடுத்துதல்.
  முதற்கட்ட விசாரணைகள் தேவையற்ற காலதாமதமின்றி முடிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இதனால், அத்தகைய விசாரணைகள் தேவைப்படுகின்ற காலப்பகுதியினுள் நிறைவு செய்யப்படுவதை உறுதி செய்ய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

8.6 சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழான பணிப்பகங்கள்

8.6.1 அரசிறை இலக்கு செயலணிப் பணிப்பகம்

8.6.2 மேன்முறையீட்டுப் பணிப்பகம்

8.6.3 நிதிப் பணிப்பகம்

8.6.4 முறைமை மற்றும் நடைமுறைகள் இணக்கப்பாட்டுக் கணக்காய்வுப் பணிப்பகம்

8.6.5 உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) பிரிவு

8.6.6 உள் விவகாரப் பிரிவு

8.6.1 அரசிறை இலக்கு செயலணி பணிப்பகம்

8.6.1.1 அறிமுகம்

அரசிறை இலக்குச் செயலணிப் பணிப்பகமானது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் நேரடியான கண்காணிப்பின் கீழ் இயங்கி வருவதோடு, இப்பணிப்பகமானது ஒருமைப்பாட்டினை ஊக்குவித்தல் மற்றும் ஒழுங்கற்ற நடைமுறைகளையும் அத்துடன் சுங்கத்தின் சீரான தொழிற்பாட்டினைப் பாதிக்கின்ற ஏனைய ஏதேனும் ஒழுங்கற்ற விடயங்களையும் நீக்கும் நோக்கில், விரைந்து செயற்பட்டு, சுங்கத் திணைக்களத்தின் ஒட்டுமொத்தச் செயற்பாடுகளையும் கண்காணித்தல்.

இப் பணிப்பகமானது ஒரு சுங்கப் பணிப்பாளரின் தலையின் கீழ், சுங்கப் பிரதிப் பணிப்பாளர்கள், சுங்க அத்தியட்சகர்கள், சுங்கப் பிரதி அத்தியட்சகர்கள், சுங்க உதவி அத்தியட்சகர்கள், சுங்கப் பரிசோதகர்கள், சுங்க காவலர்கள் மற்றும் எழுதுவினைஞர் பணியாளர்கள் போன்றோரைக் கொண்டுளளது.

மேலும் இப் பணிப்பகமானது, அனைத்துச் சரக்குகளும் பிற அனைத்து விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைய, சம்பந்தப்பட்ட அனைத்து உரிய அறவீடுகளையும் செலுத்தியுள்ளமையினை உறுதிப்படுத்தும் நோக்கில் அனைத்து இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளைக் கண்காணிப்புச் செய்வதுடன், பிரத்தியேகப் பொதிகள், அஞ்சல் மற்றும் கூரியர் பொதிகள் உள்ளடங்கலாக ஏதேனும் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது ஏற்றுமதி செய்யப்படவிருக்கின்ற பொருட்களையும் விசாரணை செய்வதற்காக அவை தொடர்பில் தலையீடு செய்து அவற்றை மீள்-பரிசோதனை அல்லது பறிமுதல் செய்வதற்குரிய அதிகாரத்தைக் கொண்டுள்ளது. மேலும் இப் பணிப்பகமானது, விமான நிலையங்கள், விமானச் சரக்கு இல்லம், கூரியர் பொதிக் களஞ்சிய சாலைகள், பயணிகளுடன் வராத பொதிக் களஞ்சியசாலைகள், அஞ்சல் பொதி, பொதுவான சரக்கு, முதலீட்டுச்சபைச் சரக்கு, பிணைப்படுத்தப்பட்ட சரக்கு மற்றும் ஏற்றுமதிச் சரக்கு போன்றவற்றில் திடீர் பரிசோதனைகளை மேற்கொள்கின்றது.

இப்பணிப்பகத்தின் பிரதான குறிக்கோள், திணைக்களத்தின் ஒட்டுமொத்தச் செயற்பாடுகளையும் கண்காணிப்பதோடு முழுக் கட்டுப்பாடு தொடர்பில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு பக்கபலமாகவிருத்தலுமாகும். மேலும் பொதுமக்கள் வழங்குகின்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டும் பணியாட்கள் திரட்டுகின்ற உளவுத் தகவல்களைக் கொண்டும் பல்வேறு சட்ட அமுலாக்கங்களையும் மேற்கொள்கின்றது.

அரசிறை இலக்குச் செயலணியானது நீள் அறை, களஞ்சியசாலைகள், விமானச் சரக்கு, தபால் மூலமான பொதி, கூரியர் சேவைகள் மற்றும் பொருள் வெளியாக்கத்திற்கான ஏனைய விசேட நடைமுறைகள் தொடர்பில் பொருட்களது வெளியாக்கல் மீதான கண்காணிப்பினையும் மேற்கொள்கின்றன.

8.6.1.2 பிரதான தொழிற்பாடுகள்

- திணைக்களத்தினுள் ஒருமைப்பாட்டினை ஊக்குவித்து, அங்கு காணப்படுகின்ற ஒழுங்குமுறையற்ற நடைமுறைகளை நீக்குதல்.
- முறைப்பாடுகள் மற்றும் குற்றச்சாட்டுகள் எழுகின்றவிடத்து அது தொடர்பில் உடனடியாக பதிலளித்தல்.
- நெருக்கடிமிகு நிலைமைகளின் போது தேவையான வளங்களை ஒன்றுதிரட்டி சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு உதவுதல்.
- இறக்குமதி செய்யப்படுகின்ற அல்லது ஏற்றுமதி செய்யப்படுகின்ற எந்தவொரு பொருளையும் இடைமறித்து மீள் பரிசோதனை செய்வதோடு, அது தொடர்பில் பின்பற்றியுள்ள நடைமுறைகளின் சரியான தன்மையினையும் உறுதிசெய்தல்.
- விமானநிலையத்திலோ அல்லது பயணிகள் உடன் வராத பொதி களஞ்சியசாலைகளிலோ பயணிகளையும் அவர்களது பொதிகளையும் இடைமறித்துப் பரிசோதித்தல்
- தபால் பொதி, கூரியர் சேவைகள் மூலம் வருகின்ற பொருட்களின் வெளியாக்கல் மற்றும் அவற்றை வெளியாக்குதல் தொடர்பிலான ஏனைய விசேட நடைமுறைகள் என்பவற்றில் விழிப்புடனான கண்காணிப்பினை பேணுதல்

அட்டவணை 8.6.1.1 : 2025ஆம் ஆண்டிலான அறவீடுகள் (ரூபா)

2025	பிரிவு	பறிமுதல்கள் / குறைக்கப்பட்ட பறிமுதல் நடவடிக்கை	அபராதம் / குறைக்கப்பட்ட பறிமுதல் நடவடிக்கை/ குறைக்கப்பட்ட மேலதிக பறிமுதல் நடவடிக்கை	மேலதிக பதிவு (நீள அறை)	பொதி தொடர்பிலான தீர்வைகள் மற்றும் ஏனைய அறவீடுகள்	விற்பனை மூலமான வருவாய்கள்	காப்பறை மற்றும் ஏனைய கட்டணங்கள்	மொத்தம்	மேதிக பதிவு (பெறுமதி மதிப்பீடு)	பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி
ஜனவரி 208,445,283.30	பிரதான அலுவலகம்	68,757,992.00	15,586,987.00	8,261,277.00	1,863,364.00	2,636,748.30	-	**97,106,368.30**	4,457,754.00	45,194,058.00
	செயல்பாட்டு பிரிவு	37,530,493.00	74,180.00	-	4,256,279.00	-	-	**41,860,952.00**	-	9,663,829.00
	நடமாடும் பிரிவு	60,066,189.00	8,009,425.00	110,962.00	1,291,387.00	-	-	**69,477,963.00**	6,050,936.00	8,937,670.00
பெப்ரவரி 232,580,300.24	பிரதான அலுவலகம்	58,224,639.00	16,837,900.00	2,657,947.00	3,206,308.00	30,121,618.14	-	**111,048,412.14**	11,977,434.00	1,007,048.00
	செயல்பாட்டு பிரிவு	29,543,207.00	950,000.00	446,223.00	64,159.00	9,836,716.35	-	**40,840,305.35**	2,614,777.00	3,943,007.00
	நடமாடும் பிரிவு	47,882,268.00	15,068,870.00	218,735.00	10,863,003.75	6,658,706.00	-	**80,691,582.75**	5,370,207.00	26,276,003.10
மார்ச் 455,566,575.12	பிரதான அலுவலகம்	126,916,651.00	11,039,548.00	5,468,093.00	4,001,394.00	13,340,089.40	-	**160,765,775.40**	9,984,888.00	18,208,848.75
	செயல்பாட்டு பிரிவு	127,228,537.00	6,572,950.00	2,535,718.00	834,333.00	13,572,301.72	-	**150,743,839.72**	5,841,974.00	8,358,382.00
	நடமாடும் பிரிவு	126,295,472.00	14,005,345.00	1,243,818.00	2,512,325.00	-	-	**144,056,960.00**	5,095,700.00	158,237,068.88
ஏப்ரல் 345,626,375.98	பிரதான அலுவலகம்	105,113,809.00	13,026,200.00	3,434,152.00	-	6,891,139.03	-	**128,465,300.03**	3,949,164.00	22,397,248.00
	செயல்பாட்டு பிரிவு	96,307,701.00	6,675,000.00	2,627,020.00	1,763,045.00	8,664,871.95	-	**116,037,637.95**	10,575,086.00	18,994,896.00
	நடமாடும் பிரிவு	76,598,535.00	4,454,800.00	1,021,289.00	78,614.00	18,970,200.00	-	**101,123,438.00**	5,652,187.00	33,937,003.02

2025	பிரிவு	பறிமுதல்கள் / குறைக்கப்பட்ட பறிமுதல் நடவடிக்கை	அபராதம் / குறைக்கப்பட்ட பறிமுதல் நடவடிக்கை/ குறைக்கப்பட்ட மேலதிக பறிமுதல் நடவடிக்கை	மேலதிக பதிவு (நீள அறை)	பொதி தொடர்பிலான தீர்வைகள் மற்றும் ஏனைய அறவீடுகள்	விற்பனை மூலமான வருவாய்கள்	காப்பறை மற்றும் ஏனைய கட்டணங்கள்	மொத்தம்	மேதிக பதிவு (பெறுமதி மதிப்பீடு)	பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி
மே **296,611,437.89**	பிரதான அலுவலகம்	85,632,833.68	11,862,357.00	1,326,798.00	2,389,098.00	11,579,949.21	-	**112,791,035.89**	6,231,202.00	7,510,441.00
	செயல்பாட்டு பிரிவு	56,565,832.00	3,761,680.00	2,538,532.00	611,390.00	-	-	**63,477,434.00**	4,556,207.00	54,874,490.00
	நடமாடும் பிரிவு	90,527,000.00	12,365,875.00	793,026.00	4,371,560.00	12,285,507.00	-	**120,342,968.00**	6,078,444.00	18,599,407.20
ஜூன் **371,556,052.68**	பிரதான அலுவலகம்	90,816,333.33	9,550,000.00	4,499,414.00	-	2,486,504.59	-	**107,352,251.92**	13,421,524.00	6,753,668.00
	செயல்பாட்டு பிரிவு	96,810,997.00	10,450,000.00	2,229,928.00	633,819.00	10,594,507.76	-	**120,719,251.76**	11,014,584.00	56,145,834.00
	நடமாடும் பிரிவு	93,392,185.00	15,635,000.00	2,517,569.00	511,234.00	31,428,561.00	-	**143,484,549.00**	8,880,815.00	26,245,049.00
ஜூலை **385,994,687.33**	பிரதான அலுவலகம்	109,353,822.00	11,577,278.00	1,206,464.00	1,355,005.00	7,416,989.03	6,150.00	**130,915,708.03**	7,070,501.00	438,492,844.36
	செயல்பாட்டு பிரிவு	89,188,517.00	8,050,000.00	2,549,399.00	-	8,008,472.30	-	**107,796,388.30**	10,863,463.00	9,083,702.00
	நடமாடும் பிரிவு	130,780,874.00	6,620,400.00	2,238,909.00	700,490.00	6,941,918.00	-	**147,282,591.00**	9,945,044.00	15,700,190.00
ஓகஸ்ட் **388,609,183.45**	பிரதான அலுவலகம்	121,840,000.00	10,301,350.00	2,476,427.00	1,943,175.00	5,216,338.45	1,533,950.00	**143,311,240.45**	12,309,093.00	7,319,440.49
	செயல்பாட்டு பிரிவு	116,695,010.00	8,450,000.00	9,856,636.00	-	2,317,637.75	8,600.00	**137,327,883.75**	15,049,299.00	15,952,676.51
	நடமாடும் பிரிவு	80,686,009.00	11,413,915.00	2,143,580.00	3,657,255.25	9,431,150.00	638,150.00	**107,970,059.25**	12,986,548.00	8,946,877.00
செப்டம்பர் **505,495,532.00**	பிரதான அலுவலகம்	148,336,000.00	15,394,649.00	4,451,683.00	1,064,995.00	81,592.00	99,300.00	**169,428,219.00**	12,230,647.00	2,400,755.33
	செயல்பாட்டு பிரிவு	116,067,357.00	22,343,090.00	3,406,164.00	2,266,484.00	-	430,419.00	**144,513,514.00**	22,679,421.00	68,771,335.00
	நடமாடும் பிரிவு	157,360,077.00	19,187,866.00	4,493,893.00	4,162,106.00	5,979,307.00	370,550.00	**191,553,799.00**	15,379,584.00	16,751,790.00

2025	பிரிவு	பறிமுதல்கள் / குறைக்கப்பட்ட பறிமுதல் நடவடிக்கை	அபராதம் / குறைக்கப்பட்ட பறிமுதல் நடவடிக்கை/ குறைக்கப்பட்ட மேலதிக பறிமுதல் நடவடிக்கை	மேலதிக பதிவு (நீள அறை)	பொதி தொடர்பிலான தீர்வைகள் மற்றும் ஏனைய அறவீடுகள்	விற்பனை மூலமான வருவாய்கள்	காப்பறை மற்றும் ஏனைய கட்டணங்கள்	மொத்தம்	மேதிக பதிவு (பெறுமதி மதிப்பீடு)	பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி
ஒக்டோபர் 451,748,420.50	பிரதான அலுவலகம்	117,602,481.00	27,088,090.00	5,682,389.00	5,059,210.00	-	60,800.00	**155,492,970.00**	16,669,388.00	12,591,144.24
	செயல்பாட்டு பிரிவு	159,633,856.00	12,559,780.00	2,329,031.00	1,173,082.00	-	358,503.50	**176,054,252.50**	11,951,444.00	6,505,010.00
	நடமாடும் பிரிவு	104,889,008.00	9,166,725.00	2,774,164.00	400,954.00	2,922,847.00	47,500.00	**120,201,198.00**	14,382,053.00	48,570,253.00
நொவம்பர் 347,376,941.80	பிரதான அலுவலகம்	82,571,638.00	16,745,917.00	1,379,646.00	5,087,599.00	1,115,937.00	196,250.00	**107,096,987.00**	8,698,249.00	2,461,968.00
	செயல்பாட்டு பிரிவு	122,946,203.00	13,130,000.00	1,119,908.00	99,714.00	633,390.80	406,400.00	**138,335,615.80**	22,157,252.00	21,450,961.00
	நடமாடும் பிரிவு	90,200,000.00	8,669,000.00	2,130,878.00	537,211.00	-	407,250.00	**101,944,339.00**	7,940,131.00	146,350,248.00
டிசம்பர் 467,042,041.70	பிரதான அலுவலகம்	192,867,000.00	17,981,835.70	4,726,564.00	638,246.00	16,417,100.00	412,375.00	**233,043,120.70**	19,528,476.00	10,968,037.79
	செயல்பாட்டு பிரிவு	101,858,681.00	8,363,000.00	5,495,575.00	587.00	7,361,320.00	48,100.00	**123,127,263.00**	18,134,283.00	9,196,484.00
	நடமாடும் பிரிவு	99,345,000.00	6,260,000.00	3,511,066.00	582,952.00	716,490.00	456,150.00	**110,871,658.00**	16,679,058.00	844,208.00
மொத்தம்		**3,616,432,207.01**	**409,229,012.70**	**103,902,877.00**	**67,980,378.00**	**253,627,909.78**	**5,480,447.50**	**4,456,652,831.99**	**376,406,817.00**	**1,367,641,875.67**
மொத்த அறவீடுகள் (ரூபா)		**4,456,652,831.99**								

மூலம் : அரசிறை இலக்கு செயலணிப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.6.2 மேன்முறையீட்டுப் பணிப்பகம்

8.6.2.1 அறிமுகம்

இலங்கைச் சுங்கத்திற்குள்ளான மேற்படி மேன்முறையீட்டுப் பணிப்பகமானது, உலக சுங்க அமைப்பின் திருத்தப்பட்ட கியோட்டோ சமவாயம் (Revised Kyoto Convention) மற்றும் உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக இலகுவாக்க உடன்படிக்கை ஆகியவற்றில் தெளிவாக விளக்கப்பட்டுள்ள சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நடைமுறைகளை உறுதியாகப் பின்பற்றப்படுவதற்குச் சான்றுபகரும் வகையில் நிறுவப்பட்டுள்ளது. சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் செயல்படும் இப்பணிப்பகம், வர்த்தக இலகுவாக்கம் தொடர்பில் ஒரு முக்கியப் பங்காற்றுகிறது.

சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு விலாசமிட்டு அனுப்பப்படுகின்ற எழுத்துமூலமான மேன்முறையீடுகளை மிகவும் கவனமாக மீளாய்வு செய்வதன் மூலம் வர்த்தக செயலாக்கங்களை நெறிப்படுத்துவதே மேல்முறையீட்டு பணிப்பகத்தின் பிரதான குறிக்கோளாகும். உண்மைகளை முழுமையாக ஆராய்ந்த பின்னர், இப்பணிப்பகம் தகவலளிக்கப்பட்ட பரிந்துரைகளை வழங்கி, தேவையான பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

முறைப்பாடுகளை மீளாய்வு செய்து, அவற்றுக்குத் தீர்வு வழங்குவதற்கானதொரு வினைத்திறன் மிக்க மேன்முறையீட்டுப் பொறிமுறையொன்றை தாபிப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்துகொண்டதன் அடிப்படையிலேயே மேன்முறையீட்டுக் குழு நிறுவப்பட்டுள்ளது. சுங்கப் பணிப்பாளர் (மேன்முறையீடு) அவர்கள் தனது பதவியின் அடிப்படையில் உறுப்பினர் பதவியை வகிக்கும் அதேவேளை, ஏனைய குழு உறுப்பினர்கள் கூட்டங்களில் தவறாமல் கலந்துகொண்டு தொடர்ச்சியான ஆதரவை வழங்குகிறார்கள்.

சுங்கப் பணிப்பாளருக்குக் (மேல்முறையீடு) கிடைக்கப்பெறுகின்ற மேல்முறையீடுகள், அவற்றின் செல்லுபடியாகும் தன்மை மற்றும் பொருத்தத்தை உறுதி செய்வதற்காகக் ஆழ்ந்த பரிசீலனைக்கு உட்படுத்தப்படுகின்றன. மேலதிக தகவல் தேவைப்படுகின்ற விடயங்கள் தொடர்பில், விரிவான அறிக்கைகள் மற்றும் மேலதிக விவரங்களை பெறுவதற்காக, சம்பந்தப்பட்ட பணிப்பகங்களுக்கு உடனடியாக அனுப்பப்படுகின்றன.

அத்தகைய அவசியமான விவரங்கள் கிடைக்கப்பெற்ற பின்னரே, சுங்கப் பணிப்பாளரால் (மேல்முறையீடு) குறித்த விடயம் தொடர்பில் முழுமையான பரிசீலனை மற்றும் சாத்தியமான நிவாரணத்திற்காக மேன்முறையீட்டுக் குழுவிற்கு அனுப்ப முடியும்.

ஆண்டுதோறும் மேன்முறையீட்டுக் குழுவிற்கு அனுப்பப்படும் மேன்முறையீடுகளின் எண்ணிக்கையானது, சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் மேன்முறையீட்டு பணிப்பகத்திற்கு அனுப்பப்படும் மேன்முறையீடுகளின் எண்ணிக்கையுடன் நேரடி தொடர்புகொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

8.6.2.2 செயலாற்றுகை

அட்டவணை 8.6.2.1 : பெறப்பட்ட மேன்முறையீடுகளது எண்ணிக்கை

	01.01.2025 ஆம் திகதியில் உள்ளவாறாக	ஜனவரி	பெப்ரவரி	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஓகஸ்ட்	செப்டெம்பர்	ஒக்டோபர்	நொவெம்பர்	டிசம்பர்	மொத்தம்
பெறப்பட்ட மேன்முறையீடுகளது எண்ணிக்கை	-	7	7	7	12	18	13	11	04	09	11	02	06	107
முடிவுறுத்தப்பட்ட மேன்முறையீடுகளது எண்ணிக்கை	-	14	10	08	02	12	08	04	11	11	13	01	12	106
நிலுவையிலுள்ள மேன்முறையீடுகளது எண்ணிக்கை	75	68	65	64	74	80	85	92	85	83	81	82	76	76

மூலம் : மேல்முறையீட்டு பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.6.2.2 : இடம்பெற்ற மேன்முறையீட்டுக் குழுக் கூட்டங்களது எண்ணிக்கை

	ஜனவரி	பெப்ரவரி	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஓகஸ்ட்	செப்டம்பர்	ஒக்டோபர்	நொவம்பர்	டிசம்பர்
வேலை நாட்களில் வரும் வியாழக் கிழமைகளது எண்ணிக்கை	5	4	3	4	4	4	4	4	4	5	4	2
இடம்பெற்ற கூட்டங்களது எண்ணிக்கை	5	3	4	1	3	3	3	3	3	4	3	3
கடைப்பிடிப்பு விகிதம்	100%	75%	133.3%	25%	75%	75%	75%	75%	75%	80%	75%	150%

மூலம் : மேன்முறையீட்டு பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

அட்டவணை 8.6.2.3 : நிலுவையிலுள்ள மேன்முறையீட்டுக் கோவைகள்

நிலுவையில் இருப்பதற்கான காரணம்	நிலுவையிலுள்ள மேன்முறையீடுகளின் எண்ணிக்கை
பணிப்பகத்தினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள்	70
மேன்முறையீட்டாளரால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள்	00
பிற சுங்கத் தொழில்நுட்பக் குழுக்களால் அல்லது நீதிமன்றங்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள்	06
குழுவால் பரிசீலிக்கப்பட வேண்டிய மேன்முறையீடுகள்	00
நிலுவையில் உள்ள மொத்த மேன்முறையீடுகள்	**76**

மூலம் : மேன்முறையீட்டு பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.6.3 நிதிப் பணிப்பகம்

8.6.3.1 நிதி பணிப்பகத்தின் வகிபாகம்

இலங்கைச் சுங்கத்தின் நிதிப் பணிப்பகமானது சிறந்த நிதி முகாமைத்துவத்தினை உறுதி செய்வதிலும், பொறுப்புடைமையை வலுப்படுத்துவதிலும், மற்றும் திணைக்களத்திற்குள் அரச வளங்கள்/நிதிகளின் வினைத்திறன் மிக்க பயன்பாட்டை ஊக்குவிப்பதிலும் ஒரு முக்கிய வகிபாகத்தினைக் கொண்டு விளங்குகின்றது. நிதிப் பிரமாணங்கள் மற்றும் கொள்கைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்கின்ற அதேவேளை, திணைக்களத்தின் வினைத்திறன் மிக்க இயக்கப்பாடுகளுக்கு துணைநிற்பதற்கும் பணிப்பகத்தின் தொழிற்பாடுகள் இன்றியமையாதவையாகத் திகழ்கின்றன.

அரசாங்கத்தின் அரசிறையினை முறையாகச் சேகரித்தல், பதிவு செய்தல் மற்றும் அது பற்றி அறிக்கையிடுதல் போன்றவற்றுக்கான வசதியை வழங்கும் ஒரு சிறந்த நிதி முகாமைத்துவ முறைமையினைப் பராமரிப்பதற்கான பொறுப்பினை இப் பணிப்பகம் கொண்டுள்ளது. மேலும், இது இலங்கை சுங்கத்தின் அனைத்து செயல்பாட்டுப் பிரிவுகளுக்கும் விரிவான நிதி முகாமைத்துவ ஆதரவை வழங்குகிறது, இதன் மூலம் விவேகமான நிதி மேற்பார்வையை உறுதிசெய்து, உயர் தரமான பொறுப்புக்கூறலைப் பேணிவருகிறது.
அரசாங்கத்தின் ஒரு முன்னணி அரசிறை ஈட்டும் நிறுவனங்களில் ஒன்றாக திகழும் இலங்கைச் சுங்கமானது, மொத்த வரி வருமானத்தில் சுமார் 50 சதவீத பங்களிப்பை வழங்குகிறது. இந்தச் சூழலில், அரசிறை ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதிலும், நிதிச் செயல்பாடுகள் திணைக்களத்தின் மூலோபாய நோக்கங்களை அடைவதற்குத் காத்திரமாக ஆதரவளிப்பதை உறுதி செய்வதிலும் நிதிப் பணிப்பகம் ஒரு முக்கியப் பங்கை வகிக்கிறது.

8.6.3.2 திணைக்களத்தின் குறிக்கோள்களை அடைவதற்குத் துணையாக நடைபெறும் நிதிசார்ந்த செயற்பாடுகள் தொடர்பில், இப்பணிப்பகமானது பின்வரும் முக்கியப் பகுதிகளுக்கு பொறுப்பாக உள்ளது.

அ. செலவினம் மற்றும் வருமானம் ஆகியவற்றுக்கான வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரித்தல்.
ஆ. வரி மற்றும் வரியல்லா வருமானத்தினை சேகரித்தல், பதிவு செய்தல் மற்றும் அறிக்கையிடல்.
இ. அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தினுள் செலவினத்தினை முகாமை செய்தல் மற்றும் தேவைப்படின் மேலதிக ஒதுக்கீடுகளைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
ஈ. காசு முகாமைத்துவம் மற்றும் வங்கி கணக்குகளை கண்காணித்தல்
உ. வழங்கப்படுகின்ற காலக்கெடுவிற்கு ஏற்ப, நிதி தொடர்பான தகவல்களை திறைசேரி செயற்பாட்டு திணைக்களம், அரசிறைக் கொள்கைத் திணைக்களம், கணக்காய்வுத் தலைமையதிபதி மற்றும் பிற தொடர்புபட்ட பங்கீடுபாட்டாளர்கள் ஆகியோருக்கு சமர்ப்பித்தல்.
ஊ. பல்வேறு வகையான நிதிகள் மற்றும் கணக்குகளின் நிருவாகம், இதில் பின்வருவன அடங்கும் :
   i. சுங்க வைப்புக் கணக்குகள் ;
   ii. சுங்க வெகுமதி நிதியம் ;
   iii. சுங்க மேலதிக நேரம், சரக்குப் பரிசோதனை மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் கட்டண நிதியம் ;
   iv. சுங்க அலுவலர்களது நஷ்டஈட்டு மற்றும் முகாமைத்துவ நிதியம் ;
   v. பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் கைப்பற்றப்பட்ட பொருள் தொடர்பிலான அதிகாரமளிக்கப்பட்ட முற்பணக் கணக்கு ;
   vi. அரச உத்தியோகத்தர்கள் முற்பண "பீ" கணக்கு
எ. வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டம் மற்றும் தேசிய கணக்காய்வுச் சட்டம் என்பவற்றிற்கு இணங்க வடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்துச் சமர்ப்பித்தல்.
ஏ. கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் உள்ளக கணக்காய்வு பணிப்பாளர் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட கணக்காய்வு வினாக்கள் மற்றும் அறிக்கைகள் தொடர்பில் பதில்களையும், விளக்கங்களையும் மற்றும் அவதானிப்புகளையும் வழங்குதல்.
ஐ. முன்கூட்டிய தனிநபர் வருமான வரியுடன் தொடர்புபட்ட செயற்பாடுகள்
ஒ. காசாளர் தொழிற்பாடுகளை கவனித்தல்

8.6.3.3 பிரதான தொழிற்பாடுகள்

நிதிப் பணிப்பகம், இலங்கை கணக்காளர் சேவையின் ஒரு விசேட தர அதிகாரியான பிரதம நிதி அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் தொழிற்பட்டு வருகிறது. பிரதம நிதி அதிகாரியிடம் திணைக்களத்தின் மூலோபாயம் மிக்க நிதி முகாமைத்துவத்தினை முன்னெடுப்பதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள அதேவேளை, நிதிப் பணிப்பாளர் திணைக்களத்தின் நிதி முகாமைத்துவத் தொழிற்பாடுகள் குறித்தான மேற்பார்வை, ஒருங்கிணைப்பு மற்றும் நிர்வாகத்திற்குப் பொறுப்பானவராக விளங்குவார்.

இந்தப் பொறுப்புகளை செயற்படுத்தும் வகையில் நான்கு பிரதி பணிப்பாளர்கள் மற்றும் ஒரு நிர்வாக உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் என மொத்தம் 114 அலுவலர்கள் நிதிப் பணிப்பகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

பணிப்பகத்தின் காத்திரமான செயற்பாட்டை உறுதி செய்வதற்காக, அது பின்வரும் உப பிரிவுகளாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது:

- அரசிறைப் பிரிவு
- கட்டணங்கள் மற்றும் வரிப் பிரிவு
- சம்பளம் மற்றும் மேலதிக நேரப் பிரிவு
- நிதி முகாமைத்துவப் பிரிவு
- இதர சேவைகள் பிரிவு
- காசாளர் (ஷிராப்டர்) பிரிவு

8.6.3.4 அரசிறைப் பிரிவு

இலங்கைச் சுங்கத்தின் அரசிறைப் பிரிவானது, பிரதிப் பணிப்பாளர் (அரசிறை) அவர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் தொழிற்பட்டு வருவதுடன் அரசின் வருமானத்தினை வினைத்திறன் மிக்க முறையிலும் பாதுகாப்பாகவும் அறவீடு செய்து பதிவு செய்வதை உறுதி செய்வதில் முக்கிய பங்காற்றுகிறது. இப்பிரிவானது முறையான கணக்குப் பதிவேடுகளைப் பராமரித்தல், அரசிறையினை அறிக்கையிடுதல் மற்றும் அரசாங்கத்திற்கு உரிய நேரத்தில் நிதிகளை மாற்றுவதற்கு உதவுதல் ஆகியவற்றுக்கு பொறுப்பாக உள்ளது. இதன் மூலம், அரசிறை நிலைத்தன்மை மற்றும் அரச நிதி முகாமைத்துவத்திற்கு இது உறுதுணையாக விளங்குகின்றது.

சுங்கத்தின் செயல்பாட்டு இடங்களில் நிறுவப்பட்டுள்ள 48 சேகரிப்பு மையங்களின் வலையமைப்பு மூலம் இப்பிரிவானது தனது வருமான சேகரிப்பு பற்றிய பொறுப்புகளை நிறைவேற்றி வருகிறது. இச் செயற்பாடு இலங்கை வங்கியின் தப்ரோபேன் கிளை மற்றும் மக்கள் வங்கியின் டியூக் வீதி கிளை ஆகியவற்றில் பராமரிக்கப்படும் 02 பிரதான அரசிறைச் சேகரிப்பு கணக்குகளுடன் இணைக்கப்பட்டுள்ள 19 உப சேகரிப்பு வங்கிக் கணக்குகள் மூலம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அனைத்து சேகரிப்புகளும் துல்லியமாகப் பதிவு செய்யப்பட்டு உடனடியாக அனுப்பப்படுவதை உறுதி செய்வது அரசிறைப் பிரிவின் முக்கியமானதொரு பணியாகும். அதன்படி, இலங்கை சுங்கத்தால் சேகரிக்கப்படும் வருமானங்கள் நாளாந்த அடிப்படையில் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் கணக்கிற்கு மாற்றப்படுகிறது. இந்த உரிய நேரத்தில் அனுப்பும் முறையானது, அரசாங்கத்தின் நிதிப் பொறுப்புகளைத் தாமதமின்றி நிறைவேற்ற திறைசேரிக்கு உதவுவதுடன், இது தேசிய மட்டத்தில் காசுப் பாய்ச்சல் முகாமைத்துவத்தினை வலுப்படுத்துவதற்கும் துணைநிற்கின்றது.

இப் பிரிவானது வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்கும், அரசிறை வருமான இழப்புகளைக் குறைப்பதற்கும், நிதிப் பிரமாணங்கள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்குமான வகிபாகத்தினையும் கொண்டுள்ளது.

8.6.3.4.1 அரசிறைப் பிரிவின் பிரதான தொழிற்பாடுகள்

- **வருடாந்த அரசிறை மதிப்பீடுகளைத் தயாரித்தல்**
  தேசிய வரவுசெலவுத் திட்ட இலக்குகள் மற்றும் நிதிக் கொள்கை வழிகாட்டுதல்களுக்கு இணங்க வருடாந்த அரசிறை எதிர்வுகூறல்களைத் தயாரித்தல்.
- **அரசிறைச் சேகரிப்பினைக் கண்காணித்தல் மற்றும் சரிசெய்தல்**
  நாடுமுழுவதுமுள்ள 48 அரசிறைச் சேகரிப்பு நிலையங்களிலிருந்து நாளாந்த பணப் பதிவுத் தாள்களை சேகரித்துச் சரிபார்த்தல் மற்றும் அத்தகைய சேகரிப்புகளை தொடர்புடைய வங்கி இணக்கக்கூற்றுக்களுடன் ஒப்பிட்டு சரிபார்த்து அதன் துல்லியத் தன்மையினையும் முழுமைத் தன்மையினையும் உறுதி செய்தல்.
- **அரசிறை நிலுவைகளை மீட்டெடுத்தல்**
  அரச நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவையில் உள்ள தொகைகளை பின்தொடர்ந்து கண்காணித்து மீட்டெடுத்தல்
- **திறைசேரிக்கும் மற்றும் பிற தொடர்புடைய அதிகாரசபைகளுக்கும் அரசிறை பற்றிய அறிக்கையினை சமர்ப்பித்தல்**
  திட்டமிட்டபடியான அரசிறை இலக்குகள் தொடர்பான செயலாற்றுகை உள்ளிட்ட, நாளாந்த மற்றும் மாதாந்த அரசிறை பற்றிய செயலாற்றுகை அறிக்கைகளை திறைசேரிச் செயல்பாட்டுத் திணைக்களம், அரசிறைக் கொள்கைத் திணைக்களம் மற்றும் பிற தொடர்புடைய அதிகாரசபைகளுக்கு சமர்ப்பித்தல்.
- **CIGAS அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**
  அரசிறை சேகரிப்பு குறித்தான மாதாந்த CIGAS சுருக்கத் தகவல்களைத் தயாரித்து அரச கணக்குகள் திணைக்களத்துக்குச் சமர்ப்பித்தல்.

- **அரசிறைக் கணக்குகளைத் தயாரித்தல்**
  திணைக்களத்தின் வருடாந்த நிதி அறிக்கைகளின் ஒரு அங்கமாகவுள்ள அரசிறைக் கணக்கைத் தயாரிப்பதில் உதவுதல் மற்றும் அதனை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
- **பெறுமதி சேர் வரி மீளளிப்பு நிதியத்திற்கு நிதியை அனுப்புதல்**
  நடைமுறையில் உள்ள ஒழுங்குமுறைகளுக்கு இணங்க, மாதாந்த பெறுமதி சேர் வரி வருமானச் சேகரிப்புகளில் கணக்கிடப்பட்ட ஒரு பகுதியினை இலங்கை மத்திய வங்கியில் பராமரிக்கப்படும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பெறுமதி சேர் வரி மீளளிப்பு நிதியத்திற்கு அனுப்புதல்.
- **வருவாய் மீளளிப்புகள் செயலாக்கம்**
  பின்வரும் வகைகளின் கீழ் வருமான மீளளிப்புகளை செயலாக்கி, ஆவற்றை எளிதாக்குதல் :

  - சுங்க கட்டளைச் சட்டத்தின் 18 மற்றும் 22 பிரிவுகளுக்கிணங்க ஒப்புதலைப் பெறுவதற்காக மீளளிப்புக் கோரிக்கைகளை பொதுத் திறைசேரிக்குச் சமர்ப்பித்தல்.
  - நிதிப்பிரமானத்தின் 118க்கு இணங்க, அதிகமாக செலுத்தப்பட்ட மற்றும் மேலதிக செலுத்துகை தொடர்பான மிளளிப்பு விண்ணப்பங்களைச் செயலாக்குதல்.
  - 1/2020 ஆம் இலக்க அரச நிதிப் பிரமாணத்திற்கிணங்க, இருமுறை இடம்பெற்ற இலத்திரனியல் பணம் செலுத்துதல் தொடர்பான மீளளிப்புகளை செயலாக்குதல்.

அட்டவணை 8.6.3.1. உண்மையில் சேகரிக்கப்பட்ட வருவாய் மற்றும் வருடாந்த மதிப்பீட்டு குறித்த ஒப்பீட்டாய்வு (ரூபா மில்லியன்)

அரசிறைக் குறியீடு	விபரம்	2024		2025	
		மதிப்பிடப்பட்டது	அடையப் பெற்றது	மதிப்பிடப்பட்டது	அடையப் பெற்றது
1001.01.00	இறக்குமதித் தீர்வை	175,000	111,147	240,000	275,894
1001.02.00	ஏற்றுமதித் தீர்வை	35	27	32	18
1001.03.00	IECD உரிமக் கட்டணம்	-	-	-	42
1001.04.00	துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு	175,000	170,014	177,000	180,853
1001.05.01	இறக்குமதி செஸ் அறவீடு	58,000	79,133	87,700	88,728
1001.05.02	ஏற்றுமதி செஸ் அறவீடு	2,000	1,995	2,300	1,644
1001.08.00	விசேட பண்ட அறவீடு	95,000	115,199	145,000	164,599
1002.05.01	உற்பத்தி வரி - சிகரெட்டுகள்	143,000	117,145	100,000	101,173
1002.05.03	பெற்றோல் மற்றும் டீசல்	135,000	200,200	180,000	240,575
1002.05.04	மோட்டார் வாகனம்	30,000	58,562	396,000	471,751
1002.05.99	ஏனையவை	5,000	8,039	12,000	12,120
2003.07.10	வாகன உரித்துடைமை அறவீடு	165	240	1,400	2,260
2003.02.17	ஆடைகள் தொடர்பிலான விற்பனைகள்	-	121	-	103
2003.03.01	தண்டங்களும் பறிமுதல்களும்	-	8,024	-	5,415
	மொத்த சுங்க வருமானம்	**818,200**	**869,846**	**1,341,432**	**1,545,175**
2004.04.02	பொருளாதார சேவைக் கட்டணம்	-	201	-	-
1002.12.03	தேச கட்டுமான வரி	-	8	-	407
1002.01.04	இறக்குமதிகள் மீதான பெறுமதி சேர் வரி	660,000	597,493	820,000	891,390
1002.16.00	சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு	55,000	64,392	70,000	72,614
1003.01.00	சொகுசு வாகன வரி	-	2,772	-	52,048
2003.02.99	இதர	-	297	-	383
2003.99.00	ஏனைய பெறுகைகள்	-	122	-	129
	மொத்த பிற வருமானம்	**715,000**	**665,285**	**890,000**	**1,016,971**
	மொத்த வருமானம்	**1,533,200**	**1,535,131**	**2,231,432**	**2,562,146**

மூலம் : நிதிப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.6.3.5 கொடுப்பனவு மற்றும் வரி பிரிவு

இப்பிரிவானது பிரதிப் பணிப்பாளர் (கொடுப்பனவு) அவர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் இயங்கி வருவதுடன், பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் உள்ள நிதி ஏற்பாடுகளுக்கு இணங்க அனைத்து கொடுப்பனவுகளையும் நிறைவேற்றுவதற்கு பொறுப்பாயுள்ளது.
திரட்டு நிதிய ஏற்பாடுகளின் கீழ் செய்யப்படும் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக, இப்பிரிவானது இலங்கை சுங்கத்தால் நிர்வகிக்கப்படும் பல்வேறு நிதியங்கள் மற்றும் முற்பணக் கணக்குகள் தொடர்பான கொடுப்பனவுகளையும் மேற்கொள்கிறது, அவற்றுள் சுங்க அலுவலர்களது நஷ்டஈட்டு மற்றும் முகாமைத்துவ நிதி, சுங்க வெகுமதி நிதி, மேலதிக நேர நிதி, கைப்பற்றப்பட்ட மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் முற்பணக் கணக்கு மற்றும் அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு ஆகியவை அடங்கும்.
இப்பிரிவானது, கணினிமயமாக்கப்பட்ட ஒருங்கிணைந்த அரசாங்க கணக்கியல் முறைமை (CIGAS) மற்றும் ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை (ITMIS) போன்ற முறைமைகள் ஊடாகவும் கொடுப்பனவுகளை செயற்படுத்தி முகாமைத்துவம் செய்து வருகிறது.

8.6.3.5.1 கொடுப்பனவு பிரிவின் பிரதான தொழிற்பாடுகள்

- **வரவு செலவுத்திட்ட முகாமைத்துவம்**
  வருடாந்த வரவு செலவுத்திட்டத்தினை தயாரிப்பிற்கான தகவல்களை வழங்குதல், வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை ITMIS முறைமையில் பதிவேற்றம் செய்தல், மேலும் தேவைப்படும்போது மேலதிக நிதி ஒதுக்கீடுகளைப் பெறத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- **செலவினம் பற்றி பதிவு செய்தலும் அறிக்கையிடலும்**
  குறிப்பிட்ட ஒழுங்குவிதிகளுக்கமைய செலவினங்களை மேற்கொண்ட பின்னர், துல்லியமான செலவினப் பதிவேடுகளைப் பராமரித்தல் மற்றும் அவ்வப்போதைய நிதி அறிக்கைகளைத் தயாரித்தல்.
- **அரச அலுவலர்களின் முன்பண "பீ" கணக்கு பற்றிய முகாமைத்துவம்**
  அரச அலுவலர்களின் முன்பண "பீ" கணக்குடன் தொடர்புடைய செலவின எல்லைகளை நிர்ணயித்து அவற்றைக் கண்காணித்து வருதல்.
- **வங்கிக் கணக்கு நிர்வாகம்**
  நிதி பிரமானங்களுக்கு இணங்க, திணைக்களத்தின் இரண்டு உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளை நிர்வகித்தல் மற்றும் பராமரித்தல்.
- **செலவினக் கட்டுப்பாடு**
  அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டின் (ரூபா 6.3 பில்லியன்) எல்லைக்குள் வருடாந்த செலவினங்களைக் கண்காணித்து கட்டுப்படுத்துதல்.
- **கொடுப்பனவு பற்றிய செயலாக்கம் மற்றும் சான்றளித்தல்**
  நிறுவப்பட்ட நிதி நடைமுறைகளுக்கிணங்க, சம்பளம், பொருட்கள், பணிகள் மற்றும் சேவைகள் தொடர்பான கொடுப்பனவுகளுக்குச் சான்றளித்து நிறைவேற்றுதல்.
- **மாதாந்த செலவின அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**
  CIGAS மூலம் மாதாந்த செலவின அறிக்கைகளைப் பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பித்தல்.
- **வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்**
  அரச அலுவலர்களின் முன்பண "பீ" கணக்கு உட்பட, வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து, தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பித்தல்.
- **சம்பள நிர்வாகம்**
  சுமார் 2,300 பணியாளர்களுக்கான சம்பளம் மற்றும் மேலதிக நேர ஊதியம் மற்றும் வெகுமதிகள், குழு கொடுப்பனவு, Pool கொடுப்பனவுகள், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் பயண கொடுப்பனவுகளை SLIP முறைமையின் மூலம் வழங்குதல்.

2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் சம்பந்தப்பட்ட ஆண்டுக்குரிய வரவுசெலவுத் திட்டத்துடன் கீழே ஒப்பாய்வு செய்யப்படுகிறது.

அட்டவணை 8.6.3.2 : செலவின முகாமைத்துவம்

செலவின முகாமைத்துவம் (ரூபா.மில்)						
விபரம்	**2023**			**2024**		
	மதிப்பிடப் படவை	**உண்மையாக அடையப்பட்டவை**	**உபயோக வீதம்**	**மதிப்பிடப் படவை**	**உண்மையாக அடையப்பட்டவை**	**உபயோக வீதம்**
மீண்டெழுபவை	3,878	3,684	95%	4,719	4,138	88%
மூலதனம்	594	459	77%	1,830	342	19%
அரச அலுவலர்கள் முற்பண பீ கணக்கு	55	32	58%	55	55	100%
மொத்தம்	**4,527**	**4,175**	**92%**	**6,604**	**4,535**	**69%**

மூலம் : நிதிப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.6.3.6 வரிப் பிரிவு

நிதிப் பணிப்பகமானது திணைக்களத்தின் ஊழியர்கள் தொடர்பான முன்கூட்டிய தனிநபர் வருமான வரியை (APIT) நிர்வகிப்பதற்கும், APIT தரவுத்தளத்தை நிர்வகிப்பதற்குமான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

இலங்கை சுங்கத்தின் ஊழியர்கள், தங்களின் வழக்கமான சம்பளத்துக்கு மேலாக, மேலதி நேரக் கொடுப்பனவு, ஊக்குவிப்புப் படிகள், வெகுமதிப் படிகள், குழு பரிசோதனைப் படிகள் மற்றும் பொது ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் உள்ளிட்ட பல நிதிப் பலன்களைப் பெறுகின்ற காரணத்தினால், அவர்கள் அரச சேவைத் துறையில் குறிப்பிடத்தக்க வரி செலுத்துவோராகக் கருதப்படுகிறார்கள். அதற்கிணங்க, வரிப் பிரிவானது ஒவ்வொரு ஊழியரின் மொத்த வரிக்குட்பட்ட வருமானத்தின் அடிப்படையில் APIT பொறுப்புகளைக் கணக்கிட்டு, உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அது தொடர்பான விதிமுறைகளுக்கு இணங்க, அத்தகைய வரிகளை உரிய நேரத்தில் சேகரித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதை உறுதி செய்கிறது.

8.6.3.6.1 வரிப் பிரிவின் தொழிற்பாடுகள்

1. APIT இனை கணக்கிடுதல்
திணைக்களத்தின் அலுவலர்களுக்கு வழங்கப்படும் சம்பளங்கள் மற்றும் வெகுமதி கொடுப்பனவு, ஊக்குவிப்பு கொடுப்பனவு, குழு பரிசோதனை கொடுப்பனவு உள்ளிட்ட பிற கொடுப்பனவுகள் மீதான முன்கூட்டிய தனிநபர் வருமான வரியை மாதாந்த அடிப்படையில் கணக்கிடுதல்.

2. APIT இனை சேகரித்து அனுப்புதல்
ஊழியர்களிடமிருந்து முன்கூட்டிய தனிநபர் வருமான வரியை அறவிட்டு, அவ்வாறு அறவிடப்பட்ட வரித் தொகையை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு உரிய நேரத்தில் அனுப்பிவைத்தல்.

3. APIT தரவுத்தளத்தினைப் பராமரித்தல்
திணைக்களத்தின் ஊழியர்கள் தொடர்பான முன்கூட்டிய தனிநபர் வருமான வரித் தரவுத்தளத்தைப் பராமரித்து அதனை ஒழுங்குமுறையாக இற்றைப்படுத்தல்.

4. வரி பற்றிய அறிக்கைகளை விநியோகித்தல்
வருமான வரி நோக்கங்களுக்காக சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு வரி குறித்த அறிக்கையை (படிவம் T.10) வழங்குதல் மற்றும் வருடாந்த வரி திரும்பலை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்.

முன்கூட்டிய தனிநபர் வருமான வரி குறித்த விபரம் வருமாறு : Details of APIT tax as follows;

அட்டவணை 8.6.3.3 APIT வரி

வரி ஆண்டு	ஊழியர்களின் எண்ணிக்கை	அறவிடப்பட்ட APIT வரி (ரூ.மில்)
2024 ஏப்ரல் 01 – 2024 மார்ச் 31	3,312	1,938
2025 ஏப்ரல் 01 – 2025 மார்ச் 31	3,384	2,265

மூலம் : நிதிப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.6.3.7 சம்பளம் மற்றும் மேலதிக நேர பிரிவு

பிரதிப் பணிப்பாளர் (சம்பளம் மற்றும் மேலதிக நேரம்) அவர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயல்படும் இப்பிரிவு, திணைக்களத்தின் சுமார் 2,300 ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் மேலதிக நேரப் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

2007.10.26 ஆந் திகதிய 1520/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானயின் ஏற்பாடுகளுக்கிணங்க, சாதாரண அலுவலக நேரத்திற்கு அப்பால் சுங்க அதிகாரிகளின் சேவைகளைப் பெறும் இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் பிற தரப்பினரிடமிருந்து மேலதிக நேரக் கட்டணங்களை சேகரிப்பதற்கும் கணக்கிடுவதற்குமான பொறுப்பினை இப்பிரிவு கொண்டுள்ளது. இந்தக் கட்டணங்கள் வழக்கமான வேலை நேரத்திற்கும் மேலதிகமாக பணிகளை மேற்கொள்ளும் அதிகாரிகளுக்கு நஷ்டஈடு வழங்கும் நோக்கில் விதிக்கப்படுகின்றன.
இவ்வாறு சேகரிக்கப்படும் தொகைகள், திணைக்களத்தினால் பராமரிக்கப்படும் சுங்க மேலதிக நேர நிதி, சரக்கு பரிசோதனைக் கட்டண நிதி மற்றும் தகவல் மற்றும் தெடர்பாடல் தொழில்நுட்ப நிதி ஆகியவற்றில் வரவு வைக்கப்படுகின்றன. இந்த நிதிகளிலிருந்து மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள், அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுத் திட்டங்கள் மற்றும் தொடர்புடைய நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரிவானது இந்த நிதிகளின் முறையான கணக்கீடு, கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் ஆகியவற்றை உறுதி செய்கிறது.

8.6.3.7.1 சம்பளம் மற்றும் மேலதிக நேர பிரிவின் பிரதான தொழிற்பாடுகள்

- **சம்பளம் வழங்குதல்**
  திணைக்களத்தின் சுமார் 2,300 ஊழியர்களுக்கான மாதாந்த சம்பளத்தை உரிய நேரத்தில் சரியாக செயலாக்கம் செய்து அதனை வழங்குதல்.
- **சம்பளம் / வருமான அறிக்கை வழங்குதல்**
  திணைக்களத்தின் அலுவலர்கள் வங்கிக் கடன்கள், வரி பற்றிய வெளிப்படுத்தல்கள் மற்றும் பிற நிர்வாகத் தேவைப்பாடுகள் போன்ற நோக்கங்களுக்காக, சம்பளம் மற்றும் வருமான சரிபார்ப்பு அறிக்கைகளை வேண்டுகின்ற பொழுது அவற்றை வழங்குதல்.
- **நிதியத்திற்கான வரவுசெலவுத் திட்டத்தினைத் தயாரித்தல்**
  சுங்க மேலதிக நேர நிதியம், சரக்கு பரிசோதனைக் கட்டண நிதியம் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியம் ஆகியவற்றிற்கான வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- **மேலதிக நேர வருவாயை மதிப்பிடுதல் மற்றும் சேகரித்தல்**
  சாதாரண வேலை நேரத்திற்கும் அப்பால் சுங்க சேவைகளைக் கோரும் கப்பல் முகவர்கள், விமான நிறுவனங்கள், களஞ்சியசாலை நடத்துபவர்கள் மற்றும் பிற பங்கீடுபாட்டாளர்கள் உள்ளிட்ட தொடர்புடைய தரப்பினரிடமிருந்து மேலதிக நேரக் கட்டணங்களை மதிப்பீடு செய்து அவற்றைச் சேகரித்தல்.
- **மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்துதல்**
  வழக்கமான அலுவலக நேரத்திற்கும் மேலாக பணிகளை செய்யும் அலுவலர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவுகளை செயலாக்கம் செய்து வழங்குதல்.
- **இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல்**
  சுங்க மேலதிக நேர நிதியம், சரக்கு பரிசோதனைக் கட்டண நிதியம் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியம் தொடர்பான இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல்.

இதற்கிணங்க, கடந்த இரண்டு வருடங்களுக்கான சுங்க மேலதிக நேரம், சரக்குப் பரிசோதனைக் கட்டணங்கள் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியக் கணக்குகள் குறித்தான ஒட்டுமொத்த நிதி சார்ந்த செயலாற்றுகைகள் பின்வருமாறு.

அட்டவணை 8.6.3.4 சுங்க மேலதிக நேரம், சரக்குப் பரிசோதனைக் கட்டணங்கள் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியம்

விபரம்	சுங்க மேலதிக நேரம், சரக்குப் பரிசோதனைக் கட்டணங்கள் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியம் (ரூபா மில்.)					
	மேலதிக நேர நிதியம்		சரக்குப் பரிசோதனை நிதியம்		தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியம்	
	2024	2025	2024	2025	2024	2025
ஆரம்ப மீதி	1,652	1,514	334	410	7	5
பெறுவனவுகள்	908	1,118	307	373	15	16
அரசாங்கத்திற்கான பங்களிப்பு	(89)	(110)	(116)	(86)	(3)	(4)
கொடுப்பனவுகள்	(957)	(1,426)	(116)	(92)	(14)	(13)
இறுதி மீதி	**1,514**	**1,096**	**410**	**606**	**5**	**4**

மூலம் : நிதிப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

சம்பளம் வழங்குவது தொடர்பான விபரங்கள் வருமாறு ;

அட்டவணை 8.6.3.5 : சம்பளம் வழங்குதல்

வருடம்	ஊழியர்களின் எண்ணிக்கை	செலுத்திய மொத்தத் தொகை (ரூபா.மில்)
2024	2,265	1,875
2025	2,279	2,244

மூலம் : நிதிப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.6.3.8 நிதி முகாமைத்துவ பிரிவு

நிதி முகாமைத்துவப் பிரிவானது பிரதி பணிப்பாளர் (நிதி முகாமைத்துவம்) அவர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் தொழிற்பட்டு வருவதுடன், திணைக்களத்தினால் பராமரிக்கப்படும் பல்வேறு வைப்புக் கணக்குகள் தொடர்பாக பெறப்படும் அனைத்து நிதிகளையும் பெற்றுக்கொள்ளல், பதிவு செய்தல் மற்றும் கணக்கிடுதல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக உள்ளது. இவ்வாறு பெறப்படும் தொகைகள் பெரும்பாலும் அபராதங்கள், பறிமுதல்

செய்யப்பட்ட மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனை வருமானம் மற்றும் பிற இதர வைப்புத்தொகைகளை உள்ளடக்கியதாகும்.
அபராதங்களும் விற்பனை வருமானங்களும் ஆரம்பத்தில் பிரதான தற்காலிக பாதுகாப்பு வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன. விசாரணை மற்றும் மேன்முறையீட்டு செயல்முறைகள் முடிந்தவுடன், இத்தகைய வரவுகள் சுங்கச் சட்டத்தின் பிரிவு 153இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு இணங்க, சுங்க வெகுமதி நிதி, சுங்க அலுவலர்கள் நஷ்ஈடு மற்றும் முகாமைத்துவ நிதி மற்றும் பிற பொதுவான வெகுமதிகள் உள்ளிட்ட தொடர்புடைய நிதியங்களுக்கு மாற்றப்படுகின்றன.

8.6.3.8.1 நிதி முகாமைத்துப் பிரிவின் பிரதான பணிகள்

- **வரவு செலவுத் திட்ட தயாரிப்பு**
  சுங்க வெகுமதி நிதியம் மற்றும் சுங்க அலுவலர்கள் நஷ்டஈட்டு மற்றும் முகாமைத்துவ நிதியம் ஆகியவற்றிற்கான வருடாந்த வரவு செலவுத் திட்டங்களைத் தயாரித்து, கௌரவ நிதி அமைச்சரின் ஒப்புதலைப் பெறுதல்.
- **முற்பணக் கணக்கு குறித்த முகாமைத்துவம்**
  அங்கீகரிக்கப்பட்ட முன்பணக் கணக்குகள் தொடர்பான செலவின எல்லைகளை நிர்ணயித்து கண்காணித்தல், இதில் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்கள் முற்பணக் கணக்கு உட்பட அடங்கும்.
- **வைப்புப் பேரேடுகளைப் பராமரித்தல்**
  சட்டப்பூர்வமான கொடுப்பனவுகள், கேள்வுவிற்பனை வைப்புகள் மற்றும் பிற இதர வைப்புகள் தொடர்பான தற்காலிகத் தக்கவைப்பு வைப்புக் கணக்குகளுக்கான வைப்புப் பேரேடுகளைப் பராமரித்தல், மேலும் வங்கிகள் மற்றும் காசாளர் கருமபீடங்கள் மூலம் பெறப்படும் அனைத்து வரவுகளையும் பதிவு செய்தல்.
- **தினசரி பண அறிக்கையிடல்**
  கணக்கீடு மற்றும் அறிக்கையில் நோக்கங்களுக்காக காசாளர் கருமபீடங்கள் தொடர்பான தினசரி காசு தொடர்பான பதிவுதாள்களைத் தயாரித்துச் சமர்ப்பித்தல்.
- **நிதி வரவுகளின் பகிர்வு**
  வெகுமதி கொடுப்பனவுகளைச் செயலாக்கும் நேரத்தில், தற்காலிகத் தக்கவைப்பு வைப்புக் கணக்கிலிருந்து பெறப்பட்ட வரவுகளை சுங்க வெகுமதி நிதி, இழப்பீட்டு நிதி, திரட்டு நிதி மற்றும் பிற தொடர்புடைய நிதிகளுக்கு பரிமாற்ற கட்டளைகள் மூலம் மாற்றுதல்.
- **விற்பனை மற்றும் அபராதங்களின் சரிபார்ப்பு**
  வெகுமதி கொடுப்பனவுக் கோப்புகளைச் செயலாக்கும்போது பதிவுசெய்யப்பட்ட விற்பனை மற்றும் அபராதங்களைச் சரிபார்த்தல்.
- **அலுவலர்களுக்கான கொடுப்பனவுகளைச் செயலாக்குதல்**
  ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டிய குழுப் பரிசோதனைக் கொடுப்பனவு, வெகுமதி கொடுப்பனவு மற்றும் பரிசோதனைக் கட்டணங்கள் தொடர்பான கொடுப்பனவுகளுக்கான கோரிக்கைப் படிவங்களைத் தயாரித்தல்.
- **இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல்**
  சுங்க வெகுமதி நிதி, சுங்க அலுவலர்கள் இழப்பீடு மற்றும் முகாமைத்துவ நிதி, தற்காலிகப் பாதுகாப்பு வைப்புக் கணக்குகள், மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களுக்கான முற்பணக் கணக்கு ஆகியவற்றிற்கான இறுதிக் கணக்குகள் மற்றும் வருடாந்த இணக்கக்கூற்று அறிக்கைகளைத் தயாரித்தல்.

அதற்கமைய, பின்வரும் நிதி அறிக்கைகள் அரச துறை கணக்கியல் தரநிலைகளுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டு, கணக்காய்வுக்காக தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன.

அட்டவணை 8.6.3.6 : சுங்க அலுவலர்களது வெகுமதி நிதியம் / சுங்க அலுவர்களது முகாமைத்துவ மற்றும் நஷ்டஈட்டு நிதியம்

விபரம்	சுங்க வெகுமதி நிதியம் (ரூபா மில்)		சுங்க அலுவர்களது முகாமைத்துவ மற்றும் நஷ்டஈட்டு நிதியம் (ரூபா மில்)	
	2024	2025	2024	2025
வருமானம்	8,976	8,631	3,414	3,459
செலவினம்	(8,507)	(8,237)	(67)	(63)
மிகை/பற்றாக்குறை	469	394	3,347	3,397
நிலையான சொத்துகள்	-	-	5	2.33
நிதி மீதி	2,313	2,707	15,837	19.237

மூலம் : நிதிப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.6.3.8.2 பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான முற்பணக் கணக்கு

மேற்கூறிய நிதிகளுக்கும் மேலதிகமாக, சட்டவிரோதமாக இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்பட்டு, பின்னர் சுங்கத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட பொருட்கள் மற்றும் சரக்குகளை அகற்றுதல் தொடர்பாக ஏற்படும் செலவுகளை எதிர்கொள்வதற்காக இந்தப் பிரிவால் "பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களுக்கான முற்பணக் கணக்கு" (ARABA) என்ற பெயரில் ஒரு முற்பணக் கணக்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.
இத்தகைய பொருட்களை சேமித்தல், கையாளுதல், கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதல் தொடர்பாக ஏற்படும் செலவுகள் ஆரம்பத்தில் இந்த முற்பணக் கணக்கிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, பின்னர் அவ்வாறு அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மூலமான வருமானத்திலிருந்து அந்தச் செலவுகள் ஈடுசெய்யப்படுகின்றன.
பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்கள் முற்பணக் கணக்கின் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான நிதி விவரங்கள் பின்வருமாறு:

அட்டவணை 8.6.3.7 : கடந்த இரண்டு ஆண்டுகளில் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்கள் குறித்த முற்பணக் கணக்கு

விபரம்	2024 (ரூபா மில்)			2025 (ரூபா மில்)		
	செலவினம்	பெறுவனவுகள்	மீதி	செலவினம்	பெறுவனவுகள்	மீதி
வரையறைகள்	16	05	70	20	1.5	80
உண்மை	11	14	28	7	1.6	34

மூலம் : நிதிப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

மேற்கூறிய நிதிகள் மற்றும் முற்பணக் கணக்குகளுக்கு மேலாக, இப்பிரிவின் கீழ் பின்வரும் வைப்புக் கணக்குகளும் (அட்டவணை 8.6.3.8) பராமரிக்கப்பட்டு வருகின்றன.

அட்டவணை 8.6.3.8 : வைப்புக் கணக்கு குறித்த விவரங்கள்

விபரங்கள்	வைப்புக் கணக்கின் பெயர் (ரூ.மில்)					
	கேள்வுமனு		சட்டபூர்வ செலுத்துகை பற்றிய தற்காலிக பிடிமானம்		பயணிகளால் கொண்டுவரப்பட்ட பொருட்களுக்கான வைப்புகளை நிறுத்திவைத்தல்	
	2024	2025	2024	2025	2024	2025
ஆரம்ப மீதி	74	106	16,250	17,756	1	0.4
ஆண்டுக் காலப் பகுதியிலான பெறுவனவுகள்	669	164	46,033	51,168	11	12.7
	743	**271**	**62,283**	**68,925**	**12**	**13.1**
ஆண்டுக் காலப் பகுதியிலான செலுத்துகைகள்	(637)	(191)	(44,527)	(46,504)	(11)	(12.9)
இறுதி மீதி	**106**	**80**	**17,756**	**22,420**	**0.4**	**0.2**

மூலம் : நிதிப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.6.3.9 இதர சேவைப் பிரிவு

இதர சேவைப் பிரிவின் பிரதான பணிகள் பின்வருமாறு :

- **நிர்வாக ஆதரவு**
  நிதிப் பிரிவுக்குப் பொது நிர்வாக மற்றும் இயக்கப்பாடு சார்ந்த ஆதரவை வழங்குதல்.
- **பணியாளர் நிர்வாகம்**
  பணியாளர்களின் வருகை பதிவுகளைக் கண்காணித்தல், விடுப்பு நிர்வாகம் மற்றும் அலுவலக களஞ்சியசாலைகளை நிர்வகித்தல்.
- **வருமான அறிக்கைகளை வழங்குதல்**
  உத்தியோகபூர்வ தேவைக்காக திணைக்களத்தின் அலுவலர்களுக்கு வருமானச் சரிபார்ப்பு அறிக்கைகளை வழங்குதல்.
- **அஞ்சல் நிர்வாகம்**
  நிதி பிரிவுக்கு தொடர்புடைய உத்தியோகபூர்வ கடிதங்கள் மற்றும் அஞ்சல் தொடர்புகளை கையாளுதல் மற்றும் நிர்வகித்தல்.
- **கோப்பு பதிவு**
  வெகுமதி, ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் குழுப் பரிசோதனைக் கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய கோப்பு பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

8.6.3.10 காசாளர் (ஷிராப்டர்) பிரிவு

இப்பிவானது, பிரதிப் பணிப்பாளர் (அரசிறை) அவர்களின் மேற்பார்வையின் கீழ் நிர்வாக உத்தியோகத்தர் ஒருவர் தலைமையில் செயற்பட்டு வருவதோடு, இது பண பரிவர்த்தனைகளை கையாளுதல் மற்றும் உத்தியோகப்பூர்வ பற்றுச்சீட்டுக்களை வழங்குதல் ஆகியவற்றுக்கு பொறுப்பாக உள்ளது.

நாடு முழுவதும் 15 காளாளர் கருமபீடங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில், கொழும்புத் துறைமுகம், தலைமை அலுவலகம், கட்டுநாயக்க விமான நிலையம், மத்தளை விமான நிலையம், ஹம்பாந்தோட்டை மற்றும் பலாலி விமான நிலையம் போன்ற முக்கிய இடங்கள் அடங்கும். இவற்றில், 10 கருமபீடங்கள் வாரத்தின் 7 நாட்களும் 24 மணி நேரமும் செயல்பட்டு, அரசிறைச் சேகரிப்பினை தடையீடின்றி மேற்கொள்ளவும், இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் பிற பங்கீடுபாட்டாளர்களுக்கு தொடர்ச்சியான சேவைகளை வழங்கவும் செயற்பட்டு வருகின்றன.

8.6.4 முறைமை மற்றும் நடைமுறைகள் இணக்கப்பாட்டு கணக்காய்வுப் பணிப்பகம்

8.6.4.1 அறிமுகம்

இப் பணிப்பகமானது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கீழ் நேரடியாகத் தொழிற்படுவதுடன், இலங்கைக் கணக்காளர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்த அதிகாரியினால் தலைமை வகிக்கப்படுகின்றது. இப்புதிய பணிப்பகம் உருவாக்கப்பட்டதன் எதிர்பார்ப்புகளானது, ஒழுங்கீனங்கள் அடிக்கடி நிகழ்வதனையும் மற்றும் ஒருமைப்பாட்டிலான தளர்வுகளையும் தடுக்கும் வகையில் முறையான விருத்தியில் செயற்பாட்டு முகாமையாக உதவுதல், மற்றும் உள்ளாக்கப்படும் இடர்களுக்கு ஏற்ப உள்ளகக் கட்டுப்பாடுகளை பராமரித்தலும் விருத்தி செய்தலுமாகும்.
பயனுறுதிமிக்க கணக்காய்வு மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் சகல முக்கிய செயலாக்க முறைகளிலும் வளப்பயன்பாட்டினை சிக்கனப்படுத்தல் மற்றும் திணைக்களத்தினூடாக சகல பிரிவுகளையும் உள்ளடக்கிய செயலாக்க முறைகளை ஆதரித்தல் என்பன இப்பணிப்பகத்தின் நோக்காகும்.

8.6.4.2 பிரதான தொழிற்பாடுகள்

- எவ்வேளையிலும் சாத்தியமாகின்ற கணக்காய்வுச் சேவையினை மேம்படுத்துவதன் மூலம் நிறுவனத்திற்கான இதன் மேலதிக பெறுமதியினை உறுதிப்படுத்தும் வகையில் உள்ளகக் கணக்காய்வினை திறமையாக முகாமை செய்தல்.
- பின்வருவன உள்ளடங்கலாக நிறுவன ஆளுகை, செயற்பாடுகள் மற்றும் தகவல் என்பவற்றில் சூழ்ந்துள்ள கட்டுப்பாடுகளை திறமையான முறையிலும் போதிய வகையிலும் மதிப்பிடல்.
    - நிதி மற்றும் செயற்பாட்டுத் தகவலின் ஒருமைப்பாடும் நம்பகத்தன்மையும்
    - செயற்பாடுகளது நற்பயனளிக்கக் கூடிய தன்மையும் திறமையும்
    - சொத்துக்களைப் பாதுகாத்தல்.
    - சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் உடன்படிக்கைகளுடனான இணக்கப்பாடு.
- இடர் முகாமையினை விருத்திசெய்வதற்கான இடர் மதிப்பீட்டின் அடிப்படையிலான கணக்காய்வுத் திட்டங்களை வரைதலும் நிறுவன செயற்பாடுகளை விருத்தி செய்தலும்.
- குறிப்பிடத்தக்க இடர் வெளிப்பாடுகளையும் கட்டுப்பாட்டுப் பிரச்சினைகளையும் மற்றும் தேவைப்படும் அல்லது சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் வேண்டப்படும் பிற விடயங்களை அறிக்கையிடல்.
- உத்தேசிக்கப்பட்டவாறு செயற்பாடுகள் மற்றும் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளனவா அல்லது நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை தீர்மானிப்பதற்காக நிறுவப்பட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுடன் அதன் விளைவுகள் எந்தளவு முரண்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் அச் செயற்பாடுகள் மற்றும் திட்டங்களை மீளாய்வுசெய்தல்.
- பின்வரும் குறிக்கோளினை நிறைவேற்றுகையில் ஆளுகைச் செயன்முறையினை மேம்படுத்துவதற்கான பொருத்தமான பரிந்துரைகளை மதிப்பீடு செய்து தயாரித்தல்.
    - நிறுவனங்களுக்கிடையே உரிய நடத்தை மற்றும் கீர்த்தியினை மேம்படுத்தல்.
    - திறமையான நிர்வாக செயலாற்று முகாமைத்துவத்தினையும் பொறுப்பினையும் உறுதிப்படுத்தல்.

அட்டவணை 8.6.4.1 : இப்பணிப்பகத்தின் இணக்கப்பாட்டு அறிக்கை

இல	பொருத்தமான தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணங்கப்பட்டது / இணங்கப்படவில்லை)		இணக்கப் பாட்டின்மைக்கான விரிவான விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கப்பாட்டின்மையினை தவர்க்கும் வகையில் முன்மொழியப்பட்ட உரிய நடவடிக்கைகள்
2	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445)**				
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பதிவு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது			
4	**வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்**				
4.3	வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	இணங்கப்பட்டது			
6	**உள்ளகக் கணக்காய்வு**				
6.1	நி. பி. 134 (2) DMA 1-2025 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	நிதிப்பிரமாணம் 134 (2) மற்றும் DMA/1-2025 இற்கு இணங்க, கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது			
6.2	சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளும் ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்கப்பட்டுள்ளன.	பதில்கள் கிடைக்கப் பெற்றன (ஒரு மாதத் திற்குள்)	பதில்கள் கிடைக்கப்பெற்றன (ஒரு மாதத்திற்கு மேலாக)	வழமையான தொடர் இயக்கப்பாட்டு நடவடிக்கைகளிலான வேலைப்பழுவின் காரணமாக	உடனடியான பதிலைப் பெற்று கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் கலந்தாராய்வதற்கு பல நினைவூட்டல்களை வினியோகித்தல்
		30	21		
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்.	ஆம்			
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல்.	ஆம்			
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**				
7.1	DMA 1-2025 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காண்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன	ஆம்			

மூலம் : முறைமை மற்றும் நடைமுறைகள் இணக்கப்பாட்டு கணக்காய்வுப் பணிப்பகம், இலங்கைச் சுங்கம்

8.6.5 உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) பிரிவு

8.6.5.1 அறிமுகம்

1990ஆம் ஆண்டின் 40ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1994ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டமானது இலங்கை அரசாங்கத்தின் உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) கொள்கைகளை அமுல்படுத்துவதற்கான சட்டமாகும்.
நிதி அமைச்சின் கீழான இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் கீழ் இயங்கிவருகின்ற இப்பிரிவானது உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்தவதற்கான பொறுப்புடனும் தேசத்தின் நலனுக்காகச் செய்யப்படும் ஒழுங்கு விதிகளுடனும் பொறுப்புள்ள அரச முகவராக முக்கிய பணியினை நிறைவேற்றுகிறது.

8.6.5.2 பிரதான தொழிற்பாடுகள்

1. சிகரெட்டுகள் மற்றும் பிற தயாரிப்பு நிறுவனங்களை கண்காணித்து அவற்றைக் கட்டுப்படுத்துவதன் ஊடாக உரிய அரசிறையினைத் துல்லியமாக சேகரித்தல்
2. உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரிச் சட்டத்திற்கேற்ப சட்ட அமுல்படுத்தல் அதிகார சபையாக செயற்பட்டு, இறக்குமதி செய்யப்படுகின்ற மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்தி வரி விதிக்கத்தகு பொருட்களில் இருந்து உற்பத்தி வரியினை சேகரித்தல்
3. உற்பத்தி வரியை விதித்தலுடன் தொடர்புபட்ட சகல நடவடிக்கைகளிலும் ஈடுபடல்

